ஔவை
சொல் கேளீர்

ஔவை அருள்

ஔவை சொல் கேளீர்

முனைவர் ஔவை அருள்

ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்
12/6, போயஸ் சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 044-4341 8700

ஸ்ரீராம் நிறுவனங்கள் ஆதரவில்
ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்
மகாகவி பாரதியாரின் 141 ஆம் பிறந்தநாள்
விழாவில் 25.2.2023 அன்று வெளியிடப்பட்டு
அன்பளிப்பாக வழங்கப்படுகிறது .

வெளியீடு :
ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்
தேனாம்பேட்டை, சென்னை – 600 018.

நூல் தலைப்பு :
ஔவை சொல் கேளீர்

ஆசிரியர் :
முனைவர் ஔவை அருள்

தொண்டு :
பொன்னேரி பிரதாப்

புகைப்படங்கள் :
கலைமாமணி யோகா

ஒளி அச்சு :
என்த்ரால் விளம்பர நிறுவனம்
அமைந்தகரை, சென்னை – 600 030.

அச்சிட்டோர் :
ஆர்.எஸ்.டி அச்சகம்
மைலாப்பூர், சென்னை – 600 004.

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் ஆசிரியரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

பதிப்புரை

அரிய நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதும், விற்பனை செய்வதும், வரபு செலவுக் கணக்குப் பார்ப்பதும் பதிப்பகங்களின் வழக்கமான பணிகள்தான் என்றாலும்,

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் முனைவர் ஔவை நடராசன் அவர்களின் உரைகளை நூல் வடிவாக்கிப் பதிப்பாக வெளியிடும்போது பெறுகின்ற மகிழ்ச்சியை எதனோடும் ஒப்பிட்டுக் கூறமுடியாது.

வாழ்நாளெல்லாம் தமிழாகவும், தமிழுக்காகவும் வாழ்ந்த பெருந்தகை. தமிழகத்தின் மேடைகளை அணிசெய்த சொல்லாற்றல். தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி, உலக இலக் கியங்களிலும் ஆழங்கால்பட்ட அரும்புலமை. ஆம். அண்மையில் நாம் இழந்துவிட்ட அருந்தமிழ்ப் புதையல் முனைவர் ஔவை நடராசன் அவர்கள்தாம் இத்துணை பெருமைக்கும் ஏற்றவர்.

முனைவர் ஔவை நடராசன் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய தமிழ்ப்பொழிவுகள், தகுந்த முறையில் தொகுத்து நூலாக்கி உங்கள் கரங்களில் தவழவிடுவதில் ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம் பெருமையடைகிறது.

கடந்த சில ஆண்டுகளாக எத்தனையோ இடர்களால் மக்கள் பெரிதும் துயருற்றார்கள் என்றாலும் நண்பர் ஔவை அருளும், வேலூர் சந்திரசேகரும், நம்மோடு என்றும் வாழும் தமிழறிஞர் ஔவை நடராசன் அவர்களின் செயலர் பொன்னேரி பிரதாப்பும் இணைந்து, முப்படைத் தளபதிகளாக முயன்று இவ்வுரைத் தொகுப்பு நூலைக் கொணர்ந்துள்ளனர்.

உரைகளைத் தொகுப்பதில் முனைவர் ஔவை நடராசன் அவர்களின் திருமகன் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மகன் தந்தைக்காற்றும் உதவி என்ற வள்ளுவர் வகுத்த வரையறையை மீறிய உழைப்பை இந்நூலாக்கத்திற்கு வழங்கியுள்ளதை மறக்கவியலாது.

அயர்வில்லாமல் அல்லும் பகலும் என்னோடு உடன் உழைத்து இந்த நற்பணிக்குப் பொலிவூட்டிய செயற்செம்மல் பிரதாப்புக்கு என் நல்வாழ்த்துகள். பாரதி இலக்கியக் கழகத்தில் அவர் தொண்டு தொடர்ந்து பல்லாண்டுகளாக வளமூட்டுகிறது.

மகாகவி பாரதியாரின் **141** ஆம் ஆண்டு பிறந்த நாள் நினைவாக, பாரதியார் படைப்புகளுக்கு நூற்றாண்டு நினைவுப் பரிசாக ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம் வெளியிடப்பெறும் இந்த அரிய நூல் விலையில்லாமல் விருந்தினர் அனைவருக்கும் கையுறையாக வழங்கப்பெறுகிறது.

ஜி.சுந்தரேசன்
தலைவர்

ஔவை அருள்
அமைப்பாளர்

நுழைவாயில்

தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் மேனாள் துணைவேந்தர் பத்மஸ்ரீ முனைவர் ஔவை நடராசன் அவர்கள், என் நெஞ்சமெல்லாம் நிறைந்த பெருந்தகை. அவருடைய மேடைத் தமிழுக்கு மாணவப் பருவத்திலிருந்து மயங்கியவன் நான். தமிழகத்தின் மேடைகளைத் தமிழ்ச் சொற்களால் அலங்கரித்து அழகுபார்த்த தனித்திறமை அவரிடம் அளவிலாது பெருகியிருந்தது. எம்மேடையாயினும், எக்கருத்தாயினும் கேட்டார் பிணிக்கும் சொல்வலை வேட்டுவராய்த் தமிழகத்தைச் சுழன்று சுழன்று மேடைத் தமிழ் வளர்த்த பெருமை அவரையே சாரும்.

தமிழிலக்கியத் துறைகளாயினும், ஆன்மிகப் பேருரைகளாயினும், ஆய்வுரைகளாயினும், ஆங்கில உரையாயினும் அவரால் உரைக்கப்பட்ட செம்மாந்த சீருரைகள் பிறரிடம் காண முடியாதவை.

இத்தகைய பெருந்தகையாளரோடு நெருங்கிப்பழகவும், கலந்துரையாடவும், நட்பெனும் கிழமை பெற்றுத் துலங்கவும் எனக்கு வாய்ப்பு கிடைத்ததை எண்ணி எண்ணி என்றென்றும் யான் மகிழ்வேன்.

அவரிடம் 'எதையும் எழுதி வைக்காதவர் பேசிவிட்டுச் சென்று விடுவார்' என்று பலர் குறைகண்டதுண்டு. அக்கூற்றை இன்றைக்கு அவருடைய திருமகன் முனைவர் ந.அருள் பொய்யாக்கிவிட்டார்.

முனைவர் ஔவை நடராசன் தமிழகத்தின் மேடைகளில் வீசிய தமிழ்ப் பூங்காற்று. காற்றைப்பிடிப்பதும் கட்டுக்குள் அடக்குவதும் எங்ஙனம் இயலும். முனைவர் ந.அருள் அதை செயலாக்கி சாதனை புரிந்துவிட்டார்.

ஆம். தந்தையின் தடங்களைக் கண்டறிந்து, அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளை வியக்கத்தக்க வகையில் தொகுத்து நூலாக்கித் தந்துவிட்டார்.

இவரை எப்படிப் பாராட்டுவது எனத் தெரியாமல் ஆனந்தக் கண்ணீர் என் கண்களில் துளிர்க்கிறது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் என இந்நூல் அவர் நிகழ்த்திய 46 உரைகளின் தொகுப்பு நூலாக இப்போது உங்களிடம் தவழ்கிறது. அண்மையில் மறைந்த அந்த அன்புருவை, அறிவுக்களஞ்சியத்தை அவர் மகன் உரைகளின் வடிவில் நம் கண் முன் அவரை உயிர்த்தெழ வைத்துவிட்டார் என்றுதான் கூறவேண்டும்.

இந்நூல் பல பேச்சாளர்களுக்கு நடைவண்டியாய் துணை நிற்கும் என்பது உறுதி.

பெருந்தகை ஐயா, முனைவர் ஔவை நடராசன் அவர்களே உங்கள் உருவம் மறைந்திருக்கலாம், உங்கள் மேலான கரகரத்த குரல் எங்கள் காதுகளில் விழாமல் நின்றிருக்கலாம். தங்கள் அன்பும் அரவணைப்பும் எங்களைத் தொடாமல் விட்டிருக்கலாம்.

ஆனால் உங்களை எங்களுக்கு மீண்டும் எல்லா வகையிலும் இந்த உரைத் திரட்டு வழியாக வழங்கிவிட்டார் உங்கள் அன்புக்குரிய திருமகன் முனைவர் ந.அருள் நூல்நயம் கூறுவதிலும் அருள் நயம் பாராட்டலே பொருந்தும்.

வாழ்க அருள்! அவர் தொண்டு தொடர்க!

திரு.கூ.வ.எழிலரசு
மேனாள் இயக்குநர்
தமிழ் வளர்ச்சித்துறை

பொருளடக்கம்

1	ஸ்ரீராம் நிறுவனங்கள் நடத்தும் மகாகவி பாரதியார் 124–ஆவது பிறந்தநாள் விழா – 5.2.2006	13
2	பாரதி இலக்கிய விழா – 6.2.2016	21
3	இலக்கிய வானம் – அகில இந்திய வானொலி. இலக்கியத் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சியில், சங்க இலக்கியம் முதல் பகுதி.	29
4	இலக்கிய வானம் – இரண்டாம் பகுதி 24.3.2015	41
5	தொல்காப்பியக் கோட்பாடுகளும் விதிகளும் பயிலரங்கம்	53
6	நாளும் வளரும் நமது மொழி	63
7	வளர்தமிழ் அறிஞர் விருது விழா 12.08.2019	69
8	மயிலைத் திருவள்ளுவர் கழகம் விழா 25.1.2020	73
9	திரு. சங்கரநாராயணன் நூல் வெளியீட்டு விழா 1.3.2020	77
10	சீதா கிங்ஸ்டன் பள்ளி ஆண்டு விழா 24.1.2020	81
11	அறிஞர் சாலமன் பாப்பையா – புறநானூறு நூல் வெளியீட்டு விழா 29.6.2019	87
12	கவிதை உறவு 26.6.2019	95

13	விஜிபி தமிழ்ச்சங்கம் 3.11.2019	97
14	காந்தி வள்ளலார் விழா – சரவணப் பெருமாள் ஐயர் நூல் வெளியீடு 5.10.2019	99
15	காந்தி வள்ளலார் விழா – ஊரன் அடிகளார் நூல் வெளியீடு 5.10.2019	103
16	முத்தமிழறிஞர் கலைஞர் 98 – 1.6.2022	109
17	சர்வதேசத் தமிழ்த் தாவர அனைத்து நாட்டு உணவாளர் பேரவை, சென்னை 30.11.2014	113
18	நின்றவூர் நித்திலம்!	119
19	நக்கீரன் – இனிய உதயம் மாத இதழ்	123
20	பிள்ளைத்தமிழ் – தமிழ்மணி (தினமணி)	131
21	கல்வியில் காலத்திற்கேற்ற மாற்றம் வேண்டும்! 1.1.2021	135
22	நினைவுகள் அழிவதில்லை! 2020	155
23	வள்ளலார் செய்த புதுமைகள் 1.7.2020	163
24	அரசும் – மக்களும் 1.11.1978	169

25	சோமெல நூற்றாண்டு விழா 18.2.2020	173
26	பொதிகைத் தொலைக்காட்சி 17.3.2020	177
27	பொதிகை பூந்தென்றல் நிகழ்ச்சி 17.3.2020	179
28	தருமை ஆதீன உரை	181
29	தமிழ்நாடு சிங்கப்பூர் நட்புறவுக் கழகம் 20.9.2019	185
30	கம்பன் விழா	189
31	கம்பன் கழக முதலாண்டு விழா	195
32	எம்.ஜி.ஆர். படத் திறப்பு விழா	203
33	இருமொழிக் கொள்கைத் திட்டம்	205
34	தமிழாற்றுப்படை	207
35	அண்ணல் நமசிவாயம் விழா	209
36	சைவ சித்தாந்தம் 14.10.2010	211
37	முப்பதாவது வள்ளலார் – காந்தியடிகள் விழா	217

38	புலவர் குழு 6.6.2019	223
39	52ஆவது பொது நூலக விழா 19.11.2019	227
40	சிற்பச் செந்நூல் – வெளியீட்டு விழா 01.11.1978	233
41	திருவள்ளுவர் பல்கலைக்கழகம் பட்டமளிப்பு விழாப்பேருரை	239
42	Dance Recital of Hema Muthukumar	243
43	Bharathi The National Bard	249
44	Tamil Literary Heritage – From Dawn to Modernity 10.12.2009	257
45	Bharath University - 28th Convocation Address	271
46	Valliammal Womens College - 25th Convocation Address	277

மகாகவி பாரதியார்

141 ஆம் பிறந்த நாள் விழா

அழைப்பிதழ்

ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்

ஸ்ரீராம் நிறுவனங்களின் அங்கம், சென்னை.

பெருந்தகையீர்,

வணக்கம்.

மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவைத் தொடர்ந்து 35 ஆண்டுகளாக ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகத்தினர் பெருமிதமாக நடத்தி வருகின்றனர். மகாகவியின் 141ஆம் பிறந்தநாள் விழா 25 - 2 - 2023 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்குத் தியாகராய நகர், ஸ்ரீ கிருஷ்ண கான சபா அரங்கில் நடைபெறும்.

தலைமை

பேராசிரியர் முனைவர் **வீ.காமகோடி**

இயக்குநர், இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி.), சென்னை

மகாகவி பாரதியார் புகழ் பரப்பி வரும் மூன்று பெருமக்களுக்கு
விருது வழங்கிப் பொற்கிழி அளித்துப் பாராட்டிச் சிறப்பிப்பார்.

முன்னிலை

ஔவை அருள்

அமைப்பாளர், ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்

சிறப்புரை

பேராசிரியர் பத்மஸ்ரீ **சாலமன் பாப்பையா**

ஜி.சுந்தரேசன்

தலைவர், ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்
ஸ்ரீராம் நிறுவனங்களுக்காக

நிகழ்ச்சி நிரல்

வரவேற்புரை

ஔவை அருள்

நூல் வெளியீடும் - விருது வழங்கலும்

தலைமையுரை

பேராசிரியர் முனைவர் **வீ.காமகோடி**

இயக்குநர், இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி.), சென்னை

விருது பெறுவோர்

திரு சீனி. இராசகோபாலன்

முனைவர் திருமதி சாந்தகுமாரி சிவகடாட்சம்

முனைவர் இரா.நக்கீரர்

சிறப்புரை

பேராசிரியர் பத்மஸ்ரீ **சாலமன் பாப்பையா**

நிரலுரை

டாக்டர் **பாலசாண்டில்யன்**

ஒளிப்பதிவு

கலைமாமணி **யோகா**

இணைய ஒளியும் – ஒலியும் பதிவு

திரு **சார்லஸ்**

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

பொன்னேரி பிரதாப்



விழா நிறைவில்

ஔவை சொல் கேளீர்

நூல் விலையில்லா விருந்தாக வழங்கப்பெறும்

அரசு வழிகாட்டுதலின்படி அனைவரும் முகக்கவசம் அணிந்து வரவும்
சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்.

1. ஸ்ரீராம் நிறுவனம் நடத்தும் மகாகவி பாரதியார் 124-ஆம் பிறந்த நாள் விழா

வரவேற்புரை

5.2.2006

இன்றைய விழாவிற்குப் பொலிவூட்ட வந்திருக்கும் பெருமக்களாகிய பெருந்தகை சேசசாயி அவர்களே, இயக்குநர் சிகரம் என்றும் திரை உலகத்தின் தேயாத ஒரே முழு நிலவு என்றும் பாராட்டப்படுகின்ற டாக்டர் கே.பாலசந்தர் அவர்களே, பாராட்டுப் பெறுவதற்காக வருகை புரிந்திருக்கும் பாரதி அன்பர்கள் மூவர் விருது பெற வந்திருக்கிறார்கள். தன்னுடைய வாழ்நாளெல்லாம் பாரதியின் பாடல்களைப் பரப்புவதிலும், அந்த நெறிகளை உலகுக்கு எடுத்துரைப்பதிலும், பழுத்த எழுத்தாளராகத் திகழ்கிற பாரத மணி சீனிவாசன் வந்திருக்கிறார். இளமைக்கு இளமையோடு சாதனா இராதாகிருஷ்ணன் அவர்கள். கோவையிலிருந்து சென்ற ஆண்டு ஸ்ரீராம் நிறுவனங்கள் வெளியிட்ட பாரதி அமுதத்தில் பாரதியார் எழுதிய பாப்பா பாட்டு பற்றி ஓர் ஆழ்ந்த கட்டுரை எழுதிய சாதனா இராதாகிருஷ்ணன் அவர்களும் விருது பெற வந்திருக்கிறார்கள்.

நான் ஒரு இரண்டு திங்களுக்கு முன்னால் இலண்டன் மாநகரம் சென்றபோது எனக்கு லண்டனில் உள்ள ஒருவர் ஒரு புத்தகத்தைக் கையில் கொடுத்தார்.இதைப் பாருங்கள் என்று.அந்தப் புத்தகம் வந்து ஒரு ஐந்து ஆண்டுகள் இருக்கும்.அப்போதுதான் அந்த நூலை நான் புரட்டிப் பார்த்தேன்.பாரதியாரின் குயில் பாட்டின் தத்துவ மர்மம் என்பதாகும் அந்த நூல்.

எனக்கு வியப்பாக இருந்தது. பாரதியாரின் குயில் பாட்டின் தத்துவ மர்மம் என்று நூலாக எழுதி வெளியிட்ட கவிஞர் கருணாநந்த ராஜா அவர்கள் லண்டன் மாநகரத்திலிருந்து இங்கு வந்திருக்கிறார்கள். ஆக ஸ்ரீராம் நிறுவனங்கள் பாரதியாரின் புகழ் பரப்பும் பெருமக்களை எப்படியெல்லாம் தேடி அழைத்து வந்து சிறப்புச் செய்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் அதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஸ்ரீராம் நிறுவனங்கள் வணிகத்தை முதன்மையாகக் கொண்ட நிறுவனம்தான்.ஆனால் வாழ்வியலில், பண்பாட்டில் மக்களின் நடைமுறை வாழ்க்கைக்குப் பல வகையில் பெயர் சொல்லாமல் பணியாற்றுவது என்ற வழக்கத்தைப் பல்லாண்டுகளாக நடத்தி வருகின்ற ஒரு மாபெரும் நிறுவனமாகும். நேற்றைய இந்து நாளிதழை நீங்கள் பார்த்தால் தெரிந்திருக்கும். I for industry, I for inspiration, I for integration என்று எழுதியிருக்கிறார்கள். வணிகம் என்பது பொருளாதாரத்தை மட்டும் பொருளாகக் கொண்டதில்லை.வாழ்க்கைக்கு ஆதாரமாகப் பொருள் மட்டுமில்லை. இலக்கியம் பண்பாடு, கலை, மொழி என்பவற்றையெல்லாம் உணர்ந்து நடந்து கொள்கிற நிறுவனங்கள் என்பதைப் பார்த்தால் தமிழகத்தில் விரல் விட்டு எண்ணிவிடலாம்.அப்படி நிரம்பி வழிகின்ற நிறுவனங்களில் ஒப்பற்ற பணி செய்யும் நிறுவனமாக ஸ்ரீராம் நிறுவனம் உள்ளது என்பதற்கு இங்கு நிரம்பி வழியும் கூட்டமே சான்றாகும்.

பெருமக்களே! இன்றைய விழாவிற்கு வருகை தந்துள்ள தலைவரைப் பற்றி நான் சொல்ல வேண்டும். சேசசாயி அவர்கள் தன் தந்தையின் புகழால், தாயின் புகழால் தனக்கென அமைந்த தனிப் புகழால் மூன்று மடங்கு புகழ் வாய்ந்தவர் சேசசாயி அவர்கள். அவருடைய அன்னையார் எழுத்துலகத்திற்கு நன்றாகத் தெரிந்த திருமதி. வசுமதி ராமசாமி அவர்கள். வசுமதி ராமசாமி அவர்கள் எழுதியுள்ள கதைகளை, கட்டுரைகளை ஏராளம் பேர் படித்திருப்பார்கள்.

ஒருவர் படித்து, வசுமதி அவர்கள் நீங்கள் தொடர்ந்து கடிதங்கள் எழுதினால் இந்த நாட்டு இளம் பெண்களும், தாய்மார்களும் பயன்பெறுவார்கள் என்பதைச் சொன்னவர் ராஜாஜி. அப்படிப்பட்ட புகழ் வாய்ந்தவர் வசுமதி ராமசாமி அவர்கள். தந்தை வழக்கறிஞர் துறையில் மாபெரும் புகழ் வாய்ந்தவர். இப்படிப்பட்ட தந்தை தாயின் புகழைச் சுமந்து கொண்டு நண்பர் சேசசாயி அவர்கள் தன்னுடைய நிருவாகத் திறமையால், தன்னுடைய ஆற்றலினால் இன்று மாபெரும் நிறுவனமான அசோக் லேலேண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராகத் திகழ்கிறார் என்பது, இந்திய நாட்டின் இளைஞர்களின் சாதனையாளர் என்பதும் நண்பர் சேசசாயி அவர்களுக்குப் பொருந்தும். அவர் இந்த விழாவிற்கு வந்திருப்பது நமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த விழாவைத் தொடங்கும்போதே எவ்வளவு மகிழ்ச்சியோடு நாம் தொடங்குகிறோம் என்று சொன்னால், ஒரு தலைமுறைதான் சிறப்பாக இருக்கும்.

ஆனால், கலைமுறை என்ற வகையில் மூன்று தலைமுறை சிறப்பாக இருக்கும் என்பதை இசை உலகின் முடிசூடா வேந்தர் லால்குடி அவர்கள் இங்கு வந்திருக்கிறார். அவருடைய திருமகளார் இங்கு உருக்கமாகப் பாடிய பாடலை நாம் கேட்டு லயித்திருக்கிறோம். இதில் என்ன பொருத்தமென்றால் அருமைப் பெருந்தகை சேசசாயி அவர்கள் அவரை உரையாற்ற அழைத்தது மட்டும் இல்லை. அப்படி உரையாற்றவில்லை என்றால் அவரைப் பாடச் சொன்னால் அவரைப்போல இசையோடு பாடுபவர் எவருமில்லை. எனவே, பாடவும் தெரிந்த, நிருவாகத் திறமையும் உள்ளவர் என்பதும் எளிதல்ல.

நீங்கள் படித்திருக்கலாம். ஐன்ஸ்டீனுக்கு சோர்வு வருகிற போதெல்லாம் வயலினைக் கையில் எடுத்துக்கொண்டு வாசிக்கக் கற்றுக்கொண்டு வாசிப்பதாலேதான் தனக்கு ஊக்கமே வந்தது என்று சொல்வார்கள். அது வேண்டுமென்றால் ஐன்ஸ்டீனுக்குப் பொருந்தும். ஆனால், இப்போதும் இனிய இசையைக் கேட்டபடி நிர்வாகம் செய்வது என்றால் அது சேசசாயிக்குப் பொருந்தும்.

பெருமக்களே! கே.பாலச்சந்தரைப் பற்றி, அவர்தான் இந்த உலகத்தில் எல்லோரையும் அறிமுகப்படுத்துபவர். சொல்வார்கள் அவர் தொட்டால் பொன்னாகும் என்று. மண்ணைத் தொட்டால்கூட அது எப்படி நடிக்கும் என்பதைப் பாலச்சந்தரைக் கேட்டால் தெரியும். அவருடைய எழுத்துத் திறமை, எண்ணத் திறமை, எதிலும் புதுமை காண்பது, காலத்திற்கு ஏற்ற கோலங்களைச் சொல்கிறபோது அதிலும் நளினங்கள், நேர்மை, அழகு என்றெல்லாம். ஓர் ஆற்றல் வாய்ந்த இயக்குநரைத் தமிழகம் கண்டு அது உலகத்திற்கு வழங்கியது என்றால் அது பாலச்சந்தர்தான். அவர் தான் நினைத்த கருத்தை எப்படிப் பரப்புகிறார் என்பதற்கு ஒரு சான்று, பாரதியார் பாடல்களை நாம் இசையரங்கத்தில் பாடுகிறோம். ஆராய்ச்சியாளர்கள் கட்டுரைகளாக எழுதுகிறார்கள். விடுதலை வீரர்கள் அந்தப் பாடலை ஆவேசமாகப் பாடுவார்கள். இந்த மூன்றையும் "வறுமையின் நிறம் சிவப்பு" என்ற படத்தைப் பார்த்தால் எழுந்து வருகின்றவர்கள் மட்டுமல்ல, பாரதியார் நூல் எங்கே கிடைக்கும் என்று கேட்டுவிட்டுத்தானே வந்தார்கள். இப்படிக் கோடிக்கணக்கான மக்களுக்குக் கொள்கை முழக்கம் செய்வதிலும், உண்மையான சமுதாயம் எப்படி அமைய வேண்டும் என்று காட்டுவதிலும் "உன்னால் முடியும் தம்பி" என்பது ஒரு தொடர் அல்ல, அது வாழ்க்கையின் நிழல் என்று காட்டிய பெருமை பாலச்சந்தரைத்தான் சாரும். அவர்கள் இங்கே வந்திருப்பதில் ஒரு பெருமை என்னவென்றால் டாக்டர் பட்டம் பெற்ற பசுமை மாறாமல் இங்கே வந்திருக்கிறார் என்பதுதான்.

பாலசந்தர் அவர்கள் அவ்வளவு எளிதில் யாருக்கும் வசப்படுபவர் அல்ல. எத்தனை தொலைபேசி போட்டாலும், சுழன்றாலும் கண்டுபிடிக்க முடிவதில்லை. நாங்களும் முயலாதவர்கள் இல்லை. மிகப்பெரிய நட்சத்திரங்களை வைத்துக்கொண்டு முயன்றோம். அவர்கள் சொன்னார்கள், எங்களால் அவரைப் பிடிக்க முடியவில்லை விட்டுவிடுங்கள் என்று. ஆனால், மெல்ல ஒரு நாள் அவரிடத்தில் உரையாடியபோது, பாரதியார் விழா தானே நான் வருகிறேன் என்று சொல்லி வைத்தார்கள். பிறகு நான் அவரைப் பார்க்கவேயில்லை, சரியாக வந்து சேர்ந்தார்கள். அதை நினைத்துப் பார்த்து நாங்கள் பெரிய மகிழ்ச்சி அடைகிறோம். ஸ்ரீராம் நிறுவனங்களின் தலைவர் பெருந்தகை தியாகராஜன் அவர்கள் இந்த விழா தொடங்குவதற்கு முன்னால் என்னிடம் சொன்னார், விழா வெற்றி பெற்றுவிட்டது, ஏனென்றால், பாலச்சந்தர் வருகிறார். எனவே, உங்களை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

நண்பர்களே! இந்த பாரதி விழாவில் ஒரு நுட்பம் என்னவென்பதை, நான் சொல்ல விரும்புகிறேன். தலைவர் அவர்களே! தமிழகத்தில் நாலாயிரம் கல்லூரி மாணவர்களும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் கடந்த ஒரு மாதமாகப் பாரதியார் பேச்சுப் போட்டியில் பங்கு பெறுவதற்காகப் பேசிப் பழகிப் பேசியிருக்கிறார்கள். நாலாயிரம் இளைஞர்கள் பேசியதில் நாலாயிரம் பேர் என்று கணக்கெடுத்துக்கொண்டால், இது பத்தொன்பது ஆண்டு என்று கணக்கெடுத்தால், நாலாயிரம், மூவாயிரம், இரண்டாயிரம் என்று கணக்கெடுத்தால், தமிழகத்தில் கடந்த பத்தாண்டுகளில் ஏறத்தாழ ஒரு இலட்சம் இளைஞர்களுக்குப் பாரதியார் பாடல் வரிகள் தெரிகிறதென்றால், ஸ்ரீராம் நிறுவனம் நடத்தும் பாரதி விழாவால்தான். இன்று அதற்கு நீதிபதியாக அமர்ந்திருப்பவர் டாக்டர்.பூவண்ணன் என்ற பேராசிரியர் கோவையில் கல்லூரியில் பேராசிரியராக இருப்பவர், அவர் ஒரு நீதிபதி. அவர் சொன்னார், இந்தப் பிள்ளைகள் வாய் திறந்து பேசினால், ஒருவர் கூடக்கையில் குறிப்பு வைத்துக்கொள்வதில்லை. அதுவும் வாய் திறந்தால் 100 வரிகள் 150 வரிகள் தடைப்படாமல் சொல்கிறார்கள். அதுவும், இந்தக் கலை இவர்களுக்கு எப்படி வந்தது என்று கேட்டார்.

இந்தக் கலை எப்படி வந்தது என்றால் நான் காரணம் சொல்கிறேன். ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு மேடையில் நின்று பேசிய சுதா என்ற சிறுமி வாய்திறந்து பேசிய தமிழைக் கேட்டு அவ்வளவு பேரும் வியந்து ஆ! என்றார்கள்.

அந்த சுதா டாக்டர் ஆகி அதுவும் எம்.எஸ். பட்டத்தில் முதல் பரிசு பெற்று அதுமட்டுமில்லை தனக்கு மருத்துவம் மட்டுமில்லை ஆன்மிக மகத்துவமும் தெரியும் என்று இன்று மேடைகளில் சுற்றிச் சுழன்று பேசுகின்ற டாக்டர்.சுதா சேஷையன் இந்தப் பண்ணையில் விளைந்தவர்தான். இவைகளெல்லாம் எவ்வளவு பெரிய மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் தருகிறது என்று பார்த்தால் இதை நடத்துகிறவர்களைப் பற்றியும் நான் இரண்டு குறிப்புகள் சொல்ல வேண்டும்.

சான்றாக இந்த மாணவர்கள் அனைவரையும் எப்படியாவது திரட்டுவது, அவர்களின் பெற்றோர்களையும் அழைப்பது, இங்கு அமர வைத்தது, அவர்களுக்கு விருந்து தருவது என்று அவர்கள் இந்த விழாவில் கலந்து கொள்வதில் ஒரு பெரிய மகிழ்ச்சி தருகின்ற வகையில் நான் சொல்லுகின்ற வார்த்தை சுழலும் பம்பரமாக நம்முடைய ஜி.சுந்தரேசன் அவர்கள்தான் இந்த ஆட்சிப் பொறுப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் மேலாகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் இன்னும் சொன்னால் எழுதுகிறவர்களுக்கு அகரமாகவும், எழுத்துலகத்தின் சிகரமாகவும் திகழ்கின்றவர் நண்பர் விக்கிரமன் அவர்கள்.

எனவே, இந்த விழாவை எப்படி நடத்துவது என்கிற அழகு காட்டுகின்ற வகையில் பெருமிதமாக ஸ்ரீராம் நிறுவனங்கள் இந்த நிகழ்ச்சியை நடத்துகின்றது. எத்தனையோ நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடந்தாலும், மனம் கனிந்து மகிழ்ச்சி தருகின்ற நிகழ்ச்சிகள் என்று சிலவாகத்தான் இருக்க முடியும். அந்த நிகழ்ச்சிகளில் ஸ்ரீராம் நிறுவனம் நடத்தும் இந்த பாரதியார் விழா அத்தகைய புகழ் வாய்ந்தது.இந்த விழாவின் பெருமைக்காக எதிரே அமர்ந்திருக்கிற பெருமக்களைக் காணும்போது எனக்கு வியப்பாக இருக்கிறது.

பாரதி நாவலர்கள், இசைக்காவலர்கள், இசைப் பெரும் புலவர்கள், தொழில் மேதைகள், எல்லாவற்றிற்கும் மேலாகக் கலை, இசை எங்கிருந்தாலும், வந்து அமர்கின்ற நம்முடைய நீதியரசர் பக்தவத்சலம் என்று பார்க்கின்றபோது உங்களையெல்லாம் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இந்த விழாவிற்குச் செலவேற்பதுதான் கடினமே தவிர வரவேற்பது சுலபம் என்று நான் நினைக்கிறேன். எனவே, உங்களை வருக, வருக என மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். வந்திருக்கிற பெருமக்களுக்கெல்லாம், பாரதியாரும், மகாத்மாவும் என்ற நூல் பரிசாகத் தரப்படவிருக்கிறது.

பாரதியார் கருத்துக்களைப் பரப்புகின்ற வகையில், பாரதியாருடைய பெருமிதத்திற்கு ஒரு சான்று சொல்வதென்றால், கவிதை பாடுவார்கள், கற்பனையாகச் சொல்வார்கள், தங்கள் மனத்தில் படுகின்ற காட்சிகளைச் சொல்வார்கள். ஆனால், இரண்டையும் ஒன்றாக இணைப்பதற்கு ஒரு தொடர் பாருங்கள்.

கலை வளர்ப்போம், கொல்லன் உலை வளர்ப்போம் இப்படிச் சொல்ல முடியுமா?கலை வளர்ப்பது ஒரு பணியாக இருக்கட்டும். அந்த பணி முடிந்த பின்னர் நாட்டின் வளத்தை வளர்க்கும் பணி உலையாக இருக்கட்டும், ஆலையாக இருக்கட்டும், தொழிலாளர்களாகட்டும், தொழில் வளர்ச்சியாகட்டும் என்று கலையும், தொழிலும் இரண்டு கண்களாக அமைய வேண்டும் என்பதை ஒரு கவியரசர் பாடுவது என்பதை நாம் பெரும்பாலும் கேட்டதில்லை. காரணம் அதற்கு முன்னால் கவியரசர்கள் பலர் இருந்தாலும், அவர்களுக்குத் தொழில் வளம் என்பதைப் பற்றி தெரிந்து கொள்வதற்குரிய சூழல் இல்லை. ஆனால், பாரதியார் யாரோ சொன்னது போல அவர் ஒரு Poet as well as a planner and a philosopher என்று சொன்னார். எனவே, இந்த மூன்று முறைகளையும் பொலிந்து காட்டிய அந்தப் பெருந்தகை பாரதியாரை நினைக்கின்றபோதெல்லாம் இந்த நாடு வளம் பெற வேண்டும், இந்த நாடு உயர்வடைய வேண்டும், இந்த நாடு சிறப்படைய வேண்டும் என்பதற்குரிய வகையில்தான் மாணவ மணிகள் எப்படி இந்தப் போட்டியில் பங்குபெற்றார்கள் என்பதை நாங்கள் மகிழ்ந்து போற்றுகிறோம். இந்த வகையில் பண்பாட்டினுடைய புலத்தை ஒரு அங்குலம் உயர்த்திய பெருமை ஸ்ரீராம் நிறுவனத்தைச் சாரும் என்று சொல்லி உங்களையெல்லாம் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

வணக்கம்.

மகாகவி பாரதியார்

134 ஆம் பிறந்த நாள் விழா

அழைப்பிதழ்

ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்

(ஸ்ரீராம் நிறுவனங்களின் ஓர் அங்கம்)

சென்னை

பேரன்புடையீர்,

வணக்கம்.

தொடர்ந்து 28 ஆண்டுகளாக மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழாவை ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகத்தினர் சிறப்பாக நடத்துகின்றனர். இந்த ஆண்டு மகாகவியின் 134 ஆம் பிறந்த நாள் விழா 6-2-2016 சனிக்கிழமை மாலை 5-15 மணிக்கு, தியாகராய நகர், ஸ்ரீ கிருஷ்ணகான சபா அரங்கில் நடைபெறும்.

மாண்புமிகு நீதியரசர்

உயர்திரு **எம்.எம். சுந்தரேஷ்** அவர்கள்

வாழ்த்துரை வழங்க

மகாகவி பாரதி புகழ் பரப்பிவரும்

அறிஞர் பெருமக்கள் மூவர்க்கு விருதுகள் வழங்கிப்

பொற்கிழி அளித்துப் பாராட்டிச் சிறப்பிப்பார்

பேராசிரியர் திரு. **த. இராசாராம்** அவர்கள்

"*பாரதி காட்டிய பாதை*" என்ற தலைப்பில்

சிறப்புரையாற்றுவார்

விழாவின் தொடக்கத்தில் இசை அரங்கு :

மகாகவி பாரதியார் பாடல்கள்

(சென்னை இளையோர் குழுவின் சேர்ந்திசை)

ஜி.சுந்தரேசன்	**ஔவை நடராசன்**
தலைவர்	அமைப்பாளர்
ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்	ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்
ஸ்ரீராம் நிறுவனங்களுக்காக	

விழாவுக்கு வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்

2. பாரதி இலக்கிய விழா

வரவேற்புரை

6.2.2016

ஆண்டுதோறும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் போட்டி நடத்தி, அதில் பரிசு வழங்கி, கணக்கெடுத்துப் பார்த்தால் ஒரு மூன்று இலட்சம் மாணவர்கள் பாரதி பாடலை இப்போது அறிந்திருக்கிறார்கள். இது பாரதி கலை இலக்கியக் கழகம் ஆற்றிய ஒரு பெரும் பணி.

இன்று தான் பாரதியாருக்குப் பிறந்தநாள் என்று இல்லை. நாளும் பாரதியார் பிறந்தநாள் தான். பாரதி உணர்வுள்ளவர்களுக்கு ஒவ்வொரு கணமும் பிறந்தநாள்தான். அந்த வகையில் மழைதான் நாம் விரும்பிக் கேட்டோமே தவிர, வெள்ளத்தை யாரும் விரும்பிக் கேட்கவில்லை. ஆனால், வெள்ளம் புரண்டு வந்ததால், மாணவர்களை யெல்லாம் ஒன்றாகத் திரட்டிப் போட்டி நடத்த முடியாமல் இந்த ஆண்டு சோர்ந்துவிட்டோம். இந்தச் சோர்வுக்கெல்லாம், ஒரு பெரிய மிகப்பெரிய சோர்வைத் தந்த நிகழ்வை நான் சொல்ல வேண்டும்.

25 ஆண்டுகளுக்கு மேலாக எல்லா உழைப்பையும் தன்னுடைய தோளில் ஏற்றிக்கொண்டு போட்டிகளை நடத்துவதற்கும், விழாவை நடத்துவதற்கும் தன்னை ஆட்படுத்திக் கொண்டவர், அமுதசுரபியின் ஆசிரியராகப் பல்லாண்டுகள் இருந்ததோடு, இலக்கியப் பீடத்தின் ஆசிரியராகவும், எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் இருந்த கண்ணெதிரிலேயே எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த மாபெரும் எழுத்தாளர் திலகம் விக்கிரமன் அவர்கள்.

நம்முடைய கண்கள் இப்போது தேடினாலும், காணமுடியாமல் தற்போது மறைந்துவிட்டார் என்பது பெரும் துன்பம் தருவது என்றாலும் அவரது நினைவெல்லாம் இந்த விழாவிலே தான் இருக்கும். எனவே, விக்கிரமன் அவர்கள் தொடர்ந்த பணியைப் பாரதி இலக்கியக் கழகம் தொடர்ந்து நடத்தும்.

பெருமக்களே! வழக்கம்போல ஸ்ரீராம் நிறுவனங்கள் பெரிய தொழில் நிறுவனங்களாகத் திகழ்ந்தபோதும்கூட கலை இலக்கியங்களை வளர்ப்பதில் ஒரு தனி ஆர்வம் காட்டுகிற முயற்சியில் பாரதி விருதுகளை வழங்குவதும், அறம் விருது வழங்குவதுமாக ஓர் அரும்பணியாற்றுகிறது.

அந்த வகையிலேதான் இந்தப் பணியும் நடைபெறுகிறது. இந்த விழாவுக்கு தலைமை தாங்க வந்திருக்கும் நீதியரசர், நம்முடைய மனத்தைக் கொள்ளை கொள்வது மட்டுமில்லை, நம்முடைய கண்களையும் கவர்கின்ற இளைஞராக அமர்ந்திருப்பது ஒரு பெரும் மகிழ்ச்சியாகும். அருமை நீதியரசர் சுந்தரேஷ் அவர்கள் உடம்பில் ஊறுகின்ற ஒவ்வொரு உதிரத்துளியும் நீதியும், நேர்மையும், வழக்காடுகின்ற வன்மையும் ஒவ்வோர் துளியிலுமே பளிச்சிடுகின்றது என்பதை இந்த நாடு நன்றாக அறியும்.

நீதியரசர் சுந்தரேஷ் அவர்கள் இந்த விழாவிற்கு நாங்கள் அழைத்தபோது மிக மகிழ்ந்து இசைந்தார்கள். அவ்வாறு இசைந்ததற்கு ஒரு காரணமும் சொன்னார். பாரதி இலக்கியக் கழகம் நடத்திய போட்டியில் பங்கு கொண்டு இன்று நாடறிந்த பேச்சாளர்கள், வழக்கறிஞர்கள் மிகப் பெரிய நிலையில் விளங்குவது போல நீதியரசர் இராம சுப்பிரமணியம் கூட மாணவராக இருந்த போது இவ்விழாவில் பங்கு கொண்டவர் தான்.

நீதியரசர் அவர்கள் எனக்கு இன்று காலையிலே சொன்னார்கள். இந்த விழா நடைபெறுவதில் நானும் பங்கு கொள்வேன் என்று. எனக்கு பெரிய மகிழ்ச்சி தருவது, என்னை விட இளையவராக இருக்கும் திரு.சுந்தரேஷ் அவர்கள் பங்கு கொள்வது தான். எனவே, நீதியரசரை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

பொதுமக்களே! பாரதி விருது வழங்குவது என்பதை ஒரு சீரிய பணியாகப் பாரதி கலை இலக்கியக் கழகம் நடத்துகிறது.

உண்மையிலேயே ஒரு நெகிழ்ச்சியைச் சொல்வதென்றால், ஸ்ரீராம் நிறுவனங்களின் தலைவர் திரு.தியாகராஜன் அவர்கள் ஒரு மாபெரும் விருதைப் பாரதியாரின் பெயரில் வழங்க வேண்டும் என்ற பேரவாவில் இருக்கிறார். அவருக்குத் தொழில் நிறுவனங்களை நடத்துகிறவர்களெல்லாம், அறப்பணிகளில் ஆரவாரமில்லாமல் பங்கு பெற வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்.

அந்த வகையிலேயே இன்று வழங்குகின்ற விருதும், பாராட்டும்கூட எளியவகையில்தான் என்றாலும் கூடப் பாரதி பணிக்காகத் தன்னை ஆட்படுத்திக் கொள்கிறவர்களுக்கு ஸ்ரீராம் எந்த நேரத்திலும் கைகொடுக்கும், துணை நிற்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருமக்களே! நம்முடைய உள்ளத்தைக் கவர்ந்தது மட்டுமில்லாமல் அரசியல் சிகரத்தில் இருந்தாலும், இலக்கியத்திற்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டு கட்சியை மறந்து, நட்பிற்காக இந்த உலகம் முழுவதையும் தன்பால் அரவணைத்துக் கொள்கிற பொற்றாமரை இயக்கத்தின் தலைவர் இல.கணேசன் அவர்கள். அவருக்குப் பகை என்று யாருமே இல்லை. அவருக்கு உறவு இந்த உலகம் முழுவதும் உறவு. அவர் செல்லுமிடமெல்லாம் பாரதி புகழையும், பாரதத்தின் பெருமையையும் பாராட்டிச் சொல்வார்கள். ஒரு நிகழ்ச்சியை நான் நினைத்துப் பார்க்கிறேன்.

அருமை நண்பர் கணேசன் அவர்கள், நட்பை எவ்வளவு உயர்வாகச் சொல்வார் என்பதற்கு ஒரு சான்று சொல்வதென்றால், உங்களுக்குள் பூசல் இருந்தால், அதை நான் நண்பன் என்ற முறையில் சென்று போக்கிக்கொள்ள முடியும் என்பதை நினைத்து நான் நெகிழ்ச்சியடைகிறேன். ஒரு தொடர் ஒன்று உண்டு. ஒரு நிகழ்ச்சி நடந்தபோது, நீங்கள் எங்கள் அன்புக்குரியவர் என்றாலும்கூட உங்களைத் தாண்டித்தான் எங்களின் நெகிழ்ச்சி உண்டு என்று வாழ்க்கையில் எல்லோரும் பாராட்டிப் புகழ்கிறவர் என்ற பெருமை இல.கணேசன் அவர்களைச் சாரும். அவர்களுக்கு விருது வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். பாரதியார் விழாக்கள் எங்கே நடந்தபோதும், எப்போது நடந்தபோதும், எவர் அழைத்தபோதும் முதலில் பங்கு கொள்கிறவர், பொற்றாமரையைப் போற்றி வளர்ப்பதைத் தம் கடமையாகக் கொண்டிருப்பவர் என்ற வகையில் இல.கணேசன் அவர்களை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

பாரதியார் பெயரைச் சொல்கின்றபோதே, கடந்த நாற்பது ஆண்டுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், 1981ல் பாரதியார் நூற்றாண்டு விழாவுக்காக அப்போது அரசு ரூபாய் 3 இலட்சத்தை வழங்கிப் பாரதி பாடல்களின் ஒரு பதிப்பை வெளியிட வேண்டும் என்று விரும்பினார்கள். திருத்தமான பதிப்பைத் தேடித் தேடி, ஓடி ஓடி, பாரதி அன்பர்களை நாடி நாடி ஒரு மாபெரும் பதிப்பைக் கொண்டு வருவதற்கு முயன்ற அந்த உழைப்புச் செம்மல், பாரதிக்குத் தம்மை ஆட்படுத்திக்கொண்ட பெருந்தகை நண்பர் சீனி.விசுவநாதன்.

நாம் இரா.பத்மநாபன் அவர்களை நினைக்கிறோம். பரலி நெல்லையப்பரை நினைக்கிறோம். ஆனால், நம் கண் முன்னால் பாரதிக்குத்தன்னை ஆட்படுத்திக்கொண்டுபாரதியின்கவிதைகளைத் தொகுதிகளாக அவர் வெளியிட்ட பெருமையை எண்ணிப்பார்த்தால், நான் ஒருமுறை சொன்னேன், உலகக் கவிக்கு வாய்த்த ஊ.வே.சா போல நீங்கள் பணியாற்றுகிறீர்கள். சீனி.விசுவநாதன் பெயரைச் சொன்னாலே போதும், அவர் பாரதியினுடைய ஒரு பெறாத மகனாக இருந்து அந்தப் பதிப்புகளை வெளியிட்டதைக் கண்டால் நம்முடைய மனம் உருகும். அவருக்கு விருது தருவதற்கு இவ்வளவு நாளாயிற்றா என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதில் விழுகிறது. இப்போதுதான் அவர்கள் பாடி முடித்திருக்கிறார்கள். நல்ல காலம் வருகிறது என்று.

சோபனா ரமேஷ் அவர்கள், ஓர் ஆடலரசி மட்டுமில்லை. பாரதியார் பாடல்களுக்கு தன்னை ஆட்படுத்திக்கொண்டு பாரதி பாடல்களுக்கு இசையமைத்ததுபோல, அதற்குரிய வகையில், ஆடல்கலைக்குப் பொருந்திய பாடல்களை ஒரு நூறு பாடல்களுக்கு மேல் தேர்ந்தெடுத்து, உலகம் முழுவதும் சுற்றி வந்து பாரதி பாடல்களை ஒரு ஆடல் நிகழ்ச்சியாகப் பல நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டித் தன்னை ஆட்படுத்திக் கொண்டவர் சோபனா ரமேஷ் அவர்கள். சோபனா அவர்களுக்கு இன்னொரு பெருமையும் சொல்ல வேண்டும். அவருடைய தேசிய மனத்தைச் சொல்வதா? அவருடைய புகழ் வாய்ந்த தந்தை, பல்லாண்டுகளுக்கு முன்னால், ஆட்சிப் பணியில் ஒரு சிகரமாகத் திகழ்ந்து ஓய்வு பெற்ற வேதநாராயணன் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். அதுமட்டுமில்லை, சோபனா அவர்கள் தென்னாப்பிரிக்காவில், ஆஸ்திரேலியாவில் பல நாடுகளுக்குச் சென்று பாரதியாருக்கு, இந்த ஆடலுக்கு அழகு சேர்த்ததை நான் எண்ணிப் பார்த்துப் பெருமையடைகிறேன். அவருக்கு நாங்கள் இப்போது விருது வழங்குகிறோம்.

இந்த மூன்று பேருக்கும் விருது வழங்குவதைப் போற்றி இந்த நாளில் நம்முடைய நெஞ்சத்தை நெகிழவைக்கிற பேச்சாளர் என்று சொன்னால், இன்று நாடு முழுவதும் அறிந்த நாகர்கோவில் பேராசிரியர் ராஜாராமைச் சொல்ல வேண்டும். அவர் எனக்குப் பல்லாண்டுகளாகத் தெரிந்தவர். கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர். பட்டி மன்றங்களிலும், கருத்தரங்கங்களிலும், அவருடைய மனம் நாட்டுப் பற்றில் பதிந்தது என்பதால், அவர் பேசும்போது நம்முடைய கண்களில் நீர் துளிர்ப்பதைப்போல நாட்டு உணர்வை எடுத்துப் பேசுகின்ற பேராசிரியர் ராஜாராம் அவர்கள் உரையாற்ற இருக்கிறார்கள்.

நீதியரசர் அவர்களே, தமிழில் ஒரு பழைய நிகழ்ச்சி உண்டு. கரிகால்வளவன் இளம் வயதிலேயே ஆட்சியில் அமர்ந்தவன். அவர்தான் நீதி வழங்கப் போகிறார் என்று சொன்னவுடனே, இவ்வளவு இளம் வயதில் அவர் எப்படி நீதி வழங்குவார் என்று கேட்டார்கள். கரிகால்வளவன் போய், நரை முடியைத் தன்னுடைய தலையிலே அணிந்து கொண்டு வந்து இப்போது நான் நீதி வழங்குகிறேன். ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டார். ஆனால், நரையில்லாமலேயே, திறமை ஒன்றுக்காகவே, பெருமையைப் பெற்றிருக்கிறவர் அருமை நீதியரசர் சுந்தரேஷ் அவர்கள்.

அவர்கள் இன்னும் பல்லாண்டுக்காலம் இந்தத் துறையிலே இருந்து புதுடில்லியினுடைய உச்ச நீதிமன்றத்திற்குத் தலைமை தாங்குகின்ற அளவுக்கு அவருக்குக் காலம் காத்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்ல விழைகிறேன்.

பொதுவாகவே, கவியரசர்கள், கவிதை எழுதுவார்கள். அதுவே வாழ்க்கையினுடைய ஒரு பொழுதாக முடியும். கவிதை எழுதுவது ஒரு கடமை. ஆனால், நாட்டுக்கு உழைப்பதுதான் என்னுடைய சிந்தனை. நாட்டு மக்களுக்கு நாட்டுப் பற்றை உருவாக்குவது மட்டுமல்ல. மொழிப்பற்றை உருவாக்குவது மட்டுமில்லை. அவர்களுக்கு இனப்பற்றும், எழுச்சிப் பற்றும், செயல்பற்றும் ஊட்ட வேண்டும் என்பதற்காகச் செயல் செயல் என்று சிந்தித்த ஒரு மாபெரும் கவியரசர் பாரதி. நமக்குத் தொழில் கவிதை. அதோடு பலபேர் நின்றுவிட்டார்கள். **நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்** என்ற மூன்று இலக்கணங்களையும் ஒன்றாகக் காட்டிய வகையில், நாம் கவிஞர்கள் பலரை அப்படி காண முடிவதில்லை.

ஆங்கிலக் கவிஞர் பைரன் இங்கிலாந்து நாட்டில் பாராளு மன்றத்திற்கு நின்றார் என்று ஒரு கருத்து உண்டு, பாரதியார் தேர்தலில் நிற்கவில்லையே தவிர, நாட்டை ஆளுகிற ஒரு பொறுப்புடையவரைப்போல பாட்டுத் திறத்தால் **இந்த வையத்தைப் பாலித்திட வேண்டும்** என்று ஒரு மாமன்னராகத் திகழ்ந்ததையும் நாம் எண்ணிப் பார்த்து மகிழ்கிறோம்.

இனிமையாக நிகழ்ச்சியைத் தொடங்க வேண்டும் என்பதற்காக, முதியோர்களாகத் தோற்றமளித்தாலும், அவர்களின் பாடல்களில் இளமை ததும்புகிறது என்பதற்காக இளையோர் குழுவினர் சேர்ந்திசை பாடி நம்முடைய மனத்தையெல்லாம் உருக்கியிருக்கிறார்கள்.

அவர்கள் நல்ல காலம் வருது என்று கூறியதின்படி நல்ல காலம் வருது என்பதின் தொடக்கமாக நம்முடைய விழாவும் அமைகிறது என்று சொல்லி, உங்களையெல்லாம் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

அருமை நண்பர் சுந்தரேசன் அவர்கள் தலைவராகவும் இந்த அமைப்பில் பங்கு கொண்டவர். அறிஞர் பலபேர் வாழ்த்துரை அனுப்பியிருக்கிறார்கள். பல நிறுவனங்கள் வாழ்த்துரை அனுப்பி யிருக்கிறார்கள். அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களுடைய மகன் பொறுப்பேற்றிருக்கிற சக்தி நிறுவனங்கள் சார்பில், அவர் வாழ்த்துரை அனுப்பியிருக்கிறார். திருவாரூரில், சீப் மேஜிஸ்டிரேட் என்ற பொறுப்பில் இருக்கும், நண்பர் சத்தியமூர்த்தி அவர்கள் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். "அருமை அவ்வை அவர்களுக்கு, நான் இப்போது ஒரு பதவியில் இருக்கலாம். உங்களுக்கு நினைவிருக்காது.

25 ஆண்டுகளுக்கு முன்பு நான் பாரதி விழாவில் பங்கேற்ற மாணவன் என்று அந்தச் சான்றிதழை அனுப்பியிருக்கிறார். இவையெல்லாம் எனக்குப் பெரிய பெருமிதத்தையும், மகிழ்ச்சியையும் தருவதாகும்என்றுசொல்லி,உங்களைமகிழ்ச்சியோடுவரவேற்கிறேன். விழா தொடங்குகிறது. இப்போது விருதுகள் வழங்குவதில் கூடப் பாரதி மாமணி என்று திரு.இல.கணேசன் அவர்களுக்கும், பாரதி களஞ்சியம் திரு. சீனி.விசுவநாதன் அவர்களுக்கும், பாரதி கலைச்சுடர் சோபனா ரமேஷ் அவர்களுக்கும் இந்த ஆண்டிற்கான வழங்குகிறோம். வாழ்க்கை முழுவதும் பாரதத்தின் வளர்ச்சியையே நினைக்கின்றவராகவும் திகழ்கின்ற வகையில், எங்களின் மாமணி என்று எப்போதும் அழைக்கப்படுவதற்கும் உரிமையுடையவர்.

உ.வே.சா.விற்கு ஒரு பட்டம் உண்டு. தாஷிணாத்ய கலாநிதி என்பதாகும். தென்கலைச் செல்வர் என்று தமிழில் சொல்லலாம். அதுபோலத்தான் பாரதி களஞ்சியம் என்ற ஒரு விருதை வழங்கு கிறோம் சீனி.விசுவநாதன் அவர்களுக்கு. அவர் எங்கே நடந்தாலும் பாரதி களஞ்சியம் நடக்கிறது என்று சொல்ல வேண்டும் என்பதற்காக இந்த விருதைத் தருகிறோம்.

பாரதி கலைச்சுடராகத் திகழ்கின்ற சோபனா ரமேஷ் அவர்களையும் வாழ்த்துகிறோம் என்று சொல்லிப் பால சாண்டில்யன் இளமைக்கு இளமையும், வளமைக்கு வளமையும் தொழில் துறையில் நல்ல பொறுப்பில் திகழ்கிறவர் பால சாண்டில்யன் எழுத்தும் நாடறிந்தது, கருத்தும் நாடறிந்தது. அவர் இந்த நிகழ்ச்சியை நடத்த இருக்கிறார்.

நண்பர் சுந்தரேசன் அவர்கள் ஸ்ரீராம் நிறுவனத்தினுடைய ஒரு பெரிய பொறுப்பில் இருக்கிறார். பொறுப்பில் இருந்தபோதும் கூடப் பாரதி விழா என்பதற்காக ஒரு கணம் கூட விடாமல் சுற்றிச் சுழன்று வருகின்ற ஒரு பம்பரம்போல் அவர் பணியாற்றுவதைக் கண்டு, எனக்கே நான் தளர்ந்து போய்விட்டேனோ என்று நினைத்தபோது அவர் தந்த எழுச்சியையையும் நன்றியோடு போற்றுகிறேன் என்று சொல்லி, அனைவரையும் வருக என்று வரவேற்று மகிழ்கிறேன்.

இன்று நேற்றல்ல, முப்பதாண்டுகளாக நான் வரவேற்றபடிதான் இருக்கிறேன். காரணம் வரவேற்பதில் அவ்வளவு பெரிய மகிழ்ச்சி யடைகிறோம். காரணம் நல்லவர்கள் வருக. நயமுடையவர்கள் வருக. பாரதி அன்பர்கள் வருக. இலக்கிய ஆர்வலர்கள் வருக. தமிழ் மக்கள் திரண்டு வருக. என்று அழைக்கின்ற வகையிலே உங்களுக்கெல்லாம் நல்வரவு கூறி, நான் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

“
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து வளர்மொழி வாழியவே!

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
”



3. இலக்கிய வானம்

அகில இந்திய வானொலி – இலக்கியத் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி
சங்க இலக்கியம் முதல் பகுதி

பொதுமக்களே, நண்பர்களே,

புகழ் வாய்ந்த நம்முடைய சென்னை வானொலி நிலையம், இலக்கிய வானம் என்ற நிகழ்ச்சியை நடத்துவது பெரிய மகிழ்ச்சியைத் தருகிறது. இலக்கிய உலகத்தைத்தான் வானம் என்று சொல்லுவோம், கடல் என்று சொல்லுவோம், நிலம் என்று சொல்லுவோம், நிலத்தினும் பெரியது, வானினும் உயர்ந்தது, நீரினும் ஆழமானது என்று ஒரு குறுந்தொகைப் பாடல் உண்டு. எனவே, அகன்ற வானத்தையும், நீண்ட பெருங்கடலையும், நிலத்தையும் போல எல்லையில்லாத அளவுக்கு நம்முடைய எண்ணங்களையெல்லாம் வளர்த்துக்கொள்வதற்கு நல்ல வாய்ப்பு இலக்கியங்களிலேதான் தேங்கி இருக்கின்றன.

அந்த வகையிலே இலக்கியம் காட்டும் வழிகளையெல்லாம் துய்த்து மகிழ்வது வாழ்க்கையிலே நல்ல அமைதியைத் தருகிற ஒரு நிகழ்ச்சியாகும். நீங்கள் அறிந்த பாடல்தான், **வெய்யிலுக்கு ஏற்ற நிழலுண்டு, வீசும் தென்றல் காற்றுண்டு, கையில் கம்பன் பாட்டுண்டு** என்ற பாடலைப்போல இலக்கியத்தை நுகர்வது, படிப்பது, வாய்ப்பிருக்கும்போது அந்தக் கருத்துக்களை நாம் நினைவுகூர்வது என்பது இலக்கியத்திற்கு இருக்கிற இனிய நெகிழ்ச்சியாகும்.

இன்று நாம் தொடர்ந்து காணவிருப்பது, தமிழுலகத்தின் ஒரு தனிப்பெரும் புதையலை. தமிழுலகத்திற்கு வாய்த்த ஒரு கரையில்லாத கலைக்கடல், தமிழுலகத்தின் எண்ணச் சுரங்கத்திற்கு இன்னுமொரு பெயரிட்டால் அதன் பெயர் சங்க இலக்கியம்.

எனவே கற்பனையின் புதையலை, கருத்தின் சொற்கோவையாக, நம்முடைய நினைவுகளில் எல்லாம் தங்கியிருக்கிற ஓவியமாக விளங்குவது சங்க இலக்கியமாகும். எனக்குச் சங்க இலக்கியம் என்று சொன்னவுடனேயே ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

ஒரு பத்தாண்டுகளுக்கு முன்னர் மொரிசீயஸ் தீவில் உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிற்குத் தமிழக அரசின் சார்பில் அறிஞர்கள் இருபது பேரை நான் அழைத்துக் கொண்டு சென்றேன். அதுவல்ல நாம் இப்போது நினைப்பது. அந்த மாநாட்டில் பேசிய அமெரிக்க அறிஞர் புலவர்களெல்லாம் ஒன்றாகக் கூடுவது என்பது, ஆன்றோர்கள் எல்லாம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வது என்பது பொதுவாகக் கருத்துகளில் வேறுபடுவார்கள். ஆனாலும் அறிஞர்களெல்லாம் ஒன்றாகக் கூடிக் கருத்துகளை விவாதிப்பதுதான் நல்ல சிந்தனைக்கு வழி வகுக்கும்.

இது நெடுங்காலத்திற்கு முன்பே இருந்திருக்கலாமென்றாலும், அண்மையில்தான் அறிஞர்கள், கருத்தரங்கம், சிந்தனையரங்கம், வழக்காடு மன்றம் என்றெல்லாம் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்று அவர் சொன்னபோது, நான் அவருக்கு வேடிக்கையாகச் சொன்னேன், இது தமிழ்நாட்டில் நெடுங்காலமாக இருக்கிறது. புலவர்கள் என்றாலே ஒன்றாகக் கூடுவார்கள், நன்றாகச் சிந்திப்பார்கள், தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வார்கள். பகிர்ந்து கொண்ட கருத்துகளின் நுணுக்கங்களை நுகர்ந்து மகிழ்வார்கள்.

புலவர்கள் ஒன்றாகக் கூடுவதுதான் அவர்களின் பணி. அவர்கள் அப்படிக் கூடுவதால் ஏற்படுகின்ற மகிழ்ச்சி என்னவென்றால், தங்கள் கருத்துகளை எடுத்துச் சொல்கிறார்கள் என்பதால் உவப்படைகிறார்கள்.

புலவர்கள் கூடுவதால், பின்னர் விடைபெற்றுச் செல்கிறார்களே என்று சொன்னால், ஏன் விடைபெற்றுச் செல்கிறார்கள் என்றால், அடுத்த சந்திப்பில் புதிய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்குச் சிந்திப்பதற்காக விடைபெற்றுச் செல்கிறார்கள். அதுதான் உள்ளப் பிரிதல் என்பதாகும். உள்ளுதல் என்றால் நினைத்தல் என்று பொருள். நினைப்பதற்காகப் பிரிகிறார்கள், மகிழ்ச்சிக்காகக் கூடுகிறார்கள். உவப்பதற்காகப் பிரிகிறார்கள், உள்ளுவதற்காகக் கூடுகிறார்கள், என்பது குறள். அப்போது நான் சொன்னேன், அமெரிக்க நாட்டில், கலிபோர்னியா பகுதியில் ஒரு பெரிய நகரம் இருக்கிறது. அந்த நகரத்திற்கு என்ன பெயர் என்றால், களியாட்டத்திற்குப் பெயர் பெற்ற நகரம். களியாட்டங்கள் என்று சொன்னால், பகல் இரவு என்று பாராமல், எப்போதும் களியாட்டங்கள் நடைபெறும். இன்றைக்குக்கூட கலிபோர்னியா செல்பவர்களெல்லாம் அந்த நிகழ்ச்சிக்குப் போய் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.

லாஸ்ஏஞ்செல்சுக்குப் பக்கத்தில் உள்ள ஊர் அது. அதுபோலத் தான் தமிழ்நாட்டில் ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊருக்கு என்ன பெயர் தெரியுமா? மாநாடு என்று பெயர் என்று சொன்னேன். அந்த அறிஞர் வியந்தார். என்ன ஒரு ஊருக்குப் பெயர் மாநாடா? என்று. ஆமாம், அந்த ஊருக்குப் பெயர் மாநாடு என்று சொல்லலாம், கொஞ்சம் பழைய தமிழில் சொல்வதானால், கூடல் என்று சொல்லலாம் என்றேன். கூடல் என்று சொன்னால், புலவர்கள் கூடி மகிழ்வது என்பது பொருள். புலவர்கள் கூடுவதாலே கூடல் என்பதோடு மட்டுமல்லாமல், அந்த நகரிலேதான் புலவர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து கருத்துகளைப் பரிமாறிக்கொண்டார்கள் என்பது உங்களுக்கு நன்கு தெரியும்.

பாண்டியநாடு என்று சொன்னாலே அது தமிழ் வளர்த்த பாண்டிய நாடு. தமிழ்கெழுகூடல் என்றால் தமிழ் மணக்கின்ற, தமிழ் பெருமிதம் கொள்ளுகின்ற மாநகரம் என்பது பொருள். எனவே, பாண்டிய நாட்டு மன்னர்கள், புலவர்கள் எந்தத் தொழில் செய்தாலும், எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றாலும், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அவர்களெல்லாம் ஒன்றாகக் கூடித் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து மகிழ்வது என்பதுதான் நாம் சங்கம் என்றழைக்கிறோம். இந்தச் சங்கம் என்றால், தமிழ் என்கிறபோதே இதற்குச் சங்கத்தமிழ் என்றுதான் பெயர். அதென்ன சங்கத் தமிழ் என்கிறீர்கள் என்றால், புலவர்கள் அனைவரும் ஒன்றாக ஆய்ந்து, தோய்ந்து, தாங்கள் கண்டறிந்த கருத்துகளை ஒன்றாகப் பகிர்ந்து கொள்வதாலேயே அதற்குச் சங்கத் தமிழ் என்று பெயர். இதற்கு ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது, மணிவாசகப் பெருந்தகை மதுரைக்குப் பக்கத்தில் திருவாதவூரில்தான் இருந்தவர்.

அவர் திருக்கோவையாரில் ஒரு தொடர் சொல்லுகிறார். ஒரு தலைவன் சோர்ந்து போய் வருகிறான். சோர்ந்துபோனால் நல்ல அஞ்சாத நெஞ்சுரத்தோடு நல்ல வீரத்தோடு ஒரு பீடு நடைபோட்டு வரும் அந்தப் பெருந்தகை, ஏன் சோர்ந்துபோய் வருகிறாய் என்று கேட்டார். இரண்டு காரணங்களாலே சோர்வு வரும் என மணிவாசகப் பெருந்தகை கருதுகிறார். அதுவும் வானொலியிலே இருக்கிறவர்களுக்கு நன்றாகத் தெரியும். இசை உலகத்தில் ஆய்ந்து தோய்ந்தால் இசையினுடைய நுணுக்கங்களையெல்லாம் தேடி அலைவது என்பதில் புகுந்தால் ஒரு சோர்வு வரும். இன்னொரு சோர்வு வருமா என்று கேட்டால், புலவர்களின் நுண்ணிய பாடல்களின் கருத்துகளை நாம் எண்ணி எண்ணி ஓயாது கருதத் தொடங்கினால் சோர்வு வரும்.

தலைவனே உனக்கு இந்த சோர்வு எதனால் புகுந்திருக்கும்? உன் தோள் ஏன் இப்படி மெலிந்திருக்கிறது? உன் உள்ளம் ஏன் இப்படி நலிந்திருக்கிறது? இந்தச் சோர்வுக்கு என்ன காரணம்? ஏழிசை சூழல் புக்கோ, நல்ல கருத்து. உயர் மதிற் கூடலில் ஆய்ந்தறிந்த ஒண் தீந்தமிழ் துறைவாயிற் நுழைந்தனையோ? ஆக இந்தத் தமிழுக்கே, ஆயுந்தோறும் இனிதான தமிழ் என்று பெயர்.

எனவே, சங்க இலக்கியங்கள் எல்லாம் தமிழ்ப் புலவர்கள் தொகுத்து மகிழ்வதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். ஒரு தலைவி கேட்கிறாள், தலைவன் திரும்பி வருகிறேன் என்று சொல்லிச் சென்றிருக்கிறான், அவர் சொன்னால் சொன்னபடி வருகிறவர். அவர் மனம் நம்மீது விரும்பி வருகிறார் என்றுகூட நான் நினைக்கமாட்டேன். அவர் வரவேண்டிய காலம், ஏனென்றால், புலவர்களெல்லாம் கூடிச் சங்கத்திலே விழாக்கள் நடத்துகின்ற காலம் இது. என்னை நினைத்து வருகிறார் என்றில்லை, தமிழை நினைத்து வருகிறார் என்று நினைக்கலாம் அல்லவா? புலவர்கள் சொல்லும் கருத்துக்களைக் கேட்டு மகிழ வேண்டும் என்ற எண்ணத்திற்காக என்னுடைய தலைவன் திரும்பி வருகின்ற காலம். தமிழை விரும்பி வருகின்ற காலம், இந்தச் சங்கம் நடக்கின்ற காலமில்லையா? இது கலித்தொகைப் பாடலின் பொருள்.

திருஞானசம்பந்தர் தன்னுடைய வழிபாட்டுப் பாடலில்,
மதுரை தொகை ஆக்கினான்
என்று சொன்னார்.

மதுரை தொகை ஆக்கினான் என்றால், மதுரையிலே புலவர்கள் எல்லாம் ஒன்றுகூடி மகிழுமாறு செய்தான் என்பது பொருள். தொகை என்று சொன்னால் சங்கம் என்று பொருள்.

தொடர்ந்து எவரெடுத்தாலும், தமிழ் என்று சொல்லும்போதே, கூடல் மாநகரையும், கூடலில் கூடிய புலவர்களின் பாடல்களையும் புலவர் பாடல்களின் கருத்துகளிலே விளங்குகின்ற அழகையும் எண்ணிப் பார்த்துத்தான் சங்கத் தமிழ் என்று பெயரிட்டனர். எத்தனையோ பெயரிடலாம். அந்த வகையிலே சங்கத் தமிழ் என்று அழைத்தபோது உங்களுக்கு இன்னும் நன்றாகத் தெரியும். நாம் போய் எதுவேண்டுமானாலும் விநாயகரைக் கேட்கலாம். ஆனால், ஔவையார் தானே ஒரு தமிழாய்ந்த புலவராக இருந்தபோதும் கூட **துங்கக் கரிமுகத்துத் தூமணியே, நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும்தா** என்று கேட்கிறார்.

அப்படி இந்தச் சங்கத் தமிழுக்கு என்ன சிறப்பு ?

பழந்தமிழ், பழந்தமிழ் மக்களின் பண்பாட்டின் கூறுகளை யெல்லாம் எடுத்துக் கூறுவது, பழைய வாழ்க்கையின் மாட்சியைப் புலப்படுத்திக் காட்டுவது, பழங்காலத்தின் ஆட்சிகளையும், காட்சிகளையும் எடுத்துச் சொல்லி, வாழ்க்கை எத்தனை வளத்தோடு திகழ்ந்தது என்பதை வரைந்து காட்டுவது இப்படியெல்லாம் புலவர்கள் புனைந்த பாடல்களின் தொகுப்புதான் சங்க இலக்கியமாகும்.

எப்போது சொன்னாலும், தமிழ் என்று சொல்லும்போதே முதல், இடை, கடைச் சங்கம் என்பார்கள். நம் கணக்குப்படி பார்த்தால், ஒரு இரண்டாயிரத்து எண்ணூறு என்ற அளவிலே பாடல்கள் கிடைத்துள்ளது. இதன் தொகுப்புதான் பாட்டும் தொகையுமாக நமக்குச் சங்க இலக்கியம் என்று அமைந்திருக்கிறது.

தமிழகத்திற்குப் பெரும்புதையலாகக் கிடைத்திருக்கிறது இந்த இரண்டாயிரத்து எண்ணூறு பாடல்கள். இந்தச் சங்க இலக்கியப் பாடல்களிலே என்ன சிறப்பு? சங்கப் புலவர்கள் எல்லாம் கூடிப் பாடியதால் சங்கப்பாடல்கள் என்றார்கள். இந்தப்புலவர்களுக்கெல்லாம் சங்க நல்லிசைப் புலவர்கள் என்றும் பெயர்.

சங்கப் புலவர்களின் பாடல்கள் எத்தகைய செறிவோடும் அமைப்போடும் அமைந்திருக்கிறது என்று நாம் எண்ணிப் பார்க்கத்தக்கது. பொதுவாக ஒரு பாடலுக்கு உயிர் என்பது அதன் உணர்ச்சிதான். உடல் என்பது கற்பனைதான். உடை, அணி, அலங்காரம் என்று எடுத்துக் கொண்டால், அது ஒலிநயம்தான்.

சங்க காலப் புலவர்களுக்குக் கதைகளைச் சொல்லுகிற ஒரு வழக்கம் இல்லை. கற்பனையில் எல்லையில்லாமல் போகின்ற வழக்கும் அவர்களுக்கு இல்லவே இல்லை. அவர்கள் கண்ணெதிரிலேயே காண்கின்ற இயற்கையான காட்சியைத்தான் உள்ளது உள்ளபடியே சொல்லுகின்ற வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள்.

அதென்ன உள்ளது உள்ளபடி என்று சொன்னால், வாழ்க்கையிலே நடப்பது எது? வீடு, வீடு தாண்டினால் நாடு. வீடு என்பது கணவனும் மனைவியும் கூடி வாழ்வது, கூடுவதற்கு முன்னால் ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்வது, பிறகு அவர்கள் இல்லறம் நடத்துவது இப்படி வாழ்க்கையின் மன இயல்புகளைக் காட்டுகின்ற பகுதிக்கு அகம் என்று பெயர்.

நாடு என்றால், அரசன், ஆட்சி, கல்வி, போர், அவர்கள் தங்கள் வீரத் திறமைகளைக் காட்டுவது, அந்த வீரத்திலும் அவர்கள் அற உணர்ச்சி குன்றாமல் காட்டுவதற்குப் புறம் என்று பெயர். இவைதான் பாடுவதற்குரிய பொருள்.

அகம் பாடுவது, புறம் பாடுவது, அகத்திலுள்ள மன உணர்வுகளை எடுத்துக் காட்டுகின்ற பாடல்களைப் பாடுவதாலே அந்த 2000 பாடல்களில் 1000 பாடல்களுக்கு மேல் அக உணர்ச்சியை எடுத்துக் காட்டுகின்ற பாடல்கள். புற உணர்ச்சியை வெளிப்படுத்தும் பாடல்களும் உண்டு.

இந்த உலகத்தில் நமக்கு ஒரு பொருளோடு ஏதேனும் தொடர்பு ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பொருளோடு ஏற்படுகின்ற தொடர்பு எப்படி ஏற்படுகின்றது ? ஒரு பொருளைக் கண்டவுடனேயே நாம் விரும்புகிறோம் ஒன்று. பிறகு அந்தப் பொருளை நாமே வைத்துக்கொள்ளலாமா என்ற விருப்பம் வருவது இரண்டாவது. மூன்றாவது அந்தப் பொருளை அவர்கள் தொலைத்துவிடுவது. நான்காவது அந்தப் பொருளை எண்ணி ஏங்குவது.

ஒரு பொருளைக் கண்டவுடனேயே நம்முடையது என்று நாம் எண்ணுகிற உறவுக்குப் பெயர் கூடல். அந்தப் பொருள் சில நேரம் நம்மோடு இசையாமல் நெருடல் ஏற்படுத்துவது ஊடல் என்று அழைக்கப்படும். இந்தப் பொருளைத் தொலைத்துவிட்டு மீளப் பெறமுடியாமல் நான் ஏங்குவதற்கு நெய்தல் என்பது பொருள். அதாவது, நீண்ட நாள் ஏங்கித் தனிமையாக இருந்து, இந்தப் பொருள் நமக்குக் கிட்டுமா? என்று ஏங்கும் போக்கிற்கு நெய்தல் என்று பெயர். கூடல், ஊடல், பிரிதல் என்று வந்தபோது நெய்தல் என்றாயிற்று. இப்படி ஐந்து வகையான பொருள் உண்டு. கூடுதல், ஊடுதல், பிரிதல், இருத்தல் என்றே நினைத்திருக்கிறார்கள். அவர்கள் பத்துதலை கொண்டவன் பற்றிய கதைகளை நினைக்கவில்லை. அப்படித் தீடீரென ஒருவன் வந்து வில்லெடுத்தான், வென்றான் என்ற கதையை அவர்கள் நினைக்கவில்லை.

அன்றாடம் வாழ்க்கையில் இப்படி ஒரு நிலை ஏற்படுகிறதே என்று எண்ணி, இதற்கு ஒரு குறிப்பு வைத்துக்கொண்டால் என்ன என்று புலவர்கள் நினைத்தார்கள். அவர்கள் வாழகின்ற இடத்தையும் இப்படி வைத்துக்கொண்டார்கள். இந்த நாடு எப்படி இருக்கும்? **கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி.** கல்தோன்றி என்றால், கல் என்பது மலை.

மலையை மனிதன் தோற்றுவிக்க முடியாது. அது இயற்கையின் படைப்பே தவிர, வேறொன்றின் படைப்பு அல்ல. மண் என்றால் வயல் என்பார்கள். இப்போதும் கேட்பார்கள், மண் என்ன விலை? இது பொன் விளைகின்ற மண் என்று சொல்வார்கள். எனவே மலைப்பகுதி அடர்ந்த பகுதி என்று சொன்னால், குறிஞ்சி. காடுகளின் பகுதி என்றால் அது முல்லை. பிறகு காடு நாடாகி, குளம் தொட்டு வளம் பெற்றால் அது மருதம். மேலிருந்து பள்ளத்தை நோக்கி வருகின்ற பகுதி என்றால் அது நெய்தல். இந்நிலங்களில் வாழுகின்ற மக்கள் எப்படி இருக்க வேண்டும்?

நாடாக ஒன்றோ, காடாக ஒன்றோ
அவலாக ஒன்றோ, மிசையாக ஒன்றோ

இந்த மண்ணிற்கு ஒரு நிமிர்ந்த பெருமை கொடுப்பது யாரென்றால் அங்கிருக்கிற மக்கள். நான் கூட வேடிக்கையாகச் சொல்வேன். நல்ல காதல் கதை எங்கு பிறந்திருக்கிறது என்றால், பாலை நிலத்திலே பிறந்திருக்கிறது. அதுதானே லைலா–மஜ்னு கதை. அங்கு வாழ்கின்ற மக்கள்தான் அந்த நாட்டையும் நிலத்தையும் வளப்படுத்துகின்றார்கள். என்ன அழகான சிந்தனை பாருங்கள். எனவே, இந்தப் பாட்டிலே ஒரு கற்பனை, ஒரு எதுகைக்காகப் புலவர்கள் இருந்து தடுமாறும் ஒரு நிலை அப்படி ஒன்றும் இல்லை பாருங்கள்.

இப்படிப் பாடுவது ஒரு உண்மையை உள்ளபடியே எடுத்து உரைப்பது என்பதாகும். நாடு என்பது வயல், காடு என்பது வனம், அவல் என்பது கடற்கரை ஓரம், மிசை என்பது மேம்பட்ட ஒரு சூழல். நானிலத்தையும் சொல்லிவிடுகிறார்.

எவ்வழி நல்வழி ஆடவர் அவ்வழி வாழிய நிலனே

இதில் ஆடவர் என்றால் ஆண்கள் என்று பொருள் கொள்ள வேண்டாம். தெலுங்கில் ஆடவர் என்றால் ஆடல் கலை தெரிந்தவர் என்று பொருள்.

ஆட்சித் திறம் உடையவர்கள், தாங்கள் ஒரு பொறுப்பினை மேற்கொண்டு அந்தப் பொறுப்பிலே பீடு நடை கொண்டவர்கள். ஆடவர் எவ்வழியோ அவ்வழியே நீ நிலமே. நிலமே நீ வளம் உடையதால் அல்ல. நெற்பயிற் விளைவிக்கின்ற திறம் உடையதால் அல்ல. உன்னைச் சுமந்து கொண்டிருக்கின்ற மக்களுடைய பெருமிதம்தான் நாட்டுக்குப் பெருமை தருகிறது. இது ஒரு சங்கப் பாடல்.

மற்றுமொரு பாடல்,

எங்களுடைய தலைவன், எங்கள் நாட்டினைக் காக்கின்ற தலைவன், எங்களுடைய கொடையாளன், கொடையிலும், படையிலும் தலைசிறந்தவன், அதுவும் கொடுத்துக் கொடுத்து கை சிவந்தவன். அந்தப் பகுதியின் வளத்தைக் கற்பனை செய்ய இயலவில்லை. அது ஒரு வளமான பகுதி. அந்த மன்னனின் பெயர் உங்களுக்குத் தெரியும். பாரி என்று பெயர். வாரி வாரிக் கொடுப்பதற்குப் பாரி போல் ஆளில்லை, பாரி போல மக்களின் மீது பரிவு காட்ட யாருமில்லை என்று சொல்லாமல்,

பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

இப்படிப் புகழ்வது கற்பனைப் புலவர்கள் அல்ல, பொய்யிலே உழலும் புலவர்கள் அல்ல, செந்நாப் புலவர். செந்நா, செம்மை என்றால் என்ன? உண்மை, வாய்மை, மெய்மை என்று இவை மூன்றும் சேர்ந்தால், அது செம்மை.

செவ்வை, செம்பாகம் என்று பரிமேலழகர் எழுதுகிறபோது, செயலாலும், சொல்லாலும், உணர்வாலும் மூன்றும் ஒருங்கிணைந்த தன்மையாலும் விளங்குவது. நம் மொழியைச் செம்மொழி என்று சொல்வது, உண்மைக்கு உண்மையும், வாய்மைக்கு வாய்மையும், மெய்மைக்கு மெய்மையும் பொங்கித் ததும்புகிறது என்ற வகையில் செம்மை என்பார்கள்.

பாரி ஒருவன் அல்லன். மாரியும் உண்டல்லவா? அதை விடுத்து இப்படி செந்நாப்புலவர் சொல்கிறாரே? பாரியைப் பாராட்டிப் பல சொற்களினாலே புகழ்கின்ற இந்தப் புலவர்கள், மாரியை எப்படி மறந்து போகிறார்கள்? உலகத்திலே வழங்குவது என்று சொன்னால், மாரிதானே?

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றுங் கொல்லோ உலகு.

என்று வள்ளுவர் கூறுகிறார். அப்படிச் சிறப்பு மிக்க மழை உள்ளபோது, எப்படிப் பாரியை மறந்துபோனார்கள்?

சங்கப்பாடல் எத்தகைய செறிவுடையது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பாரி கொடுக்கிறான். மாரியும் கொடுக்கிறது. பாரி கொடுப்பதற்கும், மாரி கொடுப்பதற்கும் என்ன வேறுபாடு என்று கேட்டால், மாரி முகம் கறுத்து கொடுக்கிறது, எங்கள் பாரி முகம் சிரித்துக் கொடுக்கிறான்.

எனவே, பாரி கொஞ்சம் சிறப்புடையவன்போல்தான் தெரிகிறது. மாரி கொடுக்கும்போது இடித்துக் கொண்டு கொடுக்கிறது. எங்கள் பாரி நகைத்துக் கொண்டு கொடுப்பாரே தவிர, யாரையும், இடித்துக் கொண்டு புறந்தள்ளி கொடுப்பவன் இல்லை. ஆக, மாரி என்பது இடித்துக் கொடுப்பதாலே, ஒரு படி கீழே அது தடுக்கப்பட்டுத்தான் வீழ்கிறது.

பாரி கொடுக்கிறபோது, தான் போரிட்டு, வென்று, தான் ஈட்டிய பொருளைக் கொடுக்கிறான். தன்னுடைய நாட்டுப் பொருளைக் கொடுக்கிறான். மாரி எங்கோ கடலில் இருந்து, எப்படியோ எடுத்து வந்து, அதை மலையோ, குன்றோ தடுத்ததால் கொடுக்கிறது. தானாகக் கொடுத்ததாக இல்லை. பாரியின் ஈகை இத்தகைய சிறப்புடையது. பாரிக்குத் தெரியும் யாருக்குத் தருவது என்று, புலவர்களுக்கு, பாணர்களுக்கு, ஆடுநர்களுக்கு வரிசையறிந்து தருகிறவன் பாரி. இந்த மாரி கடலில், வறண்டுபோன பகுதியில் பெய்கிறது. பெய்ய வேண்டிய நேரத்தில் பெய்யாமல் கெடுக்கிறது.

எப்படிப்பட்ட திறன் உள்ளவர்கள் செந்நாப்புலவர்கள் என்பது, இந்தப் பாட்டிற்குள், சொல்லுக்குள் நுழைந்து பார்த்தால் இப்படி ஒரு நான்கு வரிப் பாடல் எத்தகைய வளம், புலமை, கற்பனை, கருத்து, உவமை, உள்ளுறை அமைந்திருக்கிறது என்பதை எண்ணும்போது சங்கப்பாடலின் செறிவை அறியலாம்.

அமெரிக்க நாட்டு அறிஞர் ஏ.கே.இராமானுஜம் அவர்கள், பாரி இல்லை, பாரி மகளிர் பாடிய இப்பாடலில் ஒரு சொல்லை தள்ளி வைத்தால், எப்படி பொருள் செறிந்துக் கிடக்கிறது என்பதை நீங்கள் அறியலாம்.

அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவின்,
எந்தையும் உடையேம்; எம் குன்றும் பிறர் கொளார்;
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின்,
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!

என்ற புறநானூற்றுப் பாடலில், தாங்கள் மகிழ்ச்சியாக எம்முடைய நாடு என்று இருந்தபோது, தன்னுடைய தந்தை முதலில் வருகிறான். இருந்தபோது மகிழ்ச்சியைத் தருவது தந்தை.

அவர் இல்லாதபோது குன்று போயிற்று, குன்று போனால் என்ன? தந்தையால் நின்று எங்களுக்கு அரவணைப்பாக இல்லையே என்று வருந்தினர்.

இப்படிச் சொல்லுக்குச் சொல் சுவையுடைய பாடல்களாக இந்தப் பாடல்கள் விளங்கின. இவையெல்லாம் புறத்துறையில் வரும் பாடல்கள்.

அகத்துறையில் வரும் பாடல்கள் என்றால், அவர்கள் மனம் எல்லாம் எப்படி உள்நினைந்தன அல்லனோ? நினைந்து மருண்டன அல்லனோ? இப்படி உள்ளத்து உணர்வுகளை எடுத்துக் காட்டுவதில் அகப்பாடல்கள் மிகப்பெரிய வெற்றியைக் காட்டுகின்றன.

எளிய பாடல்களில் எப்படி உரம்பொறிந்த கருத்துகளை யெல்லாம் செருகி வைத்துப் புலவர்கள் பாடியுள்ளார்கள் என்று பார்த்தால், சங்க இலக்கியம், செறிவு, அளவு, பொருள், கருத்து ஆகியவற்றை உள்ளடக்கி உடையது.

பத்துப்பாட்டு ஆதி மனம் பற்று மனம் பற்றினரோ
எத்துணையும் பொறுப்பிசையா இலக்கணமில் கற்பனையே

என்பார் மனோண்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள்.

பத்துப்பாட்டு நீண்ட பாடல். அந்தப் பாடலின் சூழலே நமக்கு வியப்பாக இருக்கிறது.

நான் நிறைய வளங்களையும் பரிசுகளையும் பெற்றிருக்கிறேன். அந்த இளவரசன் அத்தகைய மனம் உடையவன். இந்த புலவர்களுக்குப் பாடலுக்குப் பரிசு பெறுவது ஒன்றுதானா பணி என்று நீங்கள் கேட்கலாம். பரிசிலர் என்ற இயல்புக்கு என்ன பொருள் என்றால், கலைகளினாலும், தங்கள் புலமையினாலும், தங்கள் திறமையினாலும் மிக வல்லவர்களாக வாழ்கிறார்கள். பொருள் தேடி வாழ வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் இருக்கிறார்கள். நல்ல கலைத்திறம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இது ஒரு வியப்புதான். பொருட்திறம் உடையவர்கள், கலைத்திறம் உடையவர்களுக்கு வழங்குவது என்பது ஒரு பணியாக இருந்திருக்கிறது. அதற்குப் பெயரே பாண்கடன் என்று பெயர்.

இந்தப் பரிசில் பெறுகிறவர்கள் பற்றி ஒரே ஒரு தொடர் மட்டும் சொல்கிறேன்.

மன்னா என்னுடைய துயரத்தையெல்லாம் சொல்ல முடிய வில்லை. என்னுடைய மனைவி எலும்பும் தோலுமாக உள்ளாள். அவர் படுகின்ற துயரத்தைச் சொல்ல முடியவில்லை. பிள்ளைகளோ ஒரு பெரிய தொல்லை. என்னுடைய வீட்டில் நீங்கள் நன்றாகப் பார்த்தால்

அட்டிலுக்குள் நுழைந்தால், பூனை படுத்திருக்கிறது. இப்படிப்பட்ட வறுமையில்தான் நான் வந்திருக்கிறேன். என்று ஒரு பாடல் இருக்கிறது.

அதே புலவர் இன்னொரு பாடல் பாடுகிறார்.

ஏராளமான பொருளை, அந்த வேந்தன் தாராளமாக தந்து விட்டான்.

வாரிப்பெற்ற செல்வத்தோடு மகிழ்ந்து வருகின்ற அவர்,

தன் துணைவியாரைப் பார்த்து,
என்னொடும் சூழாது,
இன்னொருவருக்கு இல்லையெனாது,
நீ முடிந்தவரையில் வல்லாங்கு வாழ்தும் எண்ணாது,
எல்லோருக்கும் கொடு.
என்கிறார்.

முந்தைய பாடலில், தாங்க முடியாத துயரத்தில் அவர் தவித்துப்போய்க் கையேந்தியதைப் பார்த்தோம். இந்தப் பாடலில் அவர் வளங்களைப் பெற்றபோது, அதைப் பிறர்க்கு வாரி வழங்கலாம் என்று ஒரு பெருமிதத்தோடு இருக்கிறதைப் பார்க்கிறபோது, மனங்களின் இயல்புகள் எப்படிப் பிறர்க்கு உதவுவதாக உள்ள புறப்பாடல்கள் பல இருக்கின்றன என்று அறிந்து மகிழ்கிறோம்.

ஆகவே, பெரியோர்களே, சங்க இலக்கியப் பாடல் செறிவுடைய பாடல், சிந்தையைத் தூண்டும் பாடல், வாய்க்கினிய பாடல், வந்தனம் தமிழ் உணவாக, வாய்த்த ஒரு பெரும் பேறு என்று சொல்லி, சங்க இலக்கியத்தின் நலன்களை இனி தொடர்ந்து காண்போம் என்று சொல்லி நிறைவு செய்கிறேன்.

❀❀❀



4. இலக்கிய வானம்

பகுதி - 2 (24.03.2015)

சங்கம் என்று தொடங்கும் போதே தமிழ் இலக்கியத்தின் பெருமிதத்தை நாம் சென்ற பகுதியில் கண்டோம்.

மதுரை மாநகரில் இருந்து 40 கல் தொலைவில் திருப்பத்தூர் என்று ஓர் ஊர் உள்ளது. திருப்பத்தூரில் நாவுக்கரசர் பாடிய பாடல் ஒன்று, "நன் பாட்டு புலவனைச் சங்கம் ஏறி" என்ற பாடலைப் பாடுகிறார்.

எனவே, சங்கத்தில் பாட்டியற்றும் புலவனாக இருப்பது புலமைக்கும், பெருமைக்கும், மேன்மைக்கும் உகந்த ஒன்றாக இருந்துள்ளது.

சங்க இலக்கியப் பாடல்கள் எளிமையான பாடல்கள் என்று நாம் சொல்ல முடியாது. பழந்தமிழ்ச் சொற்களை இடையிடையே விளித்து வார்த்தையெல்லாம் உச்சரிக்கப் புதுமையாகக் காட்சியளித்தாலும் அதனைப் பயிலப் பயில அவர்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொண்டார்கள்.

சொற்கள் வேண்டுமென்றால் உங்களுக்கு இடர்ப்பாடாகத் தோன்றினாலும், அருவியை போற்றி அவர்கள் புனைந்து காட்டிய திறம் நமக்கெல்லாம் பெருமிதம் தருவதாகும்.

சங்க இலக்கியத்தில் சில காட்சிகள் என்று எடுத்துக் கொண்டால், வாழ்வினுடைய பொருண்மைகள், வாழ்வின் நடப்புகள் போன்றவைதான் அவர்கள் பாடுகின்ற பாடலின் பொருளாகும். எனவே, சங்க இலக்கியப் பாடல்களில் கற்பனைக் காட்சிகளைப் புனைந்து காட்டினாலும் கூட, அதனுடைய பின்னணியாக வாழ்க்கை எப்படி காலத்தோடும், களிப்போடும், வேதனையோடும் பின்னிப் பிணைந்துள்ளது என உள்ள உணர்ச்சிகளைக் காட்டுவதைப் பெருமிதத்தோடு நாம் எண்ணிப் பார்ப்பது சங்க இலக்கியத்திலே ஒரு அருமையான பகுதியாகும். பாடலுக்குக் கூடப் பெயர் வைப்பதில் சங்க இலக்கியத்தில் ஒரு அளவு கருதி வைத்திருக்கிறார்கள்.

மூன்று தொடர்களுக்குள் முடிவது என்றால், ஐங்குறுநூறு என்றும், ஏழு, எட்டு வரிகளுக்கு மேல் போனால் குறுந்தொகை என்றும், ஒரு அளவான வகை என்று வருகின்றபோது நற்றிணை என்றும், நெடிய பாடல் என்று காட்டுவதை நெடுந்தொகை என்றும்,

ஒரு அளவு என்ற பொலிவுக்கு அவர்கள் ஆட்பட்டிருந்தார்கள். இது ஒரு பெரிய சிறப்புதான். நற்றிணை என்றால் அளவு என்றுதான் பொருள். நற்றிணை என்றால் நல்ல திணை என்று பொருள் கூற வேண்டியதில்லை. எல்லா திணைகளும் நல்ல திணைகள்தான். அப்படி என்ன நற்றிணையின் பெருமிதம் என்றால், "நல்" என்றால் அளவான என்றுதான் பொருள்.

இன்றைக்குக்கூட இராமநாதபுர மாவட்ட மக்கள், எங்கள் வீட்டுப் பெண் நன்மை அடைந்திருக்கிறாள், வாழ்த்த வாருங்கள் என்று அழைப்பார்கள். நன்மை என்பது ஒரு அளவு. திணை என்பது நல்ல ஒரு பெருமிதத்தைக் காட்டுவது என்பதுதான். அளவான வாழ்க்கையில் உணர்வுகள் எப்படி நம்மைத் தொக்கி நிற்கின்றன என்பதை கூற ஒரு பாடலைப் பார்க்கலாம்.

பெரு வீட்டில் பரிவோடு வளர்கின்ற மகள். விளையாடுகின்ற போது, வீட்டைச் சுற்றி வருகின்றபோது மகளிர் பலராகச் சுற்றி வருவார்கள். மகளிர் கூட்டத்தை ஆயம் என்று அழைப்பார்கள்.

"தன் பண்டேட்டு ஆயத்துப் பாராட்டி"

என்று சிலப்பதிகாரத்தில் ஒரு தொடர் வருகிறது.

ஆயத்திலே இவர்கள் விளையாடுகின்றபோது, விளையாட்டாக விதைகளையெல்லாம் காய்களாக அவர்கள் எடுத்து விளையாடு வார்கள். அப்படி விளையாடுகின்றபோது அவர்கள் விட்டெறிந்த காய்கள் கார் காலத்தில் ஈர மண்ணோடு கலந்து அவை செடிகளாக வளரும். ஏன் சிறு மரமாகக் கூட வளருகிறது. அப்படி வளர்ந்திருக்கிற மரக்காட்சி ஒன்று இருக்கிறது.

எந்தப் பெண்ணும் சிறுமியாக இருந்து, குமரியாக வளர்ந்து பின்னர் திருமணம் நெருங்குகின்றபோது பலபேரோடு நின்று பேசுகின்ற ஒரு காட்சி வருகிறது. அப்படிப் பேசுகின்றபோது, காதல் உணர்வு கொண்ட இளங்காளை ஒருவன் அந்த மங்கையைத் தொட்டுப் பேச முயல்கிறான். அப்படித் தொடுவதை அவள் விரும்பாமல், "தொடாதீர்கள்" பக்கத்தில் இருப்பவர்கள் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள் என்று கூறுகிறாள்.

மருண்டு கேட்கிறான். "யார் பார்க்கிறார்கள், நாமோ இருப்பது வீட்டிற்குப் பக்கத்தில் உள்ள சோலையில், இங்கே பார்ப்பதற்குப் பறவைகளும் இல்லை, வேறு எந்த ஒரு மரமும் இல்லை, யார் பார்க்கிறார்கள்" என்று கேட்கிறான். அதற்கு அவள், "என்னுடைய தமக்கை இருக்கிறாள், என்னுடைய தமக்கை இங்கே இருந்து கொண்டு என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். தமக்கை பார்த்துக் கொண்டிருக்கும்போது, நீங்கள் தொட்டுப் பேசுவது எனக்கு நாணமாக இருக்கிறது, தொடாதீர்கள்" என்கிறாள். ஒரு இயல்பான காட்சிபோலத்தான் தோன்றுகிறது.

ஜெர்மன் நாட்டுக் கவிஞர் கதே என்பவர், காளிதாசருடைய பெரும் புலமையைப்பற்றிப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். "காளிதாசரைப்போலக் காலங்களின் கோலங்களை வரைந்து காட்டுவதிலும், மரஞ்செடி கொடிகளைப் புனைவதிலும், மலர்களின் பெருமிதத்தை எடுத்துக் காட்டுவதிலும் காளிதாசருக்கு மிகப்பெரும் சிறப்பு உண்டு. அப்படிக் காளிதாசர் ஒரு காட்சியை வரைந்து காட்டுவதை இந்த ஜெர்மன் நாட்டுக் கவிஞர் கதே மொழிபெயர்த்திருக்கிறார். அந்த நிகழ்ச்சிதான் சாகுந்தலம் என்பதாகும்.

சாகுந்தலம் என்ற நாடகத்தை மொழிபெயர்த்த கதே அதில் ஒரு காட்சி வருவதைப் பார்த்து அப்படியே சிலிர்த்துப் போயிருக்கிறார். என்னுடைய சிந்தை அணு ஒவ்வொன்றும் அப்படியே சிலிர்க்கின்ற அளவுக்கு அந்த காட்சி இருக்கிறது. சகுந்தலை துஷ்யந்தனோடு புறப்பட்டுப் போகின்ற காட்சியில், செடிகளை, கொடிகளை, மலர்களையெல்லாம் பார்த்துக் கண்ணீர்விட்டு நான் போய் வரட்டுமா என்று கேட்கிறாள். இவள் அந்த செடியையும் கொடியையும் மலர்களையும் தன்னோடு உடன் பிறந்தவர்களாகக் கருதுகிறாள். இப்படி இயற்கைக் காட்சிகளை உயிர்ப்பொருளாக, உடன் இருக்கின்ற பொருளாக, உறவுப் பொருளாகக் கருதுகிற உணர்ச்சியினுடைய ஒரு காட்சி இருக்கிறதே, இது மிக மிக வியக்கத்தக்கது என்று கதே எழுதியிருக்கிறார்.

ஆனால், கதேவுக்குச் சாகுந்தலம் தெரியுமே தவிர, நற்றிணைக் காட்சி தெரியாது. நற்றிணைக் காட்சி தெரிந்திருந்தால், இந்த உணர்வு தமிழ் மக்களுடன் எப்படிச் சேர்ந்திருக்கிறது, மரம் செடி கொடிகளைக்கூடத் தன்னோடு வாழ்கின்ற உயிர்ப் பொருளாக நினைக்கிற ஒரு காட்சியை ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் வேடிக்கையாகச் சொல்வார்கள்.

Do you respect Streets?

என்று கேட்டானாம் வெள்ளைக்காரன். இன்றும் நீங்கள் பார்க்கலாம். நம்முடைய சென்னை கிருத்துவக் கல்லூரியைச் சுற்றி மரம் செடி கொடிகள் நிறைய இருக்கும். ஸ்காட்லாந்து பாதிரியார்களுக்கு மரம் செடி கொடிகளை வளர்ப்பதில் பெரிய ஆர்வம் உண்டு. எனவே, நாங்கள் மரம் செடி கொடிகளை மிகவும் மதிக்கிறோம், Do you respect Streets என்று கேட்டபோது, பக்கத்தில் இருந்த தமிழர்கள் "You respect Streets, But we worship them" என்று சொன்னார்கள்.

எனவே, மரங்களைக்கூடச் செடிகளைக்கூட நாங்கள் வணங்குகிற அளவுக்கு நாங்கள் இணக்கம் காட்டுகிறோம் என்று சொன்னதாக ஒரு காட்சி வருகிறது. இப்போது அந்த நற்றினைப் பாடலை எண்ணிப் பாருங்கள், எண்ணினால் பத்து வரிகள்தான்.

விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய,
'நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப;
நும்மினும் சிறந்தது; நுவ்வை ஆகும்' என்று,
அன்னை கூறினள், புன்னையது நலனே–
அம்ம! நாணுதும், நும்மொடு நகையே;
விருந்தின் பாணர் விளர் இசை கடுப்ப,
வலம்புரி வான் கோடு நரலும் இலங்கு நீர்த்
துறை கெழு கொண்க!–நீ நல்கின்,
இறைபடு நீழல் பிறவுமார் உளவே.

என்ற அந்தப் பாடலின் பொருள்.

நாங்கள் எங்கள் தோழியரோடு விளையாடிக் கொண்டிருந்த இந்த ஆயத்திலே, நாங்கள் விளையாட்டாக வெண்மணல் அழுத்தி, அதில் ஒரு விதையிட்டு மறந்துபோனோம். அப்படி மறந்த விதை, இளம் பெண்ணாயிற்றே இந்தச் சிறு பெண் கொடிகளிலே ஆடி விளையாடும்போது, தாயார் உண்ணத் தருகிற தீம்பாலும் நெய்யும் நல்லுணவும் இந்தா என்று கொடுப்பார்கள். அவள் வேண்டாம் என்று மறுப்பாள். நீ எடுத்துக்கொண்டால் போ, உன்னுடைய தமக்கைக்குத் தந்துவிடுகிறேன் என்று என் தாய் ஊட்டியிருக்கிறாள். எனவே, எனக்கு ஊட்டிய நெய், தீம்பால் அத்தனையும் என்னுடைய தமக்கைக்கு

ஊட்டுவதைப்போல என்னுடைய அன்னை சொன்னாள், "அன்னை சொன்னது புன்னையது சிறப்பே" அப்போது அந்த புன்னையை என்னுடன் வளர்த்த அன்னை எவ்வளவு பரிவு காட்டி வளர்த்தாலோ, அப்படிப்பட்டவளைக் காணும்போது, உங்களோடு இங்கு இருந்து நகையாடிக்கொண்டிருப்பது என்பது, தொட்டுப்பேசுவது என்பது, எனக்குச் கொஞ்சம் நாணமாக இருக்கிறது என்பது இந்தப் பாடல்.

வாழ்க்கையில், இந்தப் பாடலில் புதிய கற்பனை இல்லை. ஆனால், உள்ளதை எடுத்துரைப்பதில் எப்படி உலக வாழ்க்கையோடு ஒன்றிப் பழக வேண்டும் என்பதைக் காட்டுகிற நிகழ்ச்சி இருக்கிறதே, அதுதான் சங்க இலக்கியத்தினுடைய மாட்சி.

சங்க இலக்கியத்தில் இயல்பாகக் காணுகிற முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று அவர்கள் காட்டுகிற பொருள் களெல்லாம், எந்த வகையில் பின்னணியாக இருக்கிறது என்பதற்கு, மகள் காதலனோடு நிற்கிற காட்சிக்குப் பின்னால், ஒரு புன்னையினது காட்சியும், வீட்டுச் சோலையினுடைய காட்சியும் அவர்கள் தாங்கள் வளர்த்த இயற்கைப் பொருளின் மீது காட்டிய பரிவின்பால் சொல்லுகிறபோது, இந்தப் பாடல் நமக்கெல்லாம் உருக்கத்தைத் தருகின்ற பாடலாகும். இப்படி எந்தப் பாடலை எடுத்துக்கொண்டாலும் கூட ஒரு இயற்கையின் நுணுக்கத்தைக் காணலாம்.

சங்க இலக்கியப் பாடல் எப்படி இருக்கும் என்று கேட்டால், பின்னர் வந்த, கவியரசர் என்றும், பாட்டுலுகின் ஈடிணையில்லா மாமன்னர் என்றும், நாம் பாராட்டுகிற கம்பர் ஒரு பாடல் சொல்லிக் காட்டுகிறார்.

அலை புரள, கரை புரள, ஓடிப் பொங்கி ஓடுகிற ஆறுதான் நாம் நினைக்கிறபடி நம் கண்ணெதிரே ஓடுகின்ற ஆறு அல்ல இது. இது கோதாவரி ஆறு. இந்த ஆற்றினுடைய ஓட்டத்தைக் காணும்போது,

புவியினுக்கு அணிஆய், ஆன்ற பொருள்
தந்து, புலத்திற்று ஆகி
அவி அகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறி அளாவி,
சவி உறத் தெளிந்து, தண்ணென்
ஒழுக்கமும் தழுவி, சான்றோர்

கவி எனக் கிடந்த கோதாவரியினை
வீரர் கண்டார்."

என்ற சங்கப்பாடல் நினைவுக்கு வருகிறது. இந்தப் பாடலுக்கு இன்னொரு பெயர் "சான்றோர் கவி" என்று பெயர்.

அன்றோர் என்ற சொல் வந்தாலேயே சங்கச் சான்றோராகிய கபிலரும் பரணரும் என்றுதான் எழுதுவார். எனவே, "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி" என்ற ஒரு பாடலில் ஓடுகிற ஆற்றைப் புனைந்து பாடுகின்ற கம்பர், எவ்வாறெல்லாம் இந்தப் பொருள்கள் புதைந்து கிடக்கின்றன என்பதற்கு இந்தப் பாடல் ஒரு சான்றாக இருக்கும்.

வேறொரு காட்சியில், இயல்பாகவேதான் சங்க இலக்கியத்தில், கதை ஒன்றும் இல்லை. கற்பனை இல்லை. அன்றாடம் கண்ணெதிரே காண்பது, நடப்பது இவைகள்தான்.

தலைவி, திருமணம் முடிந்து தன்னுடைய தலைவன் இல்லத்திலே இருக்கிறாள். சில திங்கள் கழித்த பிறகு, அன்போது தனக்குத் திருமணம் செய்து வைத்த தோழி தலைவியைக் காண்பதற்கு அங்கு வருகிறாள். வருகிறபோது, "எப்படி இருக்கிறாய்? வாழ்க்கை நன்றாக இருக்கிறதா? வாழ்வின் உணர்வுகளெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கின்றனவா?" என்று கேட்கும்போது அவள், தலையசைத்து ஓர் உவமை சொல்கிறாள்.

"நீ திருமணம் செய்து வைத்தபோது, தலைவனைப்பற்றிப் பெருமையாகச் சொன்னாய், **"கூடுதற் பிரியன், நின்ற சொல்லன்"** என்று பல இயல்புகளையெல்லாம் சொல்லிக் காட்டினாயே, இந்த குன்றநாடன், தலைவன் இருக்கின்ற பகுதியில் குன்றுகள் நிறைந்து உள்ளதால், குன்றநாடன். எப்படிக் காட்சி வருகிறது பாருங்கள்.

ஒரு குன்று, குன்றுக்குப் பின்னால் குளிர் படர்ந்த மரங்கள். மரங்களோ நல்ல பருத்த கொழுத்த மரங்கள். அந்த மரங்களில் பழுத்து இருப்பதோ, பலாப் பழங்கள். பலாப் பழங்கள், நெடிய பெரிய மரங்களினுடைய பழங்கள் என்று சொன்னாலும், பலாவினுடைய சுமையைத் தாங்க முடியாமல் அந்தக் கிளைகள் அசைந்து, தாழ்ந்து, பலாப் பழக் கிளைகள் அப்படியே வளைந்து இருக்கிறது. முடம் என்று சொன்னால் உங்களுக்குத் தெரியும். முடம் பட்டிருக்கிறது என்று சொன்னால் கொஞ்சம் வளைந்து இருக்கிறது என்று பொருள்.

'முடவு முதிர் பலவின் குடம் மருள் பெரும் பழம்
பல் கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்,
பாடு இமிழ் அருவிப் பாறை மருங்கின்,
ஆடு மயில் முன்னது ஆக, கோடியர்
விழவு கொள் மூதூர் விறலி பின்றை

முழவன் போல அகப்படத் தழீஇ,
இன் துணைப் பயிரும் குன்ற நாடன்
குடி நன்கு உடையன்; கூடுநர்ப் பிரியலன்;
கெடு நா மொழியலன்; அன்பினன்' என, நீ
வல்ல கூறி, வாய்வதின் புணர்த்தோய்;

நல்லை; காண், இனி காதல் அம் தோழீஇ!
கடும் பரிப் புரவி நெடுந் தேர் அஞ்சி,
நல் இசை நிறுத்த நயம் வரு பனுவல்,
தொல் இசை நிறீஇய உரை சால் பாண்மகன்
எண்ணு முறை நிறுத்த பண்ணினுள்ளும்,

புதுவது புனைந்த திறத்தினும்,
வதுவை நாளினும், இனியனால் எமக்கே.

என்ற பாடலில், ஒரு குரங்கு வருகிறது. குரங்கில் கூட ஆண் குரங்குக்குக் கடுவன் என்று பெயர். பெண் குரங்கிற்கு மந்தி என்று பெயர். "கல்லாக் கடுவன்" இதையெல்லாம் தமிழிலக்கியத்திலே நீங்கள் எண்ணிப் பார்த்தால் சுவையாக இருக்கும். கல்லாக் கடுவன் என்று சொன்னால், மரம் ஏறுவதைத் தவிர வேறொன்றும் பயிலாத குரங்கு. இந்தக் குரங்கு தன் கையிலே இந்தப் பலாவின் பழத்தைச் சுமந்திருக்கிறது. கையிலே பலாவின் பழம், அதுவும் இந்தக் குரங்கு தனித்து வாழ்கிற குரங்கு அல்ல. தன்னுடைய குட்டிகள், தன்னுடைய உறவினர், தன்னுடைய சுற்றத்தார் என்று பலர் சூழ்ந்திருக்கிற பகுதி என்பதாலே, அந்த இடத்திலே இந்தக் கடுவனைக் காண வருகிறார்கள். உன்னுடைய தலைவன் வாழ்கிற பகுதியை வெறும் குன்று என்று நினைக்காதே, அந்தக் குன்றத்திலே ஒரு காட்சி இப்படி இருக்கிறது, ஒரு கல்லாக் கடுவன் தன்னிடத்திலே முழவை ஏந்தி அமர்ந்திருப்பது எப்படி என்றால், கோடியர் என்று சொன்னால், நாடகம் ஆடுகிறவர்கள், ஒரு குன்றின் சாரலில் ஒரு கூத்து நடைபெறுவதுபோல, ஒரு ஆடற் காட்சிக்கு எதிரே, இந்தக் கடுவன் முழவைத் தட்டிக் கொண்டு ஓசை எழுப்புவதும், சுற்றம்

அனைவரும் வந்து சேர வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய உறவை அழைப்பதுமாக இந்தக் காட்சி இருக்கிறது, அப்படிப்பட்ட குன்ற நாடன்.

"இந்தக் குன்ற நாடனைப் பற்றி நீ என்ன சொன்னாய்? அன்புடையவன், பண்புடையவன், நட்புக்கு ஏற்றவன், நயமுடையவன் என்றெல்லாம் நீ சொன்னாய் அல்லவா? அதை நான் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

திருமணமான பிறகு பாலும் புளிக்கும் என்பார்கள், நாளாக ஆக வாழ்க்கை என்பது சலிப்பைத் தரும், எனவே இப்படிச் சலிப்போ, புளிப்போ வந்ததா என்று நீ கேட்கலாம் அல்லவா? நீ திருமணம் செய்ய வேண்டும் என்று எனக்கு நினைவூட்டிய முதல் நாளன்று நீ முறையாகச் சொன்ன சொற்கள் இன்றும் என் நினைவில் அப்படியே இருக்கிறது.

சொல் எந்த வகையிலும் பழமைப்படவில்லை. காலத்தினால் கசந்து போகவில்லை. அப்படிப்பட்ட தலைவனோடு நான் வாழ்கிற வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று கேட்கிறாய் அல்லவா? **"கடும்பரிப்புரவி நெடுந்தேர் அஞ்சி நல்லிசை நிறுத்த நயம்படு பனுவல்"** என்ற இந்தப் பாடலை யார் சொல்வது? தோழி நினைவிருக்கிறதா? நாமெல்லாம் பள்ளியிலே பயில்கிறபோது, பலராகச் சென்று அதியமான் நெடுங்கிள்ளி அவைக்களத்திலே நடைபெற்ற இசையரங்கைக் கேட்கச் செல்வோம் அல்லவா? அந்த இசையரங்கிலே இசைவாணர்கள், புதிய புதிய இசைவாணர்கள் வந்து தங்களுடைய புலமைத் திறத்தினுடைய மாட்சியைக் காட்ட வேண்டும் என்பதற்காக, "நுண்ணிய இசைத் திறத்தில் புதியது புகுத்தியது போன்ற காட்சி இருக்கிறதே?" ஆமாம், திருமண வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று கேட்டதற்குப் பதில் இது. அந்த அதியமான் நெடுமான் அஞ்சியினுடைய, அந்த இசையினுடைய நுணுக்கத்தைப் போன்றிருக்கிறது என்னுடைய வாழ்க்கையின் இன்பம்.

"வதுவை நாளினும் இனிய நாள்" திருமணம் செய்து கொண்ட நாள் என்று சொன்னாலும் நாளுக்கு நாள், வேளைக்கு வேளை பொழுதுக்குப் பொழுது நான் மகிழ்ச்சி பெருகி வாழ்கிறேன். எனக்கு எல்லையில்லாத இன்பம் பெருகி வாழ்கிறேன் என்று சொல்ல வருகிறபோது, அதியமான் நெடுமான் அஞ்சியினடைய அவைக் களத்திலே நிறைந்திருந்த இசைத்திறத்தைக் காட்டுகிறாள். இந்தப் பாடல் மூன்று பகுதியாக இருக்கிறது.

தலைவனுடைய ஊர் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்றால், "கல்லாக் கடுவன் பல்கலைத் தலைவனோடு முடவு முதிற் பலவின் பெரும்பழத்தை வைத்துக் கொண்டு, கோடியர் பெருந்தலைவன் போலக் குன்ற நாடன்." அப்போது அவன் ஊர் எப்படி இருக்கிறது? மரங்கள் செழித்திருக்கின்றன, செழித்த மரங்களின் கீழே கொழுத்த பலாவின் பழங்கள் விழுந்து இருக்கின்றன. விலங்குகள் எல்லாம் அங்கும் இங்கும் மகிழ்ச்சியாகத் திரிந்து அந்தப் பலாவின் பழத்தைப் பங்கிட்டுக் கொண்டு மகிழ்கின்றன.

அப்படிப்பட்ட குன்ற நாடன். ஆக என்னுடைய தலைவனுடைய நாடு அப்படி இருக்கிறது. அவன் நாடு அப்படி இருக்கிறது என்றால், அங்கே வாழ்கிறவர் வீடு எப்படி இருக்கும் என்று கேட்க வேண்டாம். ஆக இன்பம் பொங்கித் ததும்புகின்ற அளவுக்கு அவனுடைய நாடு இருக்கிறது, அந்த நாடு தாண்டி வந்தால், தலைமகனுடைய பண்பை நீ கேட்டபோது, நீ அப்போது சொன்ன இயல்புகள் இப்படி இருக்கின்றன.

தலைவனுடைய நாடு, அவனுடைய இயல்புகள் இந்த இயல்புகளினாலே பெருகுகின்ற திருமண வாழ்வின் மகிழ்ச்சிகள் எப்படிப் பெருமிதமாக இருக்கிறது என்றால், அதியமான் நெடுமான் அஞ்சியினுடைய திறத்தைச் சொல்வதற்கு, உயர்ந்த தேர்ப்படையில் வல்லவனாகத் திகழ்கின்ற அதியமான் இருக்கிறானே, அவனுடைய அவைக்களத்திலே ஒவ்வொன்றையும் எண்ணிப் பாருங்கள், பாடுகிறவன், நல்லிசை நிறுத்த நயம்பறு பனுவல், அவனுடைய இயல்பு என்னவென்றால், உரைசால் பான்மகன், அவன் பாடுகின்ற பாடலின் திறம் எப்படியென்றால், புதுவது புனைந்த திறத்தின், புதுவது புனைந்து, வியப்புக்குரிய புதிய நுணுக்கங்களையெல்லாம் எடுத்துக்காட்டி, அவைக்களத்திலே அவர்கள் எழுப்பிய இசையோசை எப்படி இருக்கிறதென்றால், என் வாழ்க்கையில் எனக்குப் பொங்குகிற மண ஆசைபோலத் திகழ்கிறது.

வாழ்க்கையினுடைய இனிமை எப்படி இருக்கிறதென்றால், நாம் என்ன சொல்வோம், தேன் என்போம், பால் என்போம், தெவிட்டாத தீங்கனி என்போம், ஆனால், தேன், பால், தெவிட்டாத தீங்கனி என்று சொல்வது ஒருபுறம் இருக்கட்டும். இதைக் கற்பனையாகவாவது உங்களால் நினைக்க முடிகிறதா என்று பாருங்கள். இசையினுடைய நுணுக்கத்தின் உயர் நுணுக்கமாக எங்கள் காதல் வாழ்வு என்பது, எண்ணத்திற்கு என்றும் இனிப்பைத் தருகிறது என்று ஒரு பாடல் அகநானூற்றில் வருகிறது.

அகநானூற்றுப் பாடல் என்று சொன்னால், முதற்பொருள், குறிஞ்சிப் பகுதி, பிறகு பாருங்கள் கருப்பொருள், அங்கே வாழ்கிற

விலங்குகள், பிறகு உரிப்பொருள் வாழ்கிற தலைவனுடைய இயல்பு என்று காட்டுவதினாலே அகநானூற்றுப் பாடல்கள் அவ்வளவு சிறப்புடையவனவாகத் திகழ்கின்றன. அஞ்சி அத்தைமகள் நாகையார் என்று பாடுகிற இந்தப் பாடல் சங்க இலக்கியப் பாடலுக்கு ஒரு சரியான சான்று. பெண் குழந்தை பிறந்தபோது வளர்கிற ஒரு மகிழ்ச்சி, அவள் காதல் கொண்டு கணவரோடு அடைகிற நெகிழ்ச்சி, வாழ்க்கையில் இப்படித் தொடர்ந்து ஒரு இன்பத்தைத் தருகிறதே என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, ஒரு பாடல் நாம் நினைவில் கொள்ளலாம்.

பெரிய பெரிய வேந்தர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களைப் பாடி இருக்கிறார்கள். நான் சொல்வது அயல்நாடுகளில், மார்க்கஸ் ஔரேலியர் என்று ஒருவர், உயர்ந்த உள்ளங்களின் நுணுக்கங்களைக் காட்டுகிற மெய்ப்பொருளைப் பற்றி எழுதுகிறார். நம்முடைய ராஜாஜிகூட அதை மொழிபெயர்த்திருக்கிறார். **“ஆத்ம சிந்தனைகள்” “ஞான உணர்வுகள்”** என்றுதான் அந்த நூல். வாழ்க்கையில் எட்ட முடியாத உணர்வுகளையெல்லாம் புனைந்துக் காட்டுகிற தத்துவப்பாடல்கள் மிகுதியாக உண்டு. படை வீரத்திலும், கொடைத் தன்மையிலும் ஓங்கி உயர்ந்துள்ள ஒரு வேந்தர் பாடுகிறார். நமக்கே வியப்பாக இருக்கும், ஒரு வேந்தரா இப்படி பாடுகிறார்.

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெரும் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்துப்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழ்நாளே.”

– என்னும் பாடலில், பிள்ளைகளை வளர்ப்பது எவ்வளவு துயரம் என்று நாமெல்லாம் சோர்ந்து சொல்கிறோம். ஒரு நாடாளுகிற வேந்தன், வாழ்க்கையினுடைய மாட்சியைப் பற்றிச் சொல்லும்போது, அந்தப் பாடல் அமைந்திருக்கிற திறத்தைப் பாருங்கள். செல்வம் என்னும்போது, வாழ்க்கையிலே பெறுகிற வளங்கள், வாழ்க்கையில் பெறுகிற வாய்ப்புகள், வாழ்க்கையில் உயர்ந்து நிற்கிற தகுதிப்பாடுகள் இவைகள்தான் செல்வம் என்று நாம் நினைக்கிறோம். இந்த உலகத்தில் எந்தப் பொருள் உயர்வுடையனவோ, சிறப்புடையனவோ அவைகளையெல்லாம் எப்படியாவது திரட்டித் தேர்ந்து, எழுத்துக்கு எழுத்து உண்ணுகிறார்களாம், பலரோடு உண்ணும் செல்வராயினும், அப்படிப்பட்ட செல்வர்களுக்குக்கூட

அந்தச் செல்வத்திற்கு என்ன பயன்? என்ன பொருள்? செல்வமா பொருள் தருவது என்று கேட்டால், இல்லை. வேந்தன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறான், வேறு பலர் வந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நடுவிலே புகுந்து புகுந்து இந்தக் குழந்தை ஒடுகிறது. இடைப்பட குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, ஒரு நாடாளுகின்ற வேந்தனுக்கு இந்த நினைவு வருமா பாருங்கள்? குழந்தையினுடைய நடையைப் பற்றி நினைத்துப் பார்க்கிறான் என்று சொன்னால், எவ்வளவு பெரிய வாழ்க்கையின் உண்மையிலே இவர்கள் புரண்டு கிடக்கிறார்கள்.

இது ஒரு வேடிக்கை, குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, அது நடக்கும்போது கை இப்படி நீளும், குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, இட்டும், தொட்டும், போர்க்களத்திலேதான் வேலைச் சுழற்றுகிற ஒரு வீரன் என்றும், இவன் வேலைச் சுழற்றுகிறபோது பல வீரர்களை வீழ்த்துகிறவன் என்று அவர்கள் துடிக்கிற துடிப்பைக் கண்டு வெற்றுத் துடிப்பு என்று நினைக்கிறவன், நெய்விட்டுப் பிசைந்த அந்தச் சோற்றை ஊட்டுகிறார்களாம், அந்தச் சோறு வாய் வழியாகச் சிந்துகிறதாம், வாழ்க்கை என்பது அவ்வளவு எளிதானது இல்லை.

திருவள்ளுவர் ஒரு திருக்குறள் சொல்லுகிறார். வியப்பான திருக்குறள். குடும்பம் நடத்துவது என்பது ஒரு போர்க்களம் மாதிரி என்கிறார்.

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

(திருக்குறள் எண்: 1027)

குடும்பத்திலே இந்தப் பிள்ளைகளையெல்லாம் சுமந்து கொண்டு, அவர்களோடு மகிழ்ந்து வாழ்வது என்பது ஒரு பெரிய திறம்.

“அமரகத்து வன்கண்ணர் போல”

போர்க்களத்திலே ஒரு போர்வீரன் போர் எப்படி பங்குபெற்று வெற்றி பெறுகிறானோ, அத்தகைய பெருமிதத்தைக் கொண்டதுதான் இந்தச் சிறப்புடைய இல்லறம் என்று வேறொரு இடத்திலே சொல்கிறார்.

அப்படிக் குடும்பத்திலே மக்கள் இல்லை என்று சொன்னால், அண்மையிலே நீங்கள் ஒரு செய்தி படித்திருக்கலாம். உலக நாடுகளில், ஏறத்தாழ ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளில், மக்கட்செல்வங்களே இல்லை. அவர்கள் மக்கட்செல்வங்களைப் பெறுவது ஒரு பேறு என்றே கருவதில்லை.

எதிர்காலத்தில் இளைஞர்கள் பெருகியிருக்கிற நாடு என்று வருமானால், அது பாரதத்திற்குத்தான் வரும் என்று சொல்கிறார்கள். எனவே, பெரிய அளவிலே மக்கட்செல்வங்களைப் பெற்றிருக்கிறது என்கிற பெருமிதம் மட்டுமல்ல, இந்திய நாடும், சீன நாடும் அந்த வகையில் இருப்பதாலேதான், உலக நாடுகள் பலவற்றிலும், இந்திய சீன இளைஞர்களை வருக வருக வருக என்று அழைக்கிறார்களாம். எனவே, வாழ்க்கையில் இன்பம் என்பது செல்வத்தில் வருவதல்ல. தன்னுடைய மடியில் விழுந்து புரளுகிற பிள்ளைகளும், அந்தப் பிள்ளைகளுடைய மழலைச் சொற்களும்தான் "அமிழ்தினும் ஆற்ற இனிதே" என்று திருவள்ளுவர் காட்டியதுபோல இன்பத்தினும் இன்பம் தருவதாக இருக்கிறது.

மயக்குறு மக்களைப் பிள்ளைகள் பேசுவதைக் காதாற கேட்பதும், அவர்கள் மேனியில் விழுந்து புரளுவதும், மாமன்னன் சொல்லுகிறான், மயக்குறு மக்களை. அப்படி ஒரு இன்ப மயக்கத்திலே வாழ்வதற்கு ஊக்கம் தருகிற இந்த மக்களை இல்லை என்று சொன்னால், மயக்குறு மக்கள் இல்லோர்க்கு தாம் வாழும் நாள் முழுவதும் அவர்களுக்கு ஒரு இன்பம் இல்லை.

"மக்களை முன்காணா மனம் நெடுங்கா"

என்ற நளவெண்பாப் பாடலில், மக்களைக் கண்டவுடன் அவன் எப்படிப்பட்ட மாற்றங்களையும், விருப்பத்தையும் கொண்டிருக்கிறான். காதல் உணர்வினால், அது எப்படிப்பட்ட நாணத்தை உருவாக்குகிறது என்பதை நற்றிணைப் பாடலில் கண்டோம். காதல் வாழ்வு எத்தகைய இனிப்பைத் தருகிறது என்று சொன்னால், அது ஒரு பொருளில் பெறுகிற இன்பம் அல்லது ஒரு செயலில் பெறுகிற இன்பம் என்பது இல்லை. அது மனத்தளவில் பெறுகிற மாட்சியான இன்பம்.

இருப்பதிலே சிறந்த மலர் என்பது அவர்களுக்குத் தாமரை. அந்தத் தாமரையில் உள்ள தேனை எடுப்பதில் சிறப்பு வாய்ந்தது என்று கருதுவது இந்த வண்டு. ஒரு தெளிந்த பளிங்கு போன்ற குளத்தில் உள்ள தாமரையில் உள்ள தேனை எடுத்து உண்ணுகிற அந்த வண்டு, இத்தகைய இனிமையான தேனை, உயர்வினும் உயர்ந்ததாகிய ஒரு மலையுச்சியில் போய் இந்தத் தேனைக் கட்ட வேண்டும் என்று கருதியபோது, மலையுச்சியிலே மரங்களிலே சிறந்த மரம் என்று கருதுகிற சந்தன மரத்தில் போய்க் கட்டுகிறதாம்.

உயர்ந்த தாமரை, முதலிலே உயர்ந்த இடம், குளம், உயர்ந்த குளத்திலே உயர்ந்த தாமரை, உயர்ந்த தாமரையில் எடுத்த உயர்ந்த தேன். தேன் எடுப்பது யாரென்றால், உயர்ந்த தும்பி. தேனைத் தவிர வேறு எதையும் தொடாதது. எனவே, அந்த வண்டு தேன் கட்டினால் எப்படி இருக்கும்? ஆக நீங்கள் எண்ணிப் பாருங்கள். காதல் வாழ்க்கையின் உயர்வினை, பொருளைச் சொல்லி நாம் உவமை காட்டுவது பொருந்தவில்லை என்று சங்க இலக்கியம் காட்டுகிறது. மனத்துக்குள்ளே பெறுகின்ற ஒரு தனி இன்பம். உள்ளத்துக்குள்ளே ஒளிந்து நின்று மகிழ்ச்சியைத் தருகிறது என்பதால், எதுபோல இருக்கிறது அந்த இன்பம் என்று சொன்னால், இசைவாணர்கள் மீட்டுகிற இசையினுடைய புதுத்திறத்திற்கு ஈடாக இருக்கிறதே என்று சுட்டிக்காட்டுவதை நாம் காணலாம்.

மக்கட்பேறினை எண்ணி ஒரு மன்னன் பாடிய ஒரு பாடலைக் கண்டோம். பெற்றோர் என்று சொன்னாலே, குழந்தைகளைப் பெற்றவர்கள்தான்.

செல்வம் பெற்றோர் என்று சொல்லக்கூடாது. நாடுகளில் வெற்றி பெற்றோம் என்று சொல்லக்கூடாது. பெறுகிற பேறு என்பது பெருமிதம் தருவதாக உள்ளதை எண்ணிப் பார்த்து, இந்த உயரிய பேறு வாய்த்ததைப் பற்றி ஒரு மன்னன் வியந்து பாராட்டுகிறான்.

இப்படி ஒரு மூன்று கருத்துக்களை வைத்துக் கொண்டு பார்த்தால், இந்த மகன் எப்படிப்பட்ட பெருமிதத்தோடு வளர்கிறான் என்று பார்த்தால், மன்னன் சொல்கிறான், "என்னுடைய மகன் என்பதற்காக அவன் மன்னனாக வரவேண்டும் என்பது இல்லை. பிறந்த மக்களுள் கூட மூத்தோன் வருகை எண்ணாது, நான் நினைக்கிறேன் இப்படி எந்த இடத்திலும் இப்படி ஒரு கருத்தைக் கேட்டது இல்லை. மூத்தோனுக்குத்தான் உரிமை.

மூத்தவனுக்குத்தானே முடிசூட்ட வேண்டும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். அப்படிச் சொல்லும்போது மூத்தோன் வருகை எண்ணாது, அறிவுடையார் வழி அரசும் செல்லும். புறநானூற்றைத் தவிர நீங்கள் எங்கே காண முடியும். ஒரு வேந்தன் தன்னுடைய ஆட்சித் திறத்தை எண்ணிப்பார்த்துச் சொல்லும்போது, அறிவுதான் மக்களை ஆளக்கூடியதே தவிர, அவன் பிறந்தான் என்ற பெருமிதம் ஆகாது என்று கருதிக் கல்வியின் பெருமிதத்தை இப்படி பக்கம் பக்கமாக நாம் புரட்டி புரட்டிப் பார்த்தால், நான் வேந்தனாக இருக்கலாம், இன்னொருவன் வேடுவனாக இருக்கிறான். நான் வேடுவன் என்பதற்காகத் தாழ்த்திச் சொன்னேன் என்பதல்ல. வேடுவன் வாழ்வு ஒரு உயிரைக் கொலை செய்வது.

வேந்தன் வாழ்வு ஒரு உயிரைக் காப்பது. எனவே, வேந்தன் வேடுவன் என இரண்டுபேர் இருந்தாலும் கூட "உண்பதுநாழி உடுப்பது இரண்டு பிறவு எல்லாம் ஒன்றுதான்". "கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்" விலங்குகளைத் தேடிப் பிடித்து வதைக்க வேண்டும் என்று எண்ணுகிற வேடுவனுக்கும், அல்லவை காக்கும் வேந்தனுக்கும் வாழ்க்கை என்பது எப்படி இருக்கும் என்று கேட்டால், இதில் வேறுபாடு காண்பது என்பதற்கில்லை. வேந்தனும் சரி வேடனும் சரி உயிர் காப்பது என்ற அறத்தோடு வாழ்பவர்களுக்குச் செல்வத்தினாலே ஏற்படுகிற செழுமையைவிடச் சிந்தனையினால் ஏற்படுகிற விழுப்பம்தான் மிகப்பெரிய சிறப்புடையதாகும்.

இதனால், எண்ணத்தினால் ஓங்கி நிற்பதைச் சிந்தனையால் மாட்சிமைப்பட்டு இருப்பதையும் செறிவோடு வழங்கும் பொற்பேழையாகச் சங்க இலக்கியம் திகழ்கிறது என்று கூறி இந்த அளவிலே காதல் வாழ்வில் தொடங்கி, கடமை வாழ்வு என்று வருகிற வரை கண்ணும் கருத்துமாகக் கடமை உணர்ச்சிகளை வலியுறுத்துவதில் சங்க இலக்கியப் பாடல்கள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன என்று சொல்லி அமைகிறேன்.

நன்றி வணக்கம்.

5. தொல்காப்பியக் கோட்பாடுகளும் விதிகளும் – பயிலரங்கம்

**சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இணைந்து நடத்திய
தொல்காப்பியக் கோட்பாடுகளும் விதிகளும் பயிலரங்கம் –2009**

தகுதிவாய்ந்த தமிழ்ப்பெருந்தகை, தமிழகத்தில் அன்னைப் பல்கலைக்கழகம் என்று நாங்கள் போற்றுகின்ற, சென்னைப் பல்கலைக்கழத்தில் தனிப்பெருந் துணைவேந்தராகத் திகழும் பெருந்தகை திருவாசகம் அவர்களே,

இந்த அருமையான கருத்தரங்கத்தைத் தமிழ்த்துறையோடு இணைந்து நடத்துகின்ற, ஒரு பெருமிதப் பணியைச் செம்மொழி ஆய்வு நிறுவனம், மிகச்சிறப்பாக நடத்துகிறது.

நேற்று முந்நாளுக்குள் தமிழகத்தில் மூன்று பல்கலைக்கழகங்களில் செம்மொழி மத்திய நிறுவனம் ஆங்காங்கே பயிலரங்குகளை நடத்துகிறது என்று காணும்போது நமக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியும் பெருமிதமும் விளைகின்றன. செம்மொழி நிறுவனம் மாணவர்களையும், பேராசிரியர்களையும், ஆர்வலர்களையும் அறிஞர்களையும், ஒன்றுதிரட்டிச் சங்கத்தமிழ் மாட்சியையும் தமிழின் தொன்மையையும், பெருமிதத்தையும் உணர்ந்து மகிழவேண்டும் என்பதற்காக அவர்கள் இந்தக் கருத்தரங்கத்தை நடத்துவதை நான் மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றேன்.

அறிஞர் தெய்வசுந்தரம் அவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த நாள் எனக்குத் தெரியும். ஆர்வமும், ஆற்றலும், தணியாத தொண்டாற்றும் உள்ளமும் கொண்ட, ஒரு புரட்சி இளைஞராக வந்தவர் நண்பர் தெய்வசுந்தரம் அவர்கள். அவர்கள் தன்னலம் இல்லாமல் ஆரவாரம் இல்லாமல் தன்னுடைய மொழித்துறையை மிக நுட்பமாக நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி, துணைவேந்தர் கேட்டால் இன்பமடைவதற்குரிய வகையில், கணிப்பொறியில் முதுகலை வகுப்பைத் தமிழ் மாணவர்கள் பங்குபெற்றுப் பெறலாம் என்று மாற்றியிருக்கிற தகுதியை, They have attempted of Teaching computer with knowledge basically of the local language அந்த வகையில் இந்த தமிழ் முதுகலை படிக்கிறவர்கள், அறிஞர் திருவாசகம் கனவு கண்ட வகையில் தமிழறிவும் கணிப்பொறி அறிவும் ஒன்றாகப் பெற்று, உலக அரங்கில் தலைநிமிர்வதற்குரிய வாய்ப்பை அவர் தொடர்ந்து வழங்கி வருகிறார்.

பேராசிரியர் திருவாசகம் அவர்கள் பேசிய பிறகு, இனிமேல் தமிழறிஞர்கள் மேடையில் பேசவேண்டாம். கடல்மடை திறந்ததுபோல அவர் தன்னுடைய மனக்கருத்துகளை எடுத்துக்காட்டிய மாட்சி, நம்மை நெகிழச்செய்கிறது. சொன்னால் செய்கிறவர் பேராசிரியர் திருவாசகம். அவர் எளிமையாகப் பிறந்ததைப் பலநேரங்களில் சொல்கிறபோது, நமக்கு கண்களில் நீர் துளிர்க்கும். அந்த எளிமைதான் என்னுடைய ஈடற்ற வலிமை என்று அவர் காட்டியிருக்கிறார். ஒரு பாடலை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

உலகமெல்லாம் கடலால் சூழப்பட்டு, நிலங்களெல்லாம் மறைந்த பிறகு, தன்னந்தனியாக இருந்து வருந்தினாராம். யார் அவர் என்று கேட்டால் இப்பாட்டுதான் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை சொல்லுகின்ற தொடர், யாருமே துணையில்லையே என்று சொல்லி, சிவபெருமான் சோர்ந்துபோய் உட்கார்ந்துவிட்டார். அவருடைய தனிமையை எப்படிப் போக்குவது? என்று கேட்டார்களாம். திருவாசகத்தைக் கையில் கொடுங்கள் போதும்.

கடையூழி வரும் தனிமை கழிக்க அன்றோ அம்பலத்து உறையான் திருவாசகத்தின் ஒரு பிரதி கருதியதே. என்பது மனோன்மணியம் சுந்தரனாருடைய தமிழ்த்தாய் வாழ்த்து. அதுபோல் துணையில்லாமல் தமிழ் எவ்வளவு தத்தளித்தது தெரியுமா? இப்போது ஒரு துணைவேந்தருடைய துணை கிடைத்திருக்கிறது என்றால் தமிழ் எவ்வளவு மகிழ்கிறது என்று சொல்லலாம்.

நண்பர்களே! என்னோடு உடன் படித்தவர்கள்தான், பேராசிரியர் இராம.சுந்தரம், பேராசிரியர் கோதண்டராமன், பேராசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். ஒரு கிழக்கு வெளுப்பதற்கேற்ற வகையில் புதிய நூல் வழக்குப் பெறவேண்டும் என்பதற்காக, அந்தப் பதிப்பகத்தினுடைய

தலைவர் அமெரிக்க நாட்டில் பல்லாண்டுகள் இருந்த பொறியாளர் பத்ரி சேஷாத்ரி அவர்கள் இங்கே வந்திருக்கிறார்.

தொல்காப்பியக் கோட்பாடுகளைப் பற்றி ஒரு கருத்து சொல்ல வேண்டும். என்னைவிட இலக்கணம் மிக நன்றாகப் படித்தவர் இராம. சுந்தரம். அப்போதெல்லாம் இலக்கணம் என்றாலே மருந்து போலிருக்கும். எது தொல்காப்பியம்? நான் வருகிறபோது, தெய்வசுந்தரத்தினுடைய மாணவர் இல.சுந்தரம் எனக்குத் தொலைபேசியில், துணைவேந்தர் அவர்கள் உரிய நேரத்தில் வந்துவிடுவார். எங்கே இருக்கிறீர்கள்? என்று கேட்டார். நான் அப்போது சொன்னேன், நான் வந்துட்டேன். நான் வந்துவிட்டேனா? வந்துகொண்டிருக்கிறேன் என்று சொல்லியிருக்க வேண்டும். அப்படித்தானே சொல்லியிருக்கவேண்டும். இல்லையென்றால் அவர் சொன்னபோது நான் புறப்படவில்லை. வருவேன் என்று சொல்லியிருக்கவேண்டும். நான் வருவேன், நான் வந்துகொண்டிருக்கிறேன், நான் வந்துவிட்டேன். ஆனால் அவர் சொன்னவுடனேயே நான் வந்துவிட்டேன் என்று சொன்னேன். சுந்தரம் உடனே சொன்னார், தொல்காப்பியத்தை நினைவூட்டுகிறீர்களே?

"வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள' என்மனார் புலவர்."

இதுதான் தொல்காப்பியம்.

நான் பேராசிரியர் இராமசாமி அவர்களிடத்தில் ஒன்று கேட்பது, காலையிலிருந்து மாலைவரை ஒரு மாணவரோ, ஒரு குடும்பத் தலைவரோ பேசுகின்ற தொடர்களையெல்லாம் எழுதி, எத்தனைத் தொல்காப்பிய நூற்பாக்கள் உள்ளே அடங்கியிருக்கின்றன என்று கண்டறிவது. இலக்கணம் என்பது பேசும்போதும் நடைமுறையிலும் எண்ணத்திலும் எப்படி கரைந்திருக்கிறது என்பதுதான் தொல்காப் பியத்தின் சிறப்பு.

சிலபேர் சொல்வார்கள், காலத்திற்கேற்ப இலக்கணம் எழுதவேண்டுமென்று. காலத்திற்கேற்ப இலக்கண எழுத வேண்டாம். தொடக்கத்தில் அமைந்த நூற்பாக்களினுடைய கருத்துகள் விரிவு படவும், காலத்திற்கேற்ப வளைந்து கொடுக்கவும், எண்ணங்களுக்கு இடந்தருவதும் அமைந்த திறம்தான் தொல்காப்பியத்தின் சிறப்பு.

'கடிசொல் இல்லை காலத்துப்படினே'

'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்'

ஆண்டுதோறும் இலக்கணம் எழுதிக்கொண்டிருக்க மாட்டார்கள். Grammar என்று சொல்லுகின்ற கிரேக்கச்சொல்லுக்கு என்ன பொருள் என்றால், எழுத்துக்கலை என்பதுதான் பொருள். ஆனால் தமிழ் இலக்கணம் என்ன அமைக்கிறது என்றால் நாம் பேசுகிறோம், வாழ்கிறோம், சில எண்ணங்கள் நம் மனதில் பதிகின்றன. அதனை எடுத்து எழுதுகிறோம். எழுதுகிற நூலுக்கு அமைக்கின்ற ஒரு கட்டடத்திற்குக் கற்கள். இந்தக் கற்களைப் பொருத்துவதற்குக் காரை பூச வேண்டும். காரை பூசுவதும், கற்களும் தான் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம். நாம் யாரும் கல்லாராய்ச்சி செய்யப்போவதில்லை. காரைகளின் ஆராய்ச்சியும் அல்ல. கட்டட அமைப்பை ஒழுங்காக அமைப்பதற்குக் கற்கள் எப்படிப் பயன்படுகின்றன, இந்தக் கற்கள் எந்த நிலையில் பொருந்துகின்றன. தானாகவே எழுதுவதில்லை இலக்கணம். ஊரார் உலகோர் பேசுவதையெல்லாம் கேட்டு.

ஒன்று சொல்ல விரும்புகின்றேன். ஒரு திருக்குறளை எடுத்துக்கொள்வோம்,

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

பாருங்கள். இந்த உரை எழுதியவர் இலக்கணம் படித்தவர். இலக்கணம் படித்தார் என்ன நினைக்கிறார் இந்தக் குறளைப் பார்த்து, அறிவறிந்த மக்கள் யாரது? பிறக்கிற பிள்ளைகளைப் போல ஒரு சிறப்புடைய பிள்ளைகள் நமக்குப் பேறாக வாய்ப்பதில்லை. 'அறிவறிந்த மக்கள்' என்பதற்குப் பொருள் எழுதப்பார்க்கிறார். நாம் என்ன சொல்வோம்? ஆண் குழந்தை, பெண் குழந்தை அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. இரண்டும் ஒன்றுதானே என்று இப்போது நீங்கள் பேசலாம். பரிமேலழகருக்கு அப்படிக் கை வரவில்லை. 'உயர்திணைப் பன்மை பொதுச்சொல்' என்று ஒரு சொல் உள்ளது. உயர்திணைப் பன்மை பொதுச்சொல் என்று சொன்னால், ஆண்களா? பெண்களா? ஒன்று ஒழித்துச் சொல்ல வேண்டுமென்று இலக்கணம். பாருங்கள், எப்படி இந்த இலக்கணத்தை இந்த இலக்கியத்திலிருந்து எடுக்க வேண்டும். நீங்கள் மகிழ்ச்சியடையலாம். மகளிர் வருந்துவார்கள். அவர் என்ன சொல்கிறார், அறிவறிந்த மக்கள் என்பதால், ஆடவரும், மகளிரும் இருந்தாலும் ஒன்றொழிப் பொதுச்சொல் என்ற வகையில், இது ஆண் மக்களைக் குறித்தது.

இப்படி எழுதலாமா? என்று கேட்டால், அவர் எவ்வளவு தெளிவானவர் என்பதற்குச் சான்று, ஒரு பெண்மணி மிகவும் வருத்தத்தோடு பேசுகிறார். நாங்கள் இருவரும் நள்ளிரவில் காண்கிறோம். ஆனால் இந்த ஊருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. இந்த ஊரில் உள்ள மக்கள் எங்களைப்பற்றிப் பேசுகிறார்கள்.

ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல் நீராக நீளும் இந் நோய். ஊரார் பேசுகின்ற வம்பும், என்னுடைய தாயாருடைய வசவும் இந்தக் காதல் பயிரை நீராக வளர்க்கிறது. இப்போது யார் ஊரவர்? பரிமேலழகர் சொல்கிறார். உயர்திணைப் பன்மை பொதுச்சொல் ஒன்றை நீக்க வேண்டுமே, யார் இப்படி இந்த ஊர்க்கதைகளைப் பேசுவார்கள். அவர் நினைக்கிறார். 'ஈண்டு ஆண் மக்களை ஒழித்துப் பெண் மக்களைக் குறித்தது' இலக்கணம் எவ்வளவு ஈர்ப்பாக ஆக்குகிறார்கள் பாருங்கள்.

தொல்காப்பியத்தினுடைய கோட்பாடுகள் என்று காணும் போது, உங்கள் துணைவேந்தர் பேசும்போது மிக உருக்கமான ஒரு கருத்தைச் சொன்னார். நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் 142 நூற்பாக்களை எடுத்து 100 தலைப்புகளில் எழுதியது தொல்காப்பியப் பூங்கா. அவர் தன் கைப்பட 600 நூற்பாக்களை எழுதியிருக்கிறார். அதிலே இருப்பதில் இந்த 142–த்தான் எடுத்து எழுதினார். அதில் என்ன சிறப்பென்றால் இலக்கியங்களிலே தேர்ச்சி உடையவர்களுக்கு இலக்கணம் இயல்பாகவே வரும் என்பதற்கு ஒரு சான்று.

அவர் தான் படித்த இலக்கியத்தை நினைக்கிறார். அவர் காதல் வாழ்க்கையைப் பற்றி எழுதியிருக்கிறார், பல கதைகளில். இப்போது நீங்கள் பார்த்திருக்கலாம். "பாலிருக்கும், பழமிருக்கும் தூக்கம் வராது." தொல்காப்பியம் சொல்லுகிறதே, எப்படிப் பிரிவிலே நோதல், இரண்டுபேரும் கண்களால் கண்டார்கள், கண்கள் பேசின, காதல் பிறந்தது. இரண்டும் கண்ணால் நோக்குதலைப் பற்றித் தொல்காப்பியம், 'ஒன்றது பாலே தமியர் காண்ப'

இதில் ஒரு பெரிய கருத்து நீங்கள் எண்ணவேண்டியது, ஒரு பழைய கதை இருக்கிறது. அந்தக்கதை பொய்க்கதைதான். அந்தக்கதையில் ஒரு கருத்து ஒன்று தெரிகிறது.

திருவாசகம் போல, பாண்டிய நாட்டை ஆண்ட வேந்தர், தமிழறிஞர்களையெல்லாம் அழைத்து, எங்கே தொல்காப்பியத்தைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டார். என் நண்பர் சுந்தரம் போலந்து நாட்டில் வேலை பார்த்தவர். அங்கெல்லாம் போய்த் தமிழ் இலக்கணம்

சொன்னவர். எனவே எழுத்ததிகாரத்தைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டார் திருவாசகத்திடம். அவரும் (சுந்தரம்) இதுதான் எனக்குப் பயிற்சி நான் கொடுத்துவிட்டேன் என்று சொன்னார். திருவாசகம் கேட்டார், இன்னும் தொல்காப்பியம் முடியவில்லை வேறு யாரைக் கேட்பது என்று சொன்னார்.

மைசூர் நடுவண் நிறுவனத்திற்கு எழுதுங்கள். அங்கே, பேராசிரியர் இராமசாமி இருக்கிறார். அவரைக் கேளுங்கள் என்றேன். அவர் சொல்லதிகாரத்திற்குக் கொண்டு வந்து கொடுப்பார். அவ்வளவுதான். திருவாசகம் சொன்னால் சொன்னபடி செய்கிறவர். நான், சொல்லி 20 நாளாயிற்று இது இரண்டு தான் வந்திருக்கிறதே. மூன்றாவது எங்கே என்று கேட்டார். தமிழர்கள் வாழ்வு சிதைந்த காலம் அது. தமிழர்களுடைய காதல் வாழ்க்கையினுடைய வெளிப்பாடு கலங்கிப்போன காலம் அது. எழுத்ததிகாரத்திற்குத் தமிழ் என்று பெயரில்லை. சொல்லதிகாரத்திற்குத் தமிழ் என்று பெயரில்லை. தமிழ் என்று சொன்னால் பொருளதிகாரம் தான்.

உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும், ஒரு இலக்கண நூல் இருக்கிறது. ஒரு அறுபது பக்கம். தமிழ் நெறி விளக்கம் என்று பெயர். அப்போது தமிழென்றால் எது? திடீரென்று காண்பது, கண்டவுடனே விளங்குவது,மயங்கிய பிறகு மணந்துகொள்வது,

மணந்தபிறகு குழந்தை பிறப்பது, பிறகு மறந்தேன் என்று சொல்வது, இப்படிப்பட்ட துஷ்யந்தன் கதையா? காதல். இது வேறு பொருளதிகாரம் என்று கேட்டுப்பார்த்தால், திருவாசகம் சொன்னார், நான் கேட்டவரையில் யாரும் கொண்டு வந்து கொடுக்கவில்லை. நான், போய் என்னுடைய தெய்வத்தைக் கேட்கிறேன் என்று கேட்டார். கேட்டாராம். உங்களுக்குத் தெரிந்திருக்குமே, இக்கதை. உடனே கடவுள் சொன்னாராம், திருவாசகம் யாரிடத்தும் ஒரு பொருள் கேட்டதில்லை. அவர் பொன்னையா கேட்டார்? பொருளையா கேட்டார்? வேந்தர்க்கு வந்த கவர்ச்சி, அறிவு பொருத்தது. பாண்டிய வேந்தர்க்கு வந்த கவர்ச்சி ஞானத்தின் பொருட்டன்றே,

Intellectual entry, cannot be isolated by any of the scholars which such others how is interested the vice chancellor makes a fleck means. What kind of the greatness and what kind of the love of wisdom the king possess. என்று சொல்வது போல, அன்று இரவு 60 நூற்பாக்களை எழுதி ஒரு ஏடு கிடைத்ததாம். அதற்கு என்ன பெயர், இறையனார் களவியல், இறையனார் அகப்பொருள் அது கூடச் சரியானது இல்லை. காரணம் அதில் புறப்பொருள் இல்லை.

இதைவிட இன்னொரு சிறப்பைப் பாருங்கள். இதனை எழுதியவர் இறையனார். இதில் என்ப என்று உள்ளது. 'என்ப' என்றால் 'எனக்கு முன்னோர்கள் சொன்னார்கள்' என்று, அப்படியானால் கடவுள் முன்னோர்கள் யார்? தமிழர்கள்.

இது தெரியாமல், கடவுள் மொழியைப் படைத்தார் என்பது எவ்வளவு மடமை. கடவுளே மொழிக்கு மாணவராக இருந்தார் என்று சொல்லுகிற தமிழுக்கு எவ்வளவு அறிவுடைமை. அந்த இறையனார் களவியலில் வருகின்ற பாடல்கள் அதிலே வருகிற 60 நூற்பாக்களில் ஏறத்தாழ 20 நூற்பாக்கள் தொல்காப்பியமே.

பொருள் எதற்காக? சொற்களை வைத்துக் கட்டுவதற்காக. சொற்கள் எதற்காக? எழுத்துகள் எப்படிப் பிறக்கின்றன, இந்த எழுத்துகள் தனித்தோ, தொடர்ந்தோ, சொல்லாகி, தொடராகி, அந்தத் தொடர் பொருளுடையதாக வருகிறது. நீங்கள் ஒன்றும் இது வாழ்க்கையா? இலக்கியமா? என்று ஆராய வேண்டாம். தமிழ்நாட்டில் எப்படி நூல் எழுதலாம். அவர்கள் காண்கின்ற வாழ்க்கை எப்படியிருக்கும்? கிரேக்க நாட்டில் கேட்டால் ஏன் எழுதுகிறீர்கள்? அவன் சொல்கிறான், its structure. இந்த மக்களுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்ல வேண்டும். பிறகு சிறிது நாள் கழித்து, அரிஸ்டாட்டில் சொன்னார், Instruction with getting job excellence.

எதை எழுதினாலும் அறம் இருக்க வேண்டும். அறம் எதற்கென்றால் மக்களுக்கென்று இருக்க வேண்டும். மக்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சி என்பது இல்லத்தில் அமையும். வீடு பிறகு நாடு. இந்த வீடும் நாடும் வேராகக் கொண்டிருப்பது அறம். இதுதான் இலக்கியத்தின் நுணுக்கம் என்று தொல்காப்பியம் சொல்கின்ற கோட்பாடு இன்றுவரை மாறியதா?

நேற்று வந்த திரைப்படம் எடுத்துக்கொள்ளுங்கள், நான் உங்களுக்காக 'உளியின் ஓசை'யை எடுத்துக்காட்டப் போவதில்லை. எந்தத் திரைப்படம் ஆகட்டும். எல்லாவற்றையும் மறந்துவிட்டு ('டைட்டானிக்') திரைப்படத்தை எடுத்துப்பாருங்கள். அதில் அறம் உண்டு. பொருள் உண்டு, இன்பம் உண்டு. இதைப் பார்க்கிற பொழுதுதான் விதிகள் தொல்காப்பியத்தில் எப்படி வகுக்கிறார் என்பது ஒரு நல்ல குறிப்பு. நம்முடைய தமிழக முதலமைச்சரிடத்தில் நான் பல்லாண்டுகள் பணியாற்றியவன். அப்போது, நான் ஒரு முறை எழுதியிருந்தேன். இந்த வகையில் இவரைக் கருதுவதற்கு, விதியில் இடமில்லை என்று எழுதினேன். (இதனை நான் ஆங்கிலத்தில் எழுதினேன்). அவர் எழுதினார் விதியை மதியால் வெல்லலாம்!

இதனைப் புறநடையாகக் கொள்க. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நாமே இலக்கணத்தில் புறநடை சூத்திரத்தைப் படிப்பதில்லை. வகுப்பில் சொல்லிக்கொடுப்பார்கள், 1000 பொதுவிதிகள் இருந்தாலும், ஒரு சிறப்பு விதி வந்தால் அத்தனை விதிகளும் அடிபடும். எனவே, இலக்கணத்திற்குச் சிறப்பு என்னவென்றால், எவ்வளவு தூரம் வலியுறுத்துகிறதோ, அவ்வளவு தூரம் தளர்வுக்கும் இடம் தருவது. அறிஞர் திருவாசகம் அவர்கள், வணிகத்துறையில் மாபெரும் வல்லுநர்.

நாங்கள் என்ன சொன்னோம். மக்கள், விலங்குகள் என்று பிரித்துவிட்டோம். மக்களுக்கும், விலங்குகளுக்கும் என்ன வேறுபாடு என்று பார்த்தால், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்த பிறகுங்கூட, யானை காட்டில்தான் இருக்கிறது. அது ஒன்றும் நாட்டிற்கு வருவதில்லை. சிங்கங்கள் காட்டில் தான் முழுங்குகின்றன. ஆனால் காடுகளில் மக்களும் ஒரு நாள் வாழ்ந்தார்கள். அவர்கள் காட்டை விட்டு நாட்டுக்கு வந்தார்கள்.

நாட்டுக்கு வந்தபிறகு நகரத்திற்கு வந்தார்கள். நகரத்திற்கு வந்தபிறகு நாகரிகம் கற்றுக் கொண்டார்கள். நாகரிகம் கற்றதோடு மட்டுமில்லாமல் அறிவால் நாளும் நாளும் உயர்ந்து வருகிறார்கள். இவர்கள் நாளும் நாளும் உயர்கிறவர்கள், யார் மக்கள். விலங்குகள் இருக்குமே, தவிர மாறாது. இதனால்தான், உயர்திணை இன்னொன்று அஃறிணை.

பேராசிரியர் இராமசாமி சொல்லுவார், அது ஒரு பெரிய சிக்கல். உயர்திணை என்பதை உயர்ந்த திணை. இது பண்புத்தொகை என்று எழுதியிருக்கிறார் பல பேர். ஆனால் உரையாசிரியர்கள் சொல்கிறார்கள் பாருங்கள். உயர்ந்த திணை, நேற்றைக்கு இருந்ததை விட இன்றைக்கு உயர்வானது. நாளைக்கு மேலும் உயர்வார்கள். உயர்ந்துகொண்டே இருக்கிற மக்கள், ஒழுகலாறு இருக்கிறதே, We are ever growing, இதுதான் மனித இனத்தின் மாட்சி என்று இப்போது சொல்கிறார்களே, தொல்காப்பியம் உயர்திணை, அஃறிணை இதையெல்லாம் பார்க்கும்போது நமக்கு வியப்பாக இருக்கிறது.

தொல்காப்பியத்தில் மொத்த நூற்பாக்கள் 1600 நூற்பாக்கள். 10 அல்லது 15 கூடும். அதிலே 250 இடங்களுக்குமேல் 'நான் சொல்லவில்லை' 'என்று சொல்லப்படுகிறது', 'என்று அறிஞர்கள் சொல்கிறார்கள்', இப்படிச் சொல்லிக்கொண்டே வருகிறவர், சில இடங்களில் தான் மட்டும் சொல்லுவார். எங்கே சொல்கிறார் என்றால், நாங்கள் எந்தச் சொற்கள் வருவதையும் தடுப்பதில்லை. வருகிற சொற்களை நீங்கள் எடுத்து எழுதும்போது உங்கள் ஒலிக்கேற்ப அல்லது அந்த ஒலிக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளுங்கள்.

நான் 5 வயது இருக்கும்போதே எனக்கு எகிப்து என்றுதான் சொல்லிக்கொடுத்தார்கள். Egyptஎன்றுசொல்லிக்கொடுத்தார்களா? எனக்குத் தெரிந்த வரையில் நான் சீனா என்று தான் சொல்லிக் கொண்டிருந்தேன். இங்குப் பிரெஞ்சு நாட்டில் இப்போதும் சைனா என்று தான் சொல்வார்கள். நான் இருந்தபோது எங்களுக்குச் சொல்லிக் கொடுத்தது இயேசுநாதர் தான். காரணம் 'ஜீஸஸ்' என்ற 'ஜகரம்' உங்களுக்கு வராது. இதைச் சொல்லும்போது பாருங்கள், தொல்காப்பியர், 'என்ப' என்று சொல்லவில்லை. அவர் காலத்தில்தான் இந்த வடசொற்கள் அலைமோதின. அது வடசொற்கிளவிக்கு மட்டுமல்ல.

துணைவேந்தர் கேட்டால் மகிழ்வார்கள். ஆங்கிலச் சொல்லைச் கூட, நாங்கள்,

'சைக்கிளை எடுத்து வா'

இரண்டாம் வேற்றுமை உருபோடு சொல்கிறோம்.

'காருக்குக் காற்றைப் பிடி'

நான்காம் வேற்றுமை உருபு. தமிழ்ச்சொற்களையும் நம்முடைய நாவுக்கேற்றபடி இலக்கணத்தில் உரைத்துக்கொள்ளுதற்கும் அது வடசொல் என்று சொன்னாலும், தொல்காப்பியர் அயற்சொற்கள் அத்தனையும் சேர்த்துக்கொண்டார்கள்.

இப்படி ஒரு தொல்காப்பியம் காலத்தினால் மாறாமல் கோலத்தினால் பெரிதும் சீர்குலையாமல் என்றும் விளங்குகின்ற சீரிளமைத் திறத்தை அறிஞர் பலரும் உங்களுக்குப் பேசி மகிழ்ந்திருக் கிறார்கள். தமிழ் உணர்வு மட்டுமில்லாமல், தமிழ்ப்படிக்கிறவர்கள் நினைத்தால் எதனையும் வெற்றிபெற முடியும். நாங்கள் ஹானர்ஸ் படித்தபோது, ஓராண்டு ஆங்கிலம் (முதலாண்டு). பிறகு இரண் டாண்டுகள் தமிழ், நாங்கள் ஆங்கிலம் படிக்கிறபோது எங்களோடு வந்து அமர்ந்தவர்கள் பொருளாதாரம் மற்றும் வேறு துறைகளைப் படிக்கிறவர்கள் எல்லோரும், எங்களோடு இருப்பார்கள். அந்த முதலாண்டு முடிந்தபிறகு, ஆங்கிலத்தேர்வில் அதிகமாக வெற்றி பெறுபவர்கள் தமிழ் மாணவர்கள் தான்.

அது எப்படி என்று கேட்டால், எங்கள் பேராசிரியர் மு.வ. சொன்னார், ஒரு மொழியில் உண்மையான அன்பு உள்ளது என்றால் அவன் ஊரார் மொழியின் மீது காட்டுகின்ற பரிவும் அப்படியிருக்கும். வேறு துறைகளிலும் அப்படிப்பட்ட வல்லமையிருக்கும். எனவே, தமிழ்க்கல்வியோடு, வேறு பிற துறைக் கல்வியையும் ஒன்றாக

இணைத்து, துணைவேந்தராக வந்த மூன்றாம் நாள் நீங்கள் எனக்குச் சொன்னீர்கள். அது எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழ்ப் படித்தவர்களுக்கு எந்தத் துறையும் வரும். எந்தத் தகுதியும் உண்டு. ஆனால், நாங்கள் சோர்வாகச் சொல்வது என்னவென்றால், வேறெந்த இடத்திலும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. கடைசியில் தமிழ்தான் எங்களை ஏற்றுக்கொண்டது என்று நாம் சொல்லத் தொடங்கினால், அவர்கள் என்ன நினைப்பார்கள். பாவம் வேறு இடத்தில் இடம் கிடைக்காதவர்கள் இங்கே தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றாகிவிடும். எனவே, தள்ளப்பட்டவர்களை, படுகுழியில் இருப்பவர்களைக் கைதூக்கி அழைப்பதற்கு நமக்குத் திருவாசகம் கிடைத்திருக்கிறார்.

செம்மொழி மத்திய நிறுவனம் ஆற்றி வருகிற செந்தமிழ்ப் பணியும், இன்று நீங்கள் செம்மொழி என்கிறீர்களே, இந்தச் செம்மொழி என்பதனுடைய பெயர் என்னவென்றால் செந்தமிழ் என்பதுதான். செவ்வியல் வழிதானே செந்தமிழ் அதுதான் செம்மொழி என்று ஆயிற்று. நம்முடைய மாநிலத்திற்குச் செந்தமிழ் நாடென்னும் போதினிலே என்று பாரதியர் பாடுகிறாரே, எங்கேயிருந்து கற்றுக்கொண்டார். தொல்காப்பியத்திலிருந்து.

'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்' 'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு'

எனவே, செம்மொழிக்கும் தொல்காப்பியத்திற்கும் சேர்ந்த தொடர்பு பல்லாண்டுகளாக ஊறிய தொடர்பு என்று சொல்லி இதற்கு ஏற்பாடு செய்த அனைவரையும் வாழ்த்துகிறேன்.

வணக்கம்.

6. நாளும் வளரும் நமது மொழி

விலங்குப் பிறவியிலிருந்து மனிதன் உடல் மாற்றம் மனவெழுச்சிகளில் படிப்படியான மாற்றம் பெற்று, மெல்ல மெல்ல வடிவமும் சிந்தனையும் வாய்க்கப் பெற்றான். மனித இதயம் உணர்வு மயமானது அன்புப்பகுதியென்றும், மூளை அறிவுப்பகுதி என்றும் எண்ணிய பழைய போக்கு இப்போதைய அறிவியல் தெளிவால் பொய்யாகிவிட்டது.

அன்புக்கு வலப்பக்கமாகவும், அறிவுக்கு இடப்பக்கமாகவும் கொண்டு மூளை இயங்குகிறது என்னும் அறிவியல் முடிவு மலர்ந்திருக்கிறது. மனிதன் படைத்து வழங்கும் மொழி மாபெரும் வியப்புக்குரியதாக, அரிய நுண்ணிய பொருளாக விளங்குகிறது.

கோடிக்கணக்கான நுண் அணுக்களைக் கொண்ட மூளையின் செயல்களோடு மொழி உருப்பெற்றுப் பிறந்த விதம் அறிவாராய்ச்சிக்கு இன்னும் அகப்படாத புதிராக விளங்குகிறது.

மொழி இல்லையென்றால், தம் உணர்வைப் புலப்படுத்தும் வாய்ப்பு இல்லாத நிலையில் ஏறத்தாழ விலங்கு நிலையில்தான் மக்கள் வாழ வேண்டியிருக்கும். மொழிகளை உணர்வதில், மூளையின் திறன் களை இப்போது தொடர்ந்து ஆராய்ந்து வருகிறார்கள்.

கல்லாலும், கருத்தாலும், நடைமுறையாலும், புலனறிவாலும் உலகை அறிந்து புரிந்துகொள்ளும் திறனால் ஒரு மொழி சொற்களின் வளத்தைப் பெறுகின்றது.

காலப்போக்கில் ஆங்கிலத்தில் ஏறத்தாழ 4 லட்சம் சொற்கள் பதிவாகி உள்ளன. சென்னைப் பல்கலைக்கழகச் சொற்களஞ்சியத்தின் கணக்கெடுப்பின்படி 1,24,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் பல்கி 24 லட்சம் சொற்களை புதிய பதிப்பில் சேர்க்க முயன்றுள்ளனர்.

சொற்கள் எப்படிப் பெருகும் என்பது ஆழ்ந்துணர வேண்டிய கருத்தாகும். வணிகம், பொருளியல், வாழ்க்கை வளர்ச்சி, கல்விப் புதுமை, கலை மலர்ச்சி, அரசியல் மாறுதல், சட்ட நுணுக்கம், அலுவலக நடைமுறை முதலிய பல நிலைகளில் உலக நாடுகளோடு நம் உறவுகளும் பிணைப்பும் பெருகப் பெருகப் புதிய சொற்களை நாம் பிறரிடமிருந்து பொருள்களின் பெயர்களாகவே, அறிவுத்துறையின் சொற்களாக அறியத் தலைப்படுகிறோம். அந்தச் சொற்களை அப்படியே முழுமையாக ஏற்றுக் கொள்வது, புதிய செயல்களுக்கு வழக்கத்தில் நாம் அறிந்த சொற்களைக் கொண்டு புதிய பொருனை ஊட்டுவது, நாம் முன்னர் அறிந்த பொருள்களோடு ஒரு வகையாகப் பொருத்திச் சொற்களை உருவாக்குவது மொழி பெயர்ப்பது, பெயரிடு செய்வது என்று பல நிலைகளில் சொற்களைப் புனையலாம்.

Business, Commerce என்ற இரு சொற்களும் நமக்கு வணிகம் என்ற பொருளைத்தான் குறிக்கும். வியாபாரம் என்ற ஒரு சொல் வழக்கத்திலிருந்தாலும், அது நமக்குப் பொருள் விளங்காத பிற மொழிச் சொல்லாகும். வணிகம், வாணிபம், தொழிலாக்கம், என்றெல்லாம் சொற்கள் உள்ளன.

பணப்புழக்கம், செல்வம், பொருள் வசதி, ஒரு பொருளைப் பிற நாடுகளுக்கு அனுப்புவதும், பிற நாடுகளிலிருந்து பொருளைப் பெறுவதும், பெற்ற பொருளுக்கு விலையிடுவதும், ஆதாயம் பெறுவதும், சரிவால் இழப் பெய்துவதும் என்று பொருளியல் விரிவாக அமைகிறது. இதற்கெல்லாம் நாமே ஏற்றுமதி, இறக்குமதி, ஆதாயம், இழப்பீடு என்றெல்லாம் சொற்களை நூற்றுக் கணக்கில் படைக்கிறோம்.

பழைய சொற்களாக உள்ள வாரியம், குழு, ஆயம், நடுவு நிலைமை, நீதி, வரையறை என்பவைகளை இன்றைய Board, Court of Justice, Act, Law முதலிய சொற்களுக்குப் பொருத்திக் காட்டுகிறோம். இயங்குதல் என்பது பழைய சொல், இயக்கம், இயக்குநர் என்ற சொற்களை நாம் பின்னர் படைத்துக் கொண்டோம். அழுவது, விழுவது போல அழுகை, விழுகை என்ற சொற்கள் அமைந்தன.

இசுலாமியர்கள் தொழுதல் என்பதைக் கொண்டு தொழுகை என்று ஒரு சொல்லைப் படைத்தார்கள். Church, Mosque என்பவை களை மாதா கோயில், மசூதி என்று சொல்லத் தொடங்கினர். மொழி பெயர்த்தல், சொல்லை அப்படியே தமிழ் மயமாக்குதல் என்பதற்கு இவை சான்றுகளாகும்.

கலிகாலம் என்பது போல இப்போதைய காலத்துக்கு 'கணினி காலம்' என்று நாம் பெயர் சூட்டலாம். Software, Hard ware, Key Board, Monitor என்று வந்ததும் முதலில் மொழிபெயர்க்கப் பார்த்து மென்பொருள், வன்பொருள் என்றனர். ஆனால் "Key Board வந்ததும் விசைப் பலகை Monitor" என்பதைத் திரை என்றோம். இவை மொழி பெயர்ப்பில்லை. பொருந்திய பொருள் புலப்பாட்டுக்குப் பழைய சொற்களைக் கொண்டோம். Software என்பதை நிரலி, Hard Ware என்பதை வடிவி (இது வடிவப் பொருள்) என்று பொருள் விளங்கச் சொல்லியிருக்க வேண்டும்.

Internet என்பதை இணையம் என்று இப்போது அழகாக வழங்குகிறார்கள். இதை இயந்திரத் திறன் என்று முதலில் தமிழாக்க முயன்றார்கள்! Attorney என்பது அப்படித்தான் 'சட்டத் தரணி' என்று தமிழ்மொழிக்கு ஏற்ப மாற்றினர். இவ்வாறு பொருளையறிந்து வழக்கத்தில் உள்ள சொற்களோடு இணைத்து, இலக்கண மரபையும் பொருந்துகிற அளவுக்குக் கடைப்பிடித்துத் தமிழின் சொல்வளத்தைப் பெருக்கவேண்டும். நாளும் ஒரு சொல் தமிழில் அமைப்பது நம் கடமை என்று கருதலாம்.

ஒவ்வொரு துறையிலும் பல்வேறு சொற்கள் பல்கிப் பெருகுகின்ற இன்றைய நிலையில் அறிவியல் புயல் அடங்காத வேகத்தோடு வீசுவதை நாம் உணரவேண்டும். தமிழில் ஏழு நிறங்கள் என்று கூறுவோம். மருத்துவத்தில் 100–க்கு மேற்பட்ட நிறங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. கிளிப்பச்சை, இலைப்பச்சை, உலர் பச்சை, வெளிர் பச்சை, என்றெல்லாம் ஒரு நிறத்துக்குக் கிளைப் பெயர்களை அமைக்க முயல வேண்டும்.



7. வளர்தமிழ் அறிஞர் விருது விழா

12.08.2019

அன்பிற்கினிய பெருமக்களே,

இந்த நிகழ்ச்சியில் நான் பங்குபெறுவதில் பெரிய நெகிழ்ச்சியடைகிறேன்.

அருமை நண்பர் வி.ஆர்.சம்பத் ஐம்பதாண்டுகளாக எனக்குத் தெரிந்தவர். அவர் வளர்ந்ததும், உயர்ந்ததும் நான் நினைத்து நினைத்து மகிழ்வேன்.

நான் ஒரு வேண்டுகோள் கேட்டுக்கொண்டேன். அருமை இளவலும், முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும், நயவுரை நம்பி என்று நாடு போற்றும் ஜெகத்ரட்சகன் அவரைப் பேச வைக்காதீர்கள். நான் உருகி விடுவேன்.

நான் உருகுவது மட்டுமில்லை. பிறரை உருக்குகிற திறனும் அவருக்கு உண்டு. எனவே, அவர் சொன்ன ஒவ்வொரு சொல்லும், என் காதில், எனக்கு இனிமேல் இளமை வராது. அப்படி இளமை வரும் என்றால் ஜெகத்ரட்சகன் பேச்சின் வளமையால்தான் வரும் என்று நான் நம்புகிறேன்.

அருமைப் பெருமக்களே,

உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் அவர்கள், அருமையாகச் சொன்னதுபோல, அவருடைய பண்பாடும், பரிவும், உயர்வும், ஆற்றலும் நாடறிந்தவை. அவர் தலைமை தாங்குவது நமக்குப் பெருமை தருகிறது.

பெருந்தகை சிவக்கொழுந்து அவர்கள் எனக்கு முப்பதாண்டு களாகத் தெரிந்தவர். புதுவையில் அவர் இல்லத்தில் போய்த் தங்கி நாங்கள் உண்ணாத நாள் இல்லை.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழகத்தின் அமைச்சராகவும் திகழ்ந்த பெருமை, வி.ஐ.டி. வேந்தரைச் சாரும். அப்போது இருந்தது அமைச்சர் பதவி. இப்போது, இருக்கும் வேந்தர் பதவி வேறு எவருக்கும் இல்லை.

வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகம், இன்றைய நாளில், இந்திய நாட்டின் பல்கலைக்கழகங்கள் என்று ஒரு பட்டியல் எண்ணினால், அதில் முத்தாகத் திகழ்வது வி.ஐ.டி. பல்கலைக்கழகம் என்று நாடு போற்றுகிறது.

எப்போதும் எதையும் எண்ணிப் பேசுவது, சிந்தித்துப் பேசுவது, அரசியல் நுணுக்கத்தோடு பேசுவது என்பதை அவர் இளமையிலேயே பெற்றிருந்தது என்பதை அறிந்துதான் பேறிஞர் அண்ணா அழைத்து நாடாளுமன்ற உறுப்பினர் வாய்ப்புத் தந்ததை நான் இப்போது எண்ணிப் பார்க்கிறேன்.

அருமைப் பெருந்தகை விசுவநாதன் அவர்கள், இப்போது தமிழியக்கம் என்று ஒரு அருமையான இயக்கத்தைத் தொடங்கி இருக்கிறார்கள்.

அது தமிழ் மக்களுக்கு எழுச்சி தருகிற தமிழியக்க மாகும். ஏனென்றால், பாவேந்தரின் தமிழியக்கத்தின் பாட்டு வரிகள் ஒவ்வொன்றையும் மனனம் செய்து பேசுவதையே வழக்கமாக கொண்டிருந்தவர் ஜெகத்ரட்சகன்.

மணக்க வரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை !

தணிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
தமிழ்தான் இல்லை !

என்று சொல்லுகிற அந்தத் தொடர்களுக்கு இப்போது வி.ஐ.டி. வேந்தர் தமிழியக்கத்தை மேற்கொண்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

வி.ஆர்.எஸ். சம்பத் அவர்கள் இந்த விழாவை நடத்துவதற்கு என்னைக் கேட்டார்கள். என்னையும் ஒரு பொருளாக நினைத்து இந்த விருது வழங்கும் நிகழ்ச்சிக்கு அவர் சேர்த்திருக்கிறார்.

நண்பர் இரத்தின நடராசன் அவர்கள் ஒரு ஐம்பதாண்டுகளாக சமுதாயத்திற்குப் பணியாற்றிய ஒரு ஆசிரியப் பெருந்தகை. திருப்பத்தூரில் அவர் இளம் பருவத்தில் இருந்தே சுழற் கழகத்தைப் பெரியதாக நடத்தியவர். அவர் இந்த நிகழ்ச்சியில் என்னோடு இணைந்து இந்த பரிசு பெறுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

அயல்நாட்டில் இருந்து அறிஞர்களும், நான் பணியாற்றும் ஒய்.எம்.சி.ஏ. பட்டி மன்றத்துக்கு ஒரு ஐம்பதாண்டுகளாகச் செயலாளராக இருந்து அரும்பணி ஆற்றுகிற நண்பர் பக்தவத்சலம் அவர்களும் அந்த விருதைப் பெறுவதும், உலகநாயகி பழனி பெறுவதும் இன்னும் அயல்நாட்டு மாமணிகள் இந்த விருதைப் பெறுவதையும் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த விழாவுக்கு எத்தனையோ பணிகள் இருந்தபோதும்கூட, சிந்தனைச் செம்மலாக விளங்குகிற டாக்டர் சண்முகசுந்தரம் அவர்கள் இங்கு வந்திருக்கிறார்.

இந்திய நாட்டின் பொருளியல் அறிஞர் என்று விளங்குகிற பெருமை வாய்ந்தவர் இங்கே வந்திருப்பதும், எனக்கு அண்ணன் என்று சொல்லி அழைக்கலாம் குமரி அனந்தன் அவர்கள்.

எப்படிப்பட்ட நிகழ்ச்சியில் எத்தனை நோய்கள் வந்து எவ்வளவு இடர் தந்தாலும், தமிழ் அந்த இடர்களையெல்லாம் தள்ளிவிடும் என்று வாழ்ந்துவரும் குமரி அனந்தன் அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே, உங்களைக் காண்பதில் எனக்கு மகிழ்ச்சி. என்னை மிகுந்த பரிவோடு எப்போதும் அரவணைத்துக் கொள்பவர் தான், டாக்டர் வி.ஜி.சந்தோஷம். அடுக்களை வரையில் வந்து என்னோடு நின்று ஆரத்தழுவி மகிழ்கிற அவர், பல நாடுகட்கும் சென்று கலைகளை வளர்ப்பது போல, இப்போது சிலைகளை வழங்குகிற பணிகளையும் ஆற்றிக்கொண்டு வருகிறார்கள்.

நாங்கள் எடுத்து வளர்த்த குழந்தையாக இருக்கிற கலாநிதி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதில், பெரிய மகிழ்ச்சிதான். காரணம், அவருக்குத் தந்தை என்ற முறையில் நானும் என்னை முழுமையாகப் பாராட்டிக் கொள்வேன். இப்போது ஜெகத் அவர்கள் அருமைக் கலாநிதியை அரவணைத்துக் கொண்டு செல்கிற பெருந்தகையாகத் திகழ்கிறார் என்று சொல்லி, இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதிலும், வி.ஆர்.எஸ். சம்பத் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்க.

அவர் எவ்வளவோ துன்பங்கள் வந்தபோதும், அவற்றையெல்லாம் வீசி எறிந்து வாழ்க்கையில் மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறார். சட்டக்கதிர் ஒன்று போதும் தமிழ் மாண்பைக் கூறுவதற்கு அருமை நண்பர் சம்பத் பல்லாண்டு காலம் வாழ்க, புகழ் பெற்று வாழ்க, தலைசிறந்த பெருமிதத்தோடு வாழ்க.

நாங்கள் பச்சையப்பன் கல்லூரியில் படித்தபோதுதான், அருமை பெருந்தகை கிருஷ்ணசாமியும் அங்கு இருந்தார்கள். அருமை பெருந்தகை கிருஷ்ணசாமி அவர்கள் காங்கிரஸ் பேரவையின் தலைவராக இருந்தது மட்டுமல்லாமல், கனிவும் பரிவும் கொண்ட ஒரு அரசியல்வாணர் என்று இன்றுவரை புகழ் பெற்றுத் திகழ்கிற அவர் இந்த நிகழ்ச்சியில் வந்ததற்குச் சிறந்த காரணம் என்னவென்றால், வி.ஆர்.எஸ். சம்பத் அவர்களின் நண்பர் என்று பல்லாண்டுகள் பழகியிருப்பவர்.

எனவே, இந்த நிகழ்ச்சியில் எனக்குப் பெருமை தந்தது கண்டு நான் மனம் நெகிழ்கிறேன்.

8. மயிலைத் திருவள்ளுவர் கழகம் விழா

25.1.2020

தன்னுடைய வாழ்வின் குறிக்கோளை எந்நாளும் காட்டி வருகின்ற மதிப்பிற்குரிய எம்.எம்.இராஜேந்திரன் அவர்களே,

அரசில் எந்தப் பணியை ஆற்றினாலும், அதற்கு வலது கரமாக இருந்து பரிவு காட்டி வருகின்ற இராஜேந்திரன் அவர்களே,

கல்வித்துறையின் கலங்கரை விளக்கமாக விளங்கும் பெருந்தகை பீட்டர் அவர்களே,

இந்த விழாவுக்குப் பெருமை சேர்த்து வருகின்ற நீதியரசர் தமிழ்வாணன் அவர்களே,

பெருமக்களே,

இந்த நிகழ்ச்சி எனக்குப் பெரிதும் மன ஆறுதலைத் தருகிறது. நானும் என் துணைவியாரும் வயதால் நலிந்து, ஒதுங்கி வாழ்ந்தால் போதும் என்ற உணர்வோடு இருக்கும்போது, எங்களை அழைத்து இந்த விருதினைத் தருவது மகிழ்ச்சியைத் தருகிறது.

பெருந்தகை பொன்னவைக்கோ அவர்கள், தமிழ் படித்ததைப் போலவே, அறிவியலையும் இணையாகப் படித்து, உலக நாடுகளில் பெருமை பெற்றவர்.

பொன்னவைக்கோ அவர்களின் வளர்ச்சியும் பெருமிதமும் எங்களைப் போன்ற தமிழாசிரியர்களுக்கு நிகரில்லாத பெருமிதத்தைத் தருகிறது. அதுபோல, இந்த நிகழ்ச்சியை முப்பத்து நான்கு ஆண்டுகளாக, அருமை நண்பர் சேயோன், அர்ப்பணிப்போடு ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கண்ணாற ஆய்ந்து பார்த்துச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

அவருடைய பெருமையும், இந்தக் கழகத்தை நடத்தி வருகின்ற பாங்கும் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

அறிவுக் களஞ்சியம் விருது பெருகிற பெருமக்கள் எல்லாம் நான் நன்றாக அறிவேன்.

அவர்கள் அறிவுக் களஞ்சியம் மட்டுமல்ல, நம்முடைய தாய்த் தமிழுக்குப் பெருமிதக் களஞ்சியமாகத் திகழ்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சொல்ல விரும்புகிறேன்.

அருமை ஆளுநர் பெருந்தகை கூறியதைப்போல, வாழ்நாள் வெற்றி என்பதை, வாழும் நாள் என்பது, வாழும் நாளெல்லாம் பணியாற்ற வேண்டும் என்பதை ஒரு உணர்வை ஊட்டுகிற வகையிலேதான் இந்தப் பரிசையும், பாராட்டையும் வழங்குகிற நேரத்தில் நம்மோடு உடனிருக்கிற பெருமக்கள்தான் இந்த விழாவுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

எனவே, நான் வாழ்க்கையில் உயர்வு பெற்றதும், என் துணைவியார் மருத்துவத்துறையில் உயர்வு பெற்றதையும் நான் நன்றியோடு நினைத்துப் பார்ப்பது என்றால், நான் மனத்தில் நினைத்துப் பாராட்டுவது நம்முடைய பெருந்தகை எம்.எம். இராஜேந்திரன் அவர்களைத்தான். அவர்கள் இந்த விழாவில் வந்து பங்கு பெறுகிறார்கள் என்பது, இந்த விழாவுக்குப் பெருமிதத்தை மிகப் பெருமையாக ஊட்டுகிறது என்று சொல்லி, திருக்குறள் வாழ்வின் அறமாக இருப்பது மட்டுமல்ல, எந்த நொடியிலும், எந்த இடத்திலும் திருக்குறள் நம்மோடு கலந்து இருக்கிறதா என்று நாம் நம்மை மாற்றிக் கொள்வதற்கு முற்பட வேண்டும்.

வருகிறபோது, கார் ஓட்டுநர் சொன்னார், நான் இந்த மயிலாப்பூரில் வந்து உங்களை விட்டு விட்டுத் திரும்பும்போது இன்னொரு வேலையும் இருக்கிறது. அதையும் இப்போது முடித்துவிடப் போகிறேன் என்று சொன்னார். அவர் அப்படிச் சொன்னவுடனே,

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று

(திருக்குறள் எண் : 678)

என்ற திருக்குறள்தான் என் நினைவுக்கு வந்தது.

எனவே, எந்த நிகழ்ச்சிகளை நீங்கள் நினைத்தாலும்கூட வாழ்க்கையில் அதை ஒரு செயலாகச் செய்வதற்கு வாழ்க்கையில் மற்றவர்களைப்போல் கற்பனைகளைச் சொல்லாமல் நடப்பு உண்மைகளைச் சொல்லி நலம்பெற்றுத் திகழ வேண்டும் என்ற வகையில்

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்

(திருக்குறள் எண்: **538**)

என்பது போலப் புகழ்ந்தவை போற்றிச் செய்யும், சேயோனும் மயிலைத் திருவள்ளுவர் கழகமும் பல்லாண்டுகள் வாழ்க என்று சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

❀❀❀

மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம், இந்திய அரசின் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் நேரு யுவ கேந்திரா சங்கதன், பாரதிய வித்யா பவன் இணைந்து நடத்தும்

34ஆம் ஆண்டுத் திருவள்ளுவர் மலர்
முப்பாலில் முப்பரிமாணம்
வெளியீடு, விருதுகள், பரிசுகள்
வழங்கும் விழா

நாள் : 25.01.2020, சனிக்கிழமை

நேரம் : காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை

நிகழிடம் : பாரதிய வித்யா பவன்,
கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை.

ஸ்ரீராம் நிறுவனங்கள் நடத்தும்

9. திரு. சங்கரநாராயணன் நூல் வெளியீட்டு விழா

வாழ்த்துரை

01.03.2020

பெருமைக்குரிய இலக்கியத்தை வளர்ப்பதையே தன்னுடைய வாழ்வாகக் கொண்டு விளங்கும் அருமை நண்பர் இனியவன் அவர்களே,

இன்று வெளியிடப்படுகின்ற நூல், நாற்பதாண்டுக் கால இலக்கிய வாழ்வின் தொடராக ஈடற்ற பெருமைக்குரிய நூலை எழுதித்தந்த சங்கரநாராயணன் அவர்களே,

இந்த நூலின் அருமை, பெருமைகளைப் பாராட்டுவதற்காக வந்திருக்கும் இலக்கிய ஆர்வலர்களே,

நூலாசிரியராகவும், எழுத்தாசிரியராகவும், சிந்தனையாசிரியராகவும் திகழ்கிற பெருமிதம் கொண்ட எழுத்துத்திலகங்களை எல்லாம் இங்குக் காண்பதில் நான் பெருமிதமடைகிறேன்.

பெருந்தகை சங்கரநாராயணனுடைய இந்த எழுத்தை வெளியிடுவதில், பேரின்பம் அடைவது யாரென்றால், இலக்கிய வீதி இனியவனாகத்தான் இருக்க முடியும்.

எனக்குத் தெரிந்து நாற்பதாண்டுகளுக்கு முன்னர், மதுராந்தகத்தில் நடைபெற்ற இலக்கிய வீதி நிகழ்ச்சியில், அருமை நண்பர் இனியவன் தலைமை தாங்கி, நூல் வெளியீடுகளையெல்லாம் குறித்துக் கருத்துரை வழங்க, இளமையின் துடிப்பும், ஆர்வக் கனலும் தவழ்ந்து வர ஒரு கவர்ச்சி வாய்ந்த இளைஞர் எழுந்து பேசியது, அவர் பேசி முடித்த பிறகு, இலக்கிய வீதி இனியவன் கையைப் பிடித்துக் கொண்டு இந்த இளைஞர் மிகப் பெரிய வாகை சூடி எழுத்துலகத்தில் தனித்த பெருமை அடைவார் என்று கூறினேன்.

நான், சொன்னதால் அப்படி வந்தார் என்பதல்ல பொருள். நான் மகிழ்ச்சியோடு சொன்னதற்கு காரணம், அந்த மேடையில் இருந்தவர்கள், பேசியவர்கள் இந்தப் பேச்சையெல்லாம் விட, வேறுபட்ட சிந்தனையோடு, தன்னுடைய கருத்தைத் துணிந்து எடுத்துரைத்த திறம் இருக்கிறதே, அவருடைய நெஞ்சத் துணிவும், கருத்துத் தெளிவும்தான் எங்கள் மனத்தையெல்லாம் கவர்ந்தன.

அருமை நண்பர் சங்கரநாராயணன் அவர்களுடைய எழுத்தை அப்போது உடனிருந்து கண்டு மகிழ்ந்தவர்தான் கலைஞன் பதிப்பகத்தினுடைய அதிபராகத் திகழ்ந்த மாசிலாமணி அவர்கள்.

நான் சங்கரநாராயணனை எப்போதும் மனத்தில் வைத்திருக்கிறேன் என்று மாசிலாமணி அன்று சொன்னார்.

அவர் மனத்தில் வைத்தது மட்டுமல்லாமல், தன் பணத்தையும் செலவு செய்து, முதல் நூலை வெளியிட்ட பெருமையும் கலைஞன் பதிப்பகத்தைத்தான் சாரும்.

அருமை நண்பர் சங்கரநாராயணன், நாற்பதாண்டுக் காலம் இலக்கிய உலகத்தில் பெருமிதத்தோடு வாழ்ந்தது மட்டுமல்லாமல், இந்த நூலை நீங்கள் புரட்டிப் பார்த்தால், தொண்ணூறு நூல்களுக்கு மேல் எழுதிய ஆசிரியர், இந்த நாற்பதாண்டுகளில், தான் படித்தவை, கேட்டவை, உணர்ந்தவை, நினைத்தவை, துணிவோடு சொல்லும் கருத்துரையை, மறுப்புரையை ஒரு நூற்றுக்கு மேற்பட்ட வாழ்வோடு தொடர்புடைய எழுத்தாளர்களைப் பற்றியெல்லாம் இந்த நூலில் எழுதியிருக்கிறார்.

நாற்பதாண்டுக் காலத்தில், யார் யாரைக் கண்டோம் என்பது மட்டுமல்லாமல், அவர் இலக்கிய வாழ்வில் பங்குபெற்றபோது நேர்ந்த இடர்களையும், மகிழ்ச்சியையும், பதிப்பித்த கதைகளையும், எந்தெந்தத் துறைகளிளெல்லாம் பங்கு பெற்றார் என்பதையும், படிக்கப் படிக்கச் சங்கரநாராயணன் படிப்பதைப்போல இன்பம் இந்த நூலில் இருப்பதைக் காண முடிகிறது.

இங்கே அமர்ந்திருப்பவர்கள் எல்லாம், எழுத்தேர் உழவர்கள். இந்த உழவர்கள்தான் நம்முடைய மனத்தைப் பண்படுத்தி, நல்ல கதிர்களை விளைச்சல் காண வேண்டும் என்கிற வகையில், எழுதியிருக்கிற இந்த நூல், உலகத்தில் நாடக மேடையைக் கண்டவர்கள் பலர் உண்டு. இடர் சூழ்ந்தது என்று எழுதியவர்கள் பலர் உண்டு.

உலகம் நாடகமேடை என்று சொன்னதுபோல, இந்த உலகம் துன்பக்கேடு என்று எழுதியவர்களும் உண்டு.

இன்ப வாயில் என்றும், துன்பக் கேடு என்றும் உலகத்தைக் கண்டவர்களுக்கு நடுவில் எழுத்துத் திலகம் சங்கரநாராயணன் அவர்கள் இந்த உலகம் வகுப்பறை என்று எழுதியிருக்கிறார்.

இந்த உலக வாழ்க்கை ஒருவரைக் கண்டால், ஆசிரியராகவும், ஒருவரோடு பழகினால் ஆசிரியராகவும், எங்கே பங்கு கொண்டாலும் நாம் மேலும் மேலும் கற்று உயர்வடையலாம் என்பதைப் போன்ற கருத்து புலப்படுகின்ற வகையில் உலகத்தை வகுப்பறை என்று எழுதியத் இந்த தொடர், அவருடைய வாழ்வு மட்டுமல்ல எழுத்துலக வாழ்வும் என்றும் இடறாமல் மகிழ்ச்சியோடு இருக்கும் என்று நான் எடுத்துச் சொல்கிறேன்.

எத்தனை நூல்கள் வந்த பிறகும், எழுத்தாளர்கள் எழுதிய வைக்கும் திறமும், எழுத்துகளில் காணப்படுகின்ற உரமும் எந்த இடத்தில் அவர்கள் மரபு மீறி இருக்கிறார்கள் என்பதை அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. எனவே, தன்னுடைய வளர்ச்சிக்கு தன்னுடைய தொடரும், வாழ்வும் எப்படித் துணை செய்கிறது என்பதைக் கூறினார்கள்.

சாமர்சட் மாம், Summing Up என்று ஒரு தொடர் எழுதினார். தன்னுடைய வாழ்வினுடைய கருத்துகள் எல்லாவற்றையும் தொகுத்து எழுதியதைப்போல இது ஒரு Summing Up என்று நான் மகிழ்ச்சி யோடு சொல்வேன்.

சாமர்சட் மாம் எழுதியது, அளவில் இதைவிடச் சிறிய நூல்தான். ஆனால், விரிவாகத் தன்னுடைய கருத்துகளைக் காட்டுகிற களஞ்சியமாக அமைந்த நூலை, இனியவன் கையில் தருவதும், நான் வெளியிடுவதும் நாங்கள் இருவரும் பெற்ற குழந்தையின் தரத்தைத்தான் வழங்கியிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு கூறுவேன்.

அறிஞர் சங்கரநாராயணன் மேலும் தொடர்ந்து எழுதி, தன்னுடைய இலக்கிய வாழ்வைத் தொடர வேண்டும் என்று கூறி அமர்கிறேன்.

வணக்கம்.

10. சீதா கிங்ஸ்டன் பள்ளி ஆண்டு விழா

24.01.2020



Sri Ramajayam

SEETHA KINGSTON HOUSE MATRICULATION HIGHER SECONDARY SCHOOL

768, Poonamallee High Road, Kilpauk, Chennai - 600 010.

A unit of

DHARMAMURTHI RAO BAHADUR CALAVALA CUNNAN CHETTY'S CHARITIES

Sri. V. SREE HARI
Hony. Correspondent
&
MEMBERS OF THE MANAGEMENT

Cordially invite you to attend the

SCHOOL DAY CELEBRATIONS

"Padmashri" Dr. AVVAI NATARAJAN
(Chancellor - Bharath University, Chennai)

has kindly consented to preside over the function @ 10.30 a.m. on Friday, the 24th January 2020 at the school premises

STAFF & STUDENTS

Mrs. S. NIRMALA GOWRI
Principal

PROGRAMME

1. Prayer
2. Welcome Address
3. Presentation of Annual Report
4. Distribution of Prizes
5. President's Speech
6. Vote of Thanks
7. Entertainment
8. National Anthem

Invitees are requested to take their seats by 10-00 a.m.

அன்பார்ந்த தலைமையாசிரியர்,

புகழ் வாய்ந்த நிர்மலா கௌரி அவர்களே,

ஆசிரியப் பெருமக்களே,

என்னோடு உடன் வந்திருக்கும் திருமதி டாக்டர் தாரா நடராசன் அவர்களே,

பிரபாகர் பாபு அவர்களே,

பெருமக்களே,

நண்பர்களே,

உங்கள் பள்ளி மாபெரும் புகழ் வாய்ந்தது. சீதா கிங்ஸ்டன் பள்ளியில் படிக்கிறோம் என்று சொன்னாலே, மாணவர்களுக்கு பெருமை தருவதாகும்.

உலகப்புகழ் பெற்ற பெருமக்கள் பலர் இந்தப் பள்ளியில் பயின்றவர்கள்தான்.

மாபெரும் சிறுவர்கள், இந்த பள்ளியில் படித்த பயிற்சியினால் பெரிய வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, நிர்மலா கௌரி அவர்கள், உங்கள் பள்ளியின் சாதனைகளைப் பற்றிப் படித்தபோது, எனக்குப் பெருமிதமாக இருந்தது.

ஒரு பல்கலைக்கழகத்தில் நடைபெறாத பல நிகழ்ச்சிகளை இந்தப் பள்ளி அருமையாக நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தப் பள்ளியை இவ்வளவு சீராக நடத்துகிற ஆசிரியப் பெருமக்களை நான் மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறேன்.

சிறுவர்களே,

உங்களுக்கு நான் ஒரு சின்ன கதை சொல்லித்தான் என்னுடைய பேச்சை முடிக்கப் போகிறேன்.

ஒரு ஊரில், ஒரு அப்பா இருந்தார். அப்பாவும் அம்மாவும் அந்த வீட்டில் இருந்தபோது, அவர்களுக்கு ஒரே ஒரு பெண் குழந்தைதான்.

எத்தனை குழந்தை? ஒரே ஒரு பெண் குழந்தை.

அந்த அப்பாவோ மாபெரும் தலைவர். வெள்ளையர்களை எதிர்த்து, வாழ்க்கையில் ஒரு ஐம்பது முறைக்கு மேல் சிறை வாசம் கண்டவர். பெரிய செல்வக் குடும்பத்தை சார்ந்தவராகவும் இருந்தாலும் கூட, அப்பா வீட்டில் இருப்பது இல்லை. அம்மாவின் கதை என்னவென்றால், அம்மா ரொம்ப சிறப்பாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு இருபது வயதிலேயே, அப்போது இந்தியாவில் பரவியிருந்த காசநோய் வந்துவிட்டது.

அந்த இருமல் – காசநோய் அம்மாவைப் பிடித்துவிட்டது. அம்மாவோ நோயாளி, அப்பாவோ சிறைச்சாலையில். தன்னந்தனியாக இருந்த பெண், கஷ்டத்தோடு வளர்ந்தார். அந்தப் பிள்ளையை எத்தனையோ பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் அந்த அப்பா சேர்த்தார். சேர்த்தாலும் கூட, அந்தக் குழந்தைக்கு அம்மாவை விட்டுப் பிரிய மனமில்லை. அப்பாவின் நினைவை நீட்டிக்கொள்ள முடியாமல் பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்கு வந்து விடுவார்.

இந்தக் குழந்தையை என்ன செய்வது என்று கவலைப்பட்டார். நான் நினைக்கிறேன், 8ஆம் வகுப்பு என்று நினைக்கிறேன்.

இந்தக் குழந்தையை, அவர்கள் இருந்த ஊர் எந்த ஊர் தெரியுமா? அகமதாபாத். அந்தக் குழந்தையைக் கொண்டு போய் எங்கே சேர்ப்பது என்று பார்த்து, கல்கத்தாவில் இருக்கும் ஒரு பள்ளியில் சேர்த்தார்கள்.

அந்தப் பிள்ளை படித்து முடித்து, ஒரு 9ஆம் வகுப்பு முடிக்கும் நேரத்தில், ஒரு தந்தி வந்தது. அம்மா ரொம்ப சீரியசாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்ப்பதற்கு, நீ உடனே புறப்பட்டு வா என்று இருந்தது.

அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய், விமானத்தில் ஏற்றி, எந்த ஆஸ்பிடல் தெரியுமா? சுவிட்சர்லாந்தில் உள்ள ஆஸ்பிடல்.

சுவிட்சர்லாந்தில் உள்ள அந்த மருத்துவமனைக்கு இந்த குழந்தை போனது. சில மாதங்களில் அம்மா தவறிவிட்டார்கள். பிறகு அந்தப் பெண் பத்தாம் வகுப்பு பரீட்சையை எழுதிவிட்டு கல்கத்தாவில் இருந்து தன்னுடைய அப்பாவின் வீட்டிற்குப் போய்விட்டார்.

அந்தப் பெண்ணின் அப்பாவின் பெயர் ஜவகர்லால் நேரு. அந்தப் பெண்ணின் பெயர் இந்திரா காந்தி.

அவர் இந்தியாவின் பிரதமராக ஆனார். பிரின்சிபல் அம்மா ஓய்வு பெற்று இருபது ஆண்டுகள் ஆனது. அந்த பள்ளியின் ஆண்டுவிழாவிற்குப் பிரின்சிபல் அம்மா சொன்னார்கள், நம்ம பள்ளிக்கூடத்தில் படித்த பெண்தான், இந்திரா பிரியதர்ஷினி என்று பெயர், நாம் சென்று கூப்பிடுவோம், அவர்கள் வருவாரா என்று தெரியவில்லை என்று சொன்னார்.

பிரதம மந்திரி ஆயிரம் வேலைகளுக்கு நடுவே பிரின்சிபலை பார்த்த உடனே, ஓடி வந்து பிரின்சிபல் காலைத் தொட்டுக் கும்பிட்டு, நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள், நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்.

எங்கள் பள்ளியின் ஆண்டு விழாவுக்கு வர வேண்டும் என்று கேட்டார். இந்திரா காந்தியும் அந்தப் பள்ளியின் ஆண்டு விழாவுக்கு வந்தார்கள். இந்திராகாந்தி வந்தபோது, பிரின்சிபல் ரிப்போர்ட் படித்தார். அப்போது சொன்னார்கள்,

Madam Prime Minister Indra Gandhi, was a brilliant student in this School. We are very proud to say, she is one of our students என்று சொன்னார்கள்.

சொல்லி முடித்த பிறகு, இந்திரா காந்தியைப் பற்றிச் சொன்னார்கள். இந்திரா காந்தி ரொம்ப தைரியமான பெண். ரொம்பவும் துணிச்சலான பெண். படிப்பைவிட பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட பெண். அப்படிப்பட்ட தகுதி வாய்ந்தவர், பிரதமமந்திரியாக இருக்கிறார்கள் என்று சொன்னவுடனே, இந்திராகாந்தி பேசினார்.

இந்த வார்த்தையை நீங்கள் கவனிக்க வேண்டும்.

I have been introduced by the Headmistress as a bold courageous girl when I was a student in this school.

I got my courage and competence, not from my father, not from my mother, I got everything only from the school Headmistress.

My school is much holier than my home. The teachers are much greater than our father and mother என்று சொன்னார்கள்.

ஆகவே, I wish the teachers of this school. The teachers have told me about the students that they have scored more than 90% of marks in their examinations.

ஒன்று நீங்கள் மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் பெற வேண்டிய ஒரே செல்வம், அந்த கல்விச் செல்வம்தான். பள்ளியில் நீங்கள் பெறுகிற அறிவும், திறமையும், துணிவும், பெருமையும், உழைப்பும் உங்களுக்கு எப்போதும் பாராட்டும்.

நினைத்துப் பாருங்கள், உங்கள் தாளாளர் அவர்கள் எவ்வளவு ஆர்வத்தோடு வந்து இங்கு அமர்ந்திருக்கிறார்கள். கமலக்கண்ணன் செட்டியார் அவர்கள், ஆயிரம் தருமங்களைச் செய்தவர். எளிய பிள்ளைகளுக்கெல்லாம் திருவல்லிக்கேணியில் பால் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகப் பாலை இலவசமாகக் கொடுத்தவர். இன்றும் அப்படி நடக்கிறது.

மகாகவி பாரதியார், செட்டியார் அவர்களின் பணிகளைப் பார்த்து, வியந்து பாராட்டியிருக்கிறார். அதனால், உங்களுக்கு சிறப்பு என்னவென்றால், நீங்கள் படிக்கும் இந்தப் பள்ளிக்கூடம் பெரிய தரும மூர்த்தியின் கருணையினால் நடக்கும் பள்ளி. உங்களுக்கு வாய்த்திருக்கும் ஆசிரியர்கள், அவ்வளவு தகுதி வாய்ந்தவர்கள்.

உங்கள் தாய் தந்தையர் எப்படியாவது முயற்சி செய்து பள்ளியில் சேர்த்து இருப்பது, பெருமைக்குரியது. இங்கே படித்த மாணவர்களின் குறிப்பைச் சொன்னேன்.

World Famous Chess Player Anand was the student of the school in 5th standard. அதைவிட என்ன சொல்ல முடியும்.

எம்.எஸ்.சுப்புலட்சுமி, பெரிய இசை அரசி. அவர்களின் பேரன், பெயர்த்திகளை இந்தப் பள்ளியில்தான் சேர்த்தார்கள்.

என்னுடைய மனைவியார், தான் 75 வருடங்களுக்கு முன்னர்

படித்த, பள்ளிக்கூடம், ஒரு ஆங்கிலோ–இந்தியன் பள்ளி. அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு, அவர்கள் அப்போது வேலூருக்குப் போய், பின்னர் எம்.எம்.சி.–யில் படித்துவிட்டு வந்தபோது சொன்னார்கள், என்னுடைய பிள்ளைகளையெல்லாம், சீதா கிங்ஸ்டன் பள்ளியில்தான் சேர்ப்பேன் என்று சொன்னார்.

ஆனால், அப்போது இருந்த தலைமையாசிரியை இடம் கொடுக்கவில்லை. உடனே, அம்மாவுக்குக் கோபம் வந்து, சென்னை கிறித்தவ மேனிலைப் பள்ளியில் சேர்த்துவிட்டார்.

எனக்கு என்ன வருத்தம் என்றால், ஒரு பெண் குழந்தை இருந்திருந்தால், இங்கேதான் வந்து சேர்த்திருப்பார். ஆகையினால், சீதா கிங்ஸ்டன் பள்ளியை நான் வாழ்த்துகிறேன்.

I am very happy to see the teachers with their high devotion, to keep the Great Name of Kamalakannan Chettiyar, and also I am proud of seeing Mr.Hari who does the correspondent works with all glory and immense devotion.

நான் தளர்ந்துபோய்விட்டேன். 85 ஆண்டுகளைத் தாண்டி இருக்கிறேன். நான் கொஞ்சம் நலிந்தவன் என்றாலும்கூட, உங்கள் ஆசிரியப் பெருமக்கள் வந்து சொன்னார்கள், எங்கள் பள்ளிக்கு வந்தால், உங்கள் நலிவு போய்விடும், எங்கள் குழந்தைகளைப் பார்த்தால் நீங்கள் மிகுந்த உற்சாகம் அடைவீர்கள் என்று சொன்னார்கள். உங்களைப் பார்த்து நான் மகிழ்கிறேன்.

வாழ்க செட்டியாரின் புகழ் வாழ்க. இந்த உயரிய பள்ளி வாழ்க.

வணக்கம்.



11. அறிஞர் சாலமன் பாப்பையா – புறநானூறு நூல் வெளியீட்டு விழா

29.6.2019

திரண்டிருக்கும் தமிழ் ஆர்வலர்களே,

கல்யாணமாலை ஒருமுறைதான் கழுத்தில் விழும். ஆனால், செல்லுமிடமெல்லாம் இந்த மங்கள மாலையை அணிவிப்பதில் மக்கள் வெள்ளம் திரண்டிருப்பது, நாநிலம் போற்றும் நாவலர் நண்பர் சாலமன் பாப்பையா அவர்களுக்குத்தான்.

இந்த நிகழ்ச்சியில் தொடக்கத்தில் ஒரு பொய் சொன்னார்கள். நான் ஆசிரியர் என்றும், பாப்பையா மாணவராக இருந்தார் என்றும். உண்மை என்னவென்றால், நான் ஆசிரியராக இருந்தபோது என் வகுப்பில் அவர் இருந்ததே இல்லை. அவர் மட்டும் இல்லை. நான் வகுப்பெடுப்பது என்றால் மாணவர்கள் வருவதே இல்லை. இப்படி யெல்லாம் பார்த்துத்தான் நான் ஒரு நான்காண்டுகளுக்கு மேல் ஆசிரியராக இல்லை. ஆனால், நான் ஆசிரியராக இருந்தபோதே, மாணவராக இருந்த சாலமன் பாப்பையா அவர்கள், நாங்கள் இருவரும் அறுபதாண்டுகளுக்கு முன்பு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள் என்று கல்லூரி விழாவில் பேசியது எனக்கு நினைவிருக்கிறது.

அருமை நண்பர் இராஜா வந்து, என்னை இந்தப் புறநானூற்றை நீங்கள் வெளியிட வேண்டும் என்று சொன்னார்கள். நான் சொன்னேன், எனக்கு வெளியிடுவது என்று சொன்னால் ஒரு கஷ்டம் இருக்கிறது என்று. என்ன என்று கேட்டார். என்னுடைய மாணவர் அவரின் மகள் திருமணத்திற்கு என்னைத் தலைமை தாங்க அழைத்தார். நான் போய் வந்தேன். வாழ்த்தினேன். அது முடிந்து ஒரு ஐந்தாண்டுகள் ஆகியது. இரண்டாவது முறை வந்து அடுத்த மகளின் திருமணம். இந்தப் பெண்ணையும் நீங்கள் வாழ்த்த வேண்டும் என்று சொன்னார். மகிழ்ச்சியாக வாழ்த்தினேன்.

மூன்றாவது மகளுக்குத் திருமணம் நடக்கும்போது என்னை அழைக்கவில்லை. நான் திருமணத்தை தெரிந்து கொண்டு என்னப்பா என்னை அழைக்கவில்லை என்று கேட்டேன். நான் வேண்டுமென்றே அழைக்கவில்லை என்றார். முதல் மகளின் திருமணத்திற்கு தலைமை தாங்கி நீங்கள் வாழ்த்தினீர்கள் அல்லவா?

இரட்டைக் குழந்தை பிறந்தது. அடுத்து மகளாவது என்று பார்த்தால், இரட்டை பிள்ளைகள். இருவரும் ஆண் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். என் மனைவியார் சொன்னார்கள், உங்கள் ஆசிரியரைக் கூப்பிடாதீர்கள், மூன்றாவது மகள் மிகவும் இளைத்தவள், அவளுக்கு இரட்டைப் பிள்ளை வேண்டாம் என்று. அதுமட்டுமில்லை, நான் ஏதாவது தொட்டால் அது உடனே தீர்ந்துவிடும். என்னுடைய வீட்டில்கூடச் சொல்வார்கள். திண்பண்டங்களை இவரைத் தொட வைக்காதீர்கள். தொட்டால் முழுவதும் தீர்ந்துவிடும் என்று. அது உண்மைதான் என்பதைக் காட்டுவதற்கு புறநானூறு வெளியீடு விழா அமைய வேண்டும் என்பதுதான் என் ஆசை.

பாப்பையா என்ற அவரது பெயர், எல்லோரும் பரிவோடு அரவணைக்கும் பெயராகவேதான் தெரிகிறது. அவர், நாடு முழுவதும் அறிந்தவர். தமிழ் பேசும் உலகம் முழுவதும் அறிந்த ஒரு பெருந்தகை. என்னுடைய கூட்டத்துக்கு எல்லாம் நான் பேசப் போனால் என் மனைவி வரமாட்டார்கள். நான்கூட, ஏன் வருவதில்லை என்று கேட்டால், நீங்கள் வீட்டில் பேசுவதே போதும். ஆனால், இன்று வந்திருக்கிறார்கள். ஏன் என்று கேட்டேன். பாப்பையா பேசுகிறார்கள் என்றார். அவரைத் தொலைக்காட்சியில் பார்த்தாலும்கூட அவரின் பேச்சைக் கேட்க வேண்டும் என்ற விருப்பத்திற்காகத் தமிழ்நாட்டு மக்கள் இல்லந்தோறும், உள்ளந்தோறும் உங்களைப் போற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

புறநானூறு இலக்கியப் புதையல். அது ஒரு நானூறு பாடல்களைக் கொண்டது என்றாலும், 125 ஆண்டுகளுக்கு முன்பு இது வெளியிடப்பட்டது. 1891 இல் வெளியிட்டபோது, தமிழ்க்கடல் உ.வே.சா. அவர்கள் அந்த முதல் பதிப்பில், ஆசிரியப்பா ஒன்று எழுதியிருந்தார். கற்பனை செய்ய முடியாத ஆசிரியப்பா. புறநானூற்று நானூறு பாடல்களையும் தொகுத்துச் சாறாகப் பிழிந்து, "புறப்பாட்டினை முழுவதும் சொல்ல வல்லேன் நான் அல்லேன் யான்." என்று பொழிந்து ஒரு முப்பத்தோரு வரிகளில் பாடியிருக்கிறார்.

அவர்கள் சொன்னார்களே, டாக்டர் ஜி.யு.போப், எழுபத்தொரு பாடல்களை மொழிபெயர்த்து, ஆண்டுதோறும், முதல் நாளன்று உ.வே.சா. அவர்களுக்கு அனுப்பி வைப்பார். இந்த புறநானூற்றுக்கு இருபதுக்கு மேல் பதிப்புகள் வந்திருக்கின்றன. புறநானூறு என்று சொன்னாலே என்ன நினைக்கிறார்கள் என்றால், புறநானூறு என்பது போர்ச் செய்திகளைச் சொல்லும் நூல். போர் மட்டும்தானா? இளமை, முதுமை, இல்லறம், துறவறம், வளமை, அறிவுடைமை, அரசாட்சி, நிலவுடைமை, வேறுப் புலங்களை திருத்துதல், இப்படிச் சொல்லாத பொருள் இல்லை.

இந்த நானூறு பாடல்களையும் தொகுத்தவர்கள், ஞானசுந்தரம் அருமையாகச் சொன்னார்கள், எல்லா நூலுக்கும் தொகுத்தவன், தொகுப்பித்தவன் இருக்கிறார்கள். இந்த புறநானூற்றுக்கு இருவருமே இல்லை. யார் தொகுத்தார்கள் என்று தெரியவில்லை. தொகுப்பித்தவன் யார் என்று தெரியவில்லை. ஆனால், அமைந்த வரிசையைப் பார்த்தால், அந்த வரிசைகூடச் சரியாக இல்லை. சேர, சோழ, பாண்டியர்கள் அல்லது சோழ, சேர, பாண்டியர்கள் என்ற வரிசைகூட இல்லை. வரிசை மாறியிருப்பது மட்டுமல்லாமல், வேறு வேந்தர்களைப் பற்றி எண்பது பாடல்கள், குறுநில மன்னர்களைப் பற்றிய பாடல்கள், பிறகு நிலக்கிழார்களைப் பற்றிய பாடல்கள். பிறகு பொதுவான பாடல்கள். போர்க்காட்சிகளைக் காட்டுவது மட்டுமல்லாமல், போரினால் ஏற்பட்ட துன்பங்களையும் காட்டியிருக்கிறார்கள். வருந்துகிற வருத்தம், உருக்கம், கைம்மையின் கொடுமை, இப்படித் தமிழகத்தின் வாழ்வு முழுவதும் வரைந்துகாட்டிய நூல் புறநானூறு.

இந்தப் புறநானூற்றுக்கு பழைய உரை ஒன்று உள்ளது. பிறகு உரைகளும் எழுதினார்கள். ஒவ்வொரு உரைக்கும் வேறுபாடு உண்டு. ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு வேந்தன் மகப்பேற்றைப் பற்றி பாடுகிறான்.

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே. (188)

இது ஒரு வேந்தன் பாடியது. இந்த வேந்தன் பாடியதற்கு எப்படி உரை எழுதினார்கள் என்றால், பல ஆண்டுகள் மகப்பேறு இல்லாமல் இவன் வருந்தியதால் பாடினான் என்பது பொருள் என்றார்கள். எழுதினவர் அப்படி எழுதியிருக்கிறார். மற்றொருவர் என்ன எழுதியிருக்கிறார் என்றால், மக்கட்செல்வங்கள் பல பெற்று மகிழ்ந்ததால் இந்த வேந்தன் இப்படிப் பாடினான் என்றார். இப்படி உரைகளைப் பலவாறு எழுதலாம்.

சாலமன் பாப்பையாவின் அடக்கத்தைப் பாருங்கள், இந்த புறநானூற்றுப் புதையலை நான் ஏழு வகையாகப் பிரித்திருக்கிறேன். சிற்றூர்கள், சிற்றூர்களின் காட்சி, எளிய மக்களின் வாழ்வின் மாட்சி, பிறகு வேந்தர்கள், குறுநில மன்னர்கள், பிறகு போர், போர் நிகழ்ந்த காரணம், விளைந்த பின் ஏற்பட்ட நிலை, மகளிர் கொண்ட வருத்தம், மக்கள் படுகின்ற துயரம், இப்படிக் கொண்டு வந்து முதிர்ந்த சிந்தனைகள் என்று முடித்திருக்கிறார்.

சிறுகுடியின் சிறுநடை என்று தொடங்கி, முதிர்ந்த சிந்தனைகள் தலைப்பில், ஏழு வகையாக இந்தப் புறநானூற்று நானூறு பாடல் களையும் அடக்கிய திறம், ஒரு மாபெரும் புலமைத் திறம்.

உ.வே.சா. என்ன எழுதினார் என்றால், சொல்ல வல்லேன் அல்லேன் என்றார். ஆனால், சாலமன் என்ன சொல்கிறார் தெரியுமா? சராசரி, மனிதனுக்கு இந்த புறநானூற்றை கொடுக்க வேண்டும் என்பதால், சராசரி மனிதருக்கு விளங்க வேண்டும், எளிதில் புறநானூறு வழங்க வேண்டும் என்று இந்தப் பணியைச் செய்திருக் கிறார். ஆக, தன்னுடைய புலமைக்காக இந்த நூலை எழுதவில்லை.

மக்களுக்கு இந்தக் கருத்து சென்று சேர வேண்டும் என்று மன மாட்சியால் அருமை நண்பர் இந்த நூலை வனப்புற எழுதியிருக்கிறார். வரிசைப்படுத்துவது என்பது ஒரு பெரிய திறம். வரிசையாக அமர வைப்பது என்பது அதைவிடப் பெரிய திறம்.

மேலைநாட்டில், Protocol என்று சொல்கிற சொல்லில், ஓர் அரசனுக்கு பக்கத்தில் நீதியரசரை அமர வைக்கவில்லை என்பதற்கு வழக்கு தொடர்ந்து, அரசன் பதவி இழக்க நேர்ந்தது. வரிசை அரிதலோ என்று புறநானூற்றில் ஒரு பாட்டு இருக்கிறது.

அந்த வரிசை அறிந்த தகுதி மிகுதியால், இந்த புறநானூற்றை இவ்வளவு வனப்புறக் கொண்டு வந்திருக்கிறார். இந்த ஆண்டு,

எனக்கு மகிழ்ச்சியான ஆண்டு, என்னுடைய தந்தையாரும் புறநானூற்றுக்கு உரை எழுதியவர். அந்தத் தந்தை வழி உறவினாலும், கல்லூரியில் பயின்றவர் என்ற உறவினாலும், உலகமெல்லாம் தொழுது பாராட்டுகிறவர் என்ற பெருமிதத்தாலும், இந்தப் புறநானூறு 986 பக்கங்கள் என்று சொன்னார், இராஜா. ஆயிரம் பக்கங்களுக்கு இந்த அழகிய பதிப்பைக் கொண்டு வந்தவர் என்னுடைய இனிய நண்பர், கவிதா சொக்கலிங்கம்.

எனவே, படைத்தவரின் பெருமையும், பதிப்பித்தவர் பெருமையும் புறநானூற்று நூலில் ஒருசேர அமைகிறது என்று சொல்லி, இந்த விழாவுக்கு என்ன சிறப்பு என்றால், புறநானூற்றில், இமையத்தில் இருந்து எங்கள் நீதியரசர் வந்திருக்கிறார். நாகர்கோவிலில் இருந்து என் நண்பர் வந்திருக்கிறார். சாலமன் பாப்பையாவுக்குப் புகழ் சொல்ல இமயத்திலிருந்தும், குமரியிலிருந்தும் வருகிறார்கள் என்று போற்றி, எங்களுடைய நீதியரசர் இமயத்தில் தலைவராகத் திகழ்கிற வகையில், அந்த பனி இமயத்தில், பதவி ஏற்ற நிலையில் பங்குபெறுகிற இன்று காலையில்தான் அவர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு உரை நிகழ்த்தினார். அந்த உரை முடித்த பிறகு அங்கே நீங்கள் பெரிய பட்டங்களை எல்லாம் அளித்திருக்கிறீர்கள், உங்கள் பாராட்டுப் பட்டங்களையும் இங்கு வழங்க வந்திருக்கிறீர்கள்....

புறநானூற்றின் முதற் பதிப்பு 1894 ஆம் ஆண்டு வெளி வந்தது. டாக்டர்.உ.வே.சா. தமிழகத்துக்கு வழங்கிய பெருங்கொடை யாகும். புறநானூறு தமிழகத்தின் வரலாறும் வாழ்வியலும் காட்டும் பெரும்புதையலாகும். கடந்த 125 ஆண்டுகளில் ஏறத்தாழ 30 பதிப்புக்களைத் தமிழுலகம் கண்டுள்ளது .அறிஞர் சாலமன் பாப்பையா புறநானூற்றை ஏழு வகையாகப் பிரித்துள்ளார்

1. கடவுள் வாழ்த்து
2. சிற்றூர்களுக்கள் சிறுநடை
3. வேந்தர்களின் வரிசை
4. போர் விளைந்த காரணம் ,போருக்குப்பின் போருக்குமுன், வீரர் மறைவும் புலவர் நிலையும்
5. போருக்குப் பின் பெண்களின் நிலை
6. அரசுக்கு அறிவுரை
7. முதிர்ந்த சிந்தனைகள்

பாடல்கள் சொற்பிரிப்போடு வனப்புற எளிய விளக்கம் எழுதிப் பாப்பையா வழங்கும் பெறற்கரிய பெரும்பரிசு.

முதற்பதிப்பை வெளியிட்ட தமிழ்க்கடல் புறநானூறு முழுவதையும் பிழிந்த பொருள் முடிவுகளாக பின்வரும் 39 முடிவுகளை எழுதியுள்ளார்.

முன்னாளிடையே இந்நாடாண்ட,
காவலர் பல்லோர் பாவலர் பல்லோர்,
மாசரிதத்தை ஆசற விளக்கிச்,
சொற்சுவை பொருட்சுவை துவன்றி எஞ்ஞான்றும் ,
ஒப்புமையில்லாத் திப்பிய நடையுடைத்,
திறப் பாடமைந்த இப் புறப்பாட்டுக்கள்,

1. தெய்வ வணக்கம் செய்யும் என்பவும்,
2. அறத்தின் பகுதியை உறத்தெரிப்பனவும்,
3. பாவ வழியை நீ வல் நன்றெனபவும்,
4. இம்மைப் பயனொடு மறுமைப் பயனைச்,
5. செம்மையின் வகுத்துத் தெரிவிப்பனவும்,
6. அந்தணரியல்பைத் தந்துரைப்பனவும்,
7. அரச நீதியை உரைசெய்வனவும்,
8. வணிக இயல்பைத் துணிவுறுப்பனவும்,
9. வேளாண் மாக்களின் தாளாண்மையினை, இயம்புவனவும்
10. வயம்புரி போர்க்கு முந்தும் அரசரைச் சந்து செய்வனவும்,
11. ஒற்றுமைப் பயனைச் சொற்றிடுவனவும்,
12. வீரச் சிறப்பை ஆரத்தெரிப்பவும்,
13. இல்லறமாகிய நல்லறம் உரைப்பவும் ,
14. துறவறம் அதனைத் திறவிதிற் தெரிப்பவும்,
15. மிடித்துன்பத்தை எடுத்துரைப்பனவும்,
16. வண்மையும் தண்மையும் உண்மையும் 'திண்மையும், என்னுமிவற்றைப் பன்னுவனவும்,
17. அளியையும் ஒளியையும் தெளிவுறுப்பனவும்,
18. தம்மைப் புரந்தோர் தாம் மாய்ந்திடவே, புலவர்கள் புலம்பி அலமரல் தெறிப்பவும் ,
19. நட்பின் பயனை நன்கு இயம்புனவும்,
20. கல்விப் பயனைக் கட்டுரைப்பனவும்,
21. நீர்நிலை பெருக்கென நிகழ்த்துவனவும்,
22. மானந் தன்னைத் தான் நன்குரைப்பவும்,
23. இளமையும் யாக்கையும் வளமையும் நிலையா, என்றே இசைத்து நன்று ஏய்ப்பனவும்,

24. அருளுடைமையினை மருளறத் தெரிப்பவும்
25. தரமறிந்து ஒழுக என்று உரனுற விதிப்பவும்,
26. அவாவின் கேடே தவாவின்று என்பவும்,
27. இனியவை கூறல் நனிநலன் என்பவும்,
28. உழவின் பெருமையை அழகுற உரைப்பனவும்,
29. நன்றி அறிக என்று இசைப்பனவும்,
30. கொடுங்கோன்மையினை விடுங்கோல் என்பவும் ,
31. தவத்தின் பெருமையைத் தவப்பகர்வனவும்,
32. மடியெனும் பிணியைக் கடிமின் என்பவும்,
33. கொலையெனும் பகையைத் தொலைமின் என்பவும்,
34. நல்லோர்ப் புணர்ந்து புல்லோர்த்தணந்து, தாழ்வொன்று இன்றி வாழ்மின் என்பவும்,
35. சுற்றம் புரக்கும் நற்றிறம் உரைப்பவும்,
36. கற்பின் திறத்தைக் கற்பிப்பனவும்
37. மக்கட் பேற்றின் மாண்புரைப்பனவும்,
38. கணவனை இழந்த மணமலி கூந்தல் தீப்பாய் செய்தி தெரிவிப்பனவும்,
39. கைம்மை விரத வெம்மை விரிப்பவும்,

இன்னும் பற்பல பன்னுவனவுமாய்ச், செப்புநர் எவர்க்கும் ஏய்ப்பிடை வைப்பாய், அரும் பெறல் மரபில் பெரும்பயன் தருமே.

என்று ஒருவாறு பொதுப்படத் தொகுத்துக்கூறுவதன்றி (39) இன்னபாடல் இத்தன்மையதென்று தனித்தனியே எடுத்துக்காட்டி இவற்றின் அருமை பெருமைகளைச் சீராட்டிப் பாராட்டுதற்கு ஒரு சிறிதும் வல்லேன் அல்லேன்.

1. போர் பற்றியன
2. போரால் விளையும் புகழ் பற்றியன
3. வறுமை
4. வன்மை
5. நட்பின் பயன்
6. கல்வியின் சிறப்பு
7. மானஉணர்வின் இன்றியமையாமை
8. பழிக்கு அஞ்சுதல்
9. இல்லறம்
10. துறவறம்
11. மக்கட்பேறு
12. உழவின் உயர்வு

13. கைம்மைக் கொடுமை
14. கற்பின் திறம்
15. நிலையாமை – ஆகியன புறத்தில் அடங்கும்.

கரந்தை முதல் வெட்சி வரை 11 திணைகளும் அரசியல் வாகை முதல் வேத்தியல் வரை 60 க்கு மேற்பட்ட துறைகளில் பாடல்கள் உள்ளன.

ஆற்றுப்படை, தூது, பரணி, பள்ளிஎழுச்சி, காஞ்சி போன்ற இலக்கிய வகைகள் மட்டுமல்லாமல் பக்தி இலக்கியம், நீதி இலக்கியம் என அனைத்தும் புறநானூற்றுக்குக் கடன்பட்டிருப்பது கண்கூடு. டாக்டர் ஜி.யூ.போப் 71 புறப்பாடல்களையும் 59 புறப்பொருள் வெண்பாமாலைப் பாடல்களையும் மொழிபெயர்த்துள்ளார் .

12. கவிதை உறவு

பேராசிரியர் இரா.மோகன் படத்திறப்பு விழா

26.6.2019

இங்கு திரண்டிருக்கும் பேராசிரியர் பெருமக்களே,

புதுவை தர்மராஜன் அவர்களே,

பேராசிரியர் பெருந்தகை இராம குருநாதன் அவர்களே,

அந்நாள் தமிழ் வளர்ச்சி இயக்குநராகவும், உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநராகவும் திகழ்ந்த முனைவர் சேகர் அவர்களே,

இப்படி ஒரு கூட்டம் நடக்கும் என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அருமை நண்பர் வானதி டாக்டர் இராமநாதன், கவியரசர் ஏர்வாடியார், மோகன் அவர்கள் மூன்று பேரும் மூவேந்தர்களாக இருந்து சில ஆண்டுகளுக்கு முன் பல்வேறு பணிகளைச் செய்தார்கள்.

நான் நண்பர் மோகனைத் தியாகராஜர் கல்லூரியில் மாணவப் பருவத்தில் இருந்து அறிவேன். பின்னர் அவர் மதுரைப் பல்கலைக்கழகத்தில் அறிஞர் தெ.பொ.மீ., பேராசிரியர் மு.வ., டாக்டர் வ.சு.ப.மாணிக்கம் மூவரும் இணைந்த திலகமாகத் திகழ்ந்தார்.

பேராசிரியர் மோகனுடைய ஆர்வம் அளவில்லாதது. அவரின் பரபரப்பும், அவரின் துடிதுடிப்பும் ஒரு கடமையைச் செய்ய வேண்டும் என்று சொன்னால்கூட சுறுசுறுப்பாக அதைச் செய்து முடிப்பார்.

சென்னைக்கு வருவதும், அயல்நாடுகளுக்குச் செல்வதுமாக இருந்தார். இன்று காலைதான் முதியோர் நல மருத்துவர் என்னிடம் பேசினார். எண்பது வயதுக்கு மேலாக யாராவது இருந்தால் அவர்களைத்தான் நாம் குற்றம் சொல்ல வேண்டுமே தவிர, காலனை நாம் குற்றம் சொல்லக்கூடாது என்றார்.

பேராசிரியர் மோகன், தன் உடல் நலனைச் செம்மையாக காத்துக்கொண்டு இருக்கிறார் என்றுதான் நாமெல்லாம் எண்ணியிருந்தோம். ஆனால், அவர் திடுமென மறைந்தது தமிழ் உலகத்திற்கு ஒரு தாங்க முடியாத தவிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்றுதான் நாம் சொல்ல வேண்டும்.

ஏறத்தாழ 150க்கு மேற்பட்ட நூல்களை எழுதும் முயற்சி மற்றும் அவரிடத்திலேயே பட்டம் பெற்றவர்கள் என்று பார்த்தால் 30க்கும் மேற்பட்ட அறிஞர் பெருமக்கள் ஆவார்கள். நம்முடைய இலக்கியச்செல்வர் முனைவர் பட்டம் பெற அவர்தான் நெறியாளராக இருந்தார் என்பதை அறிந்து பெருமிதம் கொள்கிறேன். காரணம், இலக்கியச் செல்வருக்கு யாரும் நெறி காட்டத் தேவையில்லை. நெறியாளராக அவர் இருந்தார் என்பதே அவருக்குப் பெருமிதமாகும்.

தமிழ் இலக்கிய உலகம், சாலை.இளந்திரையன், பேராசிரியர் அறவாணன், தாயம்மாள் அறவாணன் என்று புகழ்வது போல, மோகன், நிர்மலா மோகன் என்றே புகழும்.

பேராசிரியர் மோகன் மறைவு, நம்முடைய மனத்தில் பெரும் துயரத்தை தந்திருக்கிறது. இது தாங்க முடியாத துயரம். நண்பர் ஏர்வாடியார் இதற்கு முன்னால் சொன்னதுபோல, பேராசிரியர் மோகன் அவர்களின் தமிழ்ப் பணி மேலும் தொடர, தமிழுலகம் ஆக்கப் பணிகளைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும்.

மதுரை மாநகரில் சௌராஸ்டிரா இளைஞர்கள் தமிழ் இளங்கலை படித்தவர்கள் நால்வரோ ஐவரோதான். அப்படி வந்த நால்வருள் நால்வருமே புகழ் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தார்கள். அதுபோல, சௌராஸ்டிர இளைஞராக இருந்தாலும்கூட, சிறந்த தமிழனாக தமிழ் இலக்கிய உலகில் திகழ்ந்தவர் நண்பர் மோகன் அவர்களின் மனைவி நிர்மலா மோகன் அவர்கள், தம் மனத்தை உளமாக்கி, மோகன் அவர்களின் பெயரை நிலையாக்கி ஆறுதல் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

13. விஜிபி தமிழ்ச்சங்கம்

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் பிறந்த நாள் விழா

03.11.2019

கூடியிருக்கும் புலவர் பெருமக்களே,

விஐடி பல்கலைக்கழகத்தின் வேந்தர் அவர்களே,

அண்ணாச்சி அவர்களே,

உலகமெல்லாம் திருவள்ளுவர் சிலையை நிறுவிய பெருமை அண்ணாச்சி அவர்களையே சாரும்.

புலவர் பெருமக்கள் எல்லாம் தங்களுடைய சிந்தனையாலும், சொல்லாலும் செந்தமிழுக்குத் தொண்டாற்றி வருவதைப் பல்லாண்டு களாகப் பாராட்டிப் போற்றுகின்ற பெருமைக்கு உரியவர்தான் நம்முடைய முத்தமிழ்க் காவலர் அவர்கள்.

முத்தமிழ்க் காவலர்தான் புலவர்களை எல்லாம் அவர்கள் எழுதுகின்ற பாடல்களுக்குப் பொருள் புரிவது போல புலவர்களைப் பொருள் பிரித்து அவர்களைக் கண்டறிந்து அமைத்த புலவர் குழுவை நாம் நெஞ்சாரப் பாராட்டலாம்.

இன்றைய நாள் முத்தமிழ்க் காவலருடைய பிறந்தநாளாகவும் அமைந்திருக்கிறது. உங்களுக்குத் தெரியும், நாடு முழுவதும் திருக்குறளைப் பரப்பிய பெருமை முத்தமிழ்க் காவலருக்கு உண்டு என்பதை நாம் மறப்பதற்கில்லை.

நாமெல்லாம் பேரறிஞர் அண்ணா என்று பெருமிதமாகப் போற்றுகிற பேரறிஞர் அண்ணா அவர்கள், என் வாயாற நான் அண்ணா என்று அழைத்தது முத்தமிழ்க் காவலரைத்தான் என்று குறிப்பிட்டதை இங்கு நான் நினைவுபடுத்துகிறேன்.

அந்த வகையில் தமிழருக்கு, தமிழ் நாட்டுக்கு, தமிழ் வளத்துக்கு, தமிழ் இதழுக்கு என்று பல்வேறு தொண்டுகளை முத்தமிழ்க் காவலர் ஆற்றிய பிறகுதான் நாட்டில் தமிழ் வளர்ச்சி பெருகியது என்று பெருமிதமாகச் சொல்லலாம்.

அந்த வகையில், முத்தமிழ்க் காவலரின் மரபைக் காக்க வேண்டும் என்கிற பொறுப்பு, தமிழ்நாட்டுப் புலவர்குழுவிவைச் சாரும்.

தமிழ்நாட்டுப் புலவர் குழு, முத்தமிழ்க் காவலர் வழியில் அரும்பணி ஆற்றி வருவதை நாம் அறிவோம்.

பெருமக்களே,

தமிழர்களுக்கு, தமிழ்நாட்டுக்கு, தமிழ் மொழிக்கு, தமிழ் வாழ்வுக்கு எந்நாளும் பெருமை வளர வேண்டும் என்ற வகையில், புலவர் பெருமக்கள் தங்கள் தொண்டுகளைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்பதுதான் நம்முடைய விருப்பமாகும்.

தமிழ்ப் புலவர்களுக்குச் சமுதாயத்தில் மதிப்பு வர வரக் குறைந்துவிட்டது என்பது நமக்கெல்லாம் வருத்தம் தருவதாகும். வருவோர் போவோரெல்லாம் தமிழ் குறித்துக் கருத்துக் கூறுவதை நாம் எண்ணிப் பார்க்கும்போது வருத்தம் அடைவதைத் தவிர வேறு வழியில்லை என்று முத்தமிழ்க் காவலர் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இதை எழுதி வைத்திருக்கிறார்.

எனவேதான், புலவர் குழு, ஒரு ஒழுங்குமுறையில் செயலாற்ற வேண்டும், புலவர் குழு தமிழ் மொழியை வளப்படுத்தும் செயலாற்ற வேண்டும் என்று முத்தமிழ்க் காவலர் பெரிதும் விரும்பினார்கள்.

இன்று வளமான வாழ்வு புலவர்களுக்கு அமைந்திருக்கிறது. சான்றாக, நீதியரசர் அவர்களும், பல்கலைக்கழக வேந்தர் அவர்களும், விஜிபி தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் நம்முடைய நிகழ்ச்சியில் இருப்பது, செல்வச் செழிப்பும் நிறைந்திருப்பது நமக்கு இன்பத்தைத் தருகிறது.

நன்றி.

வணக்கம்.

14. காந்தி – வள்ளலார் விழா

சரவணப் பெருமாள் ஐயர் நூல் வெளியீடு

வாழ்த்துரை

05.10.2019

பெருமைக்குரிய பேரூர் ஆதினத்தின் சன்மார்க்க முதல்வராகத் திகழும் அடிகளார் அவர்களே,

சைவ உலகத்தின் இரு கண்கள் என்று அன்பு, அருள் என்று திருஞானசம்பந்தர் – திருநாவுக்கரசரையும் சொல்வார்கள்.

சைவ உலகத்தின் இரு கண்கள் போல, சன்மார்க்க உலகத்திற்கு வாய்த்த இரு கண்கள் கோவை சுவாமிகளும், அருள்திரு ஊரன் அடிகளாரும் ஆவர்.

அருமைத் தலைவர் அருட்செல்வர் அவர்களே,

இந்த நூலை வனப்புறப் பதிப்பித்து வெளியிடும் சிவாலயம் மோகன் அவர்களே,

பேராசிரியர் பெருந்தகை சிற்பி அவர்களே,

தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பெருந்தகை இ.சுந்தரமூர்த்தி அவர்களே,

நண்பர் வைத்தியலிங்கம் அவர்களே,

இந்த உரை நூல்களை வெயிடுவது என்பது, ஒரு நூறாண்டு காலமாக தமிழ் உலகில் இருந்து வருகிறது.

உரை சொல்வது என்றாலே பொருள் சொல்வது என்பது தான் பொருள்.

உரைத்தார்கள் என்று சொன்னால், விளங்காத பாடத்திற்கு விளக்கம் சொன்னார்கள் என்பது பொருள்.

உரை நூல்களை வெளியிடுவது என்பது ஒரு பெரும் பணியாக ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக நடந்து வருகிறது.

தொல்காப்பியத்திற்கு உரையாசிரியர் இல்லாது போனால் பலபேருக்கு விளங்கியிருக்காது. நூற்றுக்கு எண்பது விழுக்காடு விளங்காது.

உரையை எழுதும் நூல்களை உலகத்திற்கு பதிவிடும் ஒரு பெரிய வாய்ப்பை நம்முடைய சிவாலயம் தமிழ் அருவி மோகன் அவர்கள் தலைமைப் பணியாகக் கொண்டிருப்பது பாராட்டுகிற ஒன்றாகும்.

இப்போது தான் சாதிப் பெயர்களை ஐயர், முதலி, நைனார், நாயுடு, நாடார் என்று சொல்கிறோமே, இந்த பெயர்களுக்கெல்லாம் அந்தச் சாதி பெயர் இல்லை என்பதைக் காட்டுவதே சரவணப்பெருமாள் ஐயர் என்பதாகும்.

சரவணப் பெருமாள் ஐயர் என்பவர் வீர சைவ குலத்தில் பிறந்தவர். அந்த நாளில் ஆசிரியர் பெருமக்களை ஐயர் என்று அழைப்பார்கள்.

பழுத்த வைணவரான பெரியவாச்சான் பிள்ளை, ஆனால் அவர் பிள்ளை இல்லை. அறிஞர் உலகம் அனைவருக்கும் உகந்த பிள்ளை என்பதாலே நம் பிள்ளை என்று அவரை பெரியவாச்சான் பிள்ளை என்று அழைத்தனர்.

தேவாரம் அருளிய மூவரை மூவர் முதலிகள் என்பார்கள். அவர்கள் முதலியார்கள் அல்ல! திருவள்ளுவருக்கு திருவள்ளுவ நாயனார் என்று பெயர். ஆனால் அவர் நாயனார் அல்ல!

கம்ப நாடருக்கு, கம்ப நாடார் என்று பெயர். அவர் நாடார் இல்லை!

இப்படி எல்லாம் சாதியின் பெயர்கள் நூற்றம்பது ஆண்டுகளுக்கு முன்பு இல்லை என்பதுதான் சரவணப் பெருமாள் ஐயர் உரை.

சரவணப் பெருமாள் ஐயர் உரைக்கு என்ன சிறப்பு என்றால், திருக்குறளுக்கு ஒரு நூறு பேர் உரை எழுதியிருக்கிறார்கள்.

திருக்குறள் பேருரை,

திருக்குறள் சிற்றுரை,

திருக்குறள் விளக்கவுரை,

ஒரே ஒரு உரைதான் தமிழ்நாட்டில் சிறப்பு வாய்ந்தது. அது பேராசிரியர் மு.வ. எழுதிய திருக்குறள் தெளிவுரை. ஆனால், இந்த தெளிவுரை என்ற பெயரைத் தந்தது சரவணப் பெருமாள் ஐயர் உரை.

தெளி பொருள் விளக்கம் என்றால், இந்த தெளி என்பதை தெளிவுரை என்று மு.வ. வைத்துக்கொண்டார்.

இன்னும் ஒன்று சொல்லலாம். திருக்குறளுக்கு இன்னும்கூட உரை விளங்காத பாடல்கள் உள்ளன. பேராசிரியர் சிற்பி அவர்கள், நன்றாகக் கூறலாம்.

இயல்புடைய மூவர் என்பதுபோல, இந்த உரையை எப்படி சொல்வது என்பதற்குச் சான்று, அறத்துக்கு அன்பு சான்று என்பதைச் சரவணப்பெருமாள் ஐயர் உரை என்ன என்று சொன்னால், அறத்துக்கு மட்டும் அல்ல, மரத்துக்கும் அதுதான் துணை. ஆனால், வயலுக்கு தண்ணீர் பாய்ந்தால் தான் வயல் வளம் பெரும். மரத்துக்கும் என்று சொன்னால், மரத்தை நீக்குவதற்கும் என்று பொருள். அறத்தை ஆக்குவதற்கும் என்பது பொருள்.

இப்படித்தான் சரவணப் பெருமாள் உரையை நூற்றம்பது ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் பதிப்புச் செய்து ஒரு பெரிய சாதனை செய்தார்.

அருட்செல்வர் அவர்கள் பழைய கருவூலங்களை எல்லாம் தேடி மீண்டும் பதிப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தெளிவாக இருந்தார்கள். அவர்கள் மனம் வைத்ததால் தான் திருவருட்பாவிற்கு உரை வந்தது.

அதற்கு முன்னால் திருவருட்பாவுக்கு திருவருட்சோலை என்று ஒன்று உண்டு. வேறு உரைகளும் உண்டு. ஆனால், திருவருட்பா முழுவதற்கும் உரை கண்டு அதை வெளியிட்ட பெருமை அருட்செல்வரைத்தான் சாரும்.

இவ்வாறு அருட்செல்வர் வழியில் தலை நிமிர்ந்து நிற்பவர் சிவாலயம் மோகன் அவர்கள். அதனால் தான் இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு ஒரு நாள் அல்ல. தொடக்க நாள் முதல் நிறைவு நாள் வரை இங்கு இருந்து அருட்செல்வர் அவர்கள் நூல்களை வெளியிடுவது சிறப்பான நிகழ்வாக உள்ளது.

பொதுமக்களே,

பழைய நூல்களை வெளியிடுவது ஒரு பணி. அதுபோல புதிய நூல்களை வெளியிடுவதும் ஒரு சிறப்பாக இருக்க வேண்டும்.

மொழியாக்கப் பணியை முதன்மையான பணியாக கொண்டு புதிய நூல்களும் வெளியிட கண்டீர்கள்.

பழமையும் புதுமையும் தமிழுக்கு இரு சிறகுகள் என்று சொல்லி அமர்கிறேன்.

வணக்கம்.



15. காந்தி - வள்ளலார் விழா

ஊரன் அடிகளார் நூல் வெளியீடு

வாழ்த்துரை

05.10.2019

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பெரும் பேராசிரியராகத் திகழ்ந்த அரங்க இராமலிங்கம் அவர்களே,

என்னோடு உடன் பயின்ற பெரும் பேராசிரியர் ஸ்ரீ சந்திரன், அவர்களின் திருமகனாக விளங்கும் வர்த்தமானன், பதிப்பகத்தைச் செம்மையாக நடத்துகின்ற வர்த்தமானன் வாய் திறந்தால், சிந்தாமணி சிந்தும் சிறப்புடையவர்.

இந்த விழாவில் எல்லையில்லாத மகிழ்ச்சி பெருகி வழிகிறது.

சான்றாக, வடலூர் சன்மார்க்க நிலையங்களை, நம் சன்மார்க்கக் கருவூலங்களாக வளர்க்கும் பெருந்தகை செல்வராஜ் அவர்கள் வந்திருக்கிறார்கள்.

வீற்றிருக்கின்ற பெருமக்கள் எல்லாம் நாடறிந்த பெருமக்கள்.

பெருமக்களே,

இன்று வெளியிட இருக்கும் நூல், ஆயிரம் நூல்களுக்கு ஈடானது என்று சொன்னால், பொய் புகலேன், சத்தியம் சொல்கின்றேன்.

சன்மார்க்கக் கருவூலமாகத் திகழ்வது இந்த நூலாகும்.

நம்முடைய அருட்செல்வர் அவர்கள் எப்படித் தொடங்கி நடத்தினார்களோ, அதேபோலத் தொடர்ந்து நடத்துவதில், ஒரு குறிப்பு என்னவென்றால், இராமலிங்கர் பணி மன்றத்தின் விழாவின் நிறைவு நாளில், அருட்பா அரசு கிரிதாரி பிரசாத் தொடங்கிப் பேசுவதில் இருந்து, நிறைவு நாளில் மரணமில்லாப் பெருவாழ்வு என்பதுதான் தலைப்பாக இருக்கும்.

நான் பலமுறை வியந்திருக்கிறேன். அருட்செல்வர் இடத்தில்கூட கேட்டேன். அதென்ன நிறைவு நாளில் மரணமில்லாப் பெருவாழ்வு என்று அமைத்திருக்கிறீர்களே என்று.

இல்லை நடராஜன், நிறைவு நாளில் இனிமேல் நிறைவு எப்போதும் அதற்கு இல்லை என்ற அடிப்படையில் மரணமில்லாப் பெருவாழ்வு என்று வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள்.

நம்முடைய அடிகளாருக்கு இந்த நேரத்தில் சொன்னால் குற்றமில்லை, 87 வயதாகிறது. அடிகளார் தன்னுடைய நாற்பத்தி மூன்றாம் வயதில் தான் செய்த நூலாராய்ச்சியின் பயனாக, சன்மார்க்க உலகத்திற்கு ஒரு பாடமாக இந்த நூலை எழுதி வெளியிட்டார்கள். என்றும் தீராத வழக்கு எது? என்று தாயுமானவர் பாடல் ஒன்று உண்டு. முடிவு காண முடியாத தலைப்பு. முரண்பட்ட கருத்துகளாக நாடு முழுவதும் பேசப்பட்ட கருத்து. எண்ணிப் பார்ப்பதற்கே அச்சம் தரும் கருத்து. இவற்றையெல்லாம் தொகுத்து அளித்திருக்கிறது இந்தத் திருநூல்.

ஆங்கிலத்தில் ஒரு பதினேழாம் நூற்றாண்டு தொடங்கியே The concept of Immortality என்று தொடங்கினார்கள். இன்னும் சொன்னால், The invisible Man என்றே ஒரு கதை எழுதினார்கள். அவர் வருவார், போவார், கண்ணுக்குத் தெரியமாட்டார்.

எனவே, கண்ணுக்குத் தெரியாமல் நடக்கும் இயல்புடையவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்பதை The Eternal Known என்றுகூட எழுதினார்கள்.

அருட்செல்வர் அவர்களின் முயற்சியால் தான், புதுவையில் ,மதுரை நகராட்சியில் நகராட்சியின் தலைவராக இருந்தவர், டி.கே. இராமா என்ற ஒரு சௌராஷ்டிர பெருந்தகை. அரவிந்தர் கோட்பாட்டில் ஆர்வம் வளர்ந்து, அவர் அருட்செல்வரை வணங்கியதால், அவர் எழுதியது The immortal Body என்பதாகும்.

அந்த நூலை, Saint Ramalingar The Immortal Body என்று சென்னைப் பல்கலைக்கழகம் 2000 பக்கங்கள் கொண்ட நூலாக வெளியிட்டது.

இது ஒரு பெரிய மகிழ்ச்சியான கருத்து. எல்லோரும் என்ன கேட்பார்கள். பிறவா வரம் தருவாய் இறைவா என்று. வள்ளற் பெருமான், இறவா வரம் தருவாய் இறைவா என்று கேட்கிறார்.

அது எப்படி இறக்காமல் இருப்பது. தோன்றியவர் மறைவது இயல்புதானே. திருவள்ளுவர் கூட, நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்றுதானே குறிப்பிடுகிறார் என்று பார்த்தால், இந்த உடல் எப்படிக் கட்டப்பட்டது. சங்க இலக்கியத்தில் **2500** ஆண்டுகளுக்கு முன்பு என்று கணக்கிட்டால், பொருநராற்றுப்படையில் ஒரு தொடர் வருகிறது. "தவம் செய் மாக்கள் தம் உடம்பு இரா." தவம் செய்யும் ஞானிகள் தம் உடலை விடாமல் எடுத்துச் செல்வார்கள்.

உடலோடு மறைதல், சாகாக்கலை, வள்ளலார் மறைந்தது எப்படி என்பது என்ற மூன்று கருத்துகளையும் உள்ளடக்கியதுதான் இந்தப் பெருநூல். நான் இப்போது பதவியில் இல்லை. நான் துணைவேந்தராக இருந்தபோது, இந்த நூல் இந்த வடிவத்தில் வந்திருக்குமானால், தனி மதிப்புறு முனைவர் பட்டமே வழங்கலாம். ஒரு முதுமுனிவர் பட்டம் வழங்கலாம் என்ற வகையில், இந்த கருத்துகளைத் தாயுமானவர், திருமூலர், திருமுறைகள், திவ்ய பிரபந்தம், சங்க இலக்கியம், சமய இலக்கியங்கள் எல்லாவற்றையும் சாறாகப் பிழிந்து, அருட்திரு அடிகளார் வழங்கிய நூல்கள் பல. திருவருட்பா பதிப்பையும், இராமலிங்க அடிகளார் வரலாற்றையும் இந்த அரங்கம்தான் வெளியிட்டது.

மரணமில்லாப் பெருவாழ்வு என்பது, அருட்பா அரசு கிரிதாரி பிரசாத் அவர்கள், இந்த சொற்பொழிவையாற்றியபோது, எதிரே இருந்தவர், அருட்செல்வரின் நண்பராவார். அவர், ஒரு தொண்ணூறு வயது நிரம்பியவர். விடாமல் விழாவுக்கு வருவார். அருட்பா அரசு பேசி முடித்த பின்னர், அனைவரும் சென்றனர். ஆனால், அவர் அமர்ந்தபடியே இருந்தார். அருட்செல்வர் முடிந்துவிட்டது வாருங்கள் சாப்பிடப்போகலாம் என்றார். ஆனால், அவர், மரணமில்லாப் பெருவாழ்வு பற்றி இன்றைக்குத் தெரிந்தால்தான் போவேன் என்றார்.

அருட்செல்வர் அவர்கள், அரவணைத்துக்கொண்டு, அது ஒரு கோட்பாடு. அந்த கோட்பாட்டிற்கு விதிகள் உண்டு. அந்த விதிகளையெல்லாம் நடத்துகிற முறைகள் உண்டு. அந்த முறைகளை வகுத்த நெறிகளைப் பற்றி வள்ளற் பெருமான் நுணுக்கமாகச் சொல்லியிருக்கிறார். இந்த நுணுக்கமான நெறிகளைக் கைப்பிடித்துக் காட்ட வேண்டியது என்பதை ஒருவேளை எதிர்காலச் சமுதாயத்திற்கு அமையலாம். ஆராய்ந்து பார்க்கலாம். இன்னும் நம் கண் முன்னால் காண முடியவில்லை.

எந்தக் கருத்தையும் நிறுவுவதற்குக் கண்ணால் காண்பது, கருத்தால் எண்ணுவது, நூல்களால் சொல்லப்படுகிற கருத்துகளைச் சொல்லிப்பார்ப்பது என்றெல்லாம் சொல்வது போல, இந்த மூன்று வகை நெறிகளையும் ஊரன் அடிகள் அவர்கள், அவ்வளவு நுணுக்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

முதல் பதிப்பு வெளி வந்தபோதும், இரண்டாம் பதிப்பு வெளி வந்தபோதும், இந்த நூலை அருட்செல்வர் அப்போதே கண்டு, இந்த நூல்தான் நிலையாக இந்தக் கருத்தை சொல்லும் என்று தெரிவித்தார்கள்.

அந்த வகையில், அருட்செல்வர் தலைமை தாங்கிய இந்த இடத்தில், இந்த மூன்றாம் பதிப்பு எழுத்துக்கு எழுத்து, தொடருக்குத் தொடர், மேற்கோளுக்கு மேற்கோள் ஆழ்ந்த புலமையைத் தோய்ந்த சன்மார்க்கப் புலமையையும் புலப்படுத்தி ஊரன் அடிகளாரின் புலமையை வெளிப்படுத்துகிறது என்று நான் மகிழ்ச்சியோடு சொல்கிறேன்.

ஏனென்றால், இதை எவ்வளவு துணிந்து எழுதியிருக்கிறார்கள். மறைமலையடிகளார் கருத்து முரணானது, நீதியரசர் பலராமையா கருத்துப் பொருந்தாது என்று பொருந்தாத கருத்துகளையும் எடுத்துக்காட்டி, எவர் மனமும் வருந்தாத வகையில் நுட்பமான வகையில் தொகுத்திருக்கிறார்கள்.

என்னுடைய தந்தையார், மரணமில்லா பெருவாழ்வு என்று வந்தபோது, இதனைப் பற்றி என்னால் அறிய இயலவில்லை என்றார். பாருங்கள் – ஒரு உரையாசிரியரின் நேர்மை, எனக்கு இதைத் தெரியவில்லை. இதை விளங்கத் தெளிந்து விளக்கும் சன்மார்க்கப் பெருந்தகை எதிர்காலத்தில் ஓங்குவார்கள் என்றார். அந்த வகையில், சன்மார்க்கத் திலகமாக விளங்கும் ஊரன் அடிகளார் வெளியிட்டிருக்கும் இந்த நூல் சன்மார்க்க அன்பர்கள் ஒவ்வொருவர் கரத்திலும் இருக்க வேண்டிய நூல்.

ஒவ்வொருவர் கருத்திலும் பதிய வேண்டிய நூல். பல்வேறு நுட்பங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நான்கூட இதுவரையில் சைவ நாயன்மார்கள்தான் உடம்பை விடாது வாழ்ந்திருந்தார்கள் என்று நினைத்திருந்தேன். ஆழ்வார்கள் பன்னிருவரும், திருப்பாணாழ் வாரும் அதுபோல இறவாத வாழ்வு பெற்றவர் என்பதை அடிகளார் எடுத்துக்காட்டிய பின்னர்தான் அறிய முடிந்தது.

எனவே, பக்கந்தோறும் சன்மார்க்கத்தை எடுத்துக்காட்டும் இந்த நூலை வெளியிட்ட பெருமை வர்த்தமானன் பதிப்பகத்தைச் சார்ந்தது.

வர்த்தமானனுடைய இந்த பதிப்பின் அழகும், இங்கு நடந்த நிகழ்ச்சியின் சிறப்பும், இந்த நூலின் பெருமையும், இந்த விழா தந்த பெருமையும் பலவற்றையும் எண்ணிப் பார்க்கும்போது, நான் நலிந்து படுத்துக் கிடந்தேன். என்னை எழுந்து நடக்க வைத்து இங்கு இழுத்து வந்தவர், நண்பர் இரவி அவர்கள்.

நான்கூடச் சொன்னேன். நான் சோர்வுற்றேன் என்றேன். வந்த நின்று பாருங்கள் சோர்வு எப்படி பறக்கிறது என்பதை நீங்கள் காணலாம் என்றார். அந்த வகையிலே இந்த நூல், ஒரு நன்னூல், ஒரு செந்நூல், ஒரு புகழ் வாய்ந்த நூல்.

நூல் என்றாலே, பலர் பேச வேண்டும் என்று பொருள். நுவல் என்பதுதான் நூல் என்றாயிற்று. நிலவு நிலா ஆனதுபோல, துகள் தூள் என்றானது போல, இங்கு நுவலப்படுகிற செய்தி இருக்கிறதே, வெள்ளைக்கார மாவட்ட ஆட்சித் தலைவர் வடலூரைப் பற்றி எழுதிய குறிப்பைப் பல இடங்களில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

அது மட்டுமில்லாமல், சித்தர் நூல்களின் ஆராய்ச்சித் தளங்களாகத் திகழ்ந்தவர்கள் கூறிய கருத்துகளையும் இந்த நூலில் காட்டியிருக்கிறார்கள். எண்ணினால் இருநூறு பக்கம்தான் இந்த நூல் இருபதாயிரம் பக்கக் கருத்துகளைச் சொல்லும் நூல் என்று நான் போற்றிப் பாராட்டுகிறேன்.

இந்த நூலை, நான் வெளியிடுவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. நான் தொட்டால் எதுவும் சீக்கிரம் தீர்ந்துவிடும். என் வீட்டில்கூடச் சொல்வார்கள், திண்பண்டங்களைச் செய்யும்போது நீ தொடாதே என்று சொல்வார்கள்.

அது உண்மையா என்பதை இந்த நாள் தொடங்கி வர்த்தமானன் காணலாம் என்று சொல்லி விடை பெறுகிறேன்.

வணக்கம்.

ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகம்
மகாகவி பாரதியார்

16. முத்தமிழறிஞர் கலைஞர் 98 ஆம் பிறந்த நாள் உரை

1.6.2022

அலைமோதும் நினைவுகள் !

இப்போது நம் ஒப்பற்ற முதல்வர் ஸ்டாலின், கலைஞரின் நிர்வாகத்திறன் நிரம்பப் பெற்றவராக ஆட்சி நிர்வாகத்தை நாளுக்கு ஒரு வளர்ச்சியாக நடத்தி வருகிறார்.

கலைஞரின் நூற்றாண்டு நெருங்குகிறது.

இந்த ஜூன் 3–ல் கலைஞரின் 98ஆவது பிறந்தநாள் அமைகிறது.

அதையொட்டி எண்ணரிய நினைவுகள் அணிவகுத்து வருகின்றன.

ஆனால் அவரைத்தான் காணவில்லை.

அவரை நாம் பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன.

நான்கு நூற்றாண்டுகள் ஆனாலும் அவர் விட்டுச்சென்ற சாதனைகளுக்கு முடிவில்லை – அவரது நூற்றாண்டு விழாவில் திளைக்க இப்போதில் இருந்தே மனம் ஆயத்தமாகிறது.

தமிழ் முழுதறிந்த தன்மையாளராகத் திகழ்ந்த அந்தத் தனிப்பெரும் தலைவர் கலைஞரின் நெடும் புகழ் எப்போதும் எங்கும் நிலைத்திருக்கும்.

கலைஞர் அறியாத தமிழ் இல்லை.

அவருக்குத் தெரியாத சங்கப்பாடலோ இலக்கியமோ இல்லை.

அவர் எழுதாத உரை விளக்கம் இல்லை.

அவர் தீட்டாத உரையாடல்கள் இல்லை.

அரசு ஆட்சித் திறனிலும் கோப்புகளைக் கூர்ந்து கவனிப்பதிலும் அவருக்கு நிகர் அவர்தான்.

நான் அடிக்கடி சுட்டிக்காட்டும் சம்பவம் ஒன்று இப்போதும் என் நினைவுக்கு வருகிறது.

ஒரு திட்டம் குறித்த கோப்பில் "விதி இதற்கு இடம் தரவில்லை" என்று நான் எழுதி அனுப்பியிருந்தேன்.

அடுத்த நாள் காலை அந்தக் கோப்பை நான் பார்த்தேன்.

அதில் கலைஞர், "விதியை மதியால் வெல்லத் தெரியாதா?" என்று எழுதியிருந்தார்.

இதைவிட நாட்டு மக்களுக்கு நலம் செய்கிற ஒரு சொற்றொடர் இருக்கமுடியுமா?

அவர் தான் கலைஞர்.

மக்கள் நலத்திற்காக எதையும் எப்போதும் நிறைவேற்றுபவர் .

இன்னுமொன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

திண்டுக்கல் அருகே குஜிலிபாளையம் என்று ஒரு பகுதி இருக்கிறது.

குஜிலிபாளையம் என்ற சொல்லை மாற்ற வேண்டும், அது என்ன பொருள் என்று விளங்கவில்லை என்று கலைஞரிடம் இருந்து அந்தக் கோப்பு வந்தது.

குஜிலி என்பதற்கான பொருள் என்ன என்ற கேள்வியும், பொருளற்ற ஒன்று எதற்கு? என்ற ஐயமும் அவருக்குள் எழுந்ததால், அப்படி ஒரு குறிப்பை அவர் எழுதியிருந்தார்.

அதற்கான பொருள் என்ன என்று நானும் என்னால் முயன்ற வரையிலும் பார்த்து குஜிலி என்று சொன்னால் குஜராத்தியர்கள் குடியேறிக் கடைகள் வைத்திருந்த இடம் என்பதானால் அந்தக் கடைப்பகுதிக்குப் பெயர் குஜிலிபாளையம் என்று பெயர் வந்திருக்கிறது.

இதனை மாற்றுவது என்று சொன்னால் திண்டுக்கல் பகுதியைச் சார்ந்தது என்பதற்காக குறிஞ்சிப்பாளையம் என்று மாற்றலாம் என்று குறிப்பெழுதி அனுப்பி வைத்தேன்.

உடனே, அதற்குப் பதில் குறிப்பை கலைஞரின் மதிநுட்பம் ஒளிவீச இப்படி எழுதினார்.

குறிஞ்சிப்பாளையம் என்று மாற்றுவதில் குற்றமில்லை.

ஆனால் குஜிலி என்ற சொல் வருகிறபோது அதற்குப் பங்கஜம் என்பதைப் பங்கயம் என்று மாற்றுவது போல குயிலம் என்றும் குயிலம்பாளையம் என்றும் மாற்றவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சிலப்பதிகாரச் சிந்தனையும் அதைத்தான் சொல்கிறது.

இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலைப் பற்றிச் சொல்வார்கள்.

அவர் தலைமை அமைச்சராக இருந்தது பெரிதில்லை.

அவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் ஆறு தொகுதிகள் தான் அவருக்கு ஆங்கில இலக்கியத்திலேயே நோபல் பரிசு பெற்றுத்தந்தது.

அதேபோல் உலகத்தில் சர்ச்சிலுக்கு அடுத்து மாசேதுங்கைச் சொல்வார்கள்.

இவர்களுக்கு இணையான இலக்கிய உள்ளமும் எழுத்தாற்றலும் கொண்டவர் நம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் –

இன்னும் சொல்வதானால், இந்த இரண்டு பேரிடத்தும் காணாத ஒரு திறன், நம் கலைஞரிடம் இருந்தது.

ஒரு சான்று சொல்வது என்றால், அவருக்கு அரசியல் தெரியும். இலக்கியம் தெரியும். கலை தெரியும், சிந்தனைப் புதுமை தெரியும், எண்ணுகிற எண்ணங்களை எல்லாம் எப்படி என்று எழில்பட எடுத்துக்காட்டவும் தெரியும்.

அவர் சிந்திய எழுத்தினுடைய துளிதான் என்னைப் போன்றவர்களைத் துணைவேந்தராக ஆக்கியது.

ஒருநாள் இரவு 12 மணிக்குக் கலைஞரின் செயலாளரான அருமை நண்பர் சண்முகநாதன் தொலைபேசியில் கேட்டார் “பொருதடக்கை வாள் எங்கே ? ‘ என்ற தொடர் எங்கே வருகிறது ?”

என்று.

எனக்குத் திடுமெனக் கேட்டால் எதுவும் நினைவுக்கு வராது.

நான் அவரிடத்தில் சொன்னேன். "பொருதடக்கை வாள் எங்கே ?" என்று பொதுவாகப் போட்டுவிட்டால் போகிறது.

யார் அதைக் கவனிக்கப் போகிறார்கள் என்றேன்.

சண்முகநாதன் சொன்னார்," உங்களுக்கு வேண்டுமென்றால் தூக்கம் வரும்.

இதைத் தெரிந்து கொள்ளாவிட்டால் கலைஞருக்கு விடியல் வரையில் தூக்கம் வராது."

அந்தத் தொடரைக் கண்டுபிடித்தால்தான் அமைதி கொள்வார்.

புறநானூற்றில் அவருக்குப் பிடித்த ஒரு பாடலைச் சொல்லி நான் முடிக்க விரும்புகிறேன்.

ஒரு மாமன்னன் மறைந்தபோது அந்தச் சங்கப் புலவன் எப்படிப் புலம்பினான் என்றால்... வேந்தன் என்று சொல்வதா ?

மக்களினுடைய உயிர் என்று சொல்வதா ?

நாட்டு மக்களினுடைய நாயகன் என்று சொல்வதா ?

எவ்வாறு சொல்வேன் ?

என்று புலம்பினார்.

நாடன் என்கோ ஊரன் என்கோ பாடு இமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ யாங்ஙனம் மொழிகோ ஓங்குவாள் கோதையை – என்று அந்தப் புறநானூற்றுப் புலவன் புலம்பியது போலத்தான் கலைஞர் மறைந்ததை எண்ணி உள்ளம் புலம்பியது.

இப்போது கலைஞரின் வடிவமாக, இதயமாக, செயலாக, ஆற்றலாக, அவர் திருமகன் – திறமைத் திலகமாகத் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் திகழ்கிறார்.

அவரைப் போலவே சீர்பெறச் சிறப்போடு ஆள்கிறார்.

அந்த ஆறுதல் நம் மனதை இளைப்பாற்றுகிறது.

– இனிய உதயம் மாத இதழ்

❀❀❀

17. சர்வதேசத் தமிழ்த் தாவர அனைத்து நாட்டு உணவாளர் பேரவை, சென்னை

30.11.2014

அன்பார்ந்த பெருமக்களே !

உலகத் தாவர உணவாளர்கள் ஒருங்கு கூடி தமிழகத்தில் ஒரு கிளை இயக்கத்தை உருவாக்குவது நமக்கெல்லாம் பெருமிதமாக இருக்கிறது.

தினமணி ஆசிரியர் அவர்கள் பேசும் போது குறித்த செயல்கள் நமக்குத் தமிழகத்தின் வளர்ச்சியைப் பற்றி ஒரு தளர்ச்சியைத் தருகிறது.

இந்திய மாநிலங்களுக்குள்ளேயே புலால் உணவு அதிகமாக உண்பவர்கள் உள்ள மாநிலம் தமிழகம் தான்.

குறைவாக உண்ணும் மாநிலம் குஜராத் மாநிலம் என்று ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார்கள்.

காலத்தின் கோலம் உணவில் இப்படிப்பட்ட கேடு பெருகுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

தமிழில் நீங்கள் பார்த்தால் புலால் மறுப்பு என்பது எவ்வளவு இயல்பானது என்று தெரிந்து கொள்ளலாம்.

புலை என்றாலேயே வெறுப்பு என்று பொருள்.

புலவி என்று சொன்னாலேயே கூட மாறுபடுவது என்பது பொருள்.

புலை, புலால், புலவு என்று சொல்கிற சொற்கள் எவையுமே தமிழுக்கு இசைந்த சொற்கள் இல்லை.

உயிர்க்கொலையும், புலைப்புசிப்பும் உடையவர் எல்லாம் உறவினர் அல்லர் என்பது வள்ளற் பெருமானுடைய திருமொழியாகும்.

உறவினர் அல்லர் என்று சொல்லுவது மட்டுமல்லாமல் அவர்கள் மக்கள் இனத்தைச் சார்ந்தவர்கள் என்று கூடக் கருதமுடியாது என்ற வகையில், தமிழிலக்கியத்தில் தொன்றுதொட்டே அப்படிச் சொல்லி வந்தனர் .

இன்னும் கூட ஒன்று சொல்லலாம்.

உண்ணுகிற பொருளுக்கு உணவு, ஊண் என்று தான் பொருள்.

ஊன் என்பதற்கு உணவு என்ற பொருளே கிடையாது.

உடம்பினுடைய தோலுக்குத் தான் ஊன் என்று தான் பெயர்.

இன்னும் கூட நம்முடைய மலையாள நண்பர்கள் 'ஊணு கழிஞ்சுன்னோ' என்றுதான் கேட்பார்கள்.

எனவே, உண்ணுகிற பொருள்தான் ஊண் என்று அழைக்கப்படுகிறதே தவிர, தவறாக ஊண் என்பது ஊன் என்று மாறுபட்டதனால் எந்த நாளும் ஊன் உண்ணுகிற பழக்கம் தமிழர்களிடத்தில் இல்லை என்று சொல்லலாம்.

காலத்தினுடைய பழமையில் சங்கப்பாடல்களில் ஊனைச் சமைக்கிற பழக்கம் இருந்திருக்கிறது என்று சொல்லலாம்.

காலம் நாளுக்கு நாள் மாறி வருகின்ற பொழுது, அறிவு வளர்ச்சியும்,ஆற்றல் வளர்ச்சியும் பெருகும்போது, கருத்துகள் மாறும். அந்த வகையிலேயே தான் கள்ளுண்ணுதலும், ஊன் உண்ணுதலும் ஒரு பழக்கம் போல் சில காலம் அமைந்தன என்று சொன்னால் அந்த நாளிலேயே ஊன் உண்ணாமையைப் போற்றுகிற பழக்கமும் இருந்திருக்கிறது.

உண்ணாமையைப் போற்றுகிற பழக்கம் என்று எடுத்துப் பார்த்தால், ஓராயிரம் ஆண்டுகள் என்று கணக்கிட்டுச் சொன்னால் அங்கே கூட இராவணனுடைய இல்லம் இது; வீடணனின் இல்லம் இது என்று சுட்டிக் காட்டுகின்ற பொழுது என்ன அடையாளம் சொல்வது என்று சொன்னால் ஊன் மணம் கமழாத வீடு இந்த வீடு என்று சொல்லி இருக்கிறார்கள்.

எனவே, காலத்தில் நமக்கே தெரியும்.

இலைகளும், தழைகளும், கனிகளும், காய்களும் மக்கள் இனத்தில் மகிழ்ச்சிக்காகப் படைக்கப்பட்டவை.

வெட்டுவது அல்லது தின்பது , அரைப்பது என்ற சொற்களைப் பற்றியெல்லாம் ஆராய்ந்தவர்கள்கூட இந்த உணவு முறையில் புலால் உணவு தான் இப்படிப்பட்ட ஒரு முரட்டுப்போக்கினை நமக்கு உருவாக்கிற்று என்று சொல்கிறார்கள்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சான்றாகச் சொல்வார்கள்.

சான்றோர்கள் பேசும் பொழுது உண்ணுகிற பழக்கம், உடுக்கிற பழக்கம் அல்லது குளிக்கிற பழக்கம் அல்லது தனக்கு இருக்கிற சில தனிப்பட்ட பழக்கங்களைப் பற்றியெல்லாம் ஒரு பெரிய கருத்தாக எடுத்துப் பேசக் கூடாது என்ற கருத்தும் உண்டு.

அது சில பேருக்குச் சில வகையில் அமைந்து விடும் என்று.

ஆனால் திருவள்ளுவர் புலால் உண்ணாமை, கொல்லாமை என்ற இரண்டு அதிகாரங்களை அமைத்திருப்பதன் நோக்கமே இந்தப் புலை, கொலை இரண்டும் எப்படி ஒன்றாக இணைந்தது என்பதைக் காட்டுகிறது.

எனவே, கொலை செய்கிற மனம்தான் புலை உண்ணுகிற மனமாகிறது.

புலை உண்ணுகிற மனம் தான் கொலை செய்கிற மனமாகவும் ஆகிறது என்ற கருத்து போல இடம் தருகிறது ,

கொல்லாமைக்கு என்று ஒரு அதிகாரம்;

புலால் உண்ணாமைக்கு என்று ஒரு அதிகாரம் என வகுத்து இருப்பது நமக்கு வியப்பாக இருக்கிறது.

இன்னும் கூடச் சொன்னால் திருவள்ளுவர் அவ்வளவு கடுமையாகச் சிலவற்றைச் சொல்லமாட்டார்.

அவர் பெரும்பாலும் இப்படி இருந்தால் நல்லது என்று சொல்லி இருப்பார்.

உண்ணற்க கள்ளை உணில் உண்க என்று சொல்வார்.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்

எங்ஙனம் ஆளும் அருள்.

அந்தச் சொல்லையே பாருங்கள்

தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்.

அவர் உணவை அல்ல ஊன் உண்கிறவரைப் போய் உணவு உண்கிறவன் என்று கருத முடியுமா என்று சொல்லி. அதுமட்டுமல்லாமல் எது கடவுள் ?

எங்கே இருக்கிறார் கடவுள் ? என்றெல்லாம் கேட்கிறீர்களே –

கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா உலகமும் தொழும் –

என்று சொல்கிற ஒரு பெருமிதம் இருக்கிறது .

தமிழ்நாட்டில் இயல்பான ஒரு சமய உணர்வு எப்போது வரும் என்று சொன்னால், உணவில் தான் வரும் என்று நினைத்திருக்கிறார்கள்.

அவர்கள் உண்ணுகிற பழக்கத்திலேயே தான் வரும் என்றும் கருதினால் வைணவர்களாகட்டும் அல்லது மற்றவர்களாகட்டும் நாங்களெல்லாம் சைவர்கள் என்று சொல்வார்கள்.

ஆகவே உண்ணுகிற பழக்கத்தை வைத்துக்கொண்டே சமய உணர்வு எப்படி உருவாகிறது என்று எண்ணிப் பார்க்கின்ற பொழுது, தமிழகத்திலேயே வள்ளற் பெருமான் வருந்திச்சொன்ன கருத்து என்ன என்று சொன்னால் எத்தனையோ வழிபாட்டு முறைகள், யோகம் சொன்னார், யாகம் சொன்னார் என்றெல்லாம் பலரைச் சொல்லுவார்கள்.

ஆனால் வள்ளலாரைப் பின்பற்றுவது என்பதற்கு ஏதேனும் ஒரு வழி இருக்குமானால் புலால் உண்ணாமை ஒன்றுதான் ஒழுக்கம் என்று அவர் சொல்லி இருக்கிறார்.

அவர் வேறு ஒரு கருத்தையும் எல்லாக் கருத்தையும் நீங்கள் பிழிந்து பார்த்தாலும் கூட உயிர்கள் மீது காட்டுகிற இரக்கம் என்று சொல்வதிலே இந்தப் புலால் உண்ணாமைக்காகவே சுத்த சன்மார்க்கத்தை உருவாக்குவது என்று அவர் நினைத்தது நாம் எண்ணிப் பார்க்கத்தக்கதாகும்.

எப்படியோ மறந்துபோய் நம்முடைய சொற்கள் திரிந்ததால், ஊன் வேறு ஊண் வேறு என்கிற பழக்கத்தை இனியாவது நாம் வலியுறுத்தி உண்ணப்படுவது ஊணே தவிர, ஊன் என்பது ஒரு போதும் உண்ணப்படுவது அன்று .

சான்றாண்மைக்குப் பெரிய இலக்கணமாகத் திகழ்ந்த புத்தபெருமான் கூட கிடைக்கிற உணவை எடுத்து உண்டு விடலாம்.

இதில் என்ன மறுப்பு இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்.

மற்ற எல்லாச் சமய நூல்கள் சொன்ன போதும் கூட நண்பர் சொன்னது போல, தமிழகத்தினுடைய ஒரு சாரமான நூல் என்று நினைக்கின்ற பொழுது திருவள்ளுவர் இந்தப்புலால் உண்ணாமையை மிகப்பெரிதாக வற்புறுத்துவது அவருடைய குறிக்கோளுக்கும் அரணாகிறது .

இது ஒரு நல்ல நாள். நீங்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி இருக்கிறீர்கள் என்பது மட்டுமல்ல.

இந்த நல்ல நாளில் வட மாநிலங்களில் கூடத் திருக்குறள் நாள் கொண்டாடலாம் என்று பேசினார்கள் என்பதும், நம்முடைய தருண் விஜய் தன்னுடைய மேலவைச் சொற்பொழிவில் கூட இந்தக் கருத்தைக் குறித்திருக்கிறார் என்றும் பார்க்கும்போது திருவள்ளுவர் எங்கே பிறந்தார் என்பது மட்டுமல்ல, வடமாநிலங்களிலும் இருந்தார் என்பதற்குரிய சான்றாக இந்த நாள் கொண்டாடுவதனால் புலால் உண்ணுகிற பழக்கம் மெல்ல மெல்லக் குறைந்து, குறைந்து, குறைந்து பிறகு தேய்ந்து, ஒழிந்து, மாய்ந்து விட வேண்டும் என்பது தான் நம்முடைய விருப்பமாகும்.

“
செய்யுந்தொழிலுன் தொழிலே காண்;
சீர்பெற்றிட நீ யருள் செய்வாய்,
வையந் தனையும் வெளியினையும்
வானத்தையு முன் படைத்தவனே !
”

பேராசிரியர் சாலமன் பாப்பையாவின்
புறநானூறு
புதிய வரிசை வகை
நூல் வெளியீட்டு விழா

18. நின்றவூர் நித்திலம் !

ஓங்கிய புகழோடு ஒளிரும் ஒய் எம் சி ஏ பேரவையின் செயலாளர் அவர்களே!

அறிஞர் பெருமக்களே!

நண்பர்களே!

ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றம் என்று உலகமெல்லாம் கண்டு மகிழத்தக்க வகையில் நாளும் வேளையும் பட்டிமன்றத்தின் பெருமையைப் பரப்புவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த என் நெஞ்சத்தில் எப்போதும் நிலையாக நின்று ஒலிபரப்பும் பண்பாட்டுப் பெட்டகம் பக்தவத்சலம் அவர்களை நினைத்துப் போற்றுகின்ற இந்த நிகழ்ச்சி என் கண்களில் வற்றாமல் நீர் வழியச்செய்கின்றது.

அருமை நண்பர் பக்தவத்சலம் அவர்கள் இளம் பொறியாளராகத்தன் வாழ்வைத் தொடங்கியவர்.

எளிமையிலேயே வாழ்ந்து எங்கெல்லாம் தமிழ் வளம் கொழிக்கும் இடங்கள் உண்டோ அங்கெல்லாம் சென்று நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதோடு தான் கண்ட கேட்ட கருத்துகளையெல்லாம் பரிந்துரைப்பதிலும் பேரார்வம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

அருமை நண்பர் பக்தவத்சலம் வாழ்வு தமிழ் வாழ்வுதான்.

தான் தமிழில் முதுகலை பயிலவில்லையே என்ற ஏக்கத்தில் தான் தன் அருமைத்திருமகன் பேராசிரியர் தாமரைக்கண்ணனைத் தமிழில் முதுகலைப் பட்டப்பேறு பெற வேண்டும் என்று தந்தையின் வழியிலேயே நின்று அவர் சிந்தை செல்லும் போக்கிலேயே உறைந்து, இன்று ஒய்எம்சிஏ–இல் செயலாளராகவும் திகழ்வது நமது நெஞ்சை உருக்குகிறது.

நண்பர் பக்தவத்சலம் தொடக்க காலத்திலேயே அறிஞர் சேதுப்பிள்ளை, பேராசிரியர் மு.வ, பேராசிரியர் அ.சிதம்பரநாதன் செட்டியார் ஆகிய அறிஞர் பெருமக்களோடு நெருங்கிப்பழகிப் பல்வேறு நிலைகளில் அவர்களோடு நிகழ்ச்சிகளெல்லாம் பங்குகொண்ட பெருமிதம் உடையவர் ஆவார்.

பக்தவத்சலம் அவர்கள் தம்முடைய வாழ்க்கையைத் தொடங்கும் போதே பொதுவுடமைப் போக்கு என்பதுதான் இந்த நாட்டைக் காக்கும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார்.

அந்த வகையிலேயே தான் தன்னுடைய இளம்பருவத்தில் இருந்தே ஆராய்ந்த கட்டுரைகளைத் தாமரை இதழில் எழுதியதை நண்பர்கள் பலர் இப்போது வேண்டுமென்றால் நினைவுக்குக் கொண்டுவர முடியாமல் போயிருக்கலாம்.

அவர், அறிஞர் பெருமக்களோடும் பொதுவுடமைத் தலைவர் களோடும் எவ்வளவு நெருங்கிய நட்பு கொண்டிருந்தார் என்பது எனக்குத் தெரியும்.

பெருந்தகை கணேசலிங்கம் அவர்கள் பக்தவத்சலத்தின்பால் பேரன்பு காட்டியதும், கணேசலிங்கம் அவர்களும் பக்தவத்சலமும் அறிஞர் மு.வ.அவர்களோடு அமர்ந்து ஒன்றாகப் பொதுவுடைமை இயல்புகளைப் பற்றிப் பேசியதும் பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்.

நான் பேரறிஞர் அண்ணா பங்குகொண்ட நிகழ்ச்சியில் தான் முதலில் பக்தவத்சலத்தைக் காணும் வாய்ப்புத் தொடங்கியது.

எண்ணினால் **60** ஆண்டுகளுக்கும் மேலாக நான் மாணவ நிலையில் இருந்து பச்சையப்பன் கல்லூரியில் நீங்கிய பண்பு அந்த அன்பு தொடர்ந்தது.

அன்பின் வழிவந்த கேண்மை என்று சான்றோர்கள் புகழ்கின்ற வகையில் அவர் என்னோடு அவ்வளவு நெருக்கமாக இருந்தார்.

அவர் என் மீது காட்டிய உருக்கத்தை நான் இப்போது எண்ணி எண்ணிக் கலங்குகிறேன். சான்றாக, நான் செல்லும் ஊர்களுக்கெல்லாம் என்னோடு உடன் வருவார்.

நான் ஆற்றுகிற உரைகளை எல்லாம் குறிப்பெடுத்து வெளியீடாக வேண்டும் என்று பெரிதும் விழைந்தார்.

அவருடைய எண்ணம் அழகு; எழுத்தும் அழகு; சிந்திப்பதும் அழகு; பழகுவதும் அழகு. இப்படி வாழ்ந்த பெருந்தகை எனக்குப் பின்னாலிருந்து என் இரங்கல் கூட்டத்தில் பங்கு பெறுவார் என்று தான் நான் எதிர் நோக்கினேன்.

ஆனால், அவர் வாழ்வு இப்படித் திடுமென முடிந்தது; அந்தச் சுடர் விளக்கு இப்படி திடீரென்று நம்மை விட்டு நீங்கியது என்று நான் நினைந்து உருகுகிறேன்.

நண்பர் பக்தவத்சலத்தினுடைய பெயர் தமிழ் உள்ளவரை, தமிழறிஞர்கள் மேடையில் பேசும் நாள் வரை, தமிழ் வளர்க்கின்ற நெறிப்பாடுகள் உள்ளவரை பக்தவச்சலத்தினுடைய பெயர் நிலையாக இருக்கும்.

பக்தவத்சலம் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்கின்ற பெருமிதத்தோடு தான் வாழ்ந்தார்.

வாழ்வைப் பயனுடைய வாழ்வாக மாற்ற வேண்டும் என்பதற்காகவே நாள் தவறாமல் எண்ணிப் பாருங்கள். திருநின்றவூரில் இருந்து மாலை நான்கு மணிக்கெல்லாம் புறப்பட்டு ஒய்எம்சிஏ அரங்கத்துக்கு வந்து அமர்வார்.

ஒய்எம்சிஏ–வை அவரை விட்டு யாரும் பிரிக்க முடியாது.

ஒய்எம்சிஏ–வின் வளர்ச்சியில் அவ்வளவு ஊன்றிய ஆர்வம் காட்டியவர் நண்பர் பக்தவத்சலம் அவர்கள்.

பண்பாட்டுத்திலகம்; சிந்தனைச் செம்மல்; தமிழ்த் தானையைத் தலைமை தாங்குகிற தகுதி கொண்டவர் என்றெல்லாம் ஆயிரம் புகழ்ப் பெயரை அவருக்குச் சூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவருக்குத் தமிழ் உலகம் கடன்பட்டிருக்கிறது.

பக்தவத்சலத்தினுடைய புகழ் நீடு நிலை பெறுவது என்றால் ஒய்எம்சிஏ அரங்கம் தான் அதைப் போற்றிக் காக்க வேண்டும் என்று நான் பணிவோடு சொல்கிறேன்.

பக்தவத்சலம் அவர்கள் பெயருக்குத் தான் செயலாளரே தவிர, அவர் தான் தலைவராக இருந்தார்; அவர் தான் உறுப்பினராக இருந்தார்; அவர் தான் ஒய்எம்சிஏ பட்டிமண்டபத்தின் உயிரோட்டமாக இருந்தார்.

அப்படித் தன் வாழ்வைத் தமிழ்ப் பட்டிமண்டபத்தில் கரைத்துக் கொண்ட மாட்சியை நினைக்கிறேன்.

அவர் நினைவும், அவருடைய எண்ணமும், அவருடைய கனவும், அவருடைய கருத்தும், எல்லா வகையிலும் தமிழகத்தில் பரவி நம்முடைய இல்லந்தோறும் உள்ளந்தோறும் பக்தவச்சலத்தினுடைய நினைவு நம்மை வாழ்விக்க வேண்டும் என்று சொல்லிப் பக்தவத்சலத்தின் நினைவேந்தல் என்பது தமிழுக்கு அமைந்த ஓர் இலக்கியப் பணிக்கு நாம் நன்றி செலுத்தும் செயலாகும்.

வணக்கம்.

❀❀❀

19. தமிழகத்தின் கண்களைத் திறந்தவர் பெரியார் !

– தமிழறிஞர் ஔவை நடராசன் பெருமிதம்

இனிய உதயம் ஜூன் மாத இதழ்

கேள்வி: அற்புதமான நினைவாற்றலும் ஆங்கிலப் புலமையும் கொண்டவர் நீங்கள். இவற்றை எப்படி வளர்த்துக் கொண்டீர்கள் ?.

பதில்: நினைவாற்றல் என்பது பழக்கத்தினால் ஏற்படுவது தான். நல்ல தொடர்கள், கவர்ச்சியான கருத்துக்கள், கலை மிளிரும் சொற்கள், கற்பனை மிகுந்த பகுதிகள், எழுச்சியூட்டுகின்ற எண்ணங்கள் என்றெல்லாம் படிக்கும் போதே நெட்டுருச் செய்யும் இயல்பும் எனக்கு இருந்தது.

எந்த நூலையும் நான் கையில் எழுதுகோல் இல்லாமல் படிக்க மாட்டேன். படித்ததில் பிடித்த பகுதியை அடிக்கோடு போட்டுவிட்டு, அதை மீண்டும் படிப்பேன். அதனால்தான் நினைவாற்றல் வந்திருக்குமோ என்று நினைக்கிறேன்.

நீங்கள் மதித்துப் போற்றுகிற அளவுக்கு நினைவாற்றல் மிகவும் நீண்டது என்று சொல்ல முடியாது.

நான் ஒருமுறை கூட்டத்தில் பேசும்போது, கலைஞரின் புறநானூற்று வைரவரிகளைச் சொல்லத் தொடங்கினேன்.

“குடிசைதான் அங்கு வரிசையாய் வேல்கள் நின்றிருக்கும்” என்று தொடங்கினேன். அடுத்த வரி எனக்கு நினைவுக்கு வரவில்லை, பாருங்கள் !

முத்தமிழ்க் கலைஞர் அவர்கள், உடனே ஒலிபெருக்கியை எடுத்து எழுந்து நின்று, “நான் சொல்கிறேன்” என்று அந்த நாற்பதுக்கு மேற்பட்ட வரிகளைச் சொன்னபோது மேடை அதிர்ந்தது. தமிழ் உலகமே அந்த நினைவாற்றலைக் கண்டு வியந்தது.

அந்த பாட்டு வரிகளை இப்போது நடிப்புச் செல்வமாக – இலக்கியக் கடலாக வாய்த்திருக்கும் அருமை நண்பர் சிவகுமார் அவர்கள் அப்படியே கலைஞர் வரிகளைச் மேடைகளில் முழங்கியதை நான் கேட்டிருக்கிறேன்.

அதற்கு முன்னால் கலைத்திலகமாகத் திகழ்ந்த மனோரமா அவர்கள் மேடையில் அந்தப்பாட்டு வரிகளை எடுத்துச் சொன்னதையும் கேட்டிருக்கிறேன்.

புறநானூற்றில் இல்லாத புதுமையாக நம்முடைய “முத்தமிழறிஞர்” அவற்றை எப்படி மாற்றினார் என்று சான்று வேண்டுமென்றால், “அந்த மகனுக்குப் பால் கொடுத்த என் மார்பை நான் அறுத்தெறிவேன்” – என்ற அளவோடு நிற்கிறது புறநானூற்றுப் பாடல்.

கலைஞரோ, “வாள் இங்கே ! என் மகனா புறமுதுகிட்டான் என்று கூறிய பொய்யன் நாவு எங்கே” என்று கேட்பார். இது புதுமையும் – புரட்சியும் கலந்த தொடர்களாக நிலைத்துவிட்டன. இவை எல்லாம் என் நினைவுக்கு வருகின்றன.

அதேபோல், பச்சையப்பன் கல்லூரிக்கு என்னை அழைத்துப் போய்ச் சேர்க்க வந்தவர் என் மாமனார். என் மாமனாருக்கு மகள் இருவர் உண்டு. அவர்களின் இளைய மகளாக மருத்துவம் பயின்று கொண்டிருந்த தாரா அவர்களை நான் அப்போதே விரும்பினேன். எங்கள் காதல் அப்படி மலர்ந்தது.

நான் என்ன சொன்னாலும் அவர்கள் ஆங்கிலத்திலேயே விடை சொல்லிப் பழக்கப்பட்டு விட்டார்கள். என் துணைவியாரின் நெருக்கமும் நட்பும் எனக்குப் பெருகப் பெருக நானும் ஆங்கிலம் படிக்கிறேன் என்பேன். அப்போது அவர்கள் அழைப்பார்கள்– “நீங்களும் வந்து என்னோடு உட்காருங்கள்.

நாம் இந்தப் புதினம் படிக்கலாம்”. அப்படி உந்துதல் பீறிட்டு வந்தது. அந்த இரண்டு ஆண்டுகளில் நான் எண்ணற்ற நூல்களைப் படித்தேன்.

கேள்வி: தமிழறிஞரான தங்கள் தந்தையார் உரைவேந்தர் ‘சைவக் கலாநிதி’ ஔவை துரைசாமி அவர்கள் ஆங்கில துப்பறியும் புதினங்களைப் படிப்பாராமே ?”

பதில்: உண்மைதான். என்னுடைய தந்தையாரின் தமிழ்ப்புலமை அளப்பரியது என்பதை நாடே அறியும். அவர் தமிழ்ப்பணிகளுக்கு இடையே ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், ஆங்கிலத் துப்பறியும் கதைகளை ஆர்வத்துடன் படிப்பார். இதுபற்றி நான் கேட்டபோது, படிப்பது இரண்டு வகை. ஒன்று அகலப்படித்தல்; இன்னொன்று ஆழப்படித்தல்.

நான் ஆழச் சிந்தித்துக் கொஞ்சம் சோர்வு வருகிறபோது, இந்த எளிமையான நூலை எடுத்துப் படிக்கிற போது அந்த நாட்டினுடைய வழக்கம், ஒழுக்கம் ,பண்பாடு ,பேசும் முறை இவற்றை எப்படிப் படம்பிடித்துக் காட்டுகிறார்கள் என்பதற்காகப் படிப்பேன். அதேபோல் ஆங்கிலத் தத்துவ நூல்களையும் நான் படிப்பதை நீ பார்த்திருக்கலாமே என்றும் கேட்டார்.

கேள்வி: தஞ்சை சரபோஜி கல்லூரியில் பணியாற்றிய நாட்கள் பற்றிச் சொல்லுங்கள் ?

பதில்: அங்குதான் நான் என் பணியைத் தொடங்கினேன். எனக்கு அந்தப் பணி மனநிறைவைத் தந்தது. அப்போது கல்லூரி முதல்வராக இருந்தவர் பேராசிரியர் முருகையன். அப்போது தமிழ்த் துறைக்குத் தலைவராக இருந்தவர் வேங்கடாசலம் என்ற பெருந்தகை.

கல்லூரிக்கு அவர் சைக்கிளில் வருவார். அவர் கையில் ஆங்கிலத் துப்பறியும் கதைநூல் இருக்கும். அதை படித்தபடியே வருவார். எப்போதும் அந்த நூலைக் கையில் வைத்துக் கொண்டு, பல நிலைகளில் அவர் கதைநயத்தில் திளைத்து ஆங்கிலந்தான் நிறையப் பேசுவார். அவருடைய தலைமையில் பணியாற்றுவதில் நான் மகிழ்ந்தேன்.

என்னோடு பணியாற்றியவர்கள் தான் பேராசிரியர் கு.சிவஞானம், பேராசிரியர் மது.ச.விமலானந்தம். பேராசிரியர் சிவஞானமும் விமலானந்தமும் மாணவர் விடைத்தாள்களைத் திருத்துவதில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டுவார்கள். அதில் நான் சுணக்கம் காட்டுவேன்

அந்த மன்னர் கல்லூரியில் நான் இருந்தபோதே பேராசிரியர் சிவஞானத்திற்கு அடுத்த நிலையில் எனக்குத்தான் அடுத்த பதவி உயர்வு கிடைக்கப் போகிறது என்று எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பேராசிரியர் விமலானந்தம் தஞ்சாவூரைச் சேர்ந்தவர். தன்னிகரில்லாத திறமை வாய்ந்தவர். அவர் மனம் பெரிதும் வருந்தியது. ஆனால் நான் முதன் முதலில் தஞ்சாவூருக்கு வந்து அவருடைய வீட்டில் தான் இருந்தேன்.

அது மட்டுமில்லை விமலானந்தத்திற்கு என் மீது அளப்பரிய அன்பு . நாங்கள் பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள் . நீ ஏன் இங்கு வந்து சேர்ந்தாய் ? உனக்கு வாய்ப்பு எங்கும் கிடைக்கும். நான் தஞ்சாவூர்க்காரன் எனக்கு வாய்ப்பு வேறு எங்கும் கிடைக்காது என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

தில்லி வானொலி நிலையத்தில் உங்களுக்கு ஒப்பந்தப் பணி தருகிறோம். நீங்கள் புறப்பட்டு உடனே வந்து சேரலாம் என்று எனக்குக் கடிதம் வந்தது. அதனால் இந்தச் சூழ்நிலையில் சரி தில்லிக்குச் செல்லலாமே என்று நான் தில்லிக்குச் சென்றேன். தில்லியில் பணியாற்றியதை இப்போது நினைக்கும் போது நகைப்பாக இருக்கிறது.

கேள்வி: பேரறிஞர் அண்ணாவுக்கு முன் உரையாற்றிய உங்கள் அனுபவம் ?

பதில்: பேரறிஞர் அண்ணா அவர்கள் செயின்ட் மேரீஸ் அரங்கத்தில் பிரதாப முதலியார் சரித்திரம் நூலை வெளியிடுவதற்காக வந்தார். அவர் வருவதற்காக மேடையில் மக்கள் காத்திருந்தார்கள். அந்த நேரத்தில் ஒருவர் எழுந்து நின்று அண்ணா வரும் வரையில் பச்சையப்பன் கல்லூரி மாணவர் ஔவை நடராசனைப் பேச வையுங்கள் என்று சொன்னார்கள்.

நானும் போய் மேடையில் பத்து மணித்துளிகள் பேசிக் கொண்டிருக்கும்போதே அண்ணா அவர்கள் வந்து விட்டார்கள். அது எனக்குக் கிடைத்த பெரிய வாய்ப்பு. அவர் நீ பேசு பேசு என்று சொன்னார். என்னால் அதற்கு மேல் அவருக்கு முன் பேச முடியாது போயிற்று. அந்தக் கூட்டத்தில் அன்று நான் கண்ட நண்பர் தான் ஒய் எம் சி ஏ செயலர் பக்தவத்சலம். அன்று தொடங்கிய கேண்மை கொடுமையான தீநுண்மியால் எங்களைப் பிரித்தது. அவர் நோய்க்கு இரையாகி வாழ்க்கை முடிந்தது. பண்பின் பெட்டகமான அவர் பிரிவு என்னைத் தவிக்க வைத்துவிட்டது.

கேள்வி: கலைஞர், மக்கள் திலகம், ஜெயலலிதா அம்மையார் ஆகிய அனைவரும் தங்கள் மீது அன்பும் ஆதரவான உள்ளத்தோடும் இருந்திருக்கிறார்கள். அவர்களின் நனி சிறந்த பண்புகளாக எவற்றைப் பார்க்கிறீர்கள் ?

பதில்: நான் அரசுப் பணியில் இருந்த பொழுது, முத்தமிழறிஞரை அன்றாடம் காணும் வாய்ப்பு வரும். முத்தமிழ்க்கலைஞரின் திறமைக்கு எல்லையே இல்லை. அவரது பெருமையை விட அவரது திறமை என்பது எல்லோரும் கண்டு வியக்கத்தக்கதாகும்.

எந்தத் துறையிலும் எந்தக் குறிப்பையும் உடனே அதைக் கண்டு தெளிவு செய்கிற திறமை அவருக்கு இருந்தது. கனிவு இருந்தது போலவே அவருக்குக் கண்டிப்பும் இருந்தது. இத்தனைக்கும் சிறகாக இருந்த செய்தித்துறையில் அலுவலர்களாக நாங்கள் இருந்தாலும் எந்த அலுவலர்களாக இருந்தாலும் நெருக்கமாகவும் வைத்துக் கொள்ளத் தெரியும் அவர்களை விலக்கி வைக்கவும் தெரியும். அப்படிப்பட்ட பெரும் திறமை அவரிடத்தில் இருந்ததால் நாங்கள் நாளும் பட்டறிவால் வடிவமைக்கப்பட்டோம் .

முதலமைச்சர் புரட்சித் தலைவரைப் பற்றி சொல்வது என்று சொன்னால், புரட்சித் தலைவர் பதவியேற்ற உடனே அவருக்கு நன்றாகத் தெரியும். முதல் – இரண்டு மாதங்கள் என்னைப் பார்த்த அவர் ஒன்றுமே பேசாமல் தலையசைத்து விட்டுப்போவார்கள். நானும் போய் பார்ப்பதற்கு வாய்ப்பில்லையே என்று நினைத்துக் கொண்டு இருந்தேன். ஆனால், பிறகு பாருங்கள் – மொழிபெயர்ப்புத் துறையில் நான் இருந்த போதே பல்வேறு நிலைகளில் புரட்சித் தலைவரைக் காணும் வாய்ப்பு வந்தது. அவரும் என்னை அந்த இரண்டு மாதத்திற்குள் என்ன மாயம் நடந்ததோ தெரியவில்லை. நெருங்கிவிட்டார்.

எத்தனையோ கருத்துக்களை அவருக்கு செயலாளராக இருந்தவர்கள் கூறியபோதும் கூட, இது சரிதானா என்று என்னிடம் தமிழ், தமிழர் வளர்ச்சி, தமிழ்க் கலை இவற்றை எப்போதும் கேட்டுச் செய்தது அவர் இயல்பாக இருந்தது. அது எனக்குத்தனிப்பெருமையைத் தந்தது. இந்திய ஆட்சிப் பணியில் மூத்தவர்களுக்கு மட்டுமே வாய்த்த அரசு செயலர் என்ற ஒரு பதவியை, இதற்கு முன் எவருக்கும் இல்லாத வகையில் எனக்கு வழங்கிய பெருமையும் அவரைத்தான் சாரும்.

பிறகு முதல்வராக வந்த ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் மிகவும் இறுக்கமாகவே எப்பொழுதும் இருப்பார்கள். என்னைப் பார்த்த பொழுதெல்லாம் எப்பொழுதும் ஆங்கிலத்தில் தான் பேசுவார்கள். ஆங்கிலத்தில் சொல்லி இந்தக் கருத்து எப்படி உங்கள் துறைக்குப் பொருந்தும் என்று வினவுவார்கள். நான் அப்போது தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் அரசு செயலாளராக இருந்ததால் அவரைக் காணும் வாய்ப்பு எனக்குப் பலமுறை வாய்த்தது.

ஒருமுறை இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு பெற்றவர்களுக்கு, வழங்கப்படும் தொகையைக் கொஞ்சம் கூடுதலாகக் கேட்கிறார்கள். அந்தக் கோப்பைப் பரிந்துரைக்கிறேன் என்று அவரிடம் சொன்னேன். உடனே என் பக்கத்தில் இருந்த தலைமைச் செயலாளர் ஏற்கனவே நிதிப் பற்றாக்குறையில் அரசு தடுமாறிக் கொண்டிருக்கிறது என்றார்.

உடனே ஜெயலலிதா, என் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு உதவித்தொகையை உயர்த்தினார்.

கேள்வி: ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்க நாடுகளில் சில ஆண்டுகள் இருந்தீர்கள். அப்போது தமிழகத்தோடும் புதிய தமிழ் இலக்கியங்களோடும் எப்படித் தொடர்பு வைத்திருந்தீர்கள் ?

பதில்: நானும் என் துணைவியாரும் ஆஸ்திரேலியாவில் போய் ஆண்டுக்கணக்கில் தங்கி இருந்ததற்குக் காரணம் என் மகன் கண்ணன் திருமணமாகியிருந்தான். அங்கே அவனும் மருமகள் சாந்தியும் மருத்துவர்களாக இருந்தார்கள்.

எனவே மகிழ்ச்சியோடு இருந்தோம். தென் ஆப்பிரிக்காவிலும் என் மூன்றாம் மகன் பரதன் மருத்துவத்துறையில் இருந்ததாலும் நாங்கள் அங்கே இருந்தோம். ஆஸ்திரேலியாவில் நான் கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களிலும் தமிழ் மன்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டேன். அங்கே இனம், மொழி என்னும் உணர்வுகளுக்கு ஊக்கம் தந்து வளர்த்த பெருமை அங்கிருந்த ஈழத் தமிழர்களைத் தான் சேரும்.

கேள்வி: தந்தை பெரியார் வழி வந்த திராவிட இயக்கங்களின் ஆட்சியில் 50 ஆண்டுகளில் தமிழகம் பிற மாநிலங்களை விடப் பல துறைகளிலும் பல மடங்கு உயர்ந்திருக்கிறது. எனினும், சிலர் திராவிட இயக்கங்களின் மீது புழுதிவாரித் தூற்றுகிறார்களே?

பதில்: நிச்சயமாக. தந்தை பெரியார் வந்தபிறகுதான் தமிழகத்தில் சிந்திக்கும் திறம் என்பதே பிறந்தது என்று நான் துணிவாகச் சொல்வேன்.

அந்த வகையில்தான் சமுதாயத்தில் எளியவர்கள், இல்லாதவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், துன்பப்பப்பட்டவர்கள் எனத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைத்த ஒரே விரல் தந்தை பெரியாருடைய விரல்தான். தந்தை பெரியார் தொடங்கிய அந்த இன எழுச்சிதான் நமக்குப் பெரிய பயனாக வாய்த்தது என்று சொல்வதைவிட நமக்கு அது பெறற்கரிய பேறாக வாய்த்தது.

அவர்தான் தமிழகத்தினுடைய கண்களைத் திறக்கச் செய்த பெருமை பூண்டவர். அந்தக் கருத்தைத் தாங்க முடியாமல் அவர் கொடுத்த வெம்மையான சாட்டை அடிகளுடைய வீக்கம் தணியாமல் சிலர் மனம் துடிப்பதாகச் சொல்கிறார்களே தவிர, துடிக்க வேண்டியவர்கள் துடிக்கத்தான் வேண்டும். வீக்கம் வந்தவர்களுக்குத் தானாக அது தணிய வேண்டும்.

அவ்வப்போது கார் காலத்து காளான்கள் முளைப்பது போல மூடக் கருத்துக்கள் பிறக்கும். பிறகு தானாகத் தேய்ந்துவிடும் என்று நான் நம்புகிறேன்.

நேர்காணல்: சென்னிமலையார்

உதவி: பொன்னேரி பிரதாப்



20. பிள்ளைத்தமிழ்

தமிழ்மணி – தினமணி

10.1.2021

பிள்ளைத்தமிழ் குறித்து தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஒளவை நடராசன் ஓர் அணிந்துரையில் எழுதியிருப்பது இங்கே சிறு கட்டுரையாகத் தரப்பட்டிருக்கிறது.

– ஆசிரியர்

பிள்ளைக் கவி, பிள்ளைப் பாட்டு எனப் போற்றப்பெறும் பிள்ளைத்தமிழ் சிற்றிலக்கியச் செல்வமாகும். பாட்டுடைத் தலைவரையோ தலைவியரையோ தாம் பெற்ற மகவாகக் கருதித் தாய்மனம் ததும்பக், காப்பு முதலிய பத்துப் பருவங்கட்குரிய செயல்களைச் சிறப்பித்துப் புலவர் பெருமக்களால் பாடப்பெறும் பனுவலாகும்.

கடவுளர், தலைவர், வள்ளல், புலவர், தொண்டர்களைப் பாட்டுடைத் தலைவராகப் பாடுதல் வழக்கு. கடவுளர் என்றால் திருமால், உமாதேவியார், திருமுருகன், விநாயகர் மேல் பாடிய பிள்ளைக்கவி பலவுள; ஆசிரியரைப் பற்றியது அம்பலவாணர் பிள்ளைத்தமிழ்; சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழ் வள்ளல் பற்றியது;

புலவர் பற்றியது சேக்கிழார் பிள்ளைத்தமிழ்; காந்தியடிகள் பிள்ளைத்தமிழ் தலைவர் பற்றியது.

இச் சிற்றிலக்கியம் பற்றிக், "குழவி மருங்கினும் கிளவியதாகும்" எனத் தொல்காப்பியப் புறத்திணை பேசுகிறது. இவ்விலக்கியத்திற்கு வித்து சங்க இலக்கியமெனலாம். குறுகுறு நடந்து சிறுகை நீட்டி, இட்டும் தொட்டும் கவ்வியும், துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும், மயக்குறுமக்களை என மழலையர் தரும் கொள்ளை இன்பத்தைக் கோவேந்தன் பாண்டியன் பாடியது அனைவரும் அறிந்தது.

இப்பிரபந்த ஊற்றாகப் பிறங்குவது பெரியாழ்வாரின் திருவாய் மொழியாம்.

பாடல் தலைவனது மூன்றாம் மாதம் தொடங்கி இருபத்தொன்றாம் மாதம் வரையிலுள்ள ஒற்றித்த பத்து மாதங்களைப் பத்துப் பருவங்களாகக் கொண்டு, ஒவ்வொரு பருவத்துக்கும் பத்து விருத்தங்கள் பாடுவது முறை. இந்நூல் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி வரை ஏழு பருவங்களும் இரண்டுக்கும் உரியன; இவற்றோடு சிற்றில், சிறு பறை, சிறுதேர் சேர, ஆண்பாற் பிள்ளைத் தமிழாகும்.

கழங்கு, அம்மானை, ஊசல் இவைசேர்வது பெண்பாற் பிள்ளைத்தமிழாம். சிலர் ஆண்பாற்பிள்ளைத் தமிழ் பதினாறு ஆண்டுவரையும், பெண்பாற்பிள்ளைத் தமிழென்றால் பூப்பு நிகழும் வரையிலும் பாடவேண்டுமென்பர். அரசன் முடிகவித்த பின் இச் சிற்றிலக்கியம் பாடப்பெறாது என்பாருமுளர்.

பிள்ளைத் தமிழில் கிடைக்கும் முதல் நூல் குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழே; ஒட்டக்கூத்தர் பாடியது. இதன் சந்த அமைப்பைப் பின்பற்றியே பிற ஆசிரியர்கள் பிள்ளைத் தமிழ் பாடினர். பிள்ளைத்தமிழில் சிறந்தவை: மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமிப்பிள்ளைத் தமிழ்; குமரகுருபர அடிகள் அருளியவை. சிவஞான சுவாமிகளின் குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், பகழிக் கூத்தரின் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்: மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ், இசுலாமியப் புலவர்களின் நபிநாயகப் பிள்ளைத்தமிழ்,ஆண்டவர் பிள்ளைத் தமிழ் எனப் பிரபந்தங்கள் பல உள்ளன.

பெரியார் பிள்ளைத்தமிழ், மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ், காமராசர் பிள்ளைத்தமிழ், அண்ணா பிள்ளைத் தமிழ், கலைஞர் பிள்ளைத் தமிழ், எம்.ஜி.ஆர். பிள்ளைத் தமிழ் ஆகியவை அண்மைக் காலத்தவை. பிள்ளைத் தமிழ் நூல்களுள் பழனிப் பிள்ளைத் தமிழ் ஒவ்வொரு பருவத்திற்கும் மும்மூன்று பாடல்களைக் கொண்டு திகழ்கிறது. மாசிலாமணி தேசிகர் இயற்றிய திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழில் காப்புப் பருவத்திலும், வாரானைப் பருவத்திலும் தனித்தனிப் பதினொரு பாடல்கள் உள்ளன.

முத்தப் பருவத்திலும் சிறு பறைப் பருவத்திலும் தனித்தனி ஒன்பது பாடல்கள் உள்ளன. ஏனைய பருவங்களில் பத்துப் பாடல்கள் உள்ளன.

சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத் தமிழின் வாரானைப் பருவத்தில் பதினோரு பாடல்களும், தணிகைமணி. வ.சு.செங்கல்வராய பிள்ளை பாடிய திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ் நூலில் காப்புச் செய்யுள் ஒன்றும், ஏனைய பருவங்கட்குத் தனித்தனி ஒரு பாடலும் ஆகப் பத்துப்பாடல்களே அமைந்துள்ளன .

மு.கோ.இராமன் பாடிய அப்பர் பிள்ளைத் தமிழில் காப்புச் செய்யுள் மட்டும் மூன்றும், ஏனைய பருவம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பாடல் அமைந்தது .

திருவள்ளுவர், சேக்கிழார் பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் மனத்திற்கொண்ட நிலையில் வள்ளற் பெருமானுக்கு வாய் மணக்கப் பிள்ளைத்தமிழ் பாடி நெஞ்சுருகியவர்களுள் பொன்னேரி சுந்தரம் பிள்ளை முதலிடம் பெறுவார். புலவர் காமாட்சி நாதன், வித்துவான் சேதுராமலிங்கம் முதலியோரும் பாடினர்.

வள்ளல்பிரான் மீது பாடப்பட்டமையின், இது இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ் எனப்பட்டது.

பொன்னேரிப் பெரும்புலவர் புராணப் பெருங்கடல் சுந்தரம் பிள்ளை மனமுருகிய பாடல்கள் பருவத்துக்குப் பத்துப்பாடல்களைக் கொண்டது.

21. கல்வியில் காலத்திற்கேற்ற மாற்றம் வேண்டும்!

ஆழ்ந்தகன்ற அறிஞரான இவரை அறியாதவர் எவருண்டு இங்கு? இந்திய அரசால் 'பத்மஸ்ரீ' விருதுகொடுத்துச் சிறப்பிக்கப்பட்டவர் இவர்.

தமிழ்ப்பல்கலைக் கழகத் துணை வேந்தராகவும், தமிழக அரசின் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநராகவும், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலாளராகவும், பொறுப்பேற்றுத் திறம்படச் செயலாற்றியவர். தனது தனித்துவத் தன்மைகளால் கலை இலக்கிய பண்பாட்டுத் துறையில் முத்திரை பதித்து, இலக்கியவாதிகளின் இதயங்களில் எல்லாம் நீங்கா இடம் பெற்றவர்.

உலகத் தமிழர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நிறைமொழிப் பேச்சாளர், கனிவும் பணிவும் கைவரப்பெற்றவர். இவரின் உரைகேட்போர் உள்ளம் புதுப் புதுச் செய்திகளால் நிரம்பி வழியும். தெளிந்த சொற்களில் தேர்ந்த சிந்தனைகளை அள்ளித் தரும் அவரோடு, தமிழர் திருநாளுக்காக நாம் கண்ட சிறப்பு நேர்காணல் இதோ...

கேள்வி: பள்ளிப் பருவத்திலேயே தமிழிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தவர்கள் நீங்கள். பெருந்தமிழறிஞரான தங்களின் தந்தையார், இலக்கியத்தின் பால் எப்படித் தங்களை நெறிப்படுத்தினார்?

பதில்: வடார்க்காடு மாவட்டத்தில் திருவத்திபுரம் – செய்யாறு என்னும் பேரூரில் தான் நான் 1935 இல் பிறந்தேன். என் தந்தையார் அப்போது நகராட்சிப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணிபுரிந்தார்.

தமிழாசிரியராகப் பணியாற்றிய போது செய்யாற்றில் பிறந்த எனக்கு, நான் வளர்ந்த நான்கு ஆண்டுகள் நினைவில்லை.

அதன் பிறகு செய்யாற்றிலிருந்து செங்கம், போளூர் ஆகிய ஊர்களுக்குத் தந்தையார் மாறுதலானார். பிறகு திருப்பதியில் கீழ்த்திசைக் கல்லூரியில் பணியேற்கச் சென்றார். நான் திருப்பதிக்குச் சென்ற ஆண்டு நினைவிருக்கிறது.

திருப்பதியில் தான் பள்ளி முதல் வகுப்பே தொடங்கியது என்று நினைக்கிறேன்.பிறகு திருப்பதியிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் என் தந்தையார் பத்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றினார். நான்காம் வகுப்பு முதல் பள்ளியின் பத்தாம் வகுப்பு வரையில் நான் அண்ணாமலை நகரில் பள்ளிக்கல்வி பயின்றேன்.

அண்ணாமலை நகரின் சூழலை நினைத்துப் பார்த்தால், எங்கும் தமிழ் வளம் கமழ்கின்ற ஒரு கலைக்கோயிலுக்குள் இருந்த நினைவு எனக்குத் தோன்றுகிறது. காரணம் தந்தையாருடன் நெருங்கிய நண்பர்களான அறிஞர் வெள்ளைவாரணனார் – கல்வெட்டு ஆராய்ச்சிப் பேராசிரியர் சதாசிவ பண்டாரத்தார் முதலிய அறிஞர் பெருமக்களுடன் என் தந்தையார் பழகுவதை நான் பார்த்திருக்கிறேன்.

அப்போது அவர்கள் பேசிய பேச்சின் இனிமையையும், தமிழ் மொழியின் வனப்பையும் கண்டு எனக்கு இலக்கியத்தின் பால் ஈர்ப்பு இயல்பாக வந்தது என்று தான் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் விட எனக்குச் சிறப்பாக இருந்தது, எனக்கு உயர்நிலைப் பள்ளியிலே தமிழாசிரியராகத் திகழ்ந்தவர் பெரியவர் புலவர் கணபதி ஆவார். அவர் கணபதி என்ற பெயரைக்கூடக் குழுவுத்தலைவன் என்று குறிப்பாக வடசொல்லை மொழிபெயர்த்துத் தமிழ்ப்பெயரிட வேண்டும் என வலியுறுத்தியது எனக்கு நினைவிருக்கிறது.

ஆசிரியர்கள் குழுவில் புலவர் கணபதி அவர்களைக் காண்பது மகிழ்ச்சி தருவதாகவும், எழுச்சியூட்டுவதாகவும் இருந்தது, அவர் பாடம் நடத்துகிற பாங்கு உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அப்பொழுது பேச்சுப்’போட்டி, சொற்போர், ஒப்புவித்தல் முதலியவற்றுக்கு எங்களைப் பயிற்றுவித்த பெருமையும் அவரைத்தான் சாரும். அவர் வகுப்பில் எடுத்துக்கூறுகிற பாடல்களை நான் அப்படியே திருப்பிக் கூறினேன். தேசியக்கவி பாரதியாரின் பாடல்களை விடப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடல்களைத் தான் அவர் எப்போதும் எடுத்துச் சொல்வார். ஆகவே, திராவிடர் கழகச் சூழல், தனித்தமிழ்ப்பற்று, தமிழ்வீறு, இந்தி எதிர்ப்பு முதலிய கொள்கைளெல்லாம் எனக்கு உயர்நிலைப் பள்ளிப் பருவத்திலேயே ஊட்டமாக வளர்ந்தன.

என் தந்தையாரைக் கண்டு பேசுபவர்களுக்கு இடையில் பல்கலைக்கழக மன்றங்களில் சொற்பொழிவாற்றும் அறிஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் உண்டு.

அவ்வப்போது அவர் பேசுகின்ற அரங்கங்களிலும், பேரவைகளிலும் அவர் ஆற்றும் உரைகளை நான் அப்போதே ஆர்வமாகக் கேட்பேன். தந்தையுடைய புகழும் அவர் பேசிய மேடையுரைகளும் தான் எனக்கு ஆர்வத்தை உருவாக்கிற்று.

தந்தையாரோ தமிழ் படிப்பென்பது உனக்குத் தானாக வரும். புதிய கலைகளைப் புதிய அறிவியல் பிரிவுகளைப் படிக்க வேண்டும் என எப்போதும் என்னைத் தூண்டினார் என்றாலும் நீங்கள் சொல்வது போல, என் மனத்தைத் தமிழுக்காகப் பறிகொடுத்து விட்டேன். தமிழ் உணர்வுக்காகவே வாழ்வது என்ற ஆர்வம் என்பால் மெல்லப் படர ஆரம்பித்தது.

கேள்வி: பச்சையப்பன் கல்லூரியில் நீங்கள் தமிழ் படிக்க என்ன காரணம் ? தமிழ் படித்தால் வளமான வாழ்க்கையைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் படித்தீர்களா ?

பதில்: அப்படி எந்த நோக்கமும் அப்போது எனக்கு இருந்ததாகத் தெரியவில்லை. இயல்பாகப் பள்ளிப்படிப்பை முடித்த பிறகு, கல்லூரியில் போய்ச் சேர வேண்டும் என்ற நாட்டம் வளர்ந்தது.

படிக்கத் தொடங்கிய காலத்தில் பல்கலைக்கழக இடைநிலை வகுப்பில் நான் தியாகராசர் கல்லூரியில் சேர்ந்தேன். நான் அங்குச் சேர்ந்த ஈராண்டுகளின் போது, அறிவியல் பாடங்கள் எனக்கு அறவே வராமல் போய் திக்கு முக்காடிப் போனேன். அதனால் தான் மீளப்படித்துத் தமிழ்ப் பிரிவுக்கு மாற்றம் பெற்றேன். அப்படித் தமிழ்ப்பிரிவுக்கு மாற்றம் பெற்றதனால், நான் முதுகலையில் எந்தக் கல்லூரிக்குச் செல்வது என மருண்ட போது, அப்போது பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் பி.ஏ. ஆனர்ஸ் என்ற ஒரு பிரிவு இருந்தது.

இடைநிலை வகுப்பு முடித்தவர்கள் நேராக அங்குப் போய்ச் சேரலாம். மூன்றாண்டுகள் முடித்த பிறகு தமிழ் பி.ஏ. ஆனர்ஸ் என்ற பட்டம் கிடைக்கும். இப்படியொரு கல்வியமைப்பு இருந்ததால் அப்போதே நான் முதுகலை படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால், உடனிருந்த என் இனிய நண்பர் திரு.இ.சு.பாலசுந்தரமும் நானும் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தோம்.

தமிழ் முதுகலைப் பாடம், அந்த நாளில் சென்னையில் மட்டும்தான் இருந்தது. வேறு எந்த ஊரிலும் இல்லை. எனவே சென்னைக்குச் செல்ல வேண்டும் என்ற நிலையில் என் தந்தையும் விரும்பி அனுப்பினார்.

கேள்வி: மு.வ. அப்போது உங்கள் பேராசிரியர் அல்லவா? அவர் உங்களிடம் தமிழ் படிக்க வேண்டாம் என்று சொன்னாராமே?

பதில்: அப்போதே பேராசிரியர் மு.வ வின் பெரும் புகழ் நாடறிந்ததாகும். அறிஞர் மு.வ எழுதிய புதினங்களை நான் பள்ளி மாணவனாக இருந்த போதே பலர் கையில் இருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

வீட்டுக்குப் பால் விற்க வரும் பாலன் என்பவர், தோளில் இணை கயிறும், மறு கையில் மு.வ–வின் புதினத்தையும் வைத்துக் கொண்டு தான் வருவார். எனக்கு மு.வ எழுத்தின் மீது அவ்வளவு விருப்பம் என்று அவர் உணர்ச்சி பொங்கக் கூறினார் .மு.வ வைப் பார்த்தால் எங்களுக்குப் போதும் என்ற பெருவிருப்பத்தால், நான் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தேன். பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தபோது எனக்குப் பெருமையாக இருந்தது.

நாங்கள் விடுதியில் வளர்ந்தோம். பேராசிரியர் மு.வ என்னிடத்தில் மட்டுமல்ல எவரிடமும் சொல்வார்,

“வாழ்க்கை என்பது வளமாக அமைய வேண்டும். வாழ்க்கையில் செல்வம் சேர்வது என்பது பெருமிதம் தரும் இயல்பாகும். தமிழ்க்கல்வியில் அதற்கு வாய்ப்பிருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. எனவே அறிவியல், தொழிலியல் கல்வியில் நீங்கள் ஏன் சேரவில்லை ?” என்பார்.

கலையியல் என்பது நாம் முயன்றால் கற்றுக் கொள்ளலாம். ஆனால் அறிவியலையும், தொழிலியலையும் நாம் தொடர்ந்து பாடநூல்களிலும் – பயிற்சியிலும் தான் வளர்த்துக் கொள்ளமுடியும். என்னைக் கேட்கிறார்கள் ? ஏன் உங்கள் மக்களைத் தமிழ் படிக்க வைக்கவில்லையென்று ?

நான் தமிழ் படிக்க வேண்டாம் என்று எவரையும் தடுக்கவில்லை. ஆனால் என்னுடைய பிள்ளைகளுக்கு மருத்துவத் துறையில் நாட்டம் இருந்ததால், என்னுடைய மகன்கள் மூன்று பேருமே மருத்துவத் துறைக்குச் சென்றார்கள்.

எனவே தான் அப்போது மு.வ எங்களைப் பார்த்துக் கேட்டார். "நீ ஏன் தமிழ் படிக்க வந்தாய்? தமிழ் முயற்சி என்பது தமிழார்வத்தினால், தமிழ் எழுச்சியினால் முயன்றால் பெற்றுக் கொள்ளலாமே" என்று பரிவோடுதான் கேட்டார்.

இதனால் அவர் தமிழ்க்கல்வியைத் தடுத்தார் என்று பொருளில்லை. தமிழ் மக்கள் தம் வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் ஓங்கிய சிறப்போடும், உயர்ந்த திறமையோடும் விளங்க வேண்டும் என்ற பேரவாக் கொண்டிருந்தார் அவர். அந்த வகையில் அறிஞர் மு.வ அவ்வாறு சொன்னாரே தவிர, தமிழ்க்கல்வியைத் தடுத்தார் என்று நான் கருதவில்லை.

அவர் நினைத்ததெல்லாம் எல்லாக் கல்வியையும் நம் தமிழர்கள் பெறவேண்டும். தமிழர்கள் எல்லா நலங்களிலும் சிறந்து விளங்கவேண்டும் என்ற கருத்தை வைத்துத்தான் சொன்னார். அது மட்டுமில்லாமல், அவர் அப்போது சொன்னார், "மரபாகப் படித்து வருபவர்களைக் காட்டிலும், மதிப்பெண்களை நிறையப் பெற்று மருத்துவத்திலும், பொறியியலிலும் சேர்ந்திருப்பவர்களைப் பார்க்கும் போது, எனக்குப் பெருமையாகக் கூட இருக்கிறது" என்று எங்கள் வகுப்புகளிலும் கூடச் சொல்லியிருக்கிறார்.

கேள்வி: சங்க இலக்கியத்தில் இருந்து சமகால இலக்கியம் வரை ஆழ்ந்து கற்றவர் நீங்கள். பழந்தமிழ் இலக்கியங்களில் நுட்பமான ஆய்வு இன்றும் மேற்கொள்ளப்படுகிறது என்று நினைக்கிறீர்களா? அதில் மானுடவியல் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கருதுகிறீர்களா ?

பதில்: காலம் மாறிக்கொண்டே இருக்கிறது. கருத்துக்கள் அந்தந்த காலத்திற்கு ஏற்றவகையில் அமைகின்றன. புதுமைகள் நாளும் பூத்து மணம் கொழிக்கின்றன. மேலும் வாழ்வியல் மிகப்பெரிய மாற்றங்களைப் பெற்றிருக்கின்றது.

அறிவியற் கருவிகளும் பொறியியல் திறமையும் புதுமைகளும் ஓங்கி வளர்ந்திருக்கும் போது எல்லாக் கலைகளும் நாம் எதிர்பாராத பெரிய மாற்றங்களைப் பெறுகின்றன. அந்த வகையிலே தமிழ்க்கல்வியும், அனைத்து அறிவியல் கோட்பாட்டையும் சார்ந்திருக்கவேண்டும்.

“நனியுண்டு நனியுண்டு காதல் தமிழ் நாட்டினர் யாவருக்குமே தமிழ் மீதில்” என்பது புரட்சிக்கவிஞருடைய பொன்வரிகளாகும்.

அந்த வகையில் இப்போது, தமிழ் முதுகலை பயில்கின்ற மாணவர்களைப் பற்றி எண்ணும் போது, எனக்குக் கூடக் கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது. ஏன் முதுகலை படிக்க வந்தீர்கள் என்று கேட்டால் வேறு துறைகளில் எங்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்கிறார்கள். கடைசியாக, வாழ்க்கைக்கு இதுதான் முடிவு என்று நாங்கள் வந்திருக்கிறோம் என்று சொல்லும்போது அவலமாக இருக்கிறது.

எனவே, இலக்கிய ஆய்வு என்பது உரிய மாற்றங்களைப் பெறவேண்டும். இலக்கியங்களைப் புதுமையாக எவ்வாறு ஆராய்வது?

தமிழ்க்கலைக் கல்லூரிகளில் தொன்மையான இலக்கண இலக்கியக் கூறுகளை வைத்துக் கொண்டு காண்பதா? அல்லது உலக நாடுகளில் வளர்ந்திருக்கின்ற இலக்கியப் போக்குகளையும் – நோக்குகளையும் ஆராய்ந்து தமிழையும் உறவு வைத்துக் காண்பதா? என்ற ஒரு போக்கினைக் கண்ட போது, முதலில் எனக்குக் கூட மருட்சியாகத் தான் தோன்றியது. ஆனால் இப்போது புதுமையின் விளைவாகப் பல்வேறு கருத்துக்களை ஆய்வாளர்கள் சொல்லி வருகிறார்கள்.

அந்தக் கருத்துப் பழமையைப் போற்றிய வகையில் நம் காதுக்குப் பல நேரங்களில் கசப்பாகக்கூடத் தெரிகிறது. ஆனாலும் அந்தக் கசப்பை நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் நான் முடிவு கண்டேன். எனவே என் தந்தையாரும் கூட உரை எழுதும் போதே செல்வார். “என் காலத்திற்கேற்ற வகையில் என் எண்ணங்களை எழுதி வருகிறேன். பொருந்தாத கருத்துக்கள் என்று சொன்னால், அதை மறுத்துப் புதிய வழியில் தொடங்குவது நல்லது.

சமயக் கருத்துக்களை, சித்தாந்தக் கொள்கைகளாக அல்லது பழைய சிந்தனைகளாகத் தமிழ் மக்கள் தம் காலத்திற்கேற்றவாறு கண்டார்கள். ஆனால் இன்றைய நிலையில் அக்கருத்துக்கள் வாழ்க்கைக்குப் பொருந்தும் என்று நான் வலியுறுத்த மாட்டேன்” என்று சொல்வார்கள்.

அந்த வகையிலே மானுடவியல் மட்டுமன்று அறிவியல் பிரிவுகள் எல்லாவற்றிலும் சேர்ந்து உளவியல் பாங்கில் இலக்கியங்களை

அணுகும் முறையால் தமிழ் நாளும் வளர வேண்டும். அதை மிகவும் மகிழ்ச்சியாக இருகை நீட்டி வரவேற்றுப் பாராட்ட வேண்டும் என்பது தான் என் முடிவு.

கேள்வி: மிகச் சிறந்த பேச்சாளரான தங்களது முதல் பேச்சு, எங்கு எப்போது அரங்கேறியது?

பதில்: என்னால் நினைவு கூர இயலவில்லை.

பேசுவது என்பது இயல்பாக வாழ்க்கையில் பிறந்தது.

நான் பள்ளிப் பருவத்திலேயே மேடையில் பேசிப் பல பரிசுகளைப் பெற்றிருக்கிறேன். மனனம் செய்து ஒப்புவித்தல் போட்டியிலும் நான் முதல் பரிசு பெற்றிருக்கிறேன். அந்த வகையிலே தான் கல்லூரிக்கு வந்த போது, பச்சையப்பன் கல்லூரியில் படித்த போது, அனைத்துக் கல்லூரிகளுக்கும் இடையிலான பேச்சுப் போட்டி வைத்திருந்தார்கள். அந்தப் பேச்சு போட்டியில் பங்கு பெறுகின்ற வகையில், நான் வேறு கல்லூரி மாணவர்களோடு நட்புக் கொண்டிருக்கிறேன்.

அந்தப் போட்டிகளில் பங்கெடுத்துப் பரிசு பெற்றதால் அடைந்த ஊக்கத்தை நான் நினைத்துப் பார்த்தால் இன்பமாகத்தான் இருக்கிறது.

நான் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றி இருக்கின்றேன். அங்குப் பணியாற்றிய ஐந்தாண்டுகளில் சனி, ஞாயிறு என்று வந்தால், அயல் ஊர்களுக்குச் சென்று தமிழ்க்கூட்டங்களில் உரையாற்றுவது, மாநாடுகளில் பங்கு பெறுவது என்ற வகையில் பாரதியார் விழாவிலும் – பாவேந்தர் விழாவிலும் சங்க இலக்கிய விழாக்களிலும் பங்கு கொண்டு பேசியிருக்கிறேன்.

என்னுடைய பேச்சை ஆர்வத்தோடு வரவேற்று மிகச் சிறப்பாக நீங்கள் பேசுகிறீர்கள் என்று சொல்லி மூன்று நாட்கள் எனது உரையைக் கேட்ட பெருமை காரைக்குடி நண்பர்களையே சாரும்.

காரைக்குடியில் தான் நான் பேசுவதை மக்கள் கேட்டு மகிழ்ந்தார்கள். ஒரு மணி நேரம் பேசியதாக நினைவிருக்கிறது. காரைக்குடிக்கு அப்போது நான் வாரந்தவறாமல் சென்று பேசியதும், பின்னர் அழகப்பர் கல்லூரியில் பேசியதும் நினைவில் நிழலாடுகின்றன.

காரைக்குடியில் நான் பங்கு கொண்ட ஒரு நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களும் கலைவாணர் என் .எஸ் .கிருஷ்ணன் அவர்களும் பங்கு கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவே நானும் அமர்ந்து 'இதுவல்லவா இன்பம்' என்று உரையாற்றியதை இன்றும் நான் நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

கேள்வி: நீங்கள் தியாகராசர் கல்லூரியில் பாடம் நடத்தினாலும் கவிஞர்களை வளர்த்த பெருமை உங்களின் பெரிய சிறப்பாகிறதே !

பதில்: பதியாகராசர் கல்லூரியில் நான் விரிவுரையாளராகக் கூட இல்லை. உரையாளனாக இருந்தேன். அப்போது உடனிருந்த ஆசிரியர்களைக் காட்டிலும் பிற வகுப்புகளில் பேராசிரியர்கள் வராத நேரத்தில், மாணவர்களின் உரை நிகழ்ச்ச்சிகளுக்குத் போய்த் தலைமை தாங்கும் வாய்ப்பும் எனக்கு வந்தன .

அப்போது நான் எனது கருத்துக்களை எடுத்துச் சொல்லவும், அதில் மாணவர்கள் ஆர்வம் காட்டவும், நான் புதிய நூல்களைப் படிக்கவும், கவிதைகளை நயமோடு எடுத்துச் சொல்லவும் ஆர்வம் கொண்டேன்.

அந்த ஆர்வத்துடைய ஒரு படர்ச்சியாகத்தான் கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் மீ .இராஜேந்திரன், கவிஞர் மேத்தா, கவிஞர் அபிபுல்லா, கவிஞர் காமராசன் இருந்தனர். பெயர்களில் சிலவற்றை நான் மறதி காரணமாக விட்டுவிட்டால் நண்பர்கள் வருந்த வேண்டாம் என்று சொல்வேன்.

ஏறத்தாழ எனது வகுப்பில் படித்தவர்கள் அவ்வளவு பேரும் கவிஞர்களாகவே மாறிவிட்டார்கள். 'பாடும் பறவைகளின் கூடு' என்று எனது வகுப்பறையைக் கவிஞர் சுரதா எழுதிப் போற்றினார். அந்த வகையில் அருமையான கருத்துகளைத் திறமையாக எடுத்துக் கூறுவதில் பெரிய ஆர்வம் வந்தது.

நூற்றாண்டு காணும் சுரதா குறித்து ஒன்றைக் கூற மறந்து விட்டேன். பச்சையப்பன் கல்லூரியில் நான் இருந்த போதே எனக்கு பெருமதிப்பிற்குரிய நண்பர் என்று சொல்ல மாட்டேன், தலைவர் போன்று விளங்கினார் கவியரசர் சுரதா. எனவே சுரதா அவர்களோடு நான் சுற்றாத இடமில்லை. செல்லாத திரையரங்கமில்லை, அவர் பேசுவதைக் கேட்டு மகிழாத நாளில்லை.

பச்சையப்பன் கல்லூரியில் எனது அறையிலேயே பல நாள்கள் அவர் தங்கியிருக்கிறார். அவர் பாடுகின்ற முறையும், விருத்தங்களை அவர் எழுதிக் காட்டுகின்ற நெறியும் பெரிய தமிழ்க்காதலை எங்கள் நெஞ்சங்களில் கிளர்ந்து எழச்செய்தன. அதன் விளைவாகத் தான் உவமைக்கவிஞர் சுரதா அவர்களுடைய பாட்டுவரிகள் போல அமைய வேண்டும் என்ற எண்ணத்தை எங்குப் பார்த்தாலும் சொன்னேன்.

எண்ணிப்பார்த்தால் 1956 – 58 ஆண்டுகளில் வளர்ந்த கவிஞர்கள் அவ்வளவு பேரும் சுரதா அவர்களின் போக்கில் சாய்ந்தவர்களே. அந்த வகையிலேதான் கவிஞர்களுக்கு நடுவில் என்னுடைய நட்பை நான் வளர்த்துக் கொள்ள முடிந்தது.

பச்சையப்பன் கல்லூரியில் என் வகுப்பில் உடன் பயின்ற கவிஞர் நீலமணி ஒப்பற்ற திறமை கொண்டவர். “என்னை விழுங்கி ஏப்பம் விடுகிற நீலமணிக்கு எவரும் நிகரில்லை” என்று சுரதா கூறினார்.

அதே நிலையில் கவியரசனாக மின்னூர் சீனிவாசனும்,வல்லம் வேங்கடபதியும் மிளிர்ந்தார்கள் .வகுப்பில் பாடம் நடக்கும் போது நான் முதல் வரியில் தொடங்க, வல்லம் வேங்கடபதி தேனாக விருத்தத்தை முடித்துக்காட்டும் திறமையாளர்.

கேள்வி: சரபோஜி மன்னர் கல்லூரியில் பணிபுரிந்த காலத்தின், இனிக்கும் நினைவுகள் சிலவற்றைப் பகிரமுடியுமா ?

பதில்: வேலை பார்க்க வேண்டும் என்ற விருப்பத்தால் நான் சரபோஜி மன்னர் கல்லூரியில் பணிபுரிந்தேன்.

அங்கு மாணவர்கள் நான் பேசிய நடையையும், முறையையும் கண்டு என்னிடம் ஒட்டிக் கொண்டனர். எனக்கும் மாணவர்களுக்கும் அவ்வளவு நேயம் வளர்ந்தது.

கலைப்போட்டிகளிடையே மாணவர்களுக்குக் கவிதைகளைச் சொல்லிக்காட்டுவது என்ற நட்புறவு மிகப் பெரிதாக ஓங்கி வளர்ந்திருந்தது.

இன்னும் கூட நினைக்கிறேன், நான் சரபோஜி மன்னர் கல்லூரியில் இருந்த போதுதான், நான் சென்னையிலிருந்தது போல் மகிழ்ச்சியோடு இருந்ததோடு மட்டுமல்லாமல் நான் விடுதிக்குக் காப்பாளராகவும் இருந்தேன்.

எனவே மாணவர்களுக்கும் எனக்கும் அவ்வளவு நட்பு இருந்தது. புரட்சித்தலைவர் அவர்கள் மூன்று நாள்கள் நாடகம் நடத்துவதற்காகத் தஞ்சைக்கு வந்திருந்தார். 'இன்பக் கனவு' என்பது நாடகத்தின் பெயர்.

மாணவர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு உங்களுக்குத் தான் எல்லோரையும் தெரியுமே. புரட்சித் தலைவரை எப்படியாவது நம் கல்லூரிக்கு அழைத்து வாருங்கள் என்று கூறினர்.

அந்த நாளில் புரட்சித் தலைவர் ஒரு கல்லூரிக்கு வருவதென்பது மாபெரும் கனவாகும். யாரும் அவரை அவ்வளவு எளிதில் அணுகமுடியாது. ஆனால் புரட்சித்தலைவரிடம் பணியாற்றிக் கொண்டிருந்த கவிஞர் முத்துக்கூத்தன் எனக்குப் பச்சையப்பன் கல்லூரியிலிருந்தே நண்பரானவர். அது மட்டுமல்லாமல், கவியரசர் சுரதாவோடு நான் சென்றிருந்த போது புரட்சித் தலைவரைக் கண்டிருக்கிறேன். பேசியிருக்கிறேன்.

புரட்சித் தலைவருடைய தமையனார் பெருந்தகை சக்கரபாணி அவர்களோடு நாங்கள் நட்பாகப் பழகியிருக்கிறோம்.

அந்த வகையில் நான் புரட்சித் தலைவரைப் பார்க்க வேண்டும் என்று சொன்ன போது கவிஞர் முத்துக்கூத்தன் 'வாங்க எவ்வளவு நாளாயிற்று உங்களைப் பார்த்து' என்று மகிழ்ச்சியோடு அவரிடம் அழைத்துக் கொண்டு போனார்.

புரட்சித் தலைவர் என்னைப் பார்த்து 'எங்கே இருக்கிறீர்கள் நடராசன்' என்று கேட்டார். அப்போது அவருக்கு நடராசன் என்ற பெயர் தான் நினைவுக்கு வந்தது. நான் இந்தக் கல்லூரியில் பணிபுரிகின்றேன். புரட்சித் தலைவரை மாணவர்கள் – ஆசிரியர்கள் அனைவரும் வரவேற்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். எல்லோரும் புரட்சித்தலைவர் கல்லூரிக்கு வர வேண்டும், பேச வேண்டும் என்று துடிக்கிறார்கள் என்று கூறினேன். "அதற்கென்ன ? நீங்கள் சொல்லும் நாளில் வருகிறேன்" என்றார். ஆனால் அவரைச் சுற்றியிருந்தவர்கள் – தலைவரே, நீங்கள் ஒரு பத்துமணித் துளிகள் பேசலாம். மாணவர்களைப் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் இருக்க வைக்க முடியாது. அதோடு கட்சிக்கூட்டங்கள் எல்லாம் இருக்கின்றன எனப் பலபேர் சொன்னார்கள்.

நம்ப மாட்டீர்கள். சரபோஜி மன்னர் கல்லூரிக்கு வந்து ஒரு மணி நேரம் பேசினார் எம்.ஜி.ஆர். அவர் உடுத்தியிருந்த உடை, அவர்

அணிந்திருந்த கண்ணாடி, கையிலிருந்த கடிகாரம் மிகப் பெரிய அணிகலன்களாக அவரை மேலும் அழகு செய்தன. அந்த நாள் கல்லூரிக்குப் பொன்னாளாக அமைந்தது.

மேலும், தஞ்சையில் நான் தமிழறிஞர்கள் பலரிடம் பழகியிருக்கிறேன். பள்ளியகரம் நீ.கந்தசாமிப் பிள்ளை பேரறிவுப் பெருங்கடல். திருவையாற்றுக் கல்லூரியில் இராம.கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களெல்லாம் மிகப்பெரிய கல்விவாணர்கள்.

அதே போல வழக்கறிஞர் டி.என். இராமச்சந்திரன் கல்வியில் கரைகண்டவர். ஆங்கிலமும், தமிழும் ஆகிய இரண்டு கடல்களையும் நீந்தி வென்றவர். இவர்களுக்கு நடுவிலே தான் நான் எப்போதும் இருப்பேன். எனவே இவர்களிடத்தில் பொழுதைக் கழித்தபோது எனக்குக் கல்வி வளர – உலகியலை நான் உணர – வாழ்வியலில் தெளிவு பெற மிகப் பெரிதாக இருந்தன . இப்படித்தான் என் தமிழும் வளர்ந்தது.

கேள்வி: சமீபகாலங்களில் நம் தமிழ் விழாக்கள் பின்தள்ளப்பட்டு, வடக்கத்திய விழாக்களைச் சிலர் முன்னிலைப்படுத்துவதால், நம் பண்பாடு சீரழிவுக்கு உள்ளாகாதா ?

பதில்: மரபுக் கலைகளும் தமிழுணர்வோடு சார்ந்த விழாக்களும், மெல்ல மெல்ல நலிந்த நிலையில் தேய்ந்து வருகின்றன. முன்னர் மாநில உணர்வு என்பது பலருக்கும் தெரியாமல் இருந்தது.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் ,முத்தமிழறிஞர் கலைஞரும், தமிழ் மக்கள் நெஞ்சில் எழுச்சித் தீயை அணையாமல் வளர்த்து வந்திருக்கிறார்கள்.

இதனால் காலத்தினுடைய மாற்றமும் அரசியல் போக்கும் திசை மாறின. இந்த நிலையில் மாநில உணர்வுகள் மிஞ்சினால் இந்திய அரசுக்கு இடர்ப்பாட்டை உருவாக்கும் என்ற பிழையான எண்ணம் படர ஆரம்பித்தது. அந்தப் படர்ச்சி நல்லது இல்லை.

மாநிலங்கள் தலைமையும் முதன்மையும் பெறுகின்றபோது, நாம் நினைக்கிற நல்வாழ்வும் நற்கலைகளும் தமிழ்ப் பண்பாடும் சிறந்து ஓங்கும் என்று நம்புகிறேன்.

கேள்வி: எல்லாக் கவிஞர்களையும் உச்சி மேல் வைத்து மெச்சுகிறவர் தாங்கள் என்பதால் கேட்கிறோம்.

பதில்: பக்கத்து மாநில மொழிக் கவிஞர்களுக்குக் கூட ஞானபீட விருது கிடைக்கிறது. ஆனால் அது தமிழ்க் கவிஞர்களில் ஒருவருக்குக் கூட இதுவரை கிடைக்கவில்லையே ?

தமிழகத்தில் வாழும் கவியரசர்கள் ஈடில்லாத கவிதைகளைப் படைத்து, எட்ட முடியாத உயரங்களைத் தொட்டிருக்கிறார்கள். அவர்களின் படைப்புகளைக் கண்டு அயல்நாட்டவர் சிலரிடம் நான் மொழிபெயர்த்துச்கூறியதைக்கேட்டுவியந்துபாராட்டியிருக்கிறார்கள்.

நான் பழகியதில் வாழும் கவிப்பேரரசு வைரமுத்து, கவிப்பேருவி ஈரோடு தமிழன்பன், பாரதியார் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும், சாகித்ய அகாதமியின் துணைத் தலைவராகவும் திகழும் கவியரசர் சிற்பி பாலசுப்பிரமணியம், புதுக்கவிதை தமிழகத்தில் பிறந்த போதே அதனை எடுத்து வளர்த்து எழில் கூட்டிய பெருமைமிகு கவிஞர் மு.மேத்தா, நான் முன்னமே குறிப்பிட்டதைப் போலக் கல்லூரியியில் என்னோடு உடன் படித்தவரும், எழுத்துக்கு எழுத்து என்னை இவர் விஞ்சிவிடுவார் போலிருக்கிறது என்று சுரதாவால் குறிப்பிடப்பட்டவருமான கவியரசர் நீலமணி, புரட்சிக்கவிஞர் பாரதிதாசனிடத்தில் நெருங்கிப் பழகி, அவரது நெஞ்சைக் கவர்ந்து, இன்றுவரை முல்லைச்சரம் கவிதை இதழை நடத்திவரும் கவிஞர் பொன்னடியான், கவியரசர் புலமைப்பித்தன். மறைந்த பொன்னிவளவன், புலவர் இளஞ்செழியன் என என் நெஞ்சைக் கவர்ந்த பலரை நான் நினைக்கிறேன்.

அதேபோல் கவிஞர் சென்னிமலை தண்டபாணி எளிய நடையில் எழுதும் எரிமலை எண்ணங்களைக் கொண்டிருக்கிறார். இத்தனைக் கவியரசர்கள் நம்மிடையே இருந்தும் இதுவரை ஞானபீட விருது, இந்தப் பக்கம் திரும்பிப் பார்க்காதது வருத்தத்திற்குரியது.

இந்திக் கவிஞர்களைப் போற்றுவது போல மாநிலக் கவிஞர்களை ஏன் புறக்கணிக்கிறார்கள் என்று என்னிடத்தில் ஒருமுறை கேட்டார்கள்.

இதிகாசக் கதை மாந்தர்களை உயர்த்திப் பிடிப்பதில் பிற மாநிலக் கவிஞர்கள் – கதையாசிரியர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் .தமிழில்தான் தன்மானப் புரட்சியான எண்ணங்கள் பூத்துள்ளன என்று சொன்னேன். தொன்மங்களில் தோய்ந்து புரள்வதை தமிழ்க்கவிஞர்கள் வெறுத்துப் பல ஆண்டுகள் கழிந்துவிட்டன.

ஒரு நிகழ்ச்சி இப்போது என் நினைவுக்கு வருகிறது. நான் தமிழ் வளர்ச்சித்துறையில் செயலாளராக இருந்தபோது, என்னோடு இசை மாமன்றச் செயலாளர் என்ற வகையில், என் நண்பரும் தொழிலதிபருமான டி.டி.கே வாசு, சங்கீத அகாதமியின் சார்பில் தில்லியில் நடந்த சங்கீத அகாதெமியின் செயற்குழுவுக்கு வந்திருந்தார்.

அந்த ஆண்டின் விருதுகளை அங்கே அறிவித்த போது, அந்தப் பட்டியலில் தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் பெயரும் இல்லை.

அது நல்ல மாலை வேளையில் நடந்த நிகழ்ச்சி. டி.டி.கே வாசு அவர்கள், இதனால் கோபமுற்றுத் திடுமென எழுந்து நின்று, கைகளை வலுவாக வீசியபடித் தமிழ்நாட்டில் தமிழர்களுக்கு ஐந்து இடங்களைக் கூடத் தரவில்லை என்றால், உங்களைத் தொலைத்துவிடுவேன் என உரக்க அதட்டிக் கூறினார்.

அவருடைய உரத்த குரலைக் கேட்டு அஞ்சி ஐவருக்கு விருதுகளை அப்போதே அறிவித்தார்கள். எனவே கையசைத்துக் காட்டி, மிரட்டுகிறவர்களைக் கண்டுதான், அச்சுறுத்துகிறவர்களைக் கண்டுதான் விருதுகள் வரும் என்ற தில்லியின் போக்கு நல்ல போக்காக எனக்கு அப்போதே தெரியவில்லை. இதுதான் ஞானபீடத்துக்கும் விடை.

கேள்வி: தங்கள் நெஞ்சில் நிறைந்த ஆசிரியப் பெருமக்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல முடியுமா ?

பதில்: பள்ளியில் நான் பயிலும் போது எனக்குக் கற்பித்த ஆசிரியர் புலவர் கணபதி அவர்களை மறக்கமுடியாது. அதேபோல், தியாகராசர் கல்லூரியில் நான் பணியாற்றும் போது உடனிருந்த பேராசிரியர் ஆர்.சங்கரநாராயணன், பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் மு.வ., பேராசிரியர் அ.மு.ப. ஆகியோரை எல்லாம் எண்ணிப் பார்க்கிறேன்.

பேராசியர் மு.வ. அவர்களைப் போலவே சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர்கள் ந.சஞ்சீவி, சி.பாலசுப்பிர மணியன், இ.சுந்தரமூர்த்தி இவர்கள் எல்லாம் பேராசிரியர்களாக இருந்து துணைவேந்தர்களாகவும் விளங்கினார்கள். பேராசிரியர் சஞ்சீவியார்க்கு அந்த வாய்ப்பு வந்து அவராலேயே தவறி விட்டது.

பேராசிரியப் பெருமக்களில் சிலர் அறிவாற்றலிலும் தகுதியிலும் திறமையிலும் சிறந்து வருகிறார்கள். நாடு போற்றும் பேராசிரியர் தெ.ஞானசுந்தரம், பேராசிரியர் எழில் முதல்வன், பேராசியர் தி.இராசகோபாலன், பேராசிரியர் இராம.குருநாதன் ஆகியோரையும் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். அந்தத் திறமையாளர்கள் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

கேள்வி: தமிழுக்கும் தமிழர்களுக்கும் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று எண்ணுகிறீர்கள் ?

பதில்: எதிர்காலம் பொற்காலமாக அமையும் என்பதுதான் என் உறுதியான எண்ணம், கனவு, ஏக்கம். மூடுபனி மறைத்தாலும் கூட முகிலைக் கிழித்துக்கொண்டு வெண்ணிலவு வருவது போலக் காலம் வரும் போது, தமிழின் பெருமிதம் ஞாலமெல்லாம் கைதொழுது போற்றும் உயர் நிலையை அடையும் என்பதுதான் என்னுடைய எதிர்பார்ப்பு. என்னுடைய அந்த விருப்பம் நிறைவேறி வருவதாக நம்புகிறேன்.

கேள்வி: இன்றைய வாழும் கவிஞர்களில் உங்கள் இதயத்தைத் தொட்ட சிலருடைய பெயரைக் குறிப்பிட முடியுமா ?

பதில்: கவிப்பேரரசு வைரமுத்து, எல்லையில்லாத பரிசுகளைப் பெற்று எட்டமுடியாத உயரத்தில் இருக்கிறார்.

கவியரசு ஈரோடு தமிழன்பனும் நானும் நெருங்கிய நண்பர்கள். தியாகராாசர் கல்லூரியில் பணியாற்றும்போது, அவரது அழைப்பில்தான் சேலம், ஈரோடு, மற்றும் அதைச் சுற்றியுள்ள கோவை உள்ளிட்ட பகுதிகளில் எல்லாம் இலக்கிய விழாக்களில் கலந்துகொண்டேன்.

அப்படிப்பட்ட விழாக்களை நடத்துவதற்குப் பெரிய தூணாக இருந்தவர், அவருடைய செல்வாக்கு அவருடைய தோற்றம், அவர் காட்டுகிற பரிவு, அவர் அளிக்கும் விருந்து, இவற்றை நான் நினைத்து நினைத்துப் பார்த்துப் பெருமிதமடைகிறேன்.

ஈரோடு தமிழன்பன் புதிய வடிவங்களைப் புனைந்து காட்டுவதில் வல்லவராகத் திகழ்கிறார். புரட்சிக்கவிஞர் அவரை அழைத்துக்கொண்டு போய் பாரி நிலையத்தில் அவர் எழுதிய புதினத்தைக்காட்டி எவர் இவரைப்போல எழுதமுடியும், நாளையே பாரி இதை அச்சடிக்கத் தொடங்கவேண்டும் என்றார்.

நான் பச்சையப்பன் கல்லூரியில் இருக்கும் போதே எனக்கு நன்றாகத் தெரிந்தவர் சிலம்பொலி செல்லப்பன்.

அவருடைய உடன் பிறவாத இளவல் போலக் கவியரசர் ஈரோடு தமிழன்பன் கவிதையில் புதுநெறிகள் காட்டிச் சிறந்து செழித்து நிற்பதைக் காணும்போது, என் மனம் மகிழ்ச்சியில் திளைக்கிறது. அந்த வகையில் நான் எப்போதும் போற்றும் பெருமித வரிசையில் கவிப்பேரரசு வைரமுத்து – கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் – சிந்தனைக்கடல் சிற்பி பாலசுப்பிரமணியன் இடம் பெற்றிருக்கிறார்கள்.

கேள்வி: மொழிப் போராட்டங்களில் கலந்து கொண்டதுண்டா ? இந்தி எதிர்ப்புக் காலகட்டத்தில் தங்கள் நிலைப்பாடு எப்படியிருந்தது ?

பதில்: நான் அப்போது கல்லூரியில் உரையாளராகச் சேர்ந்திருந்தேன். அருமை மாணவர் திலகங்களான கா.காளிமுத்து, நா.காமராசன், விருதுநகர் பெ. சீனிவாசன் ஆகியோர்தாம் அந்த நேரத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தில் மாணவர்களுக்குத் தலைமை தாங்கினார்கள்.

மாணவர்கள் மனத்தில் அடங்காத தமிழ் ஆர்வமும் – காங்கிரசு இயக்கத்தின் மீது கடுங்கோபமும் கொப்பளித்துக் கொண்டிருந்த நேரம் அது. அப்போது அங்கே தமிழ்த்துறைத் தலைவராகத் திகழ்ந்தவர் மானமறவர் தொல்காப்பியப்பேராளி பேராசியர் இலக்குவனார் ஆவார்.

மாணவர்களுக்கு அப்போது ஒரு சிந்தனை இருந்தது. அதை இப்போது சொன்னால் குற்றமில்லை. தமிழார்வம் என்பது அவர்களுக்குப் பெருக்கெடுத்து ஓடியபோதும், திராவிடர் கழகச் சிந்தனைகள் அவர்கள்பால் இருந்த போதும், தமிழ் உணர்வு வேறு... தனித்தமிழ்ச் சிந்தனை என்பது வேறு... என்பது போலக் கொஞ்சம் முரண்பட்டிருந்தார்கள். அப்படி முரண்பட்டதிலும் பிழை இல்லை. அப்போது மாணவர்களுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் வழிகாட்டுவதற்குப் பேறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும்தான் துணையாக இருந்தார்கள்.

தனித்தமிழ் இயக்கத்தை அரசியலாக மாற்றக்கூடாது என்று நான் வலியுறுத்தினேன். பிறகு என் கருத்தே தக்கது என்று அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். தியாகராசர் கல்லூரி அப்போது ஒரு தமிழ்க் களமாகக் காட்சியளித்தது.

அப்போது அங்கே மாவட்ட ஆட்சித் துணைத் தலைவராகப் பணியாற்றியவர் நண்பர் நாகராசன் ஆவார்.

அவரைப் பற்றிச் சொல்வதென்றால் எல்லோருக்கும் வியப்பாக இருக்கும். அவர் முத்தமிழறிஞருடைய செயலாளராக இருந்தவர். இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்ந்தடுக்கப்பட்டவர். அவர் புதுக்கோட்டையில் கல்லூரி மாணவராக இருந்தபோது அனைத்துக் கல்லூரிப் பேச்சுப் போட்டியில் பங்குபெற்று முதற்பரிசு பெற்றவர். ஆங்கிலம், தமிழ் இருமொழிகளிலும் திறமை வாய்ந்தவர்.

அப்போது அவர் அரசுப் பொறுப்பில் இருந்ததால் அவர் அடிக்கடி கல்லூரிக்கு வந்து காண்பார். அவர்தான் மாணவர்களின் இந்தி எதிர்ப்புப் போராட்டம், விபரீத எல்லையைத் தொடாதபடி, தணிக்கவும், அதே நேரம் மாணவர்களின் உணர்வுகளைப் பாராட்டவும் இருந்தார் . அவர் அப்போது என்னையும் கூட ஆற்றுப்படுத்தினார். களத்தில் இறங்குவது போன்ற நிலை எனக்கு இல்லாது போனாலும், நான் அதைக் கண்டு ஊக்கப்படுத்தி வந்தேன்.

அப்போது என் நெஞ்சம் கவர்ந்த அருமை மாணவரான கா.காளிமுத்து, தான் ஆற்றுகிற உரைகளை எல்லாம் , என்னிடத்திலே அளித்து இதை நீங்கள்தான் செப்பமாக முடித்துத் தரவேண்டும் என்பார்.

'சிட்டுக் குருவிகளைச் சுட்டுத் தள்ளுவது போல, எட்டுப் பேரைக் கொன்றவரா, இனிமேலும் இந்த நாட்டை எப்படிக் காப்பார்? எப்பக்கம் வந்து புகுந்து விடும் இந்தி, எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்?' என்பது போன்ற தொடர்கள் அப்போது நிலைபெற்றன.

இந்த மாணவர்களை எல்லாம் ஈரம் படிந்த தீக்குச்சி என்று நினைக்காதீர்கள். ஒருமுறை உரசினாலேயே ஊரே பற்றியெரியும் பாருங்கள்..'

என்றெல்லாம் நெருப்பு வரிகளை, நான் எழுதிக்காட்டிய நிகழ்வுகளெல்லாம் என் நினைவுக்கு வருகின்றன.

கேள்வி: செய்தித்துறைத் துணை இயக்குநராக இருந்த நீங்கள் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநராக ஆனது எப்படி?

பதில்: நான் செய்தித்துறையில் வந்து சேர்ந்தபோது, பெருந்தகை நாகராசன் முதலமைச்சருடைய செயலாளராக

இருந்தார். அந்த வகையிலே அவர் என் மீது அன்புகொண்டவர் என்பதால், செய்தித்துறையில் ஒரு பத்துத் திங்கள் இருந்திருப்பேனா என்று தெரியவில்லை,. அதற்குள்ளாகவே என்னை மொழிபெயர்ப்புத் துறை இயக்குநராக மாற்றிவிட்டார்கள். அது பெருமை தருவதுதான் என்றாலும். செய்தித்துறையினுடைய செல்வாக்கும், ஆட்சித் திறனும் அங்கே குறைவு. இருந்த போதும், மொழிபெயர்புத்துறை இயக்குநராக அப்போது ஓய்வுபெற்ற அறிஞர் கு.இராஜவேலு அவர்களின் இடத்திற்கு நான் செல்வதில் பெருமிதம் கொண்டேன்.

ஏனென்றால் எவரும் எளிதாக நெருங்க முடியாத அனலைப் போல விளங்கியவர் அவர். அவருடைய தமிழ்ப் புலமையைப் பேராசியர் மு.வ. பராட்டிக் கூறியதைக் கண்டு மாணவ நிலையிலேயே நான் பலமுறை வியந்திருக்கிறேன். பேராசிரியர் மு.வ., பேராசிரியர் தெ.பொ.மீ, இருவரும் அவருக்கு அவ்வளவு உவப்பாக இருந்தார்கள். தேசிய இயக்கத்தில் பெருந்தலைவர் காமராசருக்கு வலது கரமாக இருந்து பல்வேறு சிந்தனை முடிவுகளைக்கூற அவருக்கு உதவியாக இருந்தவரும் பேராசிரியர் இராஜவேலுதான். தியாகச் சுடரான அவர் மாணவப் பருவத்தில் பி.ஏ.ஆனர்ஸ் முடிக்கும் போதே, 'அழகு ஆடுகிறது' என்கிற ஒரு புதினத்தை எழுதி 'கலைமகள்' இதழில் ரூபாய் ஆயிரம் பரிசு பெற்றவர். அவருடைய நடையழகும், சங்க இலக்கியத் தெளிவும்,ஆங்கில இலக்கிய ஆற்றலும் சிகரங்களைத் தொட்டவை .

அப்போது தேசிய இயக்கச் செல்வாக்குப் பெற்றவர்கள் என்று மூன்று பேரைச் சொல்வார்கள். ஒருவர் தலைமைச் செயலாளராக இருந்த கா.திரவியம், இன்னொருவர் செய்தித்துறை இயக்குநராகவும் பிறகு ஊரகத்துறை இயக்குநராகவும் இருந்த குழந்தைவேலு, மொழி பெயர்ப்புத்துறை இயக்குநராக இருந்த பேராசிரியர் கு.இராஜவேலு. இந்த மூன்று பேரும்தான் என்று அனைவரும் கூறினார்கள் .

முத்தமிழறிஞருடைய நெஞ்சத்தில் நிலையான இடத்தைப் பெற்ற பெருந்தகை கவிஞர் கருணானந்தம் போல அன்பு காட்டுகிறவர் என்று இன்னொருவரைச் சொல்ல முடியாது. அவருக்கு எவ்வளவு பெரிய ஆளுமை இருந்தது என்று சொன்னால், கலைஞர் எதையாவது எழுதிப் பாதியில் நிறுத்தியிருந்தால், மீதியை முடித்துக் காட்டுகிறவர் அவர்தான். மேலும் நாள்தோறும் முதலமைச்சர் கலைஞரை ஒரு மணி நேரமாவது அவர் சந்தித்து உரையாடுவார். அப்போது இருவரும் கலந்து பேசி யாருக்கும் தெரியாத அரசியல் முடிவுகளை எல்லாம்

எடுத்ததை நான் நன்றாக அறிவேன். எனவே கவிஞர் கருணானந்தம் அவர்கள் தான் பரிந்துரைத்தார்கள்.

நீங்கள் மொழிபெயர்ப்புத் துறைக்குப் போவதை நான் பாராட்டுகிறேன். அதற்கு ஆங்கிலப் புலமை பெரிதும் தேவைப்படும். எனவே நீங்கள் அந்தத் துறைக்குப் போகலாம். நான் இங்கேயே இருந்து, இந்திய ஆட்சிப் பணிக்கு வாய்ப்பு வருகிற போது, உங்களை எனக்குப் பதிலாக அழைக்க நான் ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார்.

அவருடைய சொல் எனக்கு மந்திரச் சொல்லாக இருந்தது. அவர் காட்டிய பரிவை இப்போதும் நினைக்கிறேன் சரி என்று மொழி பெயர்ப்புத் துறை இயக்குநராக மகிழ்வோடு போய்ச் சேர்ந்தேன்.

கேள்வி: இனிய உதயம் வாசகர்களுக்குப் பொங்கல் திருநாள் வாழ்த்தாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள் ?

பதில்: நான் பல்லாண்டுகளாக அறிந்த நண்பர் நக்கீரன் கோபால். அவருடைய நெஞ்சத் துணிவையும் நேர்மைக்குப் போராடுகிற ஆற்றலையும் நான் போற்றியிருக்கிறேன் .

பார்க்கின்ற போதே அவரது அடர்ந்த மீசை, அவருடைய நெஞ்சத்தில் வழிகிற அன்பு வெள்ளம், இவற்றைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் எப்போதும் போற்றிப் புகழும் கவியரசர் அப்துல்ரகுமான் சொல்லித்தான் இனிய உதயம் இதழ், கலைநலம் பொலியும் வடிவில் வருகிறது என்பதை அறிந்து என் நெஞ்சம் உருகுகிறது.

நான் கவிக்கோ அப்துல்ரகுமான் கவிதை வரிகளைச் சொல்லிக் காட்டவேண்டும் என்று நினைக்கிறேன்.

தியாகராசர் கல்லூரியில் அவர், மாணவராக இருந்த போது, இராசராசன் விழாவைப் பேராசிரியர் இலக்குவனார் நடத்தினார்.

அப்போது கவியரங்கத்தில் அப்துல்ரகுமான் பாடிய போது,

'வாளெடுத்துப் போர் தொடுத்தல்
இவனுக்கு வாடிக்கை !
வீரக் களத்தில் – இரத்த

ஈரக் குளத்தில் ஆடிவருவது

அவனுக்கு வேடிக்கை'

என்று சொன்னபோது, நாங்கள் வியந்தோம். அடுத்த எதுகை எப்படி என்று பார்த்தால்,

'பாடிக் கைநீட்டிப் புலவர்கள் வந்தால்

தருவதற்கு அவனுக்கு இருந்தன கோடிக்கை'

– என்று பாடியிருந்தார்.

அப்துல் ரகுமானுடைய சிந்தனை, ஆழத்திலும் ஆழம் உடையதாகும். அந்த ஆழ்ந்த சிந்தனையோடு, எழுத்தை எண்ணி எண்ணி கவிதையாகச் செதுக்கிய திறத்தை நான் பலமுறை நேரில் கண்டு நெஞ்சைப் பறிகொடுத்தவன்.

"வந்தாரா நடராசன் என்று வழிபார்த்து வருந்தி நின்றோம்

என் தாரா உடனிங்கு வந்தேன் என்று வந்தவரே

என்றும் எந்நாளும் என் இதயம் உவந்தவரே" –

என்று பெங்களூருவில் நடந்த விழாவில் அவர் கூறிய தொடர்கள் என் கண்களை நனைக்கின்றன .

அவருமில்லை – அவர் எழுதிய என் தாராவும் இப்போதில்லை.

அவர் இனிய உதயம் இதழுக்கான வழிகாட்டியாக இருந்தார் என்பதையும், ஏற்கனவே இதழியல் உலகத்தின் திலகமாகத் திகழ்கிற சகோதரர் நக்கீரன் கோபால், அவர் கருத்தை உடனே வரவேற்று ஏற்றுக்கொண்டார் என்பதையும் எண்ணிப் பெருமிதத்தோடு போற்றுகிறேன்.

நண்பர் ஆரூர் தமிழ்நாடன் ஆற்றல் வாய்ந்தவர். அவருக்குக் கவிதையும் தெரியும், உரைநடையும் தெரியும், காவியங்களும் தெரியும். இம்மூன்றின் எல்லையைக் கடந்து அரசியலும் நுணுக்கமாகத் தெரியும். எனவே அப்படிப்பட்டவர் உதயத்தின் இணையாசிரியராகத் திகழ்கிறார்.

இது இனிய உதயம் தான். இது எல்லாப் பொழுதிலும் எல்லாக் காலத்திலும் செழித்துச் சிறப்படைய வேண்டும் என்று நான் மகிழ்ச்சியோடு வாழ்த்துகிறேன்.

வாசகர்களான தமிழ்ப்பெருமக்களுக்கும்படைப்பாளர்களுக்கும் என் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களைக் கூறுவதில் மகிழ்கிறேன்.

நலிந்து மனம் உடைந்த நிலையிலும் என்னை நினைவு கூர்ந்ததை எண்ணிக் கலங்குகிறேன்.

நேர்காணல்: சென்னிமலையார்

உதவி: கே.பிரதாப்

தமிழறிஞர் ஔவை நடராஜன் சிறப்பு நேர்காணல்!

இனிய உதயம் vol 20-issue 08 - Jan 2021



22. நினைவுகள் அழிவதில்லை !

அருட்செல்வரோடு நான் நாற்பதாண்டுகளுக்கு மேல் பணி யாற்றியவன். உயரிய இயல்புகளோடும் – ஓங்கிய சிந்தனை களோடும் – தெளிவார்ந்த முடிவுகளோடும் வாழ்ந்த அருட்செல்வரை நான் நினைக்காத நாளே இல்லை.

அவருக்கு எக்கணமும் மனம் ஓய்வாக இருந்ததே இல்லை. எதையாவது எண்ணிக்கொண்டிருப்பது அவருடைய இயல்பு. நாடு, மொழி, இனம், அரசியல், வணிகம், தொழில் வளர்ச்சி, கல்வி மேம்பாடு, கலை வளர்ச்சி, விளையாட்டு, சமயம், சன்மார்க்கம், பொது நலம் என்று அடுக்கிக்கொண்டே போனால் அவை பற்றிய எண்ணற்ற செய்திகளை ஒவ்வொரு கணமும் நினைத்துப் புதிய கருத்துக்களை எடுத்துச் சொல்வார்கள்.

சொல்லியபடியே நினைத்ததை எப்படியாவது ஒருநாள் நிறைவேற்றுவார்கள்.

சென்னைக்கு ஒருமுறை நாங்கள் திரும்பும்போது திண்டிவனம் தாண்டி 20 கல் வந்திருப்போம். எதிரில் ஒரு வாத்துக்கூட்டம் சாலையை அடக்கிக்கொண்டு தன் அழகிய நடையோடு நடந்து கொண்டிருந்தது. நாங்கள் வந்த பிளைமவுத் காரை எவ்வளவோ திறமையாக ஓட்டுநர் துரைசாமி மெல்ல ஓட்டி வந்தாலும், சீருந்தின் கடைசிப் பகுதி ஒரு வாத்தின் வலது பக்கத்தை உரசிவிட்டது. அது 'கீச்சு' என்றதும் அருட்செல்வரால் அந்த அவலத்தைத் தாங்க முடியவில்லை.

உடனே தள்ளிக் காரை நிறுத்திச் சொல்லி 'என்ன ஆயிற்று' என்று தவித்து அங்கே விரைந்து போனார். வாத்தின் உரிமைக்காரர் ஓர் எளிய விவசாயி." அது பெரிய அடி இல்லைங்க ஐயா ! ஓட்டுநர் மீது தவறில்லை – நீங்கள் போகலாம். இதற்கு ஒன்றும் விலை இல்லை...' என்று எளிமையாகவும் பெருமிதமாகவும் சொன்னார்.

ஆனாலும் அருட்செல்வர் மனம் தாங்காமல், தன் பையில் இருந்த ரூபாய் 500 கொடுத்து "வாத்துகளுக்கு எல்லாம் வலையிட்டுக்கொண்டு அழைத்துப்போவதை நான் வடநாட்டில் பார்த்திருக்கிறேன். இங்கேயும் அப்படிச் செய்யலாம்" என்று சொல்லிவிட்டுத் திரும்பி வந்தபோது சற்றுச் சிறிது தொலைவு தள்ளி வந்து ஓட்டுநர் துரைசாமியைப் பார்த்து "நீ பதை பதைத்துப் போயிருப்பாய். நாம் ஒரு மணிநேரத்தில் சென்னைக்குப் போக முடியாது. நீ பின்னால் உட்கார்ந்துகொள். ஔவை, நீங்கள் வந்து முன்னால் என்னுடன் அமருங்கள். நான் ஓட்டுகிறேன்" என்று கூறி 45 மணித்துளியில் சென்னை வந்து சேர்ந்தோம்.

ஆடு – மாடு வளர்ப்பு, கோழிப் பண்ணை, வாத்து வளர்ப்பு இவைகளில் எவ்வளவு தொழில்நுட்பங்கள் உலகநாடுகளில் இடம் பெற்றுள்ளன என்று சொல்லி வந்தவர்.

தேம்சு நதி தீரத்தில் மிதக்கும் வாத்துக்கள் 'அன்னங்கள்' என்றே அவற்றைச் சொல்லலாம். அவை அத்தனையும் இங்கிலாந்து அரசியாரின் தனிப்பட்ட அசையும் சொத்தாகும். அதனைக் கண்காணிப்பதற்காக ஒரு வாரியமே இருக்கிறது, 'என்ற தகவலைக் கூறி விட்டு' நமது மாநிலத்திலும் அப்படிப்பட்ட வாரியங்கள் அமையவேண்டும் என்று சொன்னார்.

பின்னாளில் அந்தக் கருத்து சில மாவட்டங்களில் சட்டசபையில் இவர் வாதிட்டதனால் நிறைவேறியது.

இப்படியெல்லாம் ஓய்வில்லாமல் அவருடைய மனத்தில் சிந்தனை அலைகள் புரண்டு கொண்டே இருக்கும். –

தன்னுடைய இல்லத்திற்குத் திரும்பிய போது சாலையில் 10 – 15 சிறுவர்கள் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்தார்கள். காரைப் பார்த்தவுடன் திடீரென்று கலைந்துவிட்டார்கள். அது விடுமுறைக் காலம்.

இதைக்கண்டு அருட்செல்வர், ஒவ்வொரு பள்ளியிலும் – பூங்காவிலும் – மாநகராட்சித் திடலிலும் கிரிக்கெட், ஹாக்கி, வலைப்பந்து, உதைபந்துப் பயிற்சி அளிக்க வேண்டும். தன் செயலாளர் ரவியைப் பார்த்து 'விடுமுறைக் காலங்களில் நம்முடைய இல்லத்தின் முகப்பிலோ – பின்புறத்திலோ, கிரிக்கெட் ஆட சணல் பின்னல் பாய் விரித்து 4 மட்டைகள், 6 பந்துகள் வாங்கி வைத்து இப்பிள்ளைகளை வந்து விளையாடச் செய்யுங்கள்' என்று கூறியதோடு, அடுத்த

வாரமே அருட்செல்வரும் – ரவியும் விளையாடும் பிள்ளைகளோடு கண்டபோது நான் கண்டு வியப்படைந்தேன்.

புனித மேரி சாலையில் மாணவச் செல்வங்களைப் பார்த்துப் புன்னைகைப்பார். இந்தப் பருவம் வாழ்க்கையில் மிகச் சிறப்பான காலமாகும். பாடங்களைப் படிக்கும் போதே மனத்தில் பதிந்து விடும். அவர்களின் பிஞ்சு விரல்கள் மடிக்கவும் – பிடிக்கவும், எதையும் வளைக்கவும் – நீட்டவும் – இழுக்கவும் தயங்காது.

"நான் எங்கோ படித்திருக்கிறேன். ஒரு சிற்றூரில் தொழிற்கூடத்தில் கழற்ற முடியாமல் இணைந்த இரு வளையங்கள் பல ஆண்டுகளாகத் துருவேறிக் கிடந்ததாம். பள்ளிக்கூடத்து விளையாட்டுத் திடலில் அந்த வளையத்தை ஓரத்தில் போட்டு வைத்திருந்தார்கள். சில திங்கள் கழித்துப் பார்த்தால் இரண்டு வளையங்களும் கழன்று தனித்தனியாகக் கிடந்தன. இளமைக்கு அவ்வளவு வலிமை இருக்கிறது. அந்த வலிமையை வகைப்படுத்தினால் எதிர்காலத்தில் பெரிய பயன் விளையும்" என்றார் அருட்செல்வர்.

கல்வி என்பது கையும் காலும், மூளையும் ஒன்றாக இணைந்து இயங்கும்போது தான் முழுமை பெறும் என்று நம்மவர்கள் பலகாலம் நினைத்ததில்லை. அதனால் 'உழைப்பது வேறு, சிந்திப்பது வேறு' என்றே இருபிரிவுகளாக்கி விட்டார்கள்.

'உழைப்பதை முரட்டுத்தனம் என்றுகூடக் கண்டித்தார்கள். இந்த மூட நம்பிக்கையைப் போக்கத்தான் தான் பல்தொழில் நுணுக்கப் பள்ளிகளைத் திறக்க வேண்டும் என்று நான் எத்தனையோ இடங்களில் பேசினேன். சட்டப் பேரவையிலும் வலியுறுத்தினேன்.

பள்ளியில் காலையில் பாடமும்,மாலையில் தொழிற்கூடங் களுக்குச் செல்வதற்கேற்ற பயிற்சியும் வேண்டும் என்றும் கூறினேன்.' அந்தக் கனவு நிறைவேறும் வகையில் தான் 1957 – ஆம் ஆண்டு பொள்ளாச்சியில் 'நாச்சிமுத்து பல் தொழில் கல்லூரியைத் திறந்து சிற்றூர்ப்புற மாணவர்களும் தொழிற் கல்வியை முழுமையாகக் கற்றுச் சிறப்படைய வேண்டும் என்று செய்தேன்.

பள்ளியில் படித்து முடித்த அந்த மாணவனை நோக்கி வேலை வாய்ப்பு வீடு தேடி வரவேண்டும் என்று திட்டமிடவேண்டும். அப்போது தான் அண்ணல் காந்தியடிகளின் சர்வோதயக் கல்வி நிறைவேறும் என்று கருதலாம் என்றும் முடிவு செய்தார்.

நூறு பேரைக் கொண்டு மூன்று துறைகளில் தொடங்கப்பெற்ற இந்தத் தொழிற்கல்லூரி இன்று ஓங்கி உயர்ந்து பல்வேறு துறைகளிலும் பிரிவுகளிலும் ஆயிரக்கணக்கான மாணவச்செல்வங்கள் ஆர்வத்தோடு பயிலும் முன்னணிக் கல்வி நிறுவனமாக ஒளிர்கிறது.

1965 – இல் தொடங்கி அண்ணல் காந்தியடிகள் – வள்ளல்பெருமான் நினைவு விழாக்கள் அக்டோபர்த் திங்களில் மாபெரும் விழாவாக நடந்து வருகிறது. எனக்குத் தெரிந்து அறுபதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் பங்குகொண்டு வந்தார்கள். நீதியரசர் ராமசுப்பிரமணியன், நயவுரைநம்பி ஜெகத்ரட்சகன், புலவர் புலமைப்பித்தன், கவியரசர்கள் சிற்பி, சக்திக்கனல், சிதம்பரநாதன், சொல்வேந்தர் சுகிசிவம், வழக்குரைஞர் ரவி, வழக்குரைஞர் த.ராமலிங்கம். துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யன், கவிஞர் வைரமுத்து, பேராசிரியர்கள் பொன்மணி வைரமுத்து, பிரேமா, வழக்குரைஞர் சுமதி, பேராசிரியை பர்வின் சுல்தானா, பாரதி பாஸ்கர், ஐ.நா.வில் பெரும் பொறுப்பில் இன்றும் பணியாற்றிவரும் வழக்குரைஞர் கண்ணன் என்று எண்ணற்ற இளைஞர்கள், அருட்செல்வரைச் சுற்றிச் சுற்றி வந்தவர்கள். மேடை மின்னல்களாக இன்று நாடு போற்ற அனைவரும் மெருகேறித் திகழ்கிறார்கள். அருட்செல்வரின் ஆர்வம் இப்படி வெள்ளமாக நிரம்பியுள்ளது

திருவருட்பாவுக்குப் பதிப்பும் உரையும், வெளியிட்டதையும் ஆண்டு தவறாமல் அரிய நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு அருட்செல்வர் நடத்திய ஆர்வம் வளர்க்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் நினைத்தால் மனம் நெகிழ்கின்றது. இந் நிலையிலேயே அருட்செல்வர் விழா மண்டபத்திலேயே விழாவில் இறுதியாக இமை மூடியதும் வரலாற்று நிகழ்வாகும்.

நான் எந்தப் பொறுப்பில் இருந்தபோதும் தலைவர் அந்தப் பொறுப்புக்கு என்னை அழைத்துப் போய் அந்த இடத்து அரியணையில் அமர்த்தியிருக்கிறார்கள்.தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு ஒருமுறை வருகை தந்து ‘ஆயிரம் ஏக்கர் நிலமிருக்கிறது. நூறு ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிட்டால் உங்களுக்கு நிதிச்சுமை இருக்காது. நான் நாளைக்கே முதலமைச்சருக்குக் கடிதம் எழுதுகிறேன்’ என்றார். அவ்வாறே கடிதம் எழுதினார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் கோவை – வேளாண்மைப் பல்கலைக்கழகம் இரண்டும் இணைந்து களம் இறங்குவதில் சிக்கல் வந்தது, அது முடியாமலே போனது.

சங்க இலக்கியங்களுக்கு உரை எழுதிய என் தந்தையாரைத் திருவருட்பாவுக்கு உரை எழுதுங்கள் என்று அருட்செல்வர் ஆணையிட்டார்கள். 'இனி மேல் எதையும் நான் எழுதுவதில்லை. என் வாழ்வு முடிகிற நிலையில் இருக்கிறேன் என்று என் தந்தையார் தளர்ந்து கூறினார்கள். 'உங்கள் வாழ்வு நிச்சயமாக நீடிய நல்வாழ்வாக நிலைக்கும், எழுதுங்கள்' என்றார் அருட்செல்வர்.

பொள்ளாச்சியிலேயே தன் வளமனையில் நான்காண்டுகளுக்கு மேல் உண்டு மகிழவும், கண்டு பேசவும், எண்ணி எழுதவும் அவர் வாழ்வு கழிந்தது.உரை முடிந்ததும் 'நான் இதை அச்சிடுவதைக் காணப்போவதில்லை. என் வாழ்வு அருட்செல்வர் மகாலிங்கத்தின் நினைவிலேயே முடிகிறது' என்று சென்னை வந்து அன்று மதியம் தலைவர் வீட்டிலேயே உணவு உண்டு எண்ணி எண்பது நாள்களுக்குள் ஔவை துரைசாமி மறைந்தார்.

இந்த நிகழ்ச்சியைத் தலைவர் மேடையில் சொல்லாத நாளில்லை. பதிப்பும் உரையும் ஒருசேரக் கண்ட தமிழ் வேந்தர்களைப் போல தலைவர் அவர்கள் இராமலிங்கர் பணிமன்றத்தில் இரண்டனையும் வெளியிட்டார்கள்.

ஒரு முறை தலைவருடன் பகீரதனும் வந்திருந்தார்கள். இருவரும் இடைவழியில் எதையுமே உண்பதில்லை. எப்போதாவது ஒருமுறை இளநீர் வாங்கி அருந்துவார்கள். விளையாட்டுக்காக நான் சொல்வேன், 'தலைவருடன் சென்றால் காற்றும் நீரும்தான் உணவென்று.' ஆனால் பிறர் மனம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். குறிப்பிட்ட தொலைவு சென்றதும், 'நடராசனுக்குப் பசிக்கும், சாப்பிடச் சொல்லுங்கள்' என்று கூறினார்கள்.

அதற்கேற்ற வகையில் சமையல் ஆளிடத்தில் சொல்லி வைத்திருந்தார். உணவருந்தும் போது எங்கிருந்தாலும் 'நடராசனுக்கு இனிப்பு வைக்க வேண்டாம்' என்று நினைவாகக் கூறுவார்கள். என்னைப்பற்றி மட்டுமல்ல; தன்னிடம் பணிபுரிகின்ற அனைவரது உடல் நலனைப் பேணுவதிலும் தனிக் கவனம் செலுத்துவார்கள்.

அவர்களுடன் ஒரு முறை திருவனந்தபுரம் சென்றேன். அன்றிரவு அபேதானந்தா ஆசிரமத்தில் தங்கினோம். 'பத்மநாபரை வழிபட வேண்டுமென்று விடியற்காலையிலேயே எழுந்து மன்னர் வருவதற்கு முன்னதாகச் சென்று வரவேண்டு'மென்று கூறினார்கள்.

விடியற்காலையில் ‘இன்னுமா தூக்கம்?’ என்று குரல் கேட்டு எழுந்தேன்.பெரும்புலர் காலை மூழ்கி ‘புலராக் காழகம் புலர உடீஇ’ (திருமுருகாற்றுப்படை) என்ற அருள்மொழிக்கு இலக்கியமாய், நீராடி ஈரம் புலராத உடையுடன் வழிபாட்டுக்குச் செல்ல அருட்செல்வர் ஆயத்தமாகியிருந்தார்கள்.

அருட்செல்வருக்கு எவ்வளவு எளிமையான விருப்பங்கள் இருந்தன என்பதற்கு இன்னுமொரு சான்று செல்லவேண்டும். தான் உண்ணுவதைக் காட்டிலும் பிறர் உண்ணுவதைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைவார்.

அதுவும் பிறருக்கு விருந்து வைப்பதில் அவருக்கு எல்லையில்லாத விருப்பம். அவர் விருந்து முடிந்த பிறகு அங்கே வைத்திருக்கிற பழங்களை எடுத்து அதைத் துண்டுத் துண்டாக நறுக்கிச் சுளைகளைக் கொடுப்பதில் தனி ஆர்வம் காட்டுவார்.

எப்படி என்று கேட்டால் ஆப்பிள், ஆரஞ்சு அதுவும் மாம்பழம் இந்த மூன்று பழங்களையும் அவர் தன் கையில் எடுத்து அதை நன்றாகத் தண்ணீரில் நனைத்துப் பிறகு துடைத்து விட்டு நறுக்கத் தொடங்கினால் பத்து மணித்துளிகளுக்குள் ஒரு மாலை போல அந்த மாம்பழம் ஆகும். பழத்தின் உட்பகுதியை அப்படியே சரி சமத் துண்டுகளாகப் பிறருக்குக் கொடுப்பது வழக்கம்.

‘எப்படி இந்தப் பழத்தை இவ்வளவு அழகான சங்கிலி மாலை போல நறுக்கக் கற்றுக் கொண்டீர்கள் ?’ என்று ஒருமுறை நான் கேட்டேன்.’இது நல்ல கேள்வி தான். பள்ளிக்கூட மாணவனாக நான் இருந்தபோது பொள்ளாச்சியில் கடை வீதியில் போய்ப் பழங்களை வாங்கிக் கொடுத்து, பழங்களை எப்படி நறுக்குவது என்று அந்தக் கடையின் உரிமையாளரைக் கேட்பேன். அவர் ஓர் இசுலாமியர். நான் அவரை ‘பாய் அண்ணா’ என்று தான் அழைப்பேன்.

பழங்களை எப்படி நறுக்குகிறார்கள் என்று எனக்கு உட்கார வைத்து, ஒருநாள் இந்தக் கலையைக் கற்றுக் கொடுத்தார். இப்போது 90 வயது ஆகிறது. இன்னும் கூட அந்த நினைப்பு என் மனதில் இருக்கிறது. பார்க்கிறவர்கள் எல்லாம் இதை வியப்போடு கேட்பார்கள் என்றார். அதுமட்டுமில்லை, இவரைப் பார்த்துப் பார்த்து அருட்செல்வருடைய செயலாளர் ரவியும் அதை அப்படியே கற்றுக் கொண்டார்.

நான் ஒருமுறை அருட்செல்வரிடம் கூறினேன். 'அப்படியா' என்று சொல்லி 'எங்கே ரவி, நறுக்கிக் காட்டு' என்று கேட்டபோது கண்டு மகிழ்ந்தார். பழங்களைப் பக்குவமாகவும் – பதமாகவும் நறுக்குவதைக் கூட ஒரு கலையாகக் காட்ட வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு அடங்காத ஆர்வமாக இருந்தது.

“என்னுடைய திருமண வாழ்க்கையின் 60 ஆண்டுகள் இன்று நிறைவடைகின்றன. அது நிகழ்ந்தது ஆகஸ்ட் 27, 1945 – ஆம் ஆண்டு. அதனை எப்படிக் கொண்டாடலாம்” என்று யோசனை கேட்ட போது, பலபேர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அந்த மகிழ்ச்சியை மேலும் இரு மடங்கு மகிழ்ச்சியாக ஆக்கும் ஒரு திட்டத்தை நான் வைத்துக் கொண்டிருந்தேன்.

நம்முடைய தேசத்தந்தை காந்தியடிகள் வரலாற்றைப் பேராசிரியர் கல்கி 'மாந்தருக்குள் ஒரு தெய்வம்' என்று எழுதியிருந்தார். தேசத்தையும் – தெய்வீகத்தையும் ஒன்றாக இணைத்த அந்த மாபெரும் ஞானியின் சிந்தனைகளைக் கொண்ட 17 தொகுதிகளை மீண்டும் வெளியிடுவதுதான் 'எனது அத்திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வம் இன்று நிறைவேறிவிட்டது' என்பது அருட்செல்வரின் நூல் வெளியீட்டின் உரையாகும்.

இப்புத்தகத்தைப் படிப்போருக்கு பொது நலம் புரளும் – ஆர்வ அலைகள் நெஞ்சில் நிரம்பி வழியும்.

இனிப்பையும் – வெடிப்பொருள்களையும் நூற்றுக்கணக்கான பொதிகளாக வாங்கி நண்பர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பெயரிட்டு அனுப்புவார். அருட்செல்வரின் இந்த ஆர்வம் எங்கே எவரிடம் காண முடியும் ? என்று நினைக்கும்போது இன்றும் மனம் கரையும் !

தினமணி –தீபாவளி மலர் – 2020

✻✻✻

23. வள்ளலார் செய்த புதுமைகள்

1.7.2020

அருளாளர்கள் வாழையடி வாழையாக வருவதுண்டு. திருவள்ளுவர் முதலாகத் தோன்றிய சான்றோர் தாம் பெற்ற அருளார்ந்த அருளின்பத்தைத் தாமே துய்த்து மகிழாமல் உலகத்துக்கு வழங்குவதிலேயே ஆர்வம் கொண்டிருந்தார்கள். இன்றும் சிலர் அவ்வாறு திகழ்கின்றனர்.

தாமே துய்த்து மகிழ்பவர்களைச் சீவன் முத்தர்கள் என்று தத்துவ உலகத்தில் சொல்வார்கள்.

“காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகார சிவபோகம் என்னும் புத்தமுதம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவில் கிடக்குது ஐயையோ இனி எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரீர் செகத்தீரே” என்றார் தாயுமானவர்.

இலக்கியமாய் இருந்ததை இயக்கமாக்கிப் புதிய வழிகாட்டியவர் வள்ளலார். வடலூரில் பசி தவிர்த்தல் செய்யத் தருமச்சாலையை உருவாக்கினார். இது வடலூரில் மட்டுமே அவரால் செய்ய முடிந்தது. அக்காலம் தாது ஆண்டு பஞ்சம் என்று கூறினர். மக்கள் தவித்து துடித்த காலமது. இந்த வறட்சிக் கொடுமை பல ஆண்டுகள் நீடித்ததாம்.

பசி தாளாமல் மக்கள் மடிந்ததுண்டு. பிணங்களைக் கூட உண்டு பசி தணித்துக்கொண்டனர் என்றெல்லாம் கொடுமையின் உச்சத்தை சிலர் குறித்தனர். நாற்பதுகளில் நேர்ந்த வங்கத்துப் பஞ்சம் போல தமிழகத்திலும் கொடிய வறட்சிக் கேடு அக்காலத்தில் நிலவியது. ஏறத்தாழ நாற்பத்து ஐந்து பஞ்சங்கள் நிலவின என்று அந்நாளில் குறித்தனர்.

பசித்துன்பத்தை வள்ளலார் காட்டியது போல உலகில் எவருமே பேசியதில்லை. வள்ளலார் வாழ்ந்த பத்தொன்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருபத்து நான்கு பஞ்சங்கள் ஏற்பட்டன என்பர். வள்ளலார் பாடல்களில் பசி நீக்குதல் பெரிதும் வற்புறுத்துவார். நாடறிந்த சிதம்பரத்திற்கு வடக்கே மருதூர் என்னும் சிற்றூரில் வாழ்ந்த இராமைய்யா பிள்ளையின் ஐந்து மனைவியரும் மகப்பேறு இன்றி மறைந்தனராம். ஆறாம் முறையாக திருமணம் செய்து அவருக்கு ஐந்தாம் மகனாக இராமலிங்க அடிகளார் **1823** ஆம் ஆண்டில் தோன்றினார். அண்ணன் பொறுப்பில் குடும்பத்தினர் தாய் வீடாகிய சென்னை வந்தனர். சென்னையில் தொடக்க காலத்தையும் தென்னாற்காடு மாவட்ட சிற்றூர்களில் பிற்காலப் பகுதியையும் வடலூரிலும் சித்தி வளாகத்திலும் நிறைவாழ்வை நடத்தினார். வள்ளலார் மருதூரில் பிறந்திருந்தாலும் **(05.10.1823)** தம்முடைய நினைவு தெரிந்த நாளில் இருந்து ஏறத்தாழ முப்பதாண்டுகளுக்கு மேலாகச் சென்னையிலே வாழ்ந்தார். வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றை அவர் பாடல்களில் குவிந்துகிடக்கும் செய்திகளில் இருந்து அறிய முடிகின்றன.

"உயிர்தான் உயிர் இரக்கந்தான் ஒன்றல்லது இரண்டிலை
இரக்கம் ஒருவில் என் உயிர் ஒருவும்"
என்பது திருவருட்பா.

இந்த உருக்க உணர்ச்சிதான் அவரைப் பொதுநலம் காட்டிய புதுமைத் துறவியாகக்ள காட்டியது.

பசியால் நேர்ந்த அவலத்தை ஏறத்தாழ முப்பதுக்கு மேற்பட்ட நிலைகளால் அடிகளார் அடுக்கிச் சொல்லி நம் மனத்தைப் பிழிகிறார். இந்த நிலையில்தான் பசிக்கு உணவு, உணவுக்கு நெல், நெல்லுக்குக் கதிர், கதிர்தான் பயிர், பயிர் வாடினால் உயிர் வாடும் என்று நெகிழ்ந்து நெகிழ்ந்து வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற பாடல் வருத்தத்திலேயே பிறந்தது.

வடலூர் அல்லாமல் நாடு முழுவதும் தருமச் சாலைகளை ஆங்காங்கே நிறுவ வேண்டும் என்று அவர் உள்ளம் நினைத்தது. அவரோ, ஏதுமில்லாத ஏழைத்துறவி. வடலூரில் மட்டுமே எடுத்துக் காட்டாக முன்மாதிரியாகச் சாலையை திறக்க முடிந்திருக்கிறது. பசி தீர்ந்த பின் கல்விதானே வேண்டும், செவிக்கு உணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும். இதன் உட்கிடையை வள்ளல்பெருமான்

நன்கு உள்வாங்கிக் கொண்டார். அதனைச் செயற்படுத்தவே கல்விச் சாலையையும் தொடங்கி, தாமே பயிற்றுவிக்கும் ஆசிரியராகவும் மாறினார்.

வேண்டிய வருவாயோ, பிற செலவினங்களை ஏற்கவோ, முடிவு செய்யவோ நேரமில்லை. இந்த இடர்ப்பாடான நிலையில் எந்த அளவு கல்விச்சாலையை நடத்த முடிந்தது என்ற குறிப்புக்கள் கிடைக்கவில்லை. அந்தக் காலத்திற்கேற்ப தமிழ், வடமொழி, ஆங்கிலம் மூன்று மொழிகளிலும் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தது நீண்ட நோக்கம் உடையது. அவர் காலத்தில் மட்டுமில்லாமல் எதிர்கால உலகத் தொடர்புக்கும் உறவுக்கும் தவிர்க்க முடியாத நெருக்கமுடையது ஆங்கிலம் என்று கருதினார்.

திருவள்ளுவர் தொடங்கி, அருளாளர்கள் அனைவரும் செய்ய வேண்டும் என்றே அறிவுறுத்தினார்கள். அவர்கள் அறிவுரைகள் ஏட்டளவிலேயே நின்றுவிட்டன. பிணி தீர்த்தல், தேவைக்கு உதவுதல், பாம்புக்கடியிலிருந்து மீட்டல், செத்தாரை எழுப்புதல் போலச் செய்திருக்கிறார்கள், என்பதை பல பாடல்களிலும், பிற நூல்களிலும் காணலாம். அற்புதங்கள் மட்டுமே ஒருவரை மகான் ஆக்குவதில்லை.

சமுதாய வாழ்வில் மக்கள் மேற்கொள்ள வேண்டிய சிலவற்றை வள்ளலார் வகுத்தார். அவற்றுள் முக்கியமானவை

1. கொலை, புலையற்ற உணவு, இதுவே முதல் நோன்பு.

2. சிற்றுயிர்க்கு இரக்கம் காட்டுதல் அறிவு சமயத்தின் அடிப்படையாக அமைந்தது.

பல தெய்வங்கள் வழிபாடு ஒழிக்கப்பட்டு ஒருவரே கடவுள் என்ற கோட்பாடு வலியுறுத்தியதால் இந்த அடிப்படையில் ஓமம், பரிகாரம், யாகம், முதலியன ஒழிக்கப்பட்டன. சாதி, குலம் என்பவை அழிக்கப்பட்டன.

தீட்சை முதலியன அறவே இல்லை. எனவே தம்பிரான்கள், மடங்கள், சாமியார்கள் சமுதாயத்தில் செலுத்தி வந்த மேலாதிக்கத் துக்கும் இடமில்லை.

இறப்புத் தீட்டுக் காக்க வேண்டியதில்லை. கணவன் இறந்தால் மனைவி மங்கலச் சின்னங்களை நெற்றித்திலகம், பூ, தாலி முதலியவற்றை அகற்ற வேண்டியதில்லை.

மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்ய வேண்டா. இறந்தவர்களைப் புதைக்க வற்புறுத்தினார். இதற்குக் காரணம் பல சொல்லப்படுகின்றன என்றாலும் நீர்க்கரைகளில் (பலர் எரித்தார்கள்) வசதியில்லாதவர்கள் புதைத்தார்கள். இறந்த உடலத்தை சுடுகிறபோது, நெளிவதைக்கூட உடம்பு துடிப்பதாகவே வள்ளலார் பார்த்தார். இதைத் தவிர்ப்பதற்காகவே, அவர் புதைக்கச் சொன்னார் போலும். புல்லும் கருகுவதைத் தாங்கிக்கொள்ள முடியாத வள்ளலார் துயரம் நாம் அறிந்ததே.

நகைகள் அணிய வேண்டாம் என்கிறார் வள்ளலார். காது மூக்குகளில் நகை அணிவதைக் கடவுள் விரும்பியிருந்தால் நம்மைப் பிறப்பிக்கும்போதே காது மூக்குகளில் துளையிட்டு அனுப்பியிருப்பாரே என்றார். வள்ளல்பெருமான் செய்த புதுமைகளில் முக்கியமானது. சமயங்கள், பொதுமை, சமரச உணர்வு, சமுதாய நலம் பேணுவதை மறந்து பூசலுக்கு இடம் தந்தனர்.

இருப்பதைத் திருத்துவார்கள் எல்லாரும் ஆனாலும், வள்ளலார் புதுமையான சமயம் ஒன்றையே நிறுவிவிட்டார். இச்சமயத்துக்குப் பெயர் “சமரச சுத்த சன்மார்க்கம்”. இதற்கு எனத் தனிக்கொடியே அமைத்தார். கோயில்களைப்போல மேளதாளம், குருக்கள், பட்டர், அந்நிய மொழியில் அருச்சனை நெய்வேத்தியம், திருவிழா வழிபாடுகள் விக்கிரகம்: ஏதுமில்லாத ஒளிவிளக்கு இதற்கு மந்திரம்: அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை இந்த மந்திரத்திற்கு உரியவர்களாக உலகோர் அனைவரும் இடம்பெறலாம்.

தோற்றத்தில் புதுமை! வேறு எந்தச் சமய வாதியும் பூண்டிராத கோலத்தில் வள்ளலார் இருந்தார். தலைமுடியை நீள வளர்த்திருந்தார் என்பர். அதனை வெள்ளை உடையால் மூடி முக்காடு அணிந்திருந்தார். உடம்பை முழுதுமாக மூடியிருந்தார். உடம்புச் சூட்டை எப்போதும் கதகதகப்பாக வைத்திருக்க வேண்டும் என்பது அவர் கூற்று.

காவி, சடைமுடி, துளசிமணி மாலை, தண்டகம், கமண்டலம், தலை முண்டிதம் ஏதுமில்லாத இல்லறத்தார் வடிவில் வந்த முழுத்துறவி, இவ்வாறு தோற்றம், துறவு, தொண்டு, நிறுவனங்கள் என்ற வகையில் புதுமைகளைச் செய்திருக்கிறார். பொதுவாகவே, போலித்துறவிகளைப் பற்றி ஐம்பதாண்டுகளுக்கு முன்னர், தெருக்கூத்தில் பாடப்பெறும் ஒரு பாடலை நான் பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

பெண்டு பிள்ளை இல்லாதோன்
பிழைக்க வழி இல்லாதோன்
சண்டையினால் ஊரைவிட்டோன் தங்கமே
சாமியாய்ப் போனாரடி ஞானத்தங்கமே
பூசாரி பொய்யன் புலவனும் பொய்யன்
அந்த பூதேவன் என்பவனோ
அடங்காத பொய்யனடி ஞானத்தங்கமே
வாதிபுளுகன் மந்திரவாதி வீண் புளுகன்
சோதிடன் என்பவனோ தங்கமே
சுத்தப் புளுகனடி ஞானத்தங்கமே

இந்த நிலையில், தூய பிறவியாக புதுமைத் துறவியாக ஊரன் அடிகளார் அழைத்தது போல **புரட்சித் துறவியாக வள்ளலார்** செய்த புதுமைகள் பலவாகும். இந்தப் புதுமைகள் நிறைவேற வேண்டும் என்பது சமுதாயத்தின் விழைவுமாகும்.

கலைமகள் இதழ் – ஜுலை 2020

❀❀❀



24. அரசும் – மக்களும்

தலைமைச் செயலக – தமிழ் மன்ற நிகழ்வில்

வாழ்த்துரை

1.11.1978

இந்திய நாடு விடுதலை அடைந்து முப்பதாண்டுகள் முடிந்துள்ளன. அதனால் வாழ்விலும், அன்றாட அலுவல் நடைமுறையிலும் உரிமையோடு செயற்படுகின்ற வாய்ப்பினை நாம் பெற்றுள்ளோம். எல்லோரும் தமக்கேற்ற உரிமைகளைப் பெறுவதும், எல்லா நிலைகளிலும் எல்லோரும் சரி நிகராக நடத்தப் பெறுவதும் விடுதலை வாழ்வின் விளைந்த வெற்றியாகும். ஆகையால் தான் உரிமை மலர்ந்த மக்களாட்சியை நாகரிக வாழ்க்கை நெறியாக உலகம் பாராட்டிப் போற்றுகிறது.

மக்களுக்குக் காப்பாக நிற்கும் அடிப்படையில் காவலமைப்பாகத்தான் அரசாங்கம் என்று தொடக்கத்தில் இயங்கியது. மக்களுக்கு வாழ்வு நிலைகளிலும் பொருளியல் வளங்களிலும் நன்மை செய்யும் நல்லரசாக நாளும் அந்த அமைப்புமுறை வளர்ந்து, பல்முனைப் பணிகளைப் பரந்த நிலையில் மக்களுக்கு எளிதில் நலமேற்பட உதவும் அமைப்பாக மக்களாட்சி இப்போது வடிவெடுத்துள்ளது.

மனமருள் கொண்ட மக்களால் அரசன் இறைவனே என்ற நிலையில் அரசமைப்பு உருவாகியது. அரசனே இறைவன் என்ற அடிப்படையில் மன்ன ன் கையில் உரிமைகளை நம்பி வழங்கிவிட்டு, இனி நீ உலகத்தை எப்படியாவது வேந்தன் நடத்திச் செல்வான் என்ற துணிவுடன் மக்கள் வாளாயிருந்த நிலைமை பழைய வரலாறாகும். பின்னர் பிரெஞ்சு நாட்டு அரசியல் சிந்தனையாளர் ரூசோவின் கருத்துப்படி மக்களின் பொதுநலனுக்காகத்தான் அரசு ஆட்சியுரிமை வழங்கப்பெற்றதென்றும், மக்களுக்கும் ஆளும் உரிமையும் உண்டு என்ற கருத்தும் எழலாயிற்று. இவ்வகையில் புரட்சி உருவாகி மக்களாட்சி முறை அரும்பியது.

அரும்பு மலர்ந்து விரிந்து நேர்முக மக்களாட்சியாகத் திகழ்ந்து இன்று உலகம் எல்லாம் பொதுநல மனம் கமழ்கிறது.

ஒரே மன்னன் என்னும் நிலைமை மாறி, எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகி உரிமையும் கடமையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கூட்டாக வாழும் முறை மக்களாட்சியின் நடைமுறைகளாகியுள்ளன. ஏறத்தாழ எழுபது கோடி உயிரணுக்களைக் கொண்ட ஒருயிர் உடலமைப்பாக நமது நாட்டில் மக்களரசு உருவாகியுள்ளது. அலுவலக ஆட்சிக்கலையைப் பற்றிய அறிவும் திறனும் இன்றியமையாத தேவையாகிவிட்டது.

முன்னாளில் அரசன் அரியணையில் அமர்ந்திருந்ததுபோல, மக்களாட்சியும் அரியணையின் மேல் அமர்ந்துள்ளது என்பர். மூன்று கால்களில் நிற்கும் ஆட்சியாக ஓர் அரியணை அமைந்துள்ளது. ஆட்சித் துறை, சட்டப்பேரவைத் துறை, நீதித்துறை என்ற மூன்றும் சேர்ந்து அரசை இயக்குகின்றது. அந்தப் பிரிவுகளில் எந்தப் பிரிவுக்கு எவ்வளவு வல்லமை என்ற வாதம் எப்போதுமே அரசியல் உலகில் ளநடந்துள்ளது. நமது அரசியல் அமைப்பு பெருமளவுக்குப் பிரித்தானிய அரசியலபைப்பைத் தழுவியது.

நம் அரசியல் வல்லுநர்கள் அமெரிக்கப் பாங்கையும் தம்மோடு இணைத்திருக்கிறார்கள். சட்டப்பேரவை இயற்றும் சட்டங்களைப் பற்றிப் பிரித்தானிய நீதிமன்றம் எந்த மேலாய்வையும் செய்யவியலாது. சட்டமன்றம் – அதற்கே உயர்வற உயர்ந்த உரிமையுடையதாகும். அமெரிக்க நாட்டிலும் பாரத நாட்டிலும் நீதிமன்றமே நிகரற்ற உரிமை கொண்டது. சட்டமன்றம் செய்த சட்டங்களை நீதிமன்றம் ஆராய்ந்து கருத்தறிவிப்பதை நாம் காணலாம்.

அரசியலில் கருத்து மாற்றங்கள் எழும், விழும். சட்டப்பேரவைகள் மாறும், மறையும். ஆனால், ஆட்சித்துறை மட்டும் நிலைத்து நின்றபடி செயற்படும். இருந்ததனை இருந்தபடி அலுவல்துறை இருந்துள காட்டும். அதனாலேயே நிலைத்த ஆட்சித்துறை என்று அழைப்பார்கள்.

ஸ்டாலின், ரூசுவெல்ட்டு, சர்ச்சில் ஆகிய முப்பெருநாட்டுத் தலைவர்களின் உச்சிமாநாடு இரண்டாம் உலகப் போரின்போது நடந்தது. தொடர்ந்து இரண்டாம் மாநாடு நடந்தபோது, உலகப்போர் முடிந்துவிட்டது. பிரிட்டன் தலைமையமைச்சராக இருந்த சர்ச்சில் மாறி அட்லி தலைமையமைச்சராகப் பதவியேற்றிருந்தார். முதலில் நடந்த மாநாட்டுக்குச் சர்ச்சிலோடு வந்திருந்த அலுவலர்கள், பணியாளர்கள், உதவியாளர்கள் அனைவரும் மாறாமல் அட்லியுடன் மீண்டும் வந்தது

கண்டு ஸ்டாலினும், ரூச்வெல்ட்டும் வியந்தார்களாம். அரசாங்க மாறுதல், அலுவல் முறையை மாற்றாத பிரித்தானிய மாட்சியை அது காட்டியது என்பர்.

அனைத்து மக்களுக்கும் அவரவர்களின் குறை நிறைகளை ஆராய்வதோடு, நலந்தீங்குகளை, கல்வி வாய்ப்புகளை, நிலபுலங்களை, ஊதிய மேம்பாடுகளை அலுவல் நடைமுறைகளை முறைப்படுத்தித் தீர்வு காண்பது அரசின் கடமையாகும். நெறிமுறைகளை வகுக்கும்போது, கோட்பாடுகளை ஒருங்குறப் பின்பற்றி, தனிச்சலுகைக்கு இடந்தாராமல், முன்னமைகளையே பெரும்பாலும் பின்பற்றி, திறமையாகவும், விரைவாகவும் மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தான் அலுவலகம் அமைந்தது.

தங்களுக்கு விதித்த பணிகளை வரம்பு மீறாமல் ஒத்த நெறியில் ஒருபாலும் கோடாமல் எந்திரப் பொறிகளைப்போல அலுவலர்கள் செயலாற்ற வேண்டுமென்று உருவான நன்னோக்கம், காலப்போக்கில் கனத்துப்போய் கல்லாகிவிட்டதோ என்று அனைத்து நாடுகளிலும் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

ஊரில் தீப்பற்றி எரிகிறது என்றால், அது தீயணைப்புப் படையின் பணி என்றும், பிற துறையினர் தமக்குத் தொடர்பில்லாதாராக ஒதுங்குவதும் நடைமுறையை விடாது பின்பற்றும் அலுவல் நாகரிகமாகச் சீர் குலைந்துள்ளது.

அலுவலகத்தின் மூலையில் தீப்பற்றிக் கொண்டது என்று ஓடிவந்து ஒருவர் முறையிட்டாராம். காதுகொடுத்தும் கேட்காமல், இது விற்பனைப் பிரிவு நீங்கள் தகவல் பிரிவுப் பகுதிக்குப் போய் இதைச் சொல்லுங்கள் என்றாராம். அலுவல் அமைப்புக்கு அறியும் மூளைதான் உண்டு. உணரும் உள்ளம் இருப்பதில்லை என்பதை இப்படிச் சுட்டிக் காட்டுவார்கள்.

ஆட்சி அலுவலகங்களில் உள்ளவர்கள், அறியும் அறிவினை மட்டுமே துணை கொண்டு, உணரும் உள்ள இல்லாத மனப்பான்மையோடு செயற்படும்போது, நேர்மையாகப் பணி புரிந்தாலும்கூட அன்பில்லாத அறம் என்பில்லாத புழுவை வாட்டி வருத்துவது போல, ஏழை எளியவர்களுக்கு இன்னலல் நேர்கின்றது.

சுற்றி வளைத்துச் செல்லும் சுணக்கமான போக்கே அலுவலகத்தில் இருப்பதுபோலவும், அது முறையாகச் செயற்படுவது என்றால், ஒவ்வொரு பிரிவையும் அணுகி முடிவுக்குப் பிறகு பிறிதொரு பிரிவு என்று பல வரிசை நிலைகளில் நெடுக வளர்ந்து அயரவைக்கும் போக்கை எப்படியாவது மாற்றலாமா என்று பலர் கருதினாலும், புதிய போக்கை வகுக்கத் தயங்குகின்றனர்.

மக்களாட்சிக்குப் பெருமதிப்புத் தந்து, மக்கள்பால் பேரன்பு பூண்டுள்ள நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒருமுறை பேசியபோது, அரசு நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களும் பணியாளர்களும் தாமெடுக்கும் ஒவ்வொரு கோப்பினையும் உயிரற்ற ஒரு காகிதக்கட்டு தானே என்று அன்பில்லாமல் அசட்டையாகக் காலங்கடத்தினால், பல இன்னல்கள் நேரும்.

ஒவ்வொரு குறிப்புக்குப் பின்னாலும் அதன் முடிவை எதிர்பார்த்துள்ள தனியொருவரோ, குடும்பமோ, மக்கள் கூட்டமோ பொது நல அமைப்போ காத்துக்கிடக்கிறார்கள் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு தாளின் பின்னும் ஒருவர் ஆணைக்கான அனுமதியை, எதிர்பார்த்து ஏக்கத்தோடு காத்து நிற்கிறார் என்பதை உருவகமாகக் கண்டு, உள்ளக் கனிவுடன் குறிப்புக்களை அலுவலர்கள் விரைந்து அனுப்ப வேண்டுமென்று உருக்கமாகக் குறிப்பிட்டார்.

நெடு நாளாக ஊறிக்கிடக்கும் சில பழக்கங்களை அலுவலர்கள் மாற்றிக் கொண்டால் வேகமாகவும், திறமையாகவும் செயற்படலாம். தம்மிடம் வரும் தகவல்களை அசட்டை செய்து தட்டிக் கழிக்காமலும், பொறுப்பை இன்னொருவர் மேல் சுமத்தாமலும் முடிவெடுக்கத் தனிப் பயிற்சியும் பக்குவமும் வேண்டும்.

பொதுவாக நம் நாட்டிலுள்ள பழைமைப்பற்று, புதுமையைப் புறக்கணிக்கச் செய்கிறது. எனவே, அணிந்து புதுமைகளையேற்கவும், புகுத்தவும் நாம் தயங்குகிறோம். இதுவரை நம்மால் எளிதாகக் கருதப்பட்டிருந்த வாழ்க்கைச் செயல்முறைகள் காலப்போக்கில் அறிவியல் சார்ந்த துறைகளாக மாறியுள்ளன. அலுவலக ஆட்சியும் அறிவியல் நுட்பம் செறிந்த கலவையாக அயல் நாடுகளில் கற்பிக்கப்படுகிறது.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தொண்டுணர்வோடு அனைவரும் தம் அலுவலகங்களில் சிந்தனை செலுத்தினாளல், மக்களாட்சியில் புத்தொளியும் புதுவுணர்வும் பூத்து அனைத்து மக்களுக்கும் சிறந்த வாய்ப்பும் நிறைந்த பயனும் அளவில் கிட்டும்.

25. சோமெல நூற்றாண்டு விழா

ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றம், சென்னை.

18.2.2020

பெருந்தகை சோமெல அவர்கள் எனக்கு வாய்த்த நல்ல நண்பர்.

பல்லாண்டுகளாக நாங்கள் நண்பர்களாகப் பழகினோம்.

ஒருமுறை அவர் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னார்,

மராட்டிய மாநிலத்தின் சாச்சாவை உங்களுக்குத் தெரியுமா? என்றார்.

அப்போது அவர் சொன்னார்,

யூதர்கள் குடும்பத்தில் மேதைகளே பிறப்பார்கள்.

பார்சி குடும்பத்தில் வணிகர்களே பிறப்பார்கள்.

அதுபோலத்தான் என்றார்.

அப்போது நான் சொன்னேன்.

நகரத்தார் குடும்பத்தில்

நான் எந்த வகையில் அதை குறைத்துச் சொல்லவில்லை.

நான் பிறந்த குழந்தைப் பருவத்தில், பார்த்த இரண்டு பேர் பிறகு பெரிதும் வளர்ந்து இங்கு அமர்ந்துள்ளதைக் காணும்போது, லேனா. தமிழ்வாணன் அவர்களையும், சோமெல.சோமசுந்தரத்தையும் காணும்போது எனக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி.

என்னுடைய துணைவியார், இந்தக் கூட்டத்திற்கு வந்தே தீர வேண்டும் என்று வந்தார். ஏனென்று கேட்டால், எங்களுக்கு இரண்டு செட்டியார்கள் வீட்டில் இருந்துதான், எப்போதும் செட்டிநாட்டுத் தின்பண்டங்கள் வரும்.

யாரென்று கேட்டால், லேனா.தமிழ்வாணனின் அன்னையார் மணிமேகலை அவர்கள், பரிவோடு வந்து எங்களுக்கெல்லாம் அந்தத் தின்பண்டங்களைத் தருவார்கள்.

பரிவோடு வந்து தின்பண்டங்களை அடுக்கியவர், சோமெலே குடும்பத்தைச் சார்ந்தவர்.

சோமெல அவர்களைப் பற்றிச் சொல்வதென்றால், அவர் பார்க்காத மேடையில்லை. படிக்காத நூல் இல்லை. செல்லாத ஊர் இல்லை. சேர்த்து வைக்க பொருளே இல்லை. ஏவளர்த்து இருக்கிறார் ஒரே பிள்ளை.

சோமெல அவர்கள், அவருக்கு தெரியாத விஷயம் என்று ஒன்றுமே இல்லை. சட்டைப் பையில் கர்சீப் வைத்துக் கொள்ளும் பழக்கம் பலபேருக்கு உண்டு. ஆனால், சோமெல அவர்களுக்கு ஒரு பழக்கம் இருந்தது. ஒரு தாளை எட்டாக மடித்து வைத்துக்கொண்டு, பையில் வைத்தே இருப்பார்.

எதைக் கண்டாலும், எதைக் கேட்டாலும், எதை நினைவுக்குக் கொண்டு வந்தாலும் எழுதி வைத்துவிடுவார்.

அவர் எழுதிய குறிப்புகளில், இவைகளே அதிகம் இடம் பிடித்தன என்று சொன்னால், அது மிகையாகாது. அவர் எழுதியதில், இமயம் முதல் குமரி வரை என்று இந்திய மாநிலங்கள் அனைத்தையும் குறித்து எழுதியிருக்கிறார்.

மாவட்டங்களின் தகவல்களைப் பற்றி அப்படி ஒரு தகவல் களஞ்சியமே கிடைக்காது, இராமநாதபுர மாவட்டத்தைப் பற்றி அவர் எழுதியதைப் பார்த்துத்தான், அரசு, இராமநாதபுரம் கௌசட்டிலேயே திருத்தம் கொண்டு வந்தது.

எண்ணிப் பார்க்க முடியாத ஒரு திறமை. அவருக்கு அரசர் முதல் ஆண்டி வரை தெரியும். ஆனால், எவரிடத்திலும் அவர் வேண்டி நட்புக்கொண்டதேயில்லை.

எதற்கெடுத்தாலும், முன்கோபம். ஆனால், எந்த நிலையிலும் பிறரை எதிர்பார்த்து இருந்ததில்லை. அரசர் பணியில் இருந்தார். அரசுப் பணியில் இருந்தார். அரசர் பணியிலும், அரசுப் பணியிலும் சுகப்பட்டார்.

அந்த நிலையில்தான், சோமசுந்தரத்தைப் புகழ் வாய்ந்தவராக வளர்க்க வேண்டும் என்று அவர் தந்தையின் நினைப்பை அவர் நிறைவேற்றியிருக்கிறார் என்ற வகையில் சோமசுந்தரத்தை நான் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன்.

சோமசுந்தரம், கோயமுத்தூரில் படிக்கச் செல்ல வேண்டும் என்று நினைத்ததும், அவற்றின் வளர்ச்சி ஒவ்வொன்றிற்கும் ஏதேனும் ஒரு குறிப்பை எழுதி வைத்ததைப் பார்க்கும்போது, அப்பா அப்பப்பா என்றார். நான் பார்த்து அம்மா அம்மம்மா என்றேன்.

தான் பெற்ற அறிவுரைக் கருத்துகளை எவ்வளவு சுருக்கமாக, எவ்வளவு பெருமிதமாக வரைந்து காட்ட முடியும் என்ற வகையிலே, இந்த நூற்றாண்டு விழாவை, ஒய்.எம்.சி.ஏ. நடத்துவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்றாலும், நான் நினைத்தேன், தமிழகத்தின் சுற்றுலாத்துறை இந்த விழாவை நடத்தியிருக்க வேண்டும்.

காரணம், தமிழகத்தைத் தமிழர்களுக்குத் தெரிவித்த பெருமை, சோமெலெ அவர்களைத்தான் சாரும்.

எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது, திருவண்ணாமலை குடமுழுக்கு விழா மலர், திருவண்ணாமலை பற்றிய அத்தனை குறிப்புகளையும், அந்த கோயில் வளர்ந்த வரலாற்றுச் சிறப்புகளையும், கோயிலுக்கு வழங்கப்பட்ட பரிசுகளையெல்லாம் அவர் கணக்கெடுத்து இருக்கிறார்.

இதில் என்ன சிறப்பு என்றால், இந்தக் குறிப்புகளையெல்லாம் அவர் வைத்திருந்தபோதுதான், அரசுப் பணி கிடைத்தது. அப்போது, திருவண்ணாமலை நகர் பற்றிய குறிப்புகளை தர வேண்டும் என அறநிலையத்துறை அமைச்சர் வேண்டிக் கேட்டபோது, நான் தரமாட்டேன் என்று சொன்னபோது, நான் உடனிருந்தவன்.

இப்போது அமைச்சர் கண்ணப்பனும் இல்லை. அறிஞர் சோமெலேவும் இல்லை. அப்படிப்பட்ட களஞ்சியத்தை வைத்து இருந்தவர் சோமெலே அவர்கள்.

சோமெலெ அவர்களின் மகன் சோமசுந்தரம் இப்போது இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது, எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

அமெரிக்காவிற்கு என் மகன் போகிறான் மேற்படிப்படிப்பிற்கு என்று அவர் சொன்னபோது, உங்கள் மகன் அமெரிக்காவுக்குப் போவதற்கான டிக்கெட்டை நான் எடுத்துக் கொடுக்கிறேன் என்று ஏவி.எம். சரவணன் சொன்னார்.

ஏவி.எம்.சரவணன் அவர்களை நாம் நினைக்கும்பொதெல்லாம் நமக்கு நெஞ்சம் உருகுகிறது. சோமெலெவின் புகழ் நாளும் வளர்க.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு என்ன வென்றால், செயலாளருக்கு **80** ஆண்டு ஆகிறது. தலைவருக்கு **90** வயதாகிறது. இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒரு மன்றம் என்று சொல்லி, அமர்கிறேன்.

நன்றி. வணக்கம்.



26. பொதிகைத் தொலைக்காட்சி

7.03.2020

காலத்தின் மாறுதல்களோடு, மக்கள் செல்லுகிற கோலங்கள் மாறும். எண்ணங்களும் மாறும். சிந்தனைகளும், புதுமைகளும் விரைந்து ஓடும்.

கைபேசியில் உலகத்தையே காண முடியும் என்கிற பேராற்றலைக் கண்டு நாம் வியப்படைகிறோம் என்றாலும், மாற்றம் என்பது சில நேரத்தில் மனத்தில் நமக்கு மகிழ்ச்சியை உருவாக்குகிறது.

வளர்ந்து வருகிற அறிவியல், தளர்ந்து வருகிற மக்களுக்கு எழுச்சி தர வேண்டுமே தவிர, அவர்களை வெறும் காட்சிப் பித்தர்களாக மாற்றி விடக்கூடாது என்ற கவலை தமிழுலகத்தில் பலருக்கு உள்ளது. இந்த வகையிலேதான், மொழி, கலை, பண்பாடு, இசை, நாட்டுப்புறக் கலைகள் என்று இவைகளையெல்லாம் தேர்ந்தெடுத்து, அந்த பழமையிலும்கூட எப்படிப்பட்ட விழுமிய கருத்துகள் அடங்கியுள்ளன என்பதை எடுத்துக்காட்டுவதில் பொதிகைத் தொலைக்காட்சி சிறந்த இடத்தைப் பெறுகிறது என்று நான் போற்றுகிறேன்.

இலக்கியங்கள், காலத்தினால் பழமையானவை. அந்தக் கருத்துகளைக் கேட்பதினால் வாழ்வில் நமக்கு என்ன விளைவுகள் ஏற்படும் என்ற ஒரு புறக்கணிப்பு போக்கு இளைஞர் மத்தியில் இருக்கிறதோ என்று சிலர் ஐயப்படுகிறார்கள்.

காலம் அப்படியெல்லாம் மாற்றத்தைத் தந்தாலும்கூட, அவர்கள் கண்களில் படும் காட்சிகளையும், மனத்தில் ஏற்படும் மாற்றங்களையும் எண்ணிப் பார்த்து சிறந்த இலக்கியங்களின் தேர்ந்த பகுதிகளையெல்லாம் தெளிவாக விளக்கி, இலக்கிய உணர்வைப் பெருக்க வேண்டும் என்பதில் பொதிகைத் தொலைக்காட்சி, வெறும்

காட்சி என்றில்லாமல் பழமையின் மாட்சி அவர்களுக்குப் புலனாக வேண்டும் என்று காட்டுகிற திறத்தை நான் மகிழ்ந்து பாராட்டுகிறேன்.

நான் நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளில் திருக்குறளைத் தொடர்ந்து ஒரு நூறு அதிகாரங்களை எடுத்துக்கூறிய நாட்கள் நினைவுக்கு வருகின்றன.

இலக்கியப் பேருரைகள் என்று ஏறத்தாழ அறுபது மணித்துளிகள் பேசுகிற பேச்சை, அவர்கள் எடுத்து அந்த ஒவ்வொரு இலக்கியத்தைப் பற்றியும் இயல்புகளையெல்லாம் விளக்கியதையும் நான் இப்போது எண்ணி நெகிழ்கிறேன்.

பொதிகைத் தொலைக்காட்சி, தமிழுக்கு வாய்த்த விருந்தாகவும், இலக்கியத்திற்கு வாய்த்த ஓர் இனிய பெட்டகமாகவும் திகழும் என நான் வாழ்த்துகிறேன்.

"எனக்கு வேண்டும் வரங்களை யிசைப்பேன் கேளாய் கணபதி,
மனத்திற் சலன மில்லாமல், மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின் மவுன நிலை வந்திட நீ செயல்வேண்டும்.
கனக்கும் செல்வம் நூறு வயது இவையும் தரநீ கடவாயே."

27. பொதிகை பூந்தென்றல் நிகழ்ச்சி

17.03.2020

அலைவரிசைகள் ஆயிரக்கணக்கில் பெருகி வருகின்றன. அறிவியல் மாற்றங்களை நாடு கண்டிருக்கிறது. தனியார் தொலைக்காட்சிகள் என்று, எண்ணற்றவை கணக்கில்லாமல் வளர்ந்திருந்தாலும் கூட, அரசுத் தொலைக்காட்சி என்கிற பெருமிதத்தோடு, பொதிகைத் தொலைக்காட்சி ஆற்றிவரும் பணிகளை நான் என்றும் பாராட்டுவேன்.

இந்த வகையில் வணிகம்தான் முதலிடம் பெறும் என்றாலும்கூட, வணிகத்தையும் மறந்து, வாழ்வியலை, நடப்பியலை, உண்மை உணர்வைப் பல்வேறு நிகழ்ச்சிகளில் படம் பிடித்துக் காட்டுகிற, ஒரு பண்பினைப் பொதிகைத் தொலைக்காட்சி பல்லாண்டுகளாக வழங்கி வருகிறது.

காலை மலர்ந்ததும், திருக்குறள் சிந்தனைகள் மலர வேண்டும் என்றுள்ள திருக்குறள் சிந்தனைகளையும் நாம் நினைவுக்குக் கொள்ள முடியாமல் இருக்கிற சில நிகழ்ச்சிகளையும் நாம் அறியாது இருக்கும் செய்திகளையும் ஆற்றல் வாய்ந்தவர்கள் எப்படியெல்லாம் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்று அவர்கள் காட்டுவதையும் வயல், வளம், முயற்சி, உழைப்பு, ஊக்கம் என்ற வகையில் நாட்டு மக்கள் எப்படிப்பட்ட பெருமிதம் கொள்ள வேண்டும் என்கிற வகையில், நாட்டுணர்வோடும், மொழியுணர்வோடும், கலையுணர்வோடும் கருத்துகளை வழங்கி வருகின்ற பொதிகை நிகழ்ச்சியை நான் மகிழ்ந்து பாராட்டுகிறேன்.

பொதிகையில்தான் தமிழ் பிறந்தது என்று சொல்வார்கள். அந்த வகையில், பொதிகை தருகின்ற பூந்தென்றல் நிகழ்ச்சியைப் பாராட்டுகிறேன்.



28. தருமை ஆதீன உரை

செட்டிநாட்டு அரசராக விளங்கும் அம்மையார் அவர்களே,

திருமதி நிர்மலா அவர்களே,

பெருமக்களே,

என்னுடைய தந்தையார், இந்தத் திருமடத்தின் மீது மிகுந்த பரிவும் நேயமும் கொண்டிருந்தார்.

என்னுடைய தந்தையார், தன்னுடைய வாழ்நாளில் தருமை ஆதீனப் புலவர் என்ற பின்புலத்தோடு ஐம்பதாண்டுகாலம் நான் ஒரு மாணவனாக, ஒரு மகன் போல, ஒரு இளவலாகக் குருமகா சன்னிதானத்தின் பரிவை நான் நினைத்து உருகுகிறேன்.

குருமகா சன்னிதானம் இந்த திருமடத்திலே இருந்தபோது, திடுமென அவர் இறந்துவிட்டபோது, வாரணாசியில் இருந்து அந்தத் திருவுடலை எடுத்துவரும் வாய்ப்பு பெற்றதாலேயே, அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களிடத்தில் நான் பணியாற்றியபோது, இந்தத் திருமடத்திற்குத்தான் அந்தத் திருவுடலை ஏந்தி வந்து, நம்முடைய சுவாமிகள் அந்தப் பொறுப்பை ஏற்கிற நாளிலிருந்து, அதுவரை சென்னை மாநகரில் அவர் ஆற்றிய பணிகளை நினைத்து உருக வேண்டும்.

ஏனென்றால், அவர்கள் இருந்த நிலையிலே இத்திருமடத்திலே நாள்தோறும் பன்னிரு திருமுறைகளை ஓத வைத்த சிறப்பும், திருவாசத்தை உருகிப் பாட வைத்த வகையிலும் தன்னுடைய வேளூர் திருமடத்தில் எந்நேரமும் பன்னிரு திருமுறைகளும் ஒலிக்க வேண்டும் என்ற வகையில், அவர்கள் நெகிழ்ந்து, உருகித் தானே நின்று திருமுறைப் பாடல்களை இசைத்து வந்தார்.

இந்தத் திருமடத்தை ஐம்பதாண்டுகளுக்கு மேலாக ஒருபுறம் திருக்குறள் வகுப்பு, ஒருபுறம் திருமுறை வகுப்பு, ஒருபுறம் திருவாசக வகுப்பு என்றெல்லாம் அவர்கள் நடத்திய பெருமையை நாடு நன்றியோடு பாராட்டும்.

இந்த வேளூர் திருமடம், முதன் முதலில் தொடங்கியபோது, இதைத் தொடங்கியவர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். அந்த நாள் எனக்கு நினைவிருக்கிறது. அப்போது அவர்கள் சொன்னார்கள், ஒரு தகுந்த கட்டளைத் தம்பிரான் இருந்து பணியாற்ற வேண்டும் என்பது என்னுடைய விருப்பம் என்று கூறினார்கள்.

அந்த நாளிலேயே 25ஆவது குருமகா சன்னிதானம், வாழ்க்கையைப் பற்றி குறிப்பிடுவது என்றால், வாழ்நாள் முழுவதும் சிவ பூசையிலேயே கழித்தவர் என்று சொல்லலாம்.

வாழ்நாள் முழுவதும் வழிபாட்டிலேயே நாம் வாழ்வை வளம் காணலாம் என்று அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள்.

எந்த நிலையிலும் அவர் மனம் மாறி இருந்ததோ, மனம் கசந்தது என்பதோ இருந்ததே இல்லை. எந்த நிலையிலும் வாய் திறந்தால், திருமுறைகளை ஓதுவது என்ற பழக்கம், ஓதுவாராகவே இருந்து, சன்னிதானமாக இருந்தபோது பார்த்தால், அவரின் மெய்யில் பட்ட கருத்துகளில் மாற்றம் காணாத அந்த மரபு காக்கும் திறத்தில் இருந்தார்.

இளம் பிள்ளைகள் வந்தால், அவர்களிடத்திலும்கூட அன்போடு பேசுகிற திறத்தோடு திகழ்ந்து, அவர் இருந்து ஆற்றிய பணிகளை எண்ணினால், நமக்கு வியப்பாக இருக்கும்.

சைவ சித்தாந்த பல்கலைக்கழகத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது நான் சொன்னேன், உலகச் சமயங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்த ஒரு பல்கலைக்கழகம் என்று தொடங்கலாமே என்று சொன்னேன். சைவ சித்தாந்தப் பல்கலைக்கழகம் என்று தொடங்கினால், பிற சமயங்களோடு ஒப்பிட்டுக் காண்பதற்கு வாய்ப்பிருக்காதே என்று சொன்னேன்.

அவர், ‘நீங்கள் எல்லாம் அப்படி நினைக்கலாம். நான் வளர்ந்த மரபில் சைவ சித்தாந்த கருத்துகளைத் தவிர பிற கருத்துகளை நான் காது கொடுத்துக் கேட்க மாட்டேன்’ என்றார்.

அவர்கள் அதில் அப்படி ஊறியிருந்தார். தருமையிலே சன்னிதானத்தை காண வருகிறவர்கள், காலை முதல் மாலை வரை இருந்தாலும்கூட இன்னும் பூசை கலையவில்லை என்றுதான் கூறுவார்கள்.

நெடுங்காலத்திற்கு அந்த வழிபாட்டு உணர்ச்சியில் வாழ்ந்த அவருக்கு வேறு உலகியல் பற்று இல்லை. கடுகளவும் இதைப் பற்றி அவர் கவலைப்பட்டது இல்லை.

ஒருநாளும் அவர் அரசியல் கருத்துகளையோ, பிற சமயக் கருத்துகளையோ நினைத்தது இல்லை. எப்போதும் பன்னிரு திருமுறை கருத்துகளையே நினைப்பார், பேசுவார்.

அதனால்தான், பன்னிரு திருமுறையின் அனைத்து திருமுறைகளுக்கும் உரையைப் பதிப்பித்து, சைவ உலகிற்கு ஒரு ஈடற்ற பெருமையைத் தந்தவர் அவர்தான்.

அருமைத் தலைவர் நடேசன் கூறியதுபோல, தனித்துக் களித்த நிலையில்தான், வழிபாட்டு முறையை நல்ல முறையில் தன்னுடைய கருத்துகள் செழிக்க வேண்டும் என்ற வகையில் அவர்கள் வாழ்ந்தார்கள்.

தன் வாழ்நாள் முழுவதும், எந்நாளும் இத்திருமடத்தில் சிவமும், தமிழும் கலந்து கமழ வேண்டும் என்ற வகையில், இந்த அரங்கினை மாற்றிய பெருமையெல்லாம் அவரின் திறம்தான்.

அவர்தான் இதுபோல ஓர் அரங்கம் இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

அந்த வகையிலே குருமகா சன்னிதானத்தின் மனம் தோய்ந்தவர் என்ற வகையிலே, நம்முடைய செட்டிநாட்டு அரசர்தான் இந்தத் திருமடத்தை மாற்றி அமைக்க உதவினார்.

அவர்தான் புள்ளிருக்கும் வேளூரில் அழகிய அரங்கம், மண்டபம் அமைத்தபோது மனம் உருகினார்கள்.

ஒன்று சொல்ல விரும்புகிறேன், அவர்கள்தான் இங்கிருந்து திருவாரூருக்குச் சென்று, கண்ணுக்குத் தெரியாத சிறு மேடாக இருந்த பகுதியைக் கோயிலாக மாற்றி நாவுக்கரசருக்குத் தொண்டாற்றிய பெருமைக்குரியவர்.

எனவே, அவர்களை நாவுக்கரசரை நினைக்கும்போது, சைவ சித்தாந்தத்தை, பன்னிரு திருமுறைகளின் பாங்கை நினைக்கும்போது, தருமை ஆதீனத்தில் தகுந்த பேராசிரியர்களை வைத்து ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தத்தின் பெருமைகளையெல்லாம் தஞ்சை பேரறிஞர் டி.என்.இராமச்சந்திரன் அவர்களை அமர்த்திய பெருமை அவர்களைச் சாரும்.

திருமடத்தில் இருந்து பெரும்பாலும் அவர் அயல் ஊர்களுக்குச் சென்றது என்று பார்த்தால், தருமையில் இருந்தது இருந்தபடியே, அமர்ந்தது அமர்ந்தபடியே என்று தருமை ஆதீனத்தின் பெருமையை உணர்த்திக் கொண்டே இருந்தார் என்று குருமகா சன்னிதானத்தின் பெருமை நமக்கு உவகை தரும் என்று கூறி அமர்கிறேன்.

நன்றி.

வணக்கம்.

29. தமிழ்நாடு சிங்கப்பூர் நட்புறவுக் கழகம்

சிங்கப்பூர் தந்தை லீ க்வான் யூ பிறந்த நாள் விழா

20.09.2019

தன்னுடைய பணியாலும், ஆற்றலாலும், திறமையாலும் தஞ்சை கூத்தரசன் அவர்கள் ஆற்றி வருகிற பணிகளை நாடு நன்றாக அறியும். அதுபோலச் சோழ நாச்சியார் அவர்கள் உலகெலாம் சென்று தமிழர் பெருமையை நிறுவி வருவதும் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

பொதுமக்களே,

தஞ்சை கூத்தரசன் அவர்கள் செம்மையாக இருந்த காலத்தில், மாண்புமிகு அமைச்சர் மன்னை நாராயணசாமி, மாண்புமிகு அமைச்சர் கோ.சி.மணி போன்றோர் அரசுப் பணியை உடனடியாக முடிக்க வேண்டும் என்றால் கூத்தரசனிடத்தில் கொடுத்தால் முடித்துவிடுவார் என்று கூறுவார்கள்.

அவர் கழகத்திற்காக எப்படிப்பட்ட பணிகளை ஆற்றித் தன்னுடைய வாழ்நாள் உழைப்பையெல்லாம் எப்படிச் சிந்தினார் என்பதை இந்த நாடு நன்கு அறியும்.

பொதுமக்களே, இந்த விழா எளிய விழாவாகத் தோன்றினாலும்கூட, உலகத்தின் உள்ளங்களை எல்லாம் கவர்கிற விழா என்று நான் சொல்லுவேன். ஏனென்றால், தஞ்சை கூத்தரசன் தன்னுடைய உறவினர்களை இங்கு அழைத்து வந்திருப்பது சிறப்பாகும்.

உலக நாடுகளை ஒன்றாக அழைத்ததுபோல, சிங்கப்பூரின் எழுச்சி வேந்தராகவும், இதய தெய்வமாகவும் அவர்களுக்கு ஈடில்லாத தலைவராகவும் திகழ்கிற லீ க்வான் யூ பெயரைச் சொன்னாலே உலக நாடுகளின் தலைவர்கள் எழுந்து நின்று போற்றுவார்கள்.

லீ க்வான் யூ அவர்கள், தொழிலாளராகத் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கினார்.

மலேசிய நாடு பிரிந்து சென்ற பின்னர், சிங்கப்பூர் என்ற ஒரு சிற்றூரை ஒரு மாபெரும் நாடாக மாற்றிய பெருமை உலக வரலாற்றில் லீ க்வான் யூ–வைச் சாரும். இவரை சிங்கப்பூர் மக்கள் எவ்வளவு நன்றியோடு பாராட்டுகிறார்கள். தமிழர்கள் எத்தனை சிந்தனை ஊக்கத்தோடும், தங்களுக்கு வாழ்வு தந்த வள்ளல் என்கிற வகையில் பாராட்டுகிறார்கள் என்பதை எப்போது சிங்கப்பூர் சென்றாலும் காணலாம். லீ க்வான் யூ என்ற பெயரைக் கேட்டாலே தமிழர்களின் கண்கள் கசிந்துருகும். அந்த மாபெரும் தலைவரை நீங்கள் நினைக்கிறீர்களே என்று மனம் திறந்து பாராட்டுவார்கள். அந்த வகையில், லீ க்வான் யூ ஐ.நா. சபையில் உரையாற்றியிருக்கிறார்.

சீன நாட்டுத் தலைவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட ஒரு தலைவரை எங்கள் நாடு பெறவில்லையே? என்று கூறியிருக்கிறார்கள்.

அத்தகைய பெருந்திலகமாக, நாட்டின் பேராற்றலாகத் திகழ்ந்த லீ க்வான் யூ, சிங்கப்பூர் என்றால் சிறிய ஏரி என்றுதான் பொருள். ஒரு சிறிய ஏரியாக இருந்த நாட்டை, எவ்வளவு பெருமை மிகுந்த, ஆற்றல் வாய்ந்த நாடாக, வணிகத்தின் ஊற்றுக்கண்ணாக, அதுவா வளர்ச்சி பெறும் என்று மலேசியப் பெருமக்கள் கேட்டபோதும்கூட, சிங்கப்பூரை உருவாக்கி ஒரு வரலாற்றைப் படைத்தார் லீ க்வான் யூ.

அருமை நண்பர் தஞ்சை கூத்தரசன் அவர்களின் திருமகள் சிங்கப்பூரில் வாழ்கிறார். நான் அவரைக் கண்டு பேசி இருக்கிறேன். சிங்கப்பூரில் நம்முடைய தஞ்சை கூத்தரசன், ஒரு கூட்டம் நடத்தினால், இங்கு அமர்ந்திருப்பவர்களைப் போல ஒரு ஐந்து மடங்கு மக்கள் கலந்துகொள்வார்கள். கூத்தரசன், அவ்வளவு பெரிய எழுச்சியும், செல்வாக்கும் கொண்ட வகையில், இன்று பாராட்டிப் பேசுகிற மக்களையெல்லாம் காணுகிறபோது, நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நீதிமான்கள், திறமை வாய்ந்தவர்கள், ஆற்றல் வாய்ந்தவர்கள், சிந்தனைத் திறம் மிகுந்தவர்கள் என்று பார்த்தால், அதுவும் தஞ்சை மாவட்டத்தில், பல மக்கள் சிங்கப்பூருக்குச் சென்று வாழ்கிறார்கள். அந்த வகையில், சிங்கப்பூருக்குச் செல்கிறவர்கள் என்று பார்த்தால், இப்போது வேண்டுமானால், பிற மாநிலங்களில் இருந்து சென்று இருக்கலாம்.

தஞ்சை மக்கள் அங்கே திரண்டிருக்கிற காட்சியைக் காணும்போது, கூத்தரசன் அவர்கள், அங்கு விழாவை அவரைப்போல அவ்வளவு உருக்கமாக நடத்தியவர்கள் யாருமில்லை.

அந்த வகையிலே, ஆற்றல் வாய்ந்த நண்பர் கூத்தரசன், அவரையும் நீங்கள் பார்த்தால், அவர் இளைஞராகத் தோற்றமளிக்கிறாரே தவிர, அவருக்கு கிட்டத்தட்ட எண்பது வயது ஆகப்போகிறது. ஆனாலும், கலைஞர், அவரைக் காணும்போதெல்லாம் சொல்வாரிள, கூத்தரசன் என்ற பெயர் உங்களுக்கு மிகப் பொருத்தம். ஏனென்றால், நீ நடத்துகிற கூத்தினால்தான் கலகமே வருகிறது என்பார்.

ஒரு முறை கலைஞரிடம் கோபித்துக்கொண்டு அவர் கழகத்தைவிட்டுச்ள சென்றபோது, கலைஞர் அவரைச் சமாதானப் படுத்தி மீண்டும் கட்சியில் இணைத்துக்கொண்டார். அந்த வகையில், முதிய தலைவர்கள் என்று நாம் விரல்விட்டு எண்ணினால், நம்முடைய தினகரன் அவர்களைப்போலப் பெருந்தகை செங்குட்டுவன் அவர் களைப் போல என்று கூறினால், தஞ்சை கூத்தரசன் அவர்களில் ஒருவராவார்.

இளமைப் பருவத்தில் இருந்து தளர்ச்சி வந்தபோதும்கூட, எழுச்சி குறையாமல் கூத்தரசன் உள்ளார்.

லீ க்வான் யூ, அவருக்கு என்ன பெருமை என்று ஒரு சான்று சொல்வார்கள். தன் வாழ்நாள் இறுதி வரையில், அவர்தான் தன்னுடைய அலுவலகத்திற்கு முதல் பணியாளராகச் செல்வார். அப்படி கடமைக்கு வடிவம் தந்தவர் லீ க்வான் யூ, சிங்கப்பூரை மட்டுமல்ல, வையகத்தையே வாழ்விக்கும் திறமை உடையவர்.

சிங்கப்பூர் மக்களுக்கு இங்கிருந்தா நாம் பாராட்டுச் சொல்கிறோம். சிங்கப்பூர் மக்களுக்கும், தாய்த் தமிழைத் தந்தது மட்டுமல்லாமல், தமிழர்களின் உரிய தகுதியை கவனித்து, அமைச்சர் பெருமக்களாக உருவாக்கிய பெருமையும் சிங்கப்பூர் நாட்டைத்தான் சாரும். சிங்கப்பூர் நாட்டின் கல்வி வளத்துக்கும், சிங்கப்பூர் நாட்டின் நிதி வளத்துக்கும் தமிழர்களை முன்னிறுத்திய பெருமை லீ க்வான் யூ–வைச் சாரும். பல்வேறு நாடுகளில் தமிழர்கள் தொடர்ந்து பல்லாண்டுகள் வாழ்கிறார்கள் என்றாலும்கூட, அந்தப் பெருமிதத்தை மலேசியா தருவதற்கு முன்னால் தந்த பெருமை சிங்கப்பூரைச் சாரும் என்பதை நாம் எண்ணி மகிழலாம்.

விருதளிப்பது என்பது, தகுதியானவர்களுக்குத் தருவது மட்டுமல்ல.

ஒரு தகுதியான நாடு, ஒரு தகுதியான தலைவருக்குத் தருகிறது என்கிற வகையில், நாம் மிகப்பெரிய பெருமிதத்தை அடைகிறோம் என்று சொல்லி, அருமை நண்பர் கூத்தரசன் அவர்களுக்குத் தளர்ச்சி வராது, உங்களுக்கு எழுச்சி குறையாது. அவருக்குச் சிங்கப்பூர் நண்பர்கள் மட்டுமில்லை. உலகத்தின் அத்தனை இயக்கத்தின் தோழர்களும் தஞ்சை கூத்தரசன் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்று சொல்லி, இந்த இனிய விழாவில், நான் ரொம்பவும் மகிழ்ந்துபோனேன். எனக்குக்கூட நடராசன் என்று பெயர் வைத்தது தவறு, ஏனென்றால், இப்போது நடக்க முடியாமல் இருக்கிறேன். என்றாலும், கூத்தரசன் ஒருமுறை அழைத்துவிட்டு, நீங்கள் வந்தால் சரி என்று சொல்லிவிட்டுப் போனால், அவருடைய சொல்லை நான் வாழ்வில் தட்டுவது இல்லை என்பதைக் காட்டுவதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறேன் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

வணக்கம்.

❀❀❀

30. கம்பன் விழா

கம்பன் கழகத் தலைவராகவும்,

தமிழகத்தின் ஒப்பற்ற தலைவர் என்று நாம் சொன்னால், அந்த வகையில் வெற்றி பெற்றுத் திகழும் அண்ணல் அருளாளர் அவர்களையும்,

அருமை நண்பர் சிலம்பொலி செல்லப்பன்,

என் இனிய நண்பர் அறிவொளி,

உங்களையெல்லாம் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நானும் அறிவொளியும் மேடையேறி ஐம்பதாண்டுகள் ஆகின்றன. எனக்கும் அறிவொளிக்கும் என்ன வேறுபாடு என்றால், அவர் என்னைவிட வளர்ந்தவர் என்பதை அவர் தாடியே காட்டும்.

அருமை நண்பர்களே, மூன்று நாள்களும் தமிழகம் பெருமிதம் அடைகிறவகையில், சர்க்கரைப்பந்தலில் தேன்மாரிபொழிவதைப்போல, இந்தச் சலவைக் கல் மண்பத்தில் சொற்பொழிவாளர்கள் சந்தன மழை பொழிந்திருக்கிறார்கள். கேட்டவர்கள் எல்லாம் கிறுகிறுத்துப் போய்க் கம்பன் பாட்டமுதத்தில் திளைக்க வேண்டும் என்ற வகையில், இங்கே நிரம்பி இருக்கிறார்கள்.

இன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகிற தகுதியும், ஆற்றலும் நிரம்பியுள்ள என் இளவல் அருமை நண்பர் சத்தியசீலன் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியாத நலிந்த நிலைக்கு ஆட்பட்டார். என்னைக்கூடக் கேட்டார். ஏன் எனக்கெல்லாம் இந்த பை–பாஸ் நடக்கிறது என்று.

நான் சொன்னேன், சொற்பொழிவாளர்கள் அனைவருக்கும் வர வேண்டியது பை–பாஸ். ஏனென்றால், அவர்கள் எந்த நாளும் தலைப்பில் பேசுவதில்லை. தலைப்பை பை–பாஸ் செய்தே பழக்கப்பட்டவர்கள்.

அருமை நண்பர்களே,

இனியவன் அவர்கள் என்னை அணுகிப் பேராசிரியர் சத்தியசீலன் அவர்கள் மேடையில் தலைமை தாங்க முடியாத நிலை இருக்கிறது. நான் சில பேரைக் கேட்டேன். அவர்கள் எல்லாம் வேலை இருக்கிறது என்கிறார்கள். வேலை இல்லாதவர் நீங்கள் ஒருவர்தான் என்று மகிழ்ச்சியோடு வந்து பங்கு பெற வேண்டும் என்று அழைத்தார்கள்.

நண்பர்களே,

கம்ப இராமாயணத்தின் காட்சிகளில் ஒரு காட்சி என் நினைவுக்கு வருகிறது. இராவணனுக்குத் தூதனுப்பலாம் என்று சொல்கிறார்கள். அனுமன்தான் முன்னரே சென்று திரும்பியிருக்கிறான். தூது அனுப்ப வேண்டாம். நாம் நேரடியாக இந்தப் பணிகளைத் தொடங்கலாம் என்று மறுத்து விடுகிறார்கள்.

ஆனால், இராமன் தூது அனுப்ப வேண்டும், எவ்வளவுதான் பட்டிமன்றத்தில் சிங்கங்கள் சீறிப் பேசினாலும்கூட, நடுவர் என்பவர் நடுக்கத்தோடு இருக்கத்தான் வேண்டும் என்ற வகையில், அங்கதனைத் தூது அனுப்பினார்கள்.

அங்கதன் என்று சொன்னால், தன்னுடைய உடலைத் தருபவன் என்று பொருள். எனவே, அங்கதன் தூது செல்லும்போது ஒரு தொடர் சொல்லுகிறான்.

மாருதி அல்லனாயின்
நீ என்னும் மாற்றம் பெற்றேன்

என்று மகிழ்ச்சியோடு சொல்கிறான். அந்தத் தொடர்தான் நான் இப்போது சொல்லி, சத்திய சீலன் இப்போது இல்லையெனாலும், மாருதி அல்லனாயின் மற்று நீ என்று மாற்றம் பெற்றேன் என்ற மகிழ்ச்சியோடுதான் இந்தப்ள பட்டிமன்றத்தை தொடங்குகிறேன்.

நண்பர்களே,

கம்பருக்குப் பல பெருமைகள் உண்டு. தமிழின் புகழைத் தன் புகழ் ஆக்கிக்கொண்ட பெருமை உடையவர் கம்பர். அவருடைய தொடரிலேயே சொல்வதென்றால், மன்புகழ் பெருமை எல்லாம் உன் புகழ் ஆக்கிக்கொண்டாய் உறவுத்தோளாய் என்பதற்கேற்பக் காவியத் தலைவர்கள், காவியக் கவியரசர்கள் அவ்வளவு பேரும் போற்றிப் புகழத்தக்க பெருமிதம் வாய்ந்த கவியரசராகக் கம்பர் திகழ்கிறார்.

கம்பர் புகழோடு திகழ்வதற்கு என்ன காரணம், அவர் எழுதிய கதையா? எழுதிய திறமா? புனைந்த அழகா? பொருட்பொலிவா? சொற் செறிவா? உவமைகளை அடுக்கிக் காட்டும் ஒப்பற்ற பாட்டுத் திறமா? என்றெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திருக்கிறார்கள் நாட்டு மக்கள்.

கம்பர் கவிதையைப் போல், கற்றோருக்குக் களிப்பைத் தருவது வேறொன்றும் இல்லை என்றே சொல்லியிருக்கிறார்கள். கல்லார்க்கு வேண்டுமென்றால் கதை மகிழ்ச்சி தரும். கற்றார்க்கு கதையை எடுத்துக்காட்டும் கவிதைதான் மகிழ்ச்சியைத் தரும்.

கவிதை என்றால், ஏன் மேன்மையுறுகிறது கவிதை, ஒரு பொருளை உணர்ந்த வகையில் உணர்ந்தவர்கள் அதை ஒவியமாக வரைந்து காட்டுகிற திறத்தால்தான், கவிதை அழகு பெறும். கவிதை மேன்மை பெறுவதற்கு அமையும் கருப்பொருள், எப்படி அமைந்திருக்க வேண்டும்? ஒரு சிறந்த பொருளைப் பற்றி யார் எழுதினாலும் வெற்றி பெறலாம். நடையில் நின்றுயர் நாயகனைக் காவியமாகக் கொண்ட காவியங்கள் எதுவும் வெற்றி பெறும்.

ஆதிகாவியம் என்று வடமொழியில் புகழ்வதும், துளசிதாசர் இராமகாதையை இராமசந்திர மானஸ் என்று சொல்லி, இந்தி மொழி பேசுபவர்கள் புகழ்வதும், யாரும் மகிழலாம். காரணம் எடுத்த தலைப்பு அப்படிப்பட்ட தலைப்பு.

எனவே, எடுத்த தலைப்பின் பெருமையா? அதைத் தொடுத்துக் காட்டும் புலமையின் திறம் பெரிதா? என்பதுதான் நாம் வியக்கத்தக்கதாகும். கம்பர் எதைத் தொட்டாலும், அவர் பாடுகிற முறையால், பாடுகிற பண்பாட்டால், தமிழ் தொடாத எல்லைகளையெல்லாம் தொட்டுப் பார்க்கலாம் என்கிற வகையில், உயர்ந்து நிற்கிறார்.

கம்ப இராமாயணத்தைப் பிழிந்தால் ஒரு எழுநூறு குறட்பாக்கள் சொட்டும். எழுநூறு திருக்குறள் சொட்டுகிறதே என்று பார்த்தாலும்கூட, கம்ப இராமாயணத்தை எடுத்துக் காட்டுகிறவர்கள் பழைய உலகத்தில் குறைவுதான்.

திருக்குறளுக்கு இப்படிப்பட்ட எதிரொலியாகக் கம்பர் திகழ்கிறார் என்று கண்ட பிறகு, பரிமேலழகர் ஓர் இடத்தில் கம்பரைக் கருதுகிறார். **1330** குறட்பாக்களுக்கு விளக்கம் வரைகிற பரிமேலழகருக்கு, புறநானூறு தெரியும். சங்க இலக்கியம் தெரியும். ஆழ்வார் பாசுரங்கள் தெரியும். ஆனாலும், ஒரு குறிப்பிட்ட காட்சியைக் காட்டுவதற்கு அவருக்கு எந்த இலக்கியமும் வரவில்லை.

அப்படி, ஒரு குறட்பாவுக்கு விளக்கம் எழுதும்போது, பேராண்மை என்று ஒன்று உண்டு. பகைவர்களைத் தொலைப்பது, அவர்கள் படைகளையெல்லாம் குலைப்பது, சீரழிப்பது, வெற்றி பெறுவது என்பது இயல்புதான். ஆனால், எதிர் நின்ற தலைவன், எல்லாம் இழந்து நின்றபோது, அவன் மீது பரிவு காட்டிப் போரை இதோடு நிறுத்துகிறேன், இன்று போய் போருக்குத் தானையுடன் நாளை வா.

பரிமேழலகர் சொல்லுகிற மேற்கோள். போர்க்களத்தில் வஞ்சி என்னும் துறைதான் இப்பாட்டாகும் என்று பரிமேலழகர்காட்டுகிறார். இப்போது கம்பர் யார் என்று தெரிகிறதல்லவா?

கம்பரின் புலமைக்கு எது முதல் என்று கேட்டால், ஐந்தாம் வேற்றுமை உருபுக்கு ஏது என்று பொருள் ஒன்று உண்டு. ஏது பொருள் என்று சொன்னால், இதனால் இது வருகிறது என்று பொருள். இதற்கு என்ன மேற்கோள் காட்டுவது? என்று இலக்கண ஆசிரியர்கள் மருண்டபோது, கல்வியிற் பெரியவர் கம்பர் என்று எழுதியிருக்கிறார்.

கல்வியால், கற்பனையால், புனைகின்ற திறத்தினால், கம்பரின் மாட்சியினை நாம் எண்ணி எண்ணி மகிழலாம்.

அருமையான தலைப்பு தந்திருக்கிறார்கள். தமிழ் வளர்த்த கம்பன் என்று. கம்பன் வளர்த்த தமிழ் எத்தகைய கலை அழகு உடையது என்றால், இராவணன், தன்னுடைய மூல படை முறிந்துவிட்டதே என்று அலறித்துடித்து ஒரு குன்றின்மேல் நின்று பார்க்கிறான். எங்குப் பார்த்தாலும், அது இரத்தக்குளம். போர் வீரர்கள் சாய்ந்து கிடப்பதைக் கண்டு கம்பர் ஒரு பாடல் சொல்கிறார்.

இராமன் தொடுத்த அம்பினால், இராமன் வளைத்த வில்லினால் எவ்வளவு பெரிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று காட்டுவதற்கு, தமிழ் நெறி வழக்கௌன்ன தனிச்சிலை சாய்ந்தான். இராமன் கையில் ஏந்தியிருக்கும் அம்பு சென்று தைப்பதும், வென்று மீள்வதும், நின்று எப்போதும் புகழோடு காட்டுவதற்குத் தமிழ் நெறி வழக்கென்ன தனிச்சிலை. யாராவது இப்படிச் சொல்வார்களா?

தமிழ் நெறி வழக்கு என்பது, அன்பை, நாட்டை, ஊரை நினைக்கும்போதெல்லாம், அவர் உள்ளத்தில் உவந்து வருகிற தமிழ் வெள்ளம், கம்பரை ஒப்பற்ற தமிழரசராகக் காட்டும்.

கவிஞர்கள் என்று சொன்னாலே கம்பருக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி வந்துவிடும். யார் கவிஞர்கள்? இந்த ஊர் அழகான ஊர். இந்த ஊரைப்போல் நல்ல ஊர் இல்லை. மேலே ஏகுவான் என்று நினைக்கிற உலகம் இருக்கிறதே, அவ்வுலகத்தவரும் விரும்பி வரும் அயோத்தி மாநகரம். அயோத்தியில் வந்து வாழ வேண்டும் என்று அவ்வுலகத்து மக்களும் விரும்பி வருகிறார்களாம்.

செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளின் சீரிய கூரிய தீஞ்சொற்கள் வவ்விய கவிஞர் புகழ்ந்தது என்று கம்பர் தொடர் சொல்கிறார். இவ்வளவு பெரிய தமிழ்க் காதல் அவருக்கு இருக்கக்கூடாது. கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம் என்று நான் கூறுகிறேன். ஏன் தெரியுமா? அடுத்த தொடர், வடவூர் முனிவனும் புகழ்ந்தது. ஒரு அடை இல்லை. நாமெல்லாம் புகழ்ந்திருக்கலாம். அதெல்லாம் புகழ்ச்சியா? புகழ்ச்சி என்றால் எது? செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளின் சீரிய கூரிய தீஞ்சொற்கள் வவ்விய கவிஞர்.

நண்பர்களே ஒரு காவியத்தைப் புனைவது என்று சொன்னால், ஈடில்லாத தலைவன், ஈடில்லாத தலைவி, ஈடில்லாத பகைவன் மூவரும் இருக்க வேண்டும்.

❀❀❀

31. கம்பன் கழக முதலாண்டு விழா

கம்பர் கழக அன்பர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, பெருமக்களே :

இங்கே இன்று நடைபெறுகின்ற கம்பர் கழக முதலாண்டு விழாவில் தலைமை தாங்கும் வாய்ப்புப் பெற்றமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். பாரத நாட்டின் பழம்பெரும் புதையல்களாகத் திகழ்கின்ற இதிகாசங்களான இராமாயண, பாரதத்துக்கு நிகராக வேறெவையும் இல்லையெனக் கூறலாம். உலகெங்கும் புகழ்பெற்ற காவியமான இராமாயணம் சமஸ்கிருதத்தில் ஆதி காவியமாகப் போற்றப்படுகின்றது. அதே வகையில் கம்ப இராமாயணம் தமிழில் ஒப்புயர்வில்லாத நீதி காவியமாகப் போற்றப்பட்டு வருகிறது.

இராமபிரானுடைய இனிய வரலாறும், தெய்வீக இயல்புகளும் எல்லோருடைய உள்ளத்தையும் எக்காலத்திலும் கவரத் தக்கனவாகும். படித்தவர்களிலிருந்து பாமரர்கள் வரை இராமாயணக் கதையை அறியாதவர்கள் என்று எவரும் இல்லையென்றே சொல்லிவிடலாம். பாரத நாட்டு மக்களின் நாடி நரம்புகளில் எல்லாம் இந்தக்கதை ஊடுருவித் தோய்ந்து நின்று, பக்தி உணர்ச்சியை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடச் செய்திருக்கிறது. கம்ப இராமாயணத்தை விரிவுரையாகச் சொல்வதிலேயே தங்கள் வாழ்நாளைக் கழித்தவர்களும், அதற்காக அரசர்களால் தனி நிபந்தங்கள் இடப்பட்ட செய்திகளும் உண்டு. இம்மாதிரியான சிறப்பு வேறு எந்தத் தனி நூலுக்கும் இல்லை. வாழ்க்கை என்பது நல்லவும், தீயவும், இன்பமும், இரவும் பகலும் கலந்த கலவையாகும். இவைகளை வேறு பிரித்துத் தக்கது இது, தகாதது இது என்று உணர்வது தான் மனிதர்களுடைய கடமையாகும்.

இந்த முயற்சியில் மனிதன் சஞ்சலங்கட்கு ஆட்பட்டு. சில நேரங்களில் தவறும் செய்கிறான். எனவே மனிதர்கட்கு அவ்வப்போது அறம் கற்பிக்கவும், உண்மையின் ஒளியைக் காட்டவும், நற்குணங்கள், நல்ல செய்கைகளின் விளைவுகளை விளக்கிக் காட்டவும், ஞானிகள் தங்கள் அனுபவங்களையும் அறவுரைகளையும் அருள் உணர்வோடு தொகுத்து வழங்கினார்கள். அவைகளே வேதங்கள், உபநிடதங்கள் என்று கூறப்பெறும் தெய்வீகக் களஞ்சியங்களாகும். வேதங்களும் உபநிடதங்களும் ஞானத்தையும் பக்தியையும் வளர்க்க எழுந்தவை. வேதம் என்ற சொல்லே அறிவு என்ற பொருளைத் தரும், விதி என்ற வேரிலிருந்து பிறந்தது. அறிவில் பயனாவது உலக முதல்வனாகிய உண்மைப் பொருளை உணர்ந்து போற்றுவதும் அந்த முழுமுதற் பொருள் உயிர்க்குயிராய்க் கலந்து நிற்கும் உலகத்து உயிர்களை ஒன்றாகக் கருதிப் போற்றுவதும் ஆகும். இந்த உயர்நோக்கத்தை அடையும் வழியை உணர்த்துகின்ற வேதங்கள்! மக்களுக்கு வாழும் வழியைக் காட்டுகின்றன; உயர்ந்த ஒழுக்கங் களைப் போதிக்கின்றன. ஆகவே வேதங்களை இறைவனுடைய வடிவமாகவும், வாசகங்களாகவும், ஆன்றோர்கள் கருதினர்.

வேத உண்மைகளை இன்றும் எளிமைப்படுத்துவதற்காகவே பாரத இராமாயண இதிகாசங்கள் எழுந்தன. வேதம் என்ற பசுவை அர்ச்சுனன் என்ற கன்று முட்டிக் காட்டிய பிறகு திரண்டு வந்த பாலமுதமாகக் கீதையைக் கண்ணன் கறந்து வழங்கினான் என்ற கூறுவார்கள். சாதிக்க வேண்டிய நேரங்களில் சலனப்பட்டுச் சோம்பி மனங்குன்றுவது தகாது என்ற நோக்கத்தில் உணர்ச்சியும் உத்வேகத்தையும் நமக்கு எப்போதும் ஊட்டுவது கீதையின் உட்பொருளாகும். மனித சமூகத்தை உயர்த்துவதற்கு, நமது நடைமுறை வாழ்க்கையோடு எல்லா நிலைகளிலும் நெறிப்படுத்திக் காட்டுவதற்குக் கதை வடிவில் காவிய சாரமாக இலக்கியங்கள் வடிப்பதை நம் பெருமக்கள் விரும்புகிறார்கள். இப்படி அந்நாளில் நடந்தது என்று கூறி இதிகாசங்களின் ஆசிரியர்கள் சுடர் விளக்கேற்றி நமக்கு வாழ்வில் வழிகாட்டுகிறார்கள்.

இதிகாசங்களுக்குச் சில தன்மைகள் உள்ளன. அவைகளில் இடம் பெறுகின்ற கதைகளின் உயர்வும் வீரர்களின் பெருமிதமும், ஒழுக்க மேம்பாடும் பக்தியுணர்வும் மக்களின் அடிப்படையான நோக்கங்கள், கலைகள் முதலியவற்றைப் பளிங்குபோலப் படம் பிடித்துக் காட்டும். நாம் பருகும் பால் எப்படி மருந்தாகவும், உணவாகவும்

பயன்படுகின்றதோ அதுபோல இந்த இலட்சிய வரலாறுகள் நம் வாழ்வுக்கு வளத்தையும் பலத்தையும் ஊட்டு கின்றன. வால்மீகி முனிவர் தமது, காவியத்தின் முகப்பிலேயே நிறைந்த மனிதன் யார் என்று தொடங்குகிறார்.

"யார் ஒப்பவர் உலகில்? யாது இவர்க்கு அரிய பொருள்? வேறுள்ள குழுவை எல்லாம் மானிடம் வென்றதன்றே!" என்று கம்பர் கூறுவதையும் காணலாம். ஆகவே மனித குணங்களைச் செம்மை செய்து வாழ்க்கையை மேம்படுத்திப் போற்றுவதே இந்த ஆசிரியர்களின் குறிக்கோளாக இருந்திருக்கிறன.

ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு குணம் மட்டுமே சிறந்து இருக்கும். அல்லது ஒவ்வொரு பகுதியே அழகாக இருக்கும். எல்லாக் குணங்களும் எல்லா அருளும் எல்லாப் பகுதிகளிலும் முழு நிறைவாக இருந்தால் எப்படியிருக்குமோ அப்படியே சொல், பொருள், யாப்பு அமைப்பு, கொள்கை, அறம், நயம் முதலிய எல்லா வகைகளிலும் இராமாயணம் ஈடற்றதாக இலங்குகின்றது. இராமன் என்ற பெயரே குணங்களாலும் அழகாலும் நம்மைக் கவர்பவன் என்று பொருள்படும். இராமாயண காலத்துக்கு முன்னரே இராமநாமம் என்பது புகழ் பொருள் வாய்ந்த பெயராக விளங்கியிருக்கின்றது. எனவே வசிட்ட முனிவர் அந்த இனிய பெயரைக் கோசலையின் புதல்வனுக்குச் சூட்டுன்றார். ஓம் நமோ நாராயணா, ஓம் நமசிவாய என்ற எட்டெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆகிய மாமந்திரங்கள் இணைந்த திருப்பெயராகவே இராமநாமம் அமைந்துள்ளது என்றும் கூறுவார்கள்.

நாம் மகிழ்ந்து கொண்டாடுகின்ற பாரத சுதந்திரத் திருநாளுக்கு ஆணி வேராக விளங்கிய அண்ணல் காந்தியடிகள் தன் இறுதி மூச்சிலும் இராம நாமத்தையே சொல்லி முடித்ததையும் மறக்கமுடியாது. அவர் நினைந்ததும், நடத்தியதும் இராம ராஜ்ஜியம் லட்சியத்துக்காகவே என்பதையும், – இராம நாமம் அவர் ஊனிலும் உயிரிலும் ஒன்றிக் கலந்திருந்ததையும் நாம் அறிவோம்.

அண்மைக் காலமாகக் காவியங்களில் இலக்கிய ரசனையைப் பெருமைப்படுத்திப் பேசுகின்றவர்களும், காவிய இன்பத்தை அனுவிப்பவர்கரும் பெருகி வருகின்றார்கள். இலக்கிய இன்பம் என்பது காவியத்தினுடைய இயல்பையும் அதில் கையாளப் பெறுகின்ற உவமை, உருவகம் முதலிய சொல் அலங்காரங்களையும் காட்டும். இவைகளை ஆராய்வது என்பது ஓர் இயல்பான வேலையாகும்.

இத்தகைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவது அறிஞர்களுடைய – மொழியாராய்ச்சியாளர்களுடைய நல்ல கடமை என்று கூடக் கூறலாம். ஆனால், இவைகளுக்கெல்லாம் மேலாக இராமாயண காவியம் உலகுக்கு உணர்த்துகின்ற செய்தி என்ன என்பதை நாம் ஊன்றிக் காண வேண்டும் என்பது என் விருப்பமாகும். இப்படிப்பட்ட செய்திகளுக்காகவே தான் இதிகாசங்களே பிறந்தன.

தன்னுடைய புலமையையோ, கல்வியாற்றலையோ காட்ட வேண்டும் என்ற கருத்திருக்குமானால் கம்பர் வேறு எத்தனையோ கதைகளை, அல்லது வேறு நிகழ்ச்சிகளைத் தனக்குப் பொருளாக எடுத்துக் கொண்டிருக்க முடியும். ஆனால், நடையில் உயர்ந்து நிற்கும் நாயகனாகிய, விரும்பும் பண்புகளுக்கெல்லாம் சிகரமாகிய வேத முதல் காவிய நாயகருக் கொண்ட இராம கதையைக் கம்பர் தெரிந்தெடுத்ததற்கு ஒரு சிறந்த காரணம் உண்டு.

ஒழுக்கத்திலும் அடக்கத்திலும் உயர்ந்த பண்புகளிலும் உலகத்தில் ஒருவன் உயர்ந்து நின்று கடவுளாக விளங்க முடியும் என்பதைக் காட்டுவதுதான் இராமாயணத்தின் சாரமாகும்.

அதேபோல், எவ்வளவு உயர்வான தவ வலிமை உடையவனாக இருந்தாலும், ஒழுக்கம் இல்லாதவனனால் அழிந்தே போவான் என்பதும், அவன் எவ்வளவு புகழ் வாய்ந்த அரசாட்சியை நடத்தினாலுங்கூட முடிவில் தொலைந்து போவான் என்பதும் இராமாயணத்தின் அடிக் கருத்தாகும்.

கனிவிரும்பும் வானரமும் தக்க தலைவனைப் போற்றிப் பின்பற்றினால் ஒரு ஞானச்சுடராக விளங்கும் என்பதற்கு அனுமனுடைய வரலாறு எடுத்துக்காட்டாக உள்ளன.

இரக்கம் இல்லாத அரக்கர் கூட்டத்திலும் நல்ல சூழலில் வளர்ந்து, வேறுபட்டுச் சிறந்தவர்களாக உள்ள விபீஷனணையும் திரிசடையையும் நாம் காண்கிறோம்.

ஏழை எளிய வரும் உருவில் வேடனாகிய குகன் இக்கரையாகிய இகத்திலிருந்து அக்கரையாகிய பரத்துக்கு நம்மைக் கரை சேர்க்கின்ற கடவுளையே கரைசேர்க்கின்ற மகாமுகமாக விளங்குகின்றான். பறவையாகிய சடாயு, விலங்கினத்தில் பங்கும், பழங்குடியைச் சேர்ந்த சபரி என்று உலக உயிர்களை ஒருமைப் படுத்துவதை இங்கே காண்கிறோம்.

பரிவு மிருந்த தந்தை , பாசமுள்ள தாய், பண்புள்ள அண்ணன், அன்பு நிறைந்த தம்பி, கர்வம் மிகுந்த நண்பன், அருங்குணவதியாகிய மனைவி, நீதி வழுவாத அரசன், நிறை வளங்களை உடைய அமைச்சன், நாணக் கொழுந்தாவிய சொல், என வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் அனைவருக்கும் அறம் காட்டுகின்ற உரியவராக இக்காப்பியத்தைப் படைத்திருக்கிறார்கள்.

இன்று நமக்கு எல்லாத் துறைகளிலும் பெரிதும் வலியுறுத்தப் படுகிற ஒழுக்கம், நேர்மை, நீதி, வாய்மை முதலிய பண்புகளை வளர்த்துக்கொள்ள இராமாயண நெறி பெரிதும் உதவும். எம்பெருமான் மீன் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு" என்ற குகனின் கொள்கையை இராமாயணத்தின் வழிநின்று இன்று நாம் கட்டிக் காத்திட வேண்டும்.

"யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்பது ஒரு பாத்திரம் பழந்தமிழ்ப் பாட்டு. அந்தக் காட்சியைக் கம்பர் தான் நம் கண்ணெதிரில் காட்டுகின்றார். தசரதன் பிள்ளைகளாக இராமனுக்குப் பிறகு இருவர் பிறந்தனர். தசரதன் இறப்புக்குப் பிறகும் இன்னும் ஒரு மூவர் புதிதாக அக்குடும்பத்தில் பிறப்பெடுத்தனர்.

ஐந்தாமவராக ஒரு வேடுவன், ஆறாமவராகி ஒரு வானரன், ஏழாமவனாக ஒரு இலங்கையன் என்று இமயமுதல் இலங்கைக் கோடிவரையில் உள்ள மக்கள் எல்லோரும் ஓரினமாக்கப்படுகிறார்கள்.

இரக்கமில்லாத அரக்கர்களின் நடுவில் இரக்கமே உருவெடுத்த சீதா பிராட்டியார் சிறைப்பட நேர்கின்றது. முடிவில் இரக்கம் வெற்றி பெறுகின்றது: பெண்மை பெருமையடைகின்றது. இராமனும் சீதையும் இந்நாட்டு மக்களில் வாழ்க்கைக்கு மேல்வரிச்சட்டமாகின்றார்கள். நாடும் வாழ்வும் இராம ராஜ்ஜியமாகவே கனவு காணப்படுகிறன.

காப்பிய ஆசிரியர்கள் தொடக்கத்தில் நகர்வளம்—நாட்டுவளம் என்று எழுதுவதே வழக்கமாகும். கம்பர், நாட்டுவளத்தைக் கூடத் தன்னுடைய பாட்டுவளத்தைக் காட்டுவதற்கு வெறும் கருவியாக ஆக்கவில்லை. ஓர் இலட்சிய அரசு எப்படி இருக்க வேண்டும்— எப்படி அரசு நடைபெற வேண்டும் – நாட்டை ஆள்கின்றவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் கடமை உணர்வுகள் எத்தகைய அடிப்படையிலே அமைய வேண்டும் என்பதையெல்லாம் தீரச் சிந்தித்ததால் அறம் தலை நிமிர்த்தி. வேதம் அருள் சுரக்க, நிறைந்த நீதித்திறம் தெளிந்த, உலகம் அறம் இல்லாது போனால், இந்த உலகமே அழிந்துவிடும்.

பூவின் மேல் புகலுவிதர்க்கேலும் அறத்தினது இறுதி வாழ்நாட் கருதி, அஃது உறுதி அன்பு என்று அறத்தின் பெருமையைக் கம்பர் பல இடங்களில் சுட்டிக் காட்டுகின்றார்.

நெல்லும் உயிரில்லை; நீரும் உயிரில்லை : மன்னவன்தான் இம் மாநிலத்தில் உயிராவான் என்று சொல்வது பழைய வழக்கம். இந்தப் பழைய வழக்கம், கம்பனின் பாட்டில் புதிய கோலத்தைச் சந்திக்கின்றது. மன்னனே உயிர்: மக்களும், நாடும் அவனது உடல்; அங்கங்கள் என்பது இதன் உட்செய்தியாகும். அறம், கம்பனில் இலட்சிய எழுச்சியோடு, புதிய திசையிலே எழுகிறது. மன்னன் என்பவன் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்றவன்; அவனும் மக்களில் ஒருவனே என்ற கொள்கையைக் கம்பர் காவியத்தில் காண முடிகிறது.

மன்னன் உயிரல்லன், வெறும் உடல் தான் – மக்களே அந்த உடலை இயக்குகிற உயிர் என்பதனைக் கம்பன் கவிதை காட்டுகிறது. தசரதனுக்கு அடையிட்டுப் பேசுகிற கம்பன், அவன் உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினான் என்று குறிக்கிறான். வேந்தர் திலகத்தை இப்படி வெற்றுடம்பு ஆக்குகிறான். மக்களின் உயிரெல்லாம் உறைகின்ற மக்களின் உயிர்களைக் கட்டிக் காக்கின்ற கலமாக தசரதன் உடல் திகழ்ந்தது என்று கம்பன் காட்டுகிறான்.

ஏவல் இடுகின்ற உயிராக மக்களையும், ஏவல் புரிகின்ற உடம்பாக மன்னனையும் மாற்றிய பெருமை மகாகவியின் எதிர்கால இலட்சியக் காட்சிக்கு அத்தாட்சியாக உள்ளது. அரசன் தன் நாட்டை எத்தகைய பொறுப்போடும். விருப்போடும், கடமை உணர்ச்சியோடும், கண்ணும் கருத்துமாகக் கட்டிக் காத்து வந்தான் என்பதற்கு வறுமையில் வாடும் ஓர் உழவன் எதிர்பாராமல் தனக்குக் கிடைத்தளவில் சிறிய வயல்புறத்தை ஆசையோடு, இராப்பகலாக உழைத்துக் காப்பதையே இணையாக்குகின்றார். ‘‘வையகம் முழுவதும் வறிருள் ஓம்பும் ஓர் செய் எனக் காத்து இன்று அரசு செய்கின்றான்’’ என்று கம்பர் கூறுவது என்றும் ஆட்சியாளர் பின்பற்றத்தக்க அறநெறியாகும்.

கடவுளையே தனது காவியத்தின் நாயகராகக் கொண்டிருந்த போதும் காவிய நிகழ்ச்சியில் இராமன் தன்னைக் கடவுள் என்று காட்டுவதாகவும் கருதிக் கொள்வதாகவும் எந்த நிகழ்ச்சியும் இடம்பெறவில்லை என்றே கூறலாம். பொது மனித ஒழுக்கத்தையும், மானுட மேம்பாட்டையும் போற்றுவது என்ற உயர்ந்த குறிக்கோளில் நின்றதால் கம்பர் – பல்பெரும் சமயம் சொல்லும் பரம்பொருள்.

பொதுவான தனிப்பெரும் பொருளாகச் சுட்டிக் காட்டுகின்றார். இந்தத் தமிழ்ப் பண்பாடு காரணமாகவே திருவள்ளுவர், கம்பர், சேக்கிழார், நக்கீரர், முதலியோர் இறை உண்மையையும் உள்ளம் கனிந்த பக்தி உணர்வுகளையும், மக்கள் இனத்துக்கு வலியுறுத்து வதையே நோக்கமாக நினைத்ததால் தான் அற்புதமான கவிதைகள் இராமாயணஎத்தை எல்லா இடங்களிலும் அலங்கரிக்கின்றன.

அன்பு நெறியின் வடிவமே – ஒருமை உணர்ச்சியே இராமாயணமாகிறது. கம்பன் கலையும் – கவிதை அழகும், நாடக நலமும் தமிழின் வளமும், கற்பனைத் திறமும் எல்லாம் இந்த ஒழுக்கநெறி சார்ந்தவையாகவே கருதப்படவேண்டும். கம்பரில் கவிதைகளிலே தோய்கிறபோது, In the proof of the purest poetry is that its meaning is inexhaustible. About the best poetry, and not only the best, there floats an atmosphere of infinite suggestion. The poet speaks to us of one thing, there seems to lurk the secret of all. The said what he meant, but his meaning seems to beckon away beyond itself or rather to expand into so nothing boundless which is only focused In it." (OXFORD LECTURES ON POETRY) என்று அறிஞர் பிராட்லே கூறியதை இங்கே நான் நினைவு கூர்வது பொருத்தம் என்றே கருதுகிறேன்.

நான் பல ஆண்டுகளுக்கு முன் ஓர் ஆசிரியரிடம் பேசிக் கொண்டிருந்தபோது, இலக்கிய அழகாக வகுத்துச் சொல்லப்படும் பத்து அழகுகளில் 'சுருங்கச் சொல்லல்'. என்பதற்குத் திருக்குறளும், விளங்க வைத்தலுக்குத் திருமுறைகளும் உதாரணமாகக் கூறினார்.

'சென்னை கம்பர் கழகத்தார் முதலாண்டு விழாவிலேயே கம்பராமாயணப் பதிப்பு ஒன்றை வெளியிடுவது மகத்தான செயலாகும். வால்மீகி இராமாயணத்தை ஆராய்ந்து, இடைச் செருகல்களை நீக்கிக் காவியத்தை வெளியிடும் பணியைப் பரோடா பல்கலைக்கழகம் கடந்த 19 வருடங்களாக ஆராய்ந்து வெளியிட்டு வருகிறது. கம்பராமாயணத்தை திரு.வை.மு.கோபால கிருஷ்ணமாச் சாரியார் உரையோடு வெளியிட்டிருக்கிறார். டாக்டர் சுவாமிநாத ஐயர் நூல் நிலையமும் வெளியிட்டுள்ளது. இடைச்செருகலான பாடல்களை நீக்கி திரு.டி.கே.சி.யின் தொகுப்பும் வந்துள்ளது.

கம்பராமாயணப் பாடல்களை மேலும் சில அறிஞர்கள் தொகுப் பாகவும், சாரமாகவும் வெளியிட்டிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 18 ஆண்டுகளாக முயன்று கம்பராமாயணத்தை 16 தொகுதிகளாக வெளியிட்டுள்ளது.

மர்ரே கம்பெனியார் ஓர் அழகிய ஆராய்ச்சிப் பதிப்பை வெளியிட்டார்கள். எனினும் ஓர் ஆதாரமான பிரதி எளிதில் கிடைக்காத நிலை இருந்து வந்த இந்த நிலையில் கம்பன் கழகத்தார் அறிஞர் தெ.பொ.மீ.. பேராசியர் அ.ச.ஞா. முதலியோரின் முயற்சியோடு இராமாயணப் பதிப்பை இன்று வெளியிடுவது போற்றத்தக்க செயலாகும். ஆறு காண்டத்தையும் ஒரே புத்தக வடிவில் கையடக்கமான உயர்ந்த பதிப்பாக வெளியிடுவது இதுவே முதல்முறையாகும். அழகிய தாளில் அற்புதமான எழுத்துக்களில் இப்பதிப்பு அருமையாக அச்சிடப்பட்டிருக்கிறது.

காரைக்குடி கம்பன் கழகத்தைப் போல, இக்கம்பன் கழகமும் ஆண்டுதோறும் விழாக்களை நடத்துவது குறித்து மகிழ்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னர் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் தோன்றி தொடர்ந்து நடைபெறாமல் நின்றன.

என் அருமை நண்பர் நீதிபதி இஸ்மாயில் அவர்கள் தலைமையிலும் நண்பர் அழகர்சாமி அவர்களின் செயல் ஊக்கத்திலும் உருவாகியுள்ள கம்பன் கழகம் தொடர்ந்து பணியாற்றும் என்று உறுதி கூறலாம்.

கம்பன் கண்ட நாடு என்ற தலைப்பில் என் இனிய நண்பர்களான திரு கோதண்டராம கவுண்டர், கம்பன் அடிப்பொடி திரு சா.கணேசன், பேராசியர் திரு. இராதாகிருஷ்ணன் ஆகிய மூவரும் உரையாற்றப் போகின்றனர். கம்பனில் திளைத்து மகிழும் நீதிபதி எஸ்.மகராஜன் தொடக்கவுரையாற்றவுள்ளார்.

இந்த இரண்டு நாட்களுக்கும் இலக்கிய அன்பர்களுக்கு அருமையான இலக்கிய விருந்து படைக்கப்படுகிறது. காதாரக் கேட்டு, நெஞ்சார நினைந்து. இராமாயண நெறியை நாளும் பின்பற்றுகிற நல்லுணர்வை நாம் அடைவோமாக!

வணக்கம்.

❀❀❀

32. எம்.ஜி.ஆர். படத் திறப்பு விழா

கலை உலகத்தின் ஒப்பற்ற காவலராகவும், மனித நேயத்தின் மாட்சிமைப்பட்ட மாமனிதராகவும், கொடுத்துக் கொடுத்துக் கை சிவந்த கொடை வள்ளலாகவும், ஆட்சித் திறமையில் அனைவரின் நெஞ்சத்தையும் கவர்ந்த இதய தெய்வமாகவும், பல்வகைப்பட்ட தன் ஒப்பற்ற திறமைகளால் தமிழகத்தின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் கோயில்கொண்ட ஈடிணையற்ற தலைவர் – பொன்மனச் செம்மல் – புரட்சித் தலைவருடைய படத்தை இங்கே நான் திறந்து வைக்கிறேன் என்றால், திறக்கப்படுவது வெறும் படம் அல்ல. நான் இதுவரையில் கற்று வந்த அரசியல் பாடத்தைத் திறக்கிறேன் என்பது பொருள்.

புறநானூற்றுப் புலவர் சொன்னதுபோல, “எங்கள் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே’ என்ற பொன்மொழிதான் எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. கம்பராமாயணத்தில் குகன் பெருமான் பரதனைப் பாராட்டிக் கூறிய பொன் மொழிகளைத்தான் நான் இங்கே மீண்டும் பொன்மனச் செம்மலுக்குத் தக்க புகழுரையாகப் படைக்க விரும்புகிறேன்.

“என் புகழ்கின்றது! ஏழை ! எயினனேன் ! இரவி என்பான்
தன் புகழ்க் கற்றை, மற்றை ஒளிகளைத் தவிர்க்குமாபோல்,
மன் புகழ் பெருமை, நுங்கள் மரபினோர், புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய் – உயர் குணத்து உரவுத் தோளாய்!”

“நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா; காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்; திறம் பாட வந்த மறவன் புதிய
அறம் பாட வந்த அறிஞன் நாட்டிற்; படரும் சாதிப் படைக்கு மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்; அயலார் எதிர்ப்புக் கணையா
விளக்கவன்

என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்

தமிழால், பாரதி தகுதி பெற்றதும்

தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்

எவ்வாறென்பதை எடுத்துரைக் கின்றேன்.தமிழ் மக்களால் புரட்சித் தலைவர் புகழ் பெற்றதும் !

புரட்சித் தலைவரால் தமிழகம் புகழ் பெற்றதும்

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாரதியாரைப் பற்றிப் புகழ்ந்த புகழ் மொழிகளைத்தான் நாம் சிறிது மாற்றிக் குறிப்பிட வேண்டும்.



33. இருமொழிக் கொள்கைத் திட்டம்

பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்ட இருமொழிக் கொள்கைத் திட்டம், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களால் சீரிய முறையில் கடைப்பிடிக்கப்பட்டுக் கல்வித்துறையின் கலங்கரை விளக்கமாக இருமொழிக் கொள்கைத் திட்டம் அமைந்துள்ளது.

நமது இரு விழிகளைப்போல இருமொழிக் கொள்கைத் திட்டத்தையும் நமது அரசு முழுமையாகச் செயற்படுத்தும் என்பதை இந்த நன்னாளில் நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாபெரும் கல்வித் திலகமாகவும், அறிவு மேதையாகவும் திகழ்ந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களையும், அரசியல் கோட்பாடுகளை விளக்கமாகச் செந்தமிழில் பேசிக் காட்ட முடியும் என்பதற்கு வழிவகுத்த பல்கலை வித்தகராகிய தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களையும் நினைவுகூரும் இந்நாளில், இருமொழித்திட்டத்தின் விளக்கமாக நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன் .

“இனிமைத் தமிழ்மொழி எமது, எமக்கின்பம் தரும்படி வாய்த்த நல்அமுது” என்ற புரட்சிக்கவிஞரின் பொன்மொழியை நாம் முழங்கினாலும், தமிழகத்தின் தொடக்கப் பள்ளிகளிலும், கல்வி நிலையங்களிலும், தாய்மொழியான நமது தமிழ், கற்பிக்கப்படாமல் ஒதுக்கப்படுகிற ஒரு சூழ்நிலை உள்ளதோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

பிஞ்சு மழலையர் படிக்கும் பள்ளிக்கூடங்களில் அவர்கள் கொஞ்சிக் குலவும் மொழியாக நமது நெஞ்சைக் கவர்ந்த தமிழுக்குக் கொஞ்சங்கூட இடமில்லாமல், ஆங்கில மொழியின் ஆதிக்கத்திலேயே அந்தப் பிள்ளைகளின் நெஞ்சங்களைத் தஞ்சமாக்கி விடுகிறார்கள் என்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

அன்னைத் தமிழ் மொழியை அரியணையில் அமர்த்துவதற்கு இந்த அரசு, முந்தைய அரசுகளைக் காட்டிலும் முனைப்பாகச் செயற்படும் என்பதை வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் பயிலாமல், தமிழ் நாட்டில் வாழ்கின்றவர்கள் எவரும் தங்கள் படிப்பால் உயர்வு பெறமுடியும் என்கின்ற போக்கை நாம் ஏற்பதற்கில்லை. மற்றைய மாநிலங்களிலுங்கூட அந்தந்த மாநிலத் தாய்மொழிகளில் மாணவர்கள் பயிற்சி பெற வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கி இருக்கிறார்கள்.

இந்த நிலையில் தாய்மொழிக்கு முழு முதன்மை தருகின்ற வகையில் தமிழ் ஆங்கிலம் என்ற நிலையில்தான் இருமொழித் திட்டம் அமைகின்றது என்பதே தவிர ஆங்கிலம் தமிழ் என்ற வகையில் அமையக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

34. தமிழாற்றுப்படை

ஆற்றுப்படை என்பது தமிழ் இலக்கியத்தில் தனி வகையாகும்.

**"பெற்ற பெருவளம், பெறார்க்குச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"**

இலக்கணம் சொல்லும்.

பரிசில் பெற்றதால் தகுதி மிகுந்தவனாகத் தன்னை மாற்றிய நிலையில் பிறரைக் கண்டு நீங்களும் அத்தகுதியைப் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் வாய்ப்புக்கு வழி நடத்தும் நூல் தான் ஆற்றுப்படையாகும்.

ஆற்றுப் படைகள் தமிழ் இலக்கியத்தில் பல உண்டு. கவிப்பேரரசு வைரமுத்து தொட்டால் எதையும் வளமாக்கும், வைரமாக்கும் தகுதியுடையவர். கவிப்பேரரசு பேசினால், அவர் உதிர்க்கும் சொற்கள் வைரக் கற்கள். சொற்செறிவும், பொருட்பொலிவும், சிந்தனை ஆழமும், எண்ணங்களின் விரிவும், ஆய்வு நுணுக்கமும், நுட்பமும் திட்பமும் அமைந்தவை.

ஆற்றுப்படை அரங்கேற்றத்தை நான் கண்டு கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். தனிப்பெரும் இலக்கணப் பெட்டகமாகத் திகழும் தொல்காப்பியத்தின் நுணுக்கத்தைக் காட்டுவதில் தொடங்கி தந்தை பெரியாரின் சிந்தனைச் செழுங்கதிரின் பெருமிதத்தைக் காட்டி முடிக்கும் இந்த நூலுக்குத் தமிழின வழிகாட்டி என்பது எளிதான ஒரு பொருள்.

தமிழாற்றுப்படை என்று சொன்னால், தமிழுக்கு வழிகாட்டி. தமிழ் கற்க விரும்பினால், தமிழை அறிந்துகொள்ள விரும்பினால், தமிழின் நலங்களை எல்லாம் துய்த்து மகிழ வேண்டும் என்றால் இளைஞர்களே இங்கே வாருங்கள், இதில் காணுங்கள்.

எதிர்காலம் உங்கள் கையில்தான் இருக்கிறது என்று ஆர்வத் தோடு அழைத்து வழிகாட்டுவதற்குக் கவிப்பேரரசை மிஞ்சுவதற்கு எவரும் இல்லை.அவரைத் தொடர்ந்து தமிழ் மானம் காக்கும் வெற்றித் தமிழர் பேரவை நெற்றித் திலகமாய் நிற்கிறது.

கவிஞர் எடுத்துப் பேசும் முறையும், உண்மைகளைத் தொடுத்துக் காட்டுகிற அழகும் ,எப்படியெல்லாம் இலக்கியங்களைச் சாறுபிழிந்து காட்டலாம் என்ற நெறிகளுக்கு இந்தத் தமிழாற்றுப்படை களஞ்சியமாக அமைகிறது. பழந்தமிழ் தொடங்கி நடைமுறைத் தமிழ் வரை இலக்கிய நதி பாய்ந்து நம் நெஞ்சக் கழனிகளை எப்படி நிரப்புகிறது என்பதைப் பக்கந்தோறும் பயிர் விளைச்சலாகக் காணலாம்.

கவிப்பேரரசு வாழ்க ! கருத்து வளம் வெல்க !

❀❀❀

“
முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை – வாழ்க! (பாரத)
”

35. அண்ணல் நமசிவாயம் விழா

நமச்சிவாய வாழ்க!

ஆர்த்த சபை நூற்றொருவர்
ஆயிரத்து ஒன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத்து ஒருவர்

என்ற அடிகளை நினைக்கும்போதெல்லாம் எனக்குப் பேராசிரியர், பெரும்புலவர் திரு.பா.நமசிவாயத்தின் நினைவே நெஞ்சில் தோன்றும். பேராசிரியர் நமசிவாயம் நகைபடவும், சொல்லழகு தலைப்படவும் பேசும் ஆற்றலர். கேளாரும் வேட்ப மொழியும் இவ்வித்தகம், மகுடி இசையாய்ப் பிறரை அசையாது இருக்கச் செய்யும். நமசிவாயத்தின் மணிவிழா உண்மையில் தமிழ்ப் பணி விழாவாகவும் அமையக் காண்கிறேன்.

பட்டிமன்றங்களிலும் வழக்காடு மன்றங்களிலும் தொடர்ந்து பங்கு பெற்று நாத்தழும்பேறப் பேசிப் பேசி பலர் சிரிக்கச் சிரிக்க உரையாடி நாட்டில் இலக்கிய உயிர்ப்பை உருவாக்கிய பெருந்தகையின் மணிவிழாவைத் தமிழ்ப் பணிவிழா என்று சொல்லுதல் மிகையாகாது அன்றோ! அண்ணல் நமசிவாயம் என்னைத் தம்பி என்று அழைத்து அரவணைத்ததை எண்ணி எப்போதும் நெகிழ்கிறேன்.

பச்சையப்பன் கல்லூரி மாணவராகிய நமசிவாயம் படித்த பின்னர் சிவாய நம என்று செல்லும் இடமெல்லாம் செந்தமிழால் சாரங்கனிந்த தீஞ்சுவைத் கவி நலத்தை மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாய்ப் பரப்பி வந்த பெருமைக்குரியவர். குற்றாலக் குறவஞ்சி என்ற விழுமிய அழகொளிரும் சந்தமார் செந்தமிழ் இலக்கியத்தைத் தந்தருளிய திரிகூடராசப்பக் கவிராயரின் மரபில் தோன்றிய நமசிவாயம் அவ்விலக்கியத்தில் காணப்பெறும் நகை நலத்தை விடாது இலக்கியச் சொற்பொழிவு உத்தியாக அதிகம் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்காங்கு அமர்ந்திருக்க அரும்பணியாற்றி வந்திருக்கிறார்.

மேலோட்டமான நகைச்சுவையின் உள்ளே உள்ளுறை போலவும், இறைச்சி போலவும் அரும் பொருள் நலம் கனிந்து நிற்கப் பேசும் கலைவல்ல பெரும்புலவர் தனக்கென்று ஒரு தனிப் பேச்சுப் பாங்கினை வகுத்துக் கொண்ட செம்மலாவார்.

பேரா.நமசிவாயம் அழகப்பா கலைக்கல்லூரியில் பல்லாண்டுகள், மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கம் அவர்களின் தலைமையில் பேராசிரியராகப் பணியாற்றிய பிறகு திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரியில் பேராசிரியராகவும், துணை முதல்வராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டு ஊர்கள் எல்லாம் உலகத்தார் உவப்ப தமிழ்நாட்டுச் செவிகளில் எல்லாம் அவர் வார்த்தைத் தேன் சென்று பாய்ந்திருக்கிறது. தமிழ்நாட்டு நெஞ்சங்களில் எல்லாம் அவர் எடுத்து வைத்த செய்திகள் நிலையாக நிற்கின்றன. திரைப்படம், அரசியல் போன்றவையே கண்டும் கேட்டும் மகிழலாம் என்றிருந்த காலநிலையை மாற்றி இலக்கியச் சொற்பொழிவைக் கேட்க எண்ணற்ற இளைஞர் எறும்புச் சாரியாய் வருமாறு செய்த மிகச் சிலரில் அண்ணல் நமசிவாயத்துக்குக் குறிக்கத்தக்க இடமுண்டு.

பேராசிரியர் நமசிவாயத்தின் மலர்ச்சியான முகமும், பழகுதற் கினிய பண்பும் எவரையும் ஈர்க்க வல்லன. கம்பரில் தோய்ந்த பேராசிரியர் தொலைக்காட்சியில் கம்பனாகவே வேடமேற்றுப் பட்டிமன்ற நாடகத்தைப் பாங்குற நிகழ்த்தியமை தமிழகம் அறிந்ததாகும்.

அண்ணல் நமசிவாயம், அருந்தமிழ்ப் பேராசிரியர். பெருஞ்சொற் கொண்டல். நாவீறு படைத்த நாயகர். தேவைப்படுமானால் நடிகராகவும் நடிக்கும் திறன் படைத்தவர். அனைத்திற்கு மேலாக பரிவுப் பண்புகள் அனைத்தும் நிறைந்தவர். அண்ணல் நமசிவாயம் பன்னெடுங்காலம் சிறப்போடு வாழவும், தொடர்ந்து தமிழ்ப்பணி செய்யவும் என் உளமார்ந்த நல் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நமசிவாயம் வாழ்க!

36. சைவ சித்தாந்தம்

விவேகானந்தர் கல்லூரி

14.10.2010

சைவ சித்தாந்தத் தேனமுது அருந்த விழையும் சான்றோர்களே! பேராசிரியர்களே! பெரியோர்களே! எழுச்சிமிக்க இளைய நெஞ்சங் களே! உங்கள் முன்னிலையில் சான்றவர் 'ஆய்ந்திடத்தக்க' சைவ சித்தாந்தச் சால்பு நெறியை எண்ணி மகிழும் பெருவாய்ப்பு அமைந்துள்ளது. இந்த இனிய வாய்ப்பினைப் பரிவோடு வழங்கியது திருப்பனந்தாள் காசி மடம். காசி மடத்தின் சைவத் தமிழ்த்தொண்டுகள் என்றும் நினைந்து போற்றும் ஏற்றம் உடையன.

அறம் தழைக்கவும், அருள்நெறி தழைக்கவும் திருப்பனந்தாள் மடம் வகுத்துள்ள அறக்கட்டளைகள் பல. அந்த வகையில் அமைந்ததே இந்த இனிய சிந்தனை.

'சான்றோர் பலர் யான் வாழும் ஊரே' என்றபடி அறவோர்களாலும் அருளாளர்களாலும் சிறப்புப் பெறுவது தமிழ்நாடு. தொல்காப்பியர், திருவள்ளுவர், மாணிக்கவாசகர், சேக்கிழார் என்ற வரிசையில் மெய்கண்டாரும் பெருமைக்குரியவர். சங்க காலத்தில் சான்றாண்மை நெறியாக வீறுகொண்டு விளங்கி, நால்வர் பெருமக்களால் பத்திமை நெறியாகத் துலங்கிய செந்தமிழ் நெறியாகிய சிவநெறியைச் சித்தாந்தச் செந்நெறியாகத் தத்துவ உலகில் தனியரசு செலுத்தச் செய்தவர் மெய்கண்டார்.

மெய்கண்டார் திருமரபு தழைக்க வந்த தருமை ஆதீன மாசிலாமணி தேசிகர் அருள்பெற்ற குமரகுருபரின் அருட்கொடையே காசி மடம். குமரகுருபரர் கந்தர் கலி வெண்பா என்ற சிறு நூலைத் தமிழ் உலகுக்கு வழங்கியுள்ளார். பிள்ளைப் பருவத்திலேயே ஓதி உணர வேண்டிய பாராயணப்பனுவல் அது. அதனை ஓதுவார் உள்ளத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பதிந்துவிடும்.

அவருடைய குறிப்பின் வழி நிகழுகின்ற காசி மடத்தின் கருணைத் திறத்தினால் இன்று நாம் ஒருங்கு கூடிச் சிந்தித்து மகிழ்கின்றோம்.

இன்றைய விரிவுரைக் களமாக அமைந்த இந்தக் கல்லூரியும் தனக்கென ஒரு தனிப்பெருமை உடையது, வீரமாமுனிவர் என்று போற்றுதற்குரிய வேதாந்த வித்தகர் விவேகானந்தரின் பெயர் தாங்கி நிற்பது. ஞானவீறு கொண்டு விளங்கும் அந்தத் தவப்பெருவேந்தரின் அடிச்சுவட்டில் எண்ணற்ற விவேகானந்தர்களை உருவாக்கும் உயர்ந்த குறிக்கோள் உடையது.

அறிவுக்கடலாய் அருட்புனலாய் விளங்கிய விவேகானந்தர் உலக அரங்கில் இந்திய நாட்டின் மெய்ப்பொருளியலின் மேன்மையை நிலைபெறச்செய்தவர். சமயநெறிக்குப்புத்துணர்ச்சிஊட்டியவர், சமயம் என்பது முதியவர்களுக்கு மட்டுமே வீட்டுலகில் இடம்பெற்றுத்தரும் அமைப்பு அன்று. சமுதாயத்தைச் சான்றாண்மை நெறியில் வழி நடத்தும் மாண்பினை உடையது என்பதனை நடைமுறைப்படுத்திக் காட்டியவர்.

'பாவேந்திரியங்களைச் செறுத்த எங்கள் விவேகாநந்தப் பரம ஞான ரூபேந்திரன்' – என்று பாரதியார் போற்றுகின்ற அருள்ஞானச் செல்வரின் அடிச்சுவட்டில் பீடுநடை செலுத்தும் இந்தக் கல்லூரியில் சைவசித்தாந்தம் பற்றிப் பேசுவது பெரிதும் பொருத்தம் உடையதே.

விவேகானந்தர் அமெரிக்கா சென்று திரும்பிய பின்னரே சைவசித்தாந்தம் பற்றிக் கேட்டறிகின்றார். அப்போது எனக்கு நூறு சென்னைக்காரர்கள் கிடைத்திருந்தால் அமெரிக்காவையே மாற்றியிருப்பேன் என்று கூறிச் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளின் சிறப்பினைப் புகழ்ந்ததாக ஒரு செவி வழிச் செய்தி உண்டு.

சைவ சித்தாந்தம் என்பது யாது? அது முடிந்த முடிபாகிய கோட்பாடு. மக்கள் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்து உலகைப் பற்றியும் உயிரைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் சிந்தித்து வந்தார்கள்.

காலம் இடம் மற்ற பழக்க வழக்கங்கள் இவற்றால் அந்தச் சிந்தனைகள் வெவ்வேறாக அமைந்தன. அந்தச் சிந்தனைகளை எல்லாம் ஆராய்ந்து முடிந்த முடிபாகிய உண்மைகளைக் கூறுவதுதான் சைவ சித்தாந்தம்.

தத்துவச் சிந்தனைக்கு முதல் நூலாக வேதம் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. எனினும், எல்லோரும் வேதத்தை முழுமையாகப் புரிந்துகொண்டு பயனடைந்தார்கள் என்று சொல்ல முடியவில்லை. குமரகுருபரர் கூறுகின்றார்.

இறைவன் வேதம் என்ற பயிரினை வளர்த்தான். சிலர் அந்த மரத்தின் இலையினைப் பறித்துப் பயன்படுத்தினர். சிலர் தளிரைப் பயன்படுத்தினர். சிலர் பூவினைப் பயன்படுத்தினர். சிலர் பிஞ்சைப் பயன்படுத்தினர். சிலர் காயை, சிலர் கனியைப் பயன்படுத்தினர்.

ஆனால் சைவ சித்தாந்தச் சான்றோர்களோ ஓடும் வேதாந்தம் என்று உச்சியிற் பழுத்த ஆராஇன்பத்து அருங்கனி பிழிந்து சாரம்கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுது அருந்தினர் என்று கூறுகின்றார்.

குமரகுருபரர் பார்வையில் சைவம் சிறந்து விளங்குகின்றது. தாயுமானவரும் சைவ சமயமே சமயம் என்று கூறுகின்றார். குமரகுருபரரும் தாயுமானவரும் சைவத்தைப் புகழ்வதில் வியப்பில்லை. ஆனால் பிறநாட்டு நல்லறிஞராகிய போப் சொல்கின்றார்

The Saiva Siddhanta philosophy is the choicest product of the Dravidian intellect. It is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South Indian and Tamil Religion

- Dr. G.U.Pope.

சைவ சித்தாந்தம் செந்தமிழ் மக்களின் சிந்தனைத் தெளிவிலே பிறந்து விரிந்து பரந்த தொலைநோக்கு உடையது. ஏனைய சமயச் சிந்தனைகளைவிடச் சிறப்புடையது என்று கூறுகின்றார்.

எவ்வாறாயினும் அவரவர்களுக்கு அவரவர் சமயம் சிறந்தது. அம்முறையே சைவம் தமிழ் மக்களுடைய சமயம் என்பதனால் அதற்கு மேலும் ஒரு தனிச்சிறப்பும் உண்டு. சைவம் கோட்பாடுகளாலும் சிறந்து நிற்பது. அதனோடு தமிழ்த்திரு நாட்டிற்கே உரிய சமயம் என்பதனாலும் சிறப்புடையது.

சைவத்தின் அடித்தளம் – ஆணிவேர் – சங்க இலக்கியங் களிலேயே காணப்படுகின்றது, சங்கநாளில் சிவன் என்ற சொல்லும் சைவம், சைவன் என்பன போன்ற சொற்களும் இல்லை.

எனினும் யாரைச் சிவபெருமான் என்று சொல்லுகின்றோமோ அந்தப் பெயருக்குரிய நீலமணிமிடற்று ஒருவன் பெருமை, மூல இலக்கியமாகிய புறநானூற்றிலேயே பேசப்படுகிறது. மேலும் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைக் கடவுளோடு ஒப்பிட்டுப் பாடிய நக்கீரனார் நான்கு கடவுளரைக் குறிப்பிடுகின்றார்.

ஞாலம் காக்கும் கால முன்பின் தோலா நல்லிசை நால்வர் என்று அவர் போற்றும் கடவுளர் மணிமிடற்றோன், வாலியோன், திருமால், முருகன் என்பவர். இக்கடவுளருள் வாலியோன் தவிர மற்ற மூன்று கடவுளரின் திருக்கோயில்கள் இன்றும் சிறப்புடன் விளங்குகின்றன.

மேலும் சங்க நாளிலேயே சிவபெருமானுக்கு ஒரு தனிச் சிறப்பு காணப்படுகின்றது. மேலும் சிவபெருமானுடைய திருக்கோவில்களில் திருமாலும் முருகனும் இடம்பெறக் காணுகின்றோம். எனவே தேவர்கோ அறியாத தேவதேவன் மூவர்கோனாய் நின்ற முதல்வன் யாவர்கோன் என்றெல்லாம் புகழப்படுகின்ற சிவபெருமானுக்குரிய முதன்மை சங்க காலத்திலேயே இடம்பெற்ற ஒன்று,

இனி சைவத்தின் கோட்பாடுகள் என்று எண்ணிப் பார்த்தால் அது திருக்குறளுக்கு நிகரான பொதுமை உடையது. திருக்குறள் கூறும் முடிந்த முடிவுகளும் சைவசித்தாந்தம் கூறும் முடிந்த முடிபுகளும் ஒன்றே.

சைவ சித்தாந்தம் என்ன கூறுகின்றது, சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மை கூறுவது, சிலர் கண்ணெதிரே காணப்படும் உலகத்தை மட்டுமே ஒத்துக் கொள்வார்கள்.

உயிர், கடவுள் என்பனவற்றை ஏற்பதில்லை. வேறுசிலர் கடவுள் உண்டு என்று துணிந்தவர்கள். ஆனால் உலகம் ஒரு பொய்த்தோற்றமே என்று கூறுவர். ஆனால் சைவ சித்தாந்தமோ கண்ணால் காணப்பட்ட உலகம், உலகத்தில் வாழும் உயிர், உலக முதற்பொருளாகிய இறைவன் என்னும் மூன்று பொருள்களையும் ஏற்றுக்கொள்கின்றது.

சங்க இலக்கியங்களின் பிழிவாகப் பனுவல் துணிபு தொகுத்துக் கூறும் திருக்குறள் உலகப் பொதுமறை என்று போற்றப்படுகின்றது, திருக்குறளும் இறை உயிர் உலகம் என்ற மூன்று பொருள்களையும் குறிப்பிடுகின்றது, முப்பால் நூலின் முதற்குறளிலேயே முப்பொருள் உண்மை முகிழ்த்து விடுகின்றது.

திருவள்ளுவர் முதற்குறளில் உலகம் ஆதிபகவனை முதலாக உடையது என்று கூறுகின்றார். கண் எதிரே காணப்படும் உலகம். உலகத்திற்கு முதலாக உள்ள கடவுள்; உலகில் வாழ்ந்து உலக முதற்பொருளை ஆராய்ந்து காணவேண்டிய உயிர்; என்ற மூன்று பொருள்களை முன் வைத்தே நூலைத் தொடங்குகின்றார்.

நூலின் தொடக்கத்தில் மட்டுமல்ல அறத்துப்பாலின் முடிவிலும் முப்பொருள் இயல்பு முறையாக விளக்கம் பெறுகின்றது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த உயிர் நீண்ட நெடிய வாழ்க்கையின் பயனாகத் தெரிந்துகொண்டது உலகம் நிலையற்றது என்பதுதான். உலகத்தின் நிலையாமை கண்டதனால் உயிர்களுக்குத் துறவுள்ளம் தோன்றுகின்றது.

எனவே மெய்ப்பொருளைத் தேடுகின்றது. மெய்ப்பொருளை உணர்ந்து அதனோடு ஒன்றி நின்றால் வேண்டாத சார்புகள் நீங்கும். இவ்வியல்புகளை எல்லாம் நிலையாமை, துறவு மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்ற தலைப்புகளால் உரைத்துள்ளார். இந்த நான்கு அதிகாரங்களுக்கும் ஞானப்பகுதி என்று பெயரிடுவார் பரிமேலழகர்.

துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்ற மூன்று அதிகாரங்களும் முப்பொருள் அடிப்படையில் அமைந்தன என்பதும் கருதலாம். துறவு என்ற அதிகாரம் உயிரின் இயல்பு கூறுவதும், மெய்யுணர்தல் என்ற அதிகாரம் கடவுளைப் பற்றியது. அவா அறுத்தல்–பாசம்–அல்லது–தளை பற்றியது என்பர்.

இக்கருத்துக்களை எல்லாம் சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகல் என்ற சில சொற்களால் தெளிவித்து விடுகின்றார். சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகல் என்பதில் இரண்டு சார்புகளைக் காணுகின்றோம். ஒன்று உணர்ந்துகொள்ள வேண்டிய சார்பு – செம்பொருட் சார்பு இன்னொன்று கெட வேண்டிய, விட வேண்டிய சார்பு, காம வெகுளி மயக்கங்கள். உணர்ந்து பற்றிக் கொள்ள வேண்டியது பதி. விட வேண்டியது பாசம் என்று கொண்டால் பதி, பசு, பாசம் என்று கூறப்படும் முப்பொருள்களும் இத்திருக்குறள் தொடரில் இடம் பெறுதலைக் காணலாம்.

நன்றி!

வணக்கம் !

❀❀❀



37. முப்பதாவது வள்ளலார் – காந்தியடிகள் விழா

வரவேற்புரை

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!

தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!

வணக்கத்துக்குரிய சென்னை மயிலை இராமகிருஷ்ண மடத்துத் தலைவர் தவத்திரு கௌதமானந்தர் அவர்களே! மதிப்புக்குரிய மத்திய புலனாய்வுத்துறை மேனாள் இயக்குநர் கார்த்திகேயன் அவர்களே!

மதிப்புக்குரிய காந்தி நிகேதன் ஆசிரமச் செயலாளர் டாக்டர் து.பால்ராஜ் அவர்களே!

மதிப்புக்குரிய பேராசிரியர் கண.சிற்சபேசன் அவர்களே!

தவத்திரு ஊரன் அடிகளார் அவர்களே! சான்றோர்களே! யாவருக்கும் வணக்கம்.

முப்பத்தாறாம் ஆண்டு விழாத் தொடக்க நாளில் உங்கள் யாவரையும் அன்புடன் வரவேற்கிறேன். முப்பத்தாறு ஆண்டுகள் இடைவிடாமல் தொடர்ந்து வள்ளலார் – காந்தியடிகள் விழா நடைபெறுவது ஒரு சாதனை.

வள்ளலார் சோதியில் கலந்தபோது (1874) காந்தியடிகளுக்கு வயது 5. என்னுடைய கருத்துக்களைப் பின்னால் வரப்போகிறவர்கள் சொல்வார்கள். நீங்கள் அப்போது அதனைக் கேட்பீர்கள் என்று வள்ளலார் சொன்னது காந்தியடிகளை மனத்தில் வைத்துத்தான் என்று சிலர் சொல்வார்கள். ஒரு படி முன்னால் போய் வள்ளலார் காந்தியடிகள் உருவிலே வந்தார் என்றுகட மதிப்புக்குரிய சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் இருவருக்கிடையில் ஒற்றுமைகள் நிரம்ப இருந்தன. தனிமனித ஒழுக்கம், பிறருக்காகத் தியாகம் செய்தல். ஜீவ காருணியம். ஆன்மநேயம் என்ற அடிப்படையில் தான் இருவருடைய கொள்கைகளும் அமைந்திருந்தன.

தனிமனித ஒழுக்கம் வேறாகவும். சமுதாய ஒழுக்கம் வேறாகவும் இருக்கலாம் என்ற கொள்கை இன்றும் சிலரிடையில் இருக்கத்தான் செய்கிறது.

தனிமனிதன் ஒழுக்கம் தவறினால் அவனைச் சார்ந்துள்ள அவன் ஓர் அங்கமாக அமைந்திருக்கிற – சமுதாயமும் பாதிப்பு அடைகிறது.

பொது ஒழுக்கம் போலத் தனிமனித ஒழுக்கமும் பாதுகாக்கப்பட வேண்டியதுதான் என்று காந்தியடிகள் வற்புறுத்தினார். அதைத் தம்முடைய வாழ்க்கையில் அணு அளவும் தவறாது கடைப்பிடித்தார்.

ஆன்மிகத்தை அரசியலுக்கு அடிப்படையாகக் கொண்ட அவர் அணுகுமுறை அக்காலத்தில் புதுமையானது. ஏற்கனவே தமிழகத்தில் அப்படிப்பட்ட அணுகுமுறையை அப்பரடிகள் முதலியோர் காட்டியிருக்கிறார்கள்.

எல்லாச் சமயங்களும் ஒரே கருத்தை வற்புறுத்துகின்றன. ஒரு கடவுள்தான் பல பெயர்களில் வணங்கப்படுகிறார். ஆகவே மார்க்க வேறுபாடுகளால் மனிதன் வேறுபடுவ தில்லை. மனிதன் மனிதனைத் தீண்டுவதால் தீட்டு ஏற்படுவதில்லை. தீட்டு உண்டாவதாக நினைக்கிறவன் தானே தீண்டாதவனாகிறான். புற ஆசாரங்கள் மனிதனை உயர்த்துவதில்லை. ஒழுக்கமே உயர்த்துகிறது. இனம். நாடு, மொழி, சமயம் கடந்த ஆன்மநேய ஒருமைப்பாடே மனித குலத்தை உயர்த்தும் என்ற கொள்கைகளை இரண்டு பேருமே கூறியிருக்கிறார்கள்.

மீண்டும் மீண்டும் அந்தக் குரல்கள் உரத்து ஒலிக்க வேண்டிய தேவை இருக்கிறது. இன்று போர் மேகம் இந்த உபகண்டத்தின் ஒருகோடியில் குழ்ந்து இருக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

மனிதன் மனிதனை நம்புவதில்லை. பரஸ்பர அவ நம்பிக்கையால் மனிதன் தனக்குத்தானே ஆபத்தை வருவித்துக் கொள்கிறான். இந்நிலையில் அரசியலில் ஆன்மிகத்தைக் கலந்த காந்தியடிகளையும். அருளியலில் அரசியலைக் கலந்த வள்ளல்பெருமானையும் சிந்திக்கிறோம். ஆளவந்தவர்கள் நெஞ்சில் அன்பு உடையவர்களாக இருக்கவேண்டும். அக்காலத்து ஆட்சியாளர்கள் இந்தியாவைச் சுரண்டினார்கள்.

மக்களிடையே மதபேதம் குறையாமல் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் காலத்தில் கைத்தொழில் நசிந்தது. பட்டினிச் சாவுகள் இருந்தன. காரணத்தை ஆராய்ந்தார் வள்ளலார். 'கருணையில்லா ஆட்சிக் கடுகி ஒழிக' என்று சபித்தார். அக்காலத்தில் தான் வெள்ளையராட்சியை எதிர்த்து இயக்கம் உருவாயிற்று.

வள்ளல்பெருமான் தாம் இவைகளைப் பார்த்தார். பல தெய்வ வணக்கம் – சில தெய்வ வணக்கம் – பலியிடும் கொடுமை – புலால் உணவு – சாதி மதப் பூசல் – கொலை இவைகளை எதிர்த்தார். வேடிக்கை, இன்றளவும் இவை குறையவில்லை என்பதுதான். இருந்தும் அவருடைய கொள்கைகளுக்குத் தேவை இருக்கிறது.

கடல் கடந்து இன்று சச்சிதானந்த சுவாமியும், வேதாத்திரி – மகரிஷியும் மற்றவர்களும் வள்ளல்பெருமானை, அவர் கொள்கை களைச் சொல்லி மனித குலத்தைத் திருத்தி வருகிறார்கள்.

வள்ளல்பெருமான் கொள்கைகள் பல நாடுகளிலும் ஐந்து கண்டங்களிலும் கால் கொள்ள வேண்டும். இராமகிருஷ்ண மிஷன் போல உலகெங்கும் அருட்ஜோதிச் சுடர் ஒரு பெரிய இயக்கமாக மலர வேண்டும், அதற்கான சில முன் வடிவுகளை நிர்ணயிக்கக் கோவையில் ஜூன் மாதத்தில் ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கு முடிவு செய்திருக்கிறோம்.

வள்ளலார், காந்தியடிகள் இரண்டு பேருமே தாய்மொழி மூலம் தொடக்கக் கல்வி வேண்டும் என்றார்கள். 1. தாய்மொழி 2. இந்தி என்றார் மகாத்மா, சமற்கிருதம் என்றார் வள்ளலார் 3. ஆங்கிலம் மூன்று மொழிக் கொள்கை இருவருக்கும் உடன்பாடான செய்தி.

இந்த விழாத் தொடரில் ஒரு நாள் இருவர் கொள்கை அடிப்படையில் நாம் ஒரு கருத்தரங்கைக் கூட்டியிருக்கிறோம். நம்மைப் பெரிதாகப் பாதித்துக் கொண்டிருக்கும் தண்ணீர்ப் பிரச்சினையை ஆராய ஒரு கருத்தரங்கு, கைத்தொழில் துறை பற்றிய ஒரு கருத்தரங்கைக் கூட்டியிருக்கிறோம்.

வெறும் வயிற்றில் இறை நினைவு தோற்றது. ஏழைக்கு இறைவன் உணவு உருவத்தில் வருகிறான் என்கிறார் காந்தியடிகள். வீடுதோறு இரந்தும் பசி அயரும் வெற்றரைக் கண்டு உள்ளம் பதைத்தேன் என்கிறார் வள்ளல்பெருமாள்.

தொழிலும், தண்ணீரும், நமக்கு உணர்வு கொடுத்து உயிரை வளர்ப்பவை. கல்வி, மனத்தை, பண்பாட்டை, வளத்தை வளர்ப்பது. இதன் அடிப்படையில் தான் வள்ளலார் தருமச்சாலையையும் சபையையும் வளர்த்தார்.

வள்ளல்பெருமானைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு காந்தியடிகளுக்கு எழவில்லை. வாய்ப்பு இருந்திருந்தால் காந்தியடிகள் இவரைத் தோரோ டால்ஸ்டாய் என்பர்களோடு சேர்த்துத் தமக்கு நால்வர் குரு என்று சொல்லிபிருப்பார். அல்லது இவர் ஒருவரே என்று சொல்லியிருப்பார்.

இவ் விழாத் தொடரில் விடுதலை வரலாற்றைச் சொல்லும் ஒரு அற்புதமான நூல் – ஸ்டாலின் குணசேகரன் எழுதியதை – மீண்டும் இங்கே அறிமுகம் செய்கிறோம். விடுதலை வீரரான ஜீவானந்தம் அவர்களைப் பன்முகமாக ஆராய்ச்சி செய்யும் மூன்று நூல்கள் அறிமுகமாகின்றன. தேசிய நீரோட்டத்தைப் பாதுகாத்த அமரர்கள் சி.சுப்பிரமணியம், சிவாஜிகனேசன், ஜி.கே.மூப்பனார் ஆகிய மூவரைப் பற்றிய கருத்தரங்கம் ஒன்று அமைத்திருக்கிறோம்.

இந்தக் கருத்தரங்குகள் தமிழிலக்கண நெறியில் புறம் என்று சொன்னால் வேதாந்த சித்தாந்த சமரசம் என்ற பிரச்சினையைச் சிக்கல் எடுப்பதற்கு அகம் போல் ஒரு கருத்தரங்கமும் ஏற்பாடு செய்திருக்கிறேம். அகத்தைக் காப்பாற்றுவதுதான் புறம்.

நாள்தோறும் தவத்திரு ஊரனடிகளார் காலை 7.30 முதல் 8.30 வரை மகாதேவ மாலை விளக்கம் சொல்கிறார்கள். பலதுறை அறிஞர்கள், பிரமுகர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள், துணைவேந்தர்கள் இப்படிப் பல துறைப் பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள்.

இந்த ஆண்டு ஒரு புதுமையாக விருதளிப்பு தொடங்கி யிருக்கிறோம். ஆண்டுதோறும் காந்தியச் சிந்தனை – பணிக்காக ஒன்றும். வள்ளலார் சிந்தனை– பணிக்காக ஒன்றும் ஆக இரண்டு விருதுகள் பொற்கிழியுடன் அளிக்கப்படுகின்றன.

கல்லுப்பட்டி காந்தி நிகேதன் காந்தி ஆசிரமத்தின் தலைவ ராகப் பணியாற்றி வரும் டாக்டர் து.பால்ராஜ் அவர்கள் அருட்ஜோதி விருது பெறுகிறார்.

இளமையிலிருந்து காந்தியப் பணியில் தம்மை ஆட்படுத்திக் கொண்டிருக்கிற திரு. பால்ராஜ் அவர்கள் காந்தி ஆசிரமத்தை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். தேசிய அளவில் பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றவர்கள்.

தவத்திரு ஊரனடிகளார் தம் முப்பத்தாறு வயதின் தொடக் கத்தில் துறவு பூண்டு வள்ளல்பெருமான் திருத்தொண்டிற்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு வள்ளலார் சிந்தனைக்கான அருட்பெருஞ்ஜோதி விருது இந்த விழாவின் ஐந்தாம் நாளில் – வள்ளலார் திரு அவதார நாளில் அளிக்கப்பெறுகிறது.

இன்று சிறப்புச் சொற்பொழிவாற்ற இருப்பவர் கண.சிற்சபேசன் அவர்கள். பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் பணியாற்றி நமது சக்தி பைனான்ஸ் நிறுவனத்திலும் பணியாற்றியவர். அவருடைய நகைச்சுவையோடு கலந்த பொருட்சுவையை அனுபவிக்காத தமிழர் இல்லை.

சுவாமி கௌதமானந்தர் அவர்கள் இன்று அருளாசி வழங்கு கிறார்கள். சென்னை இராமகிருஷ்ணா மடாலயத் தலைமைப் பொறுப் பேற்று ஆன்மிக – சமுதாய மேம்பாட்டுத் திருத்தொண்டை அருமை யாகச் செய்து வருகிறார்கள்.

இந்த இராமலிங்கர் பணிமன்றம் தொடங்கிய நாள் முதல் அதன் புரவலராக விளங்கி, இந்தத் திருமண மண்டபத்தை நமக்கு விழாவின்போது இலவசமாக வழங்கி வந்தவர் திரு. ஏ.வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள். அவர்கள் வழியில் அவரது துணைவியார் இராஜேஸ்வரி அம்மையார் அவர்களும் அவர்கடைய திருக்குமாரர்களும் நமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள்.

இந்த விழா பெரியோர்களாகிய நீங்கள் இல்லாமல் பெருமை அடைவது எப்படி? நிகழ்ச்சிகள் எவ்வளவு உயர்வாக அமைந்தாலும் பயன் கொள்பவர்களாலேயே அவைகள் பெருமையடைகின்றன என்று கூறி உங்கள் யாவரையும் அன்புடன் வருக வருக என வரவேற்கிறேன்.

❀❀❀

38. புலவர் குழு

06.06.2019

தொண்ணூறாண்டுகள் ஆன பிறகும் தன்னுடைய கழகக் கனவுகளை ஆர்வத்தோடு ஆற்றி வருகின்ற பெருந்தகை செங்குட்டுவன் அவர்களே, செவாலியர் டாக்டர் வி.ஜி.சந்தோஷம் அவர்களே, இந்த நிகழ்ச்சிக்கு ஆர்வத்தோடு வந்து கலந்து கொண்டுள்ள உங்களையெல்லாம் காணும்போது, நம்முடைய நெஞ்சம் உருக்கத்தைப் பெருக்குகிறது.

மேடையில் அமர்ந்து இருக்கும் நீதியரசர்களும், முதுநிலை வழக்கறிஞரான டாக்டர் காந்தி அவர்களும், தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்குத் தலைமை தாங்கும் நம்முடைய அருமை நண்பர் வி.ஐ.டி. வேந்தர் ஜி.விசுவநாதன் அவர்களே,

அண்ணல் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள், செந்தமிழ்க் களஞ்சியமாகவும், சீர்திருத்த பேச்சாளராகவும், தமிழகத்தின் தமிழ்த்துறையில் நாற்பதாண்டுகளுக்கு மேலாக நற்பணி ஆற்றித் தமிழ் மக்களின் உள்ளந்தோறும் சிலப்பதிகாரத்தை ஒலிக்கச் செய்த மாபெரும் சிறப்புக்குரியவர்.

சிலம்பொலி அவர்களும் நானும், நான் மாணவனாக பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, எனக்கு அறிமுகம் ஆனவர்.

கல்லூரி, பள்ளி மாணவர்கள் அவர் பெயரைக் கேட்டால் அவர்கள் மருளுகின்ற அளவுக்குத் தமிழ்த்தொண்டையும், கலைத் தொண்டையும், ஆசிரியத் தொண்டையும் ஆற்றிய பெருங்கடலாகத் திகழ்ந்தார்கள். தொடர் சொற்பொழிகளை ஆற்றியவர்கள் நாட்டில் சிலர்தான்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற நெடுங்கதைகளைத் தொடர் சொற்பொழிவுகளாக ஆற்றி வந்த நாட்டில், இலக்கியங் களையும் தொடர் சொற்பொழிவாற்றி, தமிழ் உணர்ச்சியை நரம்புகளில் ஊடுறுவச் செய்ய முடியும் என்ற வரலாற்றைச் சிலம்பொலி செல்லப்பன் தான் தொடங்கினார்கள்.

அவர் தொடங்கியது மட்டுமில்லை, அவரின் அடங்காத தமிழ் ஆர்வத்தினால், அனைத்து இலக்கியங்களையும் வேறுபாடு இல்லாமல் தொடர் சொற்பொழிவு ஆற்றினார். சீறாப்புராணத்தைப் பற்றி அவர் ஆற்றிய உரையைக் கேட்டு, என் கண்களில் நீர் மல்குகிறது என்று நீதியரசர் இஸ்மாயில் அவர்கள் உருக்கத்தோடு சொன்னார். சீறாப்புராணச் செல்வர் என்றே அவரை இசுலாமிய உலகம் அழைத்துப் பெருமிதம் அடைந்தது.

அதேபோலப் பெரியார் திடலில், இராவண காவியத்தை எடுத்து உரையாற்றியதை நான் கண்டதை நினைவுகூர்கிறேன். எவர் மனமும் கோணாமல் ஆயிரக்கணக்கான தமிழ் அறிஞர்களுக்கு அகவை முதிர்ந்தவர்களுக்கு நிதியுதவி அளித்தது, தமிழ் நூல் எழுதுகிறவர்களுக்கும் பாராட்டு அளிப்பது, தமிழ் உணர்ச்சி உள்ளோர்களுக்குத் தலைமை வகிப்பது என்கிற வகையில் அவர் ஆற்றிய பணிகளைத் தமிழகம் என்றும் மறக்காது.

எனக்கு ஒரு பெரிய மகிழ்ச்சி என்னவென்று சொன்னால், சிலம்பொலி அவர்கள் புலவர் குழுவில் தலைவராக இருந்தபோதே, உங்கள் தலைமையில்தான் புலவர் குழு சிறக்க வேண்டும் என்றேன். அவர் மறைவு, புலவர் குழு தன் தலையை இழந்ததுபோன்றே இருக்கிறது. தொடங்கியபோது புலவர்களாக இருந்தார்கள்.

இப்போது புரவலர்கள் பலர் இருப்பது நமக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தருகிறது. நீதியரசர்களும், பல்கலைக்கழக வேந்தர்களும், பல வகையில் தமிழகத்துக்குத் தொண்டாற்ற வேண்டும் என்று உறுதிபூண்டவர்களும் உலகமெல்லாம் தமிழர்களின் நிலை சிறந்து விளங்க வேண்டும் என்ற வகையில், தமிழகத்துத் தூண்கள் எல்லாம் இப்போது புலவர் குழுவைத் தாங்குகிறார்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

சிலம்பொலி செல்லப்பன் அவர்களைப் பற்றி நினைக்கிற நினைப்பு, நமக்குத் தமிழ் ஊக்கத்தையும், தமிழ் உணர்ச்சியையும், தமிழை எந்த நேரத்திலும் காத்து நிற்க வேண்டும் என்ற கவலையும் தொடர்ந்து இருக்கும்போல் இருக்கிறது.

காரணம், தமிழ் உலகம், தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு என்றெல்லாம் கருதும்போது அந்தப் பண்பாட்டுக்கு ஏதேனும் ஒரு வகையில் இடர் நேரும் என்கிற வகையில், நம்மால் தடுக்க முடியாமல், தாங்கிக்கொண்டுதான் தவிக்க வேண்டிய சூழல் இருக்கிறது.

இந்த நிலையில், புலவர் குழு, பெரும் பொறுப்பையும், கடமையை யும் ஏற்றிருக்கிறது என்பது நம்முடைய நிறைநாள் கூட்டத்தில் சிலம்பொலி அவர்கள் பெரிதும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

ஒன்றை உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். நம்முடைய பெருந்தகை முதுபெரும் வழக்கறிஞர் டாக்டர் காந்தி அவர்கள்தான், மனம் கோணாமல் தமிழ் மொழிக்குத் தந்திருக்கிற இந்தத் தகைமையை எஞ்சிய மொழிகளுக்கு தர வேண்டும் என்று எண்ணுகிற எண்ணம், ஒரு கேடான எண்ணம் என்று சொல்லி, ஒரு பொது வழக்கைத் தொடர்ந்தார்கள். அந்த வழக்கின் பதிவு இன்றும் உயர்நீதிமன்றத்தின் பதிவுகளில் இருக்கிறது.

இப்போது தமிழோடு ஆறு மொழிகள் செம்மொழிகளாக இந்திய நாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒரியா, சமஸ்கிருதம் என்று ஆறு மொழிகளுக்கு அந்தத் தகைமை வழங்கப்பட்டுள்ளது. இன்னும் ஓராண்டுக்குள் மூன்று மொழிகளுக்கு வழங்குவதற்கு அவர்கள் பரிந்துரைக்கிறார்கள். அந்த வகையில் மராத்தி, பஞ்சாபி ஆகிய மொழிகள், சிந்து மொழியும் கூட செம்மொழி என அழைக்கப்படும்.

இதை நாம் வருத்தத்தோடு சொல்லும்போது, பரவாயில்லை, நாம் தொடங்கியதால் இவர்கள் இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்று நாம் மன ஆறுதல் கொள்ளத்தான் வேண்டும் என்ற கருத்தோடுதான் அமைதியாக இருக்கிறோம்.

ஆனால், டாக்டர் காந்தி அவர்களின் வழக்கு, இன்னும் தீராத வழக்காகவே இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவூட்டி அமர்கிறேன்.

வணக்கம்.

❀❀❀

39. 52ஆவது பொது நூலக விழா

19.11.2019

நண்பர்களே,

இந்த நூலகத்தில் நூலகராக விளங்கும் நண்பர் அரங்கநாதன் அவர்களே,

நாங்கள் அண்ணா நகரில் குடிவந்து நாற்பத்து ஏழு ஆண்டுகள் ஆகின்றன.

நண்பர் அரங்கநாதன் அவர்கள், வாசகர் வட்டத்தைப் பெரிதாக்கியும், நூல்கள் பலவற்றைப் பெற்றும், இந்தக் கிளை நூலகத்தை முழுநேர நூலகமாக மாற்றியிருப்பதைக் கண்டு நான் எல்லையில்லாத மகிழ்ச்சியடைகிறேன்.

அந்த நாளில் சொல்வார்கள், கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று. இந்த நாளில் நாம் சொல்லலாம், நூலகம் இல்லாத ஊரில் நுழைய வேண்டாம் என்று. நூலகம், ஒரு மிகச் சிறந்த மாளிகையாக காட்சியளிப்பது ஒரு நாட்டின் அறிவு வளர்ச்சியைக் காட்டுவதாகும்.

அதேபோல், ஜெர்மன் நாட்டில் இருந்து வந்த, ஒரு முப்பது வயது இளமைப் பருவத்தோடு பதினாறு ஆண்டுகள் நூலகத்திலேயே படித்த பிறகு, இந்தப் பதினாறு ஆண்டுகள் நான் படித்த பிறகு எழுதிய நூல்தான் மூலதனம் என்று காரல் மார்க்ஸ் சொன்னார். அவர் கைபடாத நூல்களே இல்லை என்று எல்லோரும் சொல்வார்கள்.

பள்ளியில் படிப்பது சில நேரங்களில் இடை நின்று போகும். கல்லூரியில் படிப்பதும் சில நேரங்களில் இடை நின்று போகும்.

ஆனால், நூலகத்தில் கற்கும் கல்விதான் வாழ்க்கையில் கடைசி வரை நின்று நிலைக்கும் என்று நாம் சொல்லலாம்.

இங்கு நிறைய திருக்குறளைச் சொன்னபோது நான் உள்ளம் நெகிழ்ந்து போனேன். இன்னும்கூட வெளிப்படையாகச் சொல்வதானால், என்னுடைய துணைவியார் மருத்துவக் கல்வி பயிலும்போது, அவர்கள் பாதி நேரம் சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில்தான் இருப்பார்கள்.

காரணம், மிகச்சிறந்த மருத்துவ நூல்கள் எல்லாம் ஆயிரம், இரண்டாயிரம் என்று விலை உள்ள நூல்களாகும். அதைப் போய் வாங்கிப் படிப்பதைவிட நூலகத்தில் சென்று அங்கேயே படிப்பது நல்லது என்ற வகையிலேதான் நூலகத்தில் தன்னை பதிவு செய்து கொண்டவர்கள், மிகச் சிறப்பானவர்கள் என்று சொல்லலாம்.

எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. கல்வித்துறை இயக்குநராக இருந்த திரு.வேங்கடசுப்பிரமணியம் என்பவர், மதுரையில் வந்து ஒருமுறை பேசும்போது சொன்னார், இங்கே இருக்கிற நூலகத்தில் பதிவு செய்து கொள்ளாதவர்களையெல்லாம் வேலையை விட்டு எடுத்துவிடலாம் என்று பார்க்கிறேன் என்று சொன்னார். காரணம், நூலகத்திற்குப் போய் வருவதன் மூலம்தான், நம்முடைய அறிவு வளர்ச்சிக்கு பல்வேறு நூல்களையெல்லாம் புரட்டிப்பார்த்த பிறகுதான், கருத்துகளில் தெளிவு வரும்.

ஒருவரோடு பழகுகிறோம் என்று சொன்னால், அந்த பழக்கம் எவ்வளவு இனிமையாக இருக்கிறது என்று யாராவது கேட்டால், நாங்கள் இப்படிச் சொல்வோம். பழகுவது இனிமையாக இருக்கிறது. எதுபோல இனிக்கிறது என்று கேட்டால் என்ன சொல்வோம்? பால்போல் இனிக்கிறது. தேன்போல் இனிக்கிறது. பழம்போல் இனிக்கிறது. இன்னும் சொன்னால், அமிர்தம் போல் இனிக்கிறது என்று சொல்வோம்.

ஆனால், ஒன்று சொல்வோம், ஒருவருடன் பழகுவது, நீண்ட காலம் பழகுவது ஒரு நூலைப்போல் இருக்கிறது என்று சொல்லலாம். இதுபோல யாருமே சொன்னதில்லை. ஒரு நூலைப் படித்தால், அந்த நூல், ஒரு நண்பனைவிட, ஒரு ஆசிரியரைவிட, ஏன் வாழ்க்கைத் துணைவியைவிட இன்பம் தருவதாகும்.

காந்தியடிகள் சொன்னார், நான் கையிலே வைத்திருக்கும் இந்த பகவத் கீதை என் தாய் போன்றது என்று சொன்னார். தாய் போன்றது, தந்தை போன்றது, தோழன் போன்றது. உலகத்தில் உள்ள உறவுகளில் எல்லாம் சிறந்தது, ஒரு நூலோடு கொள்கிற உறவுதான்.

ஒரு நூலையே வாழ்க்கையாக கொள்வோமானால், அதைப் போல வெற்றி வேறு எதற்கும் கிடையாது. ஒவ்வொருவரும், ஒரு நூலைத் தன்னுடைய வாழ்க்கைக்கு இலக்கணமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்திலேதான் நூலகமே இயங்குகிறது.

இன்னும்கூடச் சொன்னால், தமிழ்நாட்டில்தான், இந்த நூலகம் என்பதற்கு ஒரு சட்டம் என்பதையே 1936 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

இளம் மாணவர்கள், அண்ணா நகரைச் சுற்றி வந்தால் தெரியும். ஐ.ஏ.எஸ். அகாடமி என்பது ஒரு நாற்பது இருக்கும். குரூப்–1 சர்வீசஸ் அகாடமி என்பது ஒரு நாற்பது இருக்கிறது. இந்த பயிற்சி எல்லாம் இந்தப் பிள்ளைகள் எங்கே செல்வார்கள் என்று சொன்னால், நூலகத்திற்குத்தான் செல்வார்கள்.

எனவே, நீங்களாக வாங்கிப் படிப்பதைவிட, மற்றவர்கள் வாங்கி வந்து வைத்துள்ளதைப் படிப்பது என்பது, நூல்களை வாங்கி வைத்தவர்களைப் பெரிய வள்ளல்கள் என்று சொல்ல வேண்டும்.

அரங்கநாதன் அவர்கள், அவ்வப்போது இந்த நூலகத்தை எப்படிப் பெரிதாக்குவது, எப்படி விரிவாக்குவது என்று சிந்தனை செய்து வருபவர்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நானும் என்னுடைய துணைவியாரும் எங்களுடைய பிள்ளை வீட்டில் சென்று தங்கும் சூழல் ஏற்பட்டது. எங்கே என்றால், ஆஸ்திரேலியாவில் ஒரு பிள்ளை வீட்டிலும், தென்னாப்பிரிக்காவில் ஒரு பிள்ளை வீட்டிலும் இருந்தோம்.

இதில் என்ன ஒரு பெரிய துன்பம் என்று சொன்னால், இரண்டு பேரும், மகனும், மருமகளும் காலை 08.00 மணிக்கு அலுவலகத்திற்குப் போய்விடுவார்கள்.

இரவு ஆறு மணிக்குத்தான் திரும்புவார்கள். கிட்டத்தட்ட நாங்கள் இரண்டு பேரும் சிறையில் இருப்பதுபோல்தான் இருந்தோம். வெளியில் போய் எதுவும் பேச முடியாது.

இந்த நிலையில்தான், எங்கள் பிள்ளைகள், அந்த ஊர் சிறிய ஊர்தான். எண்ணினால், ஒரு ஐநூறு வீடுகள்தான் இருக்கும். அந்த ஊரில் ஒரு மாபெரும் கட்டடம் எதுவென்றால், நூலகம்.

எங்களை அங்கே காலை 08.00 மணிக்குக் கொண்டுபோய் விட்டுவிடுவார்கள். எங்களுக்கு மதிய உணவு அங்கேதான். அங்கே சென்று தங்கிப் படிக்கலாம்.

படிக்கலாம் என்றால், நாங்கள் பார்த்த வரையில் கருப்பு இன மக்கள், மஞ்சள் நிற மக்கள், வெள்ளை நிற மக்கள் என்று பல்வேறு நாடுகளைச் சார்ந்த மாணவர்கள் இருப்பார்கள். ஒரு மாணவனாவது கண் மூடி அயர்ந்து போனதை நான் பார்த்ததே இல்லை.

அங்கே ஒரு பக்கத்தில் திரைக் காட்சிகள் இருக்கும். ஒரு பக்கத்தில் சிறுவர் விளையாட்டரங்கம் இருக்கும். இதைவிட என்ன வேடிக்கை என்றால், நாற்பது வயதானவர்களுக்கு என்று புத்தகங்களைப் பெரிய எழுத்தில் அச்சடித்து இருப்பார்கள்.

நாங்கள் அந்த ஊருக்குப் புதுசு. எங்களை யாருக்கும் தெரியாது. நாங்கள் இங்கே படிக்க வந்திருக்கிறோம் என்றவுடனே, நீங்கள் ஆளுக்குப் பத்து புத்தகங்களை எடுத்துக்கொண்டு போகலாம் என்றார்கள். ஏன் பத்து என்று நான் கேட்டேன்.

நீங்கள் பதினைந்து வேண்டுமானால் எடுத்துக்கொண்டு போகலாம். அது உங்கள் ஆர்வத்தைக் காட்டுவது என்றார்கள். நீங்கள் அப்படிப் படித்து முடித்துவிட்டால், திருப்பிக் கொண்டு வந்து நூலகரிடம் கொடுக்க வேண்டும் என்பதில்லை. வாசற்படியில் போட்டுவிட்டுப் போனாலேயே நாங்கள் எடுத்து வைத்துவிடுவோம் என்றார்கள்.

அப்படியெல்லாம் உள்ள நூலகங்கள் வளர்ந்த பிறகுதான், அந்த நாடுகள் வளர்ந்தன. எனவே, நூலகம் என்பது நமக்கு அண்ணா நகரில் இருக்கும் கோயில் மாதிரி. அண்ணா நகர் கோயிலை நாம் எவ்வளவு பெரிதாக நினைக்கிறோமோ, அது போல இந்த நூலகத்தை மாற்ற வேண்டும் என்பதிலே மாவட்ட நூலக அலுவலர் வந்திருக்கிறார்.

அரங்கநாதன் போல அந்தத் துறையில் தோய்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

மாணவர்களே, நீங்கள் ஒரு புத்தகம் பாடப் புத்தகம் என்று சொன்னால், மூன்று புத்தகங்கள் பாடத்தோடு தொடர்புடைய நூல்களைப் படிக்க வேண்டும் என்று வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நூலகத்திற்குப் பெருமை.

அம்மா பேசும்போது சொன்னார்கள், நேரு பிரதமராக இருந்தபோது, பதினாறாவது மாடிக்கு லிப்டில் போவார். அப்படி போகும்போது எட்டாவது மாடியில் நிற்கும். சிலபேர் இறங்குவார்கள். நேரு போகிறார் என்பதால் யாரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள். நேரு சொல்வாராம், பத்தாவது மாடியில் இரண்டு நிமிடங்கள் நின்றது. எனவே, இந்த லிப்டின் ஓரத்தில் ஒரு மாடத்தை அமைத்து, புத்தகங்களைப் படிக்க வைக்க வேண்டும். எவ்வளவு வியப்பாக இருக்கிறது பாருங்கள் !

லிப்டில் மேலே செல்பவர்களுக்கு ஒரு ஐந்து நிமிடங்கள் கூட எதையாவது படிக்க வேண்டும் என்ற ஆர்வம் வர வேண்டும். குழந்தைகளுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், நாள்தோறும் நாளிதழ்களைப் படிக்க வேண்டும்.

புத்தகம் என்பது வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இது அறிவு வேட்கையைக் காட்டுகிறது இந்த நூலக விழாவை மிக அருமையாக நடத்த வேண்டும் என்ற ஆர்வத்தோடு நடத்துகிற அரங்கநாதன் அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

இங்கே இருக்கும் பெருமக்களில் நண்பர் சீனிவாசனைப் போன்றவர்கள், எனக்குத் தெரியும், அரசாங்கத்தின் செயலாளராக கிட்டத்தட்ட ஒரு தலைமைச் செயலாளர் நிலையில் இருந்து ஓய்வு பெற்றவர். இங்குள்ள நண்பர்கள் இந்த நூலகம் ஒரு கட்டடமாக எழும்புவதற்கு உதவினார்கள்.

அந்த வகையிலே இது உங்களுடைய இடம். நீங்கள் எப்போதும் வரலாம். எந்த நிலையிலும் இங்கே படிக்கலாம். இங்கே பெறுகிற அறிவு என்பது, இப்போது சொல்லுங்கள், பள்ளியில் படிப்பது என்பது தொடங்குவது. பல்கலைக்கழகத்தில் படிப்பது என்பது தொடர்வது. ஆனால், நூலகத்தில் படிப்பது என்பதுதான் வளர்வது என்று சொல்லி விடைபெறுகிறேன்.

வணக்கம்.

❀❀❀

40. சிற்பச் செந்நூல் – வெளியீட்டு விழா

01.11.1978

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் சார்பில் சிற்பக் கலைஞர் திரு.கணபதி ஸ்தபதி அவர்களால் எழுதப்பெற்று வெளியிடப்படும் இந்நூல் தமிழ் இலக்கியத்திற்கு ஒப்பில்லாத ஓர் அழகிய அணிகலனாகும்.

சிற்பக்கலையின் சிறப்பு

சிற்பக் கலையைக் கற்க வந்த ஓர் அரசகுமாரன் ஒரு முனிவரை அணுகித் தனக்கு அக்கலையைக் கற்றுத்தருமாறு வேண்டினான். சிற்பக் கலையைக் கற்றுக் கொள்வதற்கு முன்னால் சித்திரக் கலையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றார். அப்படியானால் சித்திரக் கலையைக் கற்றுக் கொடுங்களேன் என்றானாம்.

சித்திரக் கலையை அறிய வேண்டுமானால் உனக்கு நடனக்கலை தெரிந்திருக்க வேண்டும் என்றார். அப்படியானால் நடனக் கலையைக் கற்றுக் கொடுங்களேன் என்றான். நடனக் கலையைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் உனக்கு இசையறிவு வேண்டுமென்றார். எப்படி இசையறிவைப் பெறுவது என்று சீடன் கேட்டான்.

கவிதை எழுதப் பழகினால் இசையறிவு வந்துவிடும் என்றார். கவிதையா – அதை எப்படிக் கற்பது என்றான்? அதற்கு முனிவர் அதில் தானே சங்கடம் உள்ளது. கவிதைக் கலை கற்று வருவதில்லை; தானாக வருவது. கருவிலே அமைந்த திரு என்றாராம். இப்படி ஒரு கதை சில்ப ரத்தினம் என்ற நூலில் உள்ளது.

சிற்பக் கலைக்கு எவ்வளவு கலைகளின் அறிவும் திறமையும் வேண்டும் என்பதை வற்புறுத்துவது தான் இந்தக் கதை.

அத்தகைய கலைகளின் களஞ்சியமான சிற்பக்கலை பற்றிய செம்மையான நூல் இது. ஆய கலைகள் 64 என்று நாம் கணக்கிட்டிருக்கிறோம். வடிவும், ஒழுங்கும், வனப்பும் இல்லாமல் கரடுமுரடாக இருக்கும் கல்லுக்குக்கூட உயிரும், உணர்வும் ஊட்டி எழிலுருவாக மாற்றும் சிற்பக் கலையை அறுபத்து நான்கு கலைகளில் அற்புதக்கலை என்று அழைக்கலாம்.

சிற்பக்கலையை மதித்த அரசன் தஞ்சைப் பெரிய கோயிலின் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சோழன் இராஜராஜன் சிற்பிகளின் வேலையைப் பார்வையிடுவதற்காக அன்றாடம் வருவது வழக்கம். ஒரு நாள் சிற்பி வேலையில் ஆழ்ந்திருந்தபோது, தனது வேலையாளைத் திரும்பிப் பார்க்காமல் வெற்றிலை மடித்துக்கொடு என்று கேட்டானாம். வேலையாள் அப்போது அங்கே இல்லை என்பது சிற்பிக்குத் தெரியாது.

சிற்பிக்கு மனம் நோகக் கூடாது என்று அங்கே நின்றிருந்த அரசனே வெற்றிலை மடித்துக் கொடுத்தான் என்பார்கள். இராஜராஜன் சிற்பியை சிற்பக்கலையை எவ்வளவு மதித்துப் போற்றினான் என்பதற்கு இந்த நிகழ்ச்சியைச் சான்றாகக் கூறுவார்கள். சிற்பக்கலை சீரழிந்ததேன் காணுமிடமெல்லாம் சிற்பங்களும், கலை வடிவங்களும், கோவில்களும் கணக்கின்றிப் பெற்றுள்ள. நாடு நமது நாடு.

அவைகள் நமது தமிழ்ச் சமுதாயத்தின் உயர்ந்த லட்சிய வாழ்க்கையை, கலை மாட்சியை பண்பாட்டுப் பெருமையைக் கலை நுட்பங்களைப் புலனாக்குகின்றன. இத்தகைய சிற்பச் செல்வங்களை வழங்கியவர்கள் நமது சிற்பப் பெருங்குடியைச் சார்ந்த கலைஞர்களாவார்கள்.

2000 ஆண்டுகளாகச் சேரன் செங்குட்டுவன் முதல் பல தென்னகப் பெருவேந்தர்களின் அரவணைப்பில் வளர்ந்த இந்தக் கலை இடைக்காலத்தில் அரச ஆதரவை இழந்து, தேய்ந்து, ஒரு சிறு தொழிலாகச் சில குடும்பங்களுக்கிடையே மட்டும் முடங்கி அடங்கி நின்றுவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் தான் மன்னர்கள் போற்றிய அந்தக் கலையை எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று மாறியுள்ள நிலையில் நமது மக்களாட்சியில் – தமிழக அரசே 1957–ம் ஆண்டிலிருந்து மாமல்லபுரத்தில் சிற்பக் கலைப் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவி இயக்கி வருகிறது.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கு நமது முன்னோர்கள் இலக்கணம் வகுத்தது போலவே கலைகளுக்கும் இலக்கணம் கண்டு பல அருமையான சிற்ப நூல்களை ஆக்கியுள்ளனர். காலத்தின் கோலத்தாலும், தமிழர்களின் ஆர்வக் குறைவினாலும், அடிமை உணர்வினாலும் ஏராளமான நூல்கள் அழிந்துபோய்விட்டன.

மாமல்லபுரத்துக் குடைவரைக் கோயில்களும், ஒற்றைக் கற்கோயில்களும் கட்டுமானக் கோயில்களும் எந்தச் சிற்ப நூல்களின் துணையைக் கொண்டு எழுப்பப்பட்டனவோ? அவற்றை உருவாக்கிய பெருந்தச்சன், தச்சன் குணமல்லன் பையமிழிப்பான், ஆபாஜன் ஆகிய பெருந்தச்சர்கள், சிற்ப நூல்கள் எவைகளையேனும் இயற்றினார்களா, அப்படியானால், அவைகள் எவை என்றெல்லாம் நம்மால் அறிய முடியவில்லை.

தஞ்சைப் பெருவுடையார் திருக்கோவிலைப் படைத்த குஞ்சர மல்லன் இராசராசப் பெருந்தச்சன் எந்த நூலைப் பின்பற்றினான். எந்த நூலை இயற்றினான் என்றும் நம்மால் அறிய இயலவில்லை. அமைப்பாலும், அணியாலும், கருத்தாலும், புதியதொரு விமானத்தைக் கண்ட உத்திரமேரூரில், பரமேசுவரப் பெருந்தச்சன் எந்த நூல் அடிப்படையில் அதனைப் படைத்தானோ? எந்த நூலைச் செய்தானோ? என்றும் தெரியவில்லை.

ஏராளமான சிற்ப நூல்கள் தமிழில் சிதைந்து போய்விட்டன. சிற்ப நூல்கள் பெரும்பாலும் இப்போது சம்ஸ்கிருத மொழியில் மட்டுமே உள்ளன. அவைகள் கிரந்த வரி வடிவத்தில் அமைந்துள்ளன. எனினும், தமிழ் மொழிச் சொற்கள் பல, கலைச் சொற்களாக அந்நூல்களில் கையாளப்பட்டுள்ளன. இந்நூல்கள் வடமொழியில் இருந்தாலும் கூட தமிழ்நாட்டுக் கலைதான் இது என்பதை அறிய முடிகிறது.

எப்படி ஒரு காலத்தில் நமது இந்திய நாட்டுப் பருத்தி, இங்கிலாந்து நாட்டு லங்காஷியருக்கு ஏற்றுமதியாகிப் பின்னர் துணியாகி நம்மிடமே திரும்பி வந்ததோ, அதுபோலவே நமது கலை வட மொழிக் கலையாக மாறி வடமொழி நூலிலிருந்து அதை இப்போது நாம் தமிழாக்கித் தெரிந்துகொள்கிறோம். சிற்பச் செந்நூல் – நூல் குறிப்பிடும் செய்திகளாகும்.

இன்று வெளியிடப்பெறும் இந்தச் சிற்ப நூல் ஆசிரியரின் ஏழு ஆண்டுக்கால உழைப்பின் பலனாக மலர்ந்துள்ளது. கை வண்ணத்தாலும், தமது கலைத்திறனாலும் உலகப் புகழ் பெற்ற திரு.கணபதி ஸ்தபதி அவர்கள் இந்நூலைத் தமிழ்நாட்டுக்கு ஓர் அரிய நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள்.

கைவசமுள்ள பண்டைச் சிற்பக்கலை நூல்களையும், சைவ–வைணவ ஆகம நூல்களையும் மீண்டும் மீண்டும் துருவி ஆராய்ந்து, பல்வேறு இலக்கணங்களையும், கருத்துக்களையும் செய்திகளையும் ஒரு சேரத் திரட்டி ஒப்பிட்டு நோக்கிப் பண்டைய சிற்பக்கலை மேதைகள் படைத்தளித்த சிற்பச் செல்வங்களை நேரில் பார்த்து, தமிழகத்துச் சிற்பக்கலை மரபிற்கேயுரிய சிறப்பியல்புகளையும் கருத்திற்கொண்டு, அவற்றை யெல்லாம் இலக்கண விதி முறைகளோடு இணைத்துப் பல்வேறு விளக்கப் படங்களையும் அளவிட்டு வரைந்து அவற்றையும் சேர்த்து நடைமுறைக்கு ஏற்றவாறு எளிய தமிழில் வெளியிடப்பெறும் சிறந்த நூலாக இச்சிற்பச் – செந்நூல் அமைந்துள்ளது. தமிழில் முதன்முதலாக வரையறையோடு கூடிய அளவிலக்கணத்தையும் இந்த நூல் குறிப்பிட்டுள்ளது.

36 தலைப்புகளில் ஏராளமான செய்முறைச் சித்திரங்கள் அலங்கரிக்க 300 பக்க அளவில் இந்த நூல் சிறப்பாக வெளி வருகிறது.

கல், மண், மரம், செம்பு, சுதை, கடுசர்க்கரை, செங்கல், தந்தம், மெழுகு, வண்ணம் ஆகிய பத்து வகைப் பொருள்களில் ஏதேனுமொன்றில் உருவங்கள் இயற்றும் கைவினைஞர்களே சிற்பிகள் ஆவர்.

பொருள்களின் தன்மைக்கேற்பச் செய்முறையும் வேறுபடும். இலக்கணங்கள், கலை, நுட்பங்கள் யாவும் சிற்பிகள் அனைவருக்கும் பொதுவானவை. எனவே, இச்சிற்பச் செந்நூல் மேற்கண்ட பத்து வகையான சிற்பிகளுக்கும் பயன்படும் பொது நூலாக உருவாக்கப்பட்டுள்ளது.

சிற்பக்கலை பயில்வோருக்குத் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படைச் செய்திகளும், மரபுகளும், செய்முறைகளும், இலக்கணங் களும் முதல் 21 அத்தியாயங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய பதினைந்து அத்தியாயங்களில் இலக்கணத்திற்கேற்பச் சிற்பங்களையும், வழிபடு படிமங்களையும் நடைமுறையில் சிற்பிகள் செய்வதற்கான அளவு முறைகளையும் இந்நூல் எடுத்து இயம்புகிறது.

இந்நூல் சிற்பக்கலையில் பயிற்சி பெறும் மாணவர்களுக்காக எழுதப்பட்டிருந்தாலும், சிற்பக் கலையில் ஆர்வமுடையவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பெரிதும் பயன்படுகிற வகையில் எழுதப் பட்டுள்ளது.

நூலாசிரியர் பெருமை :

நூலாசிரியரான சிற்பக்கலைஞர் திரு.வை.கணபதி ஸ்தபதி அவர்கள், மாமல்லபுரத்திலுள்ள தமிழ்நாட்டுக் கட்டட – சிற்பக் கலைப் பயிற்சி நிலையத்து மேலாளர், தேசிய விருதும் பெற்றவர். தஞ்சைப் பெருவுடையார் கோயிலை நிர்மாணித்த இராசராசப் பெருஞ்சிற்பியின் பரம்பரையில் தோன்றிய சிற்ப கலாசாகரம் திரு.ம.வைத்தியநாத ஸ்தபதியாரின் அருமந்த மகன்; முறையாகத் தமிழும், சமற்கிருதமும், ஆங்கிலமும், கணிதமும் கற்ற பெரும்புலவர்.

தந்தையாரிடமும், பெரிய தந்தையார் சிற்பக் கலாசாகரம் ம. செல்லக்கண்ணு ஸ்தபதியாரிடமும் சிற்பக் கலைகளில் நீண்டகாலப் பயிற்சி பெற்றவர். சிற்ப நூல்கள் பலவற்றை ஆராய்ந்து கற்று, 16 ஆண்டுகட்கும் மேலாக மாணவர் பற்பலருக்கு முறையாகப் பயிற்சி வழங்கியவர். பல்வேறு கலைப் படைப்புக்களை ஆக்கிய செயல் திறனும் அனுபவமும் நிரம்பியவர். இவருடைய பணியே இந்நூல் உருவாவதற்குப் பெருங்காரணமாகும். இவர் தலைமையாலும் கைவண்ணத்தாலும் பூம்புகார்க் கலைக்கூடமும், வள்ளுவர் கோட்டமும் சிற்பப் பேரெழிலோடு அமைந்துள்ளன.

❀❀❀

“மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ ? – புலனில்
வாழ்க்கை இனியுண்டோ ? – நம்மி லந்த
வாழ்க்கை இனியுண்டோ ? (பாரதி)”

41. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் பட்டமளிப்பு

விழாப்பேருரை

மேதகு ஆளுநர் தமிழகப் பல்கலைக்கழகங்களின் வேந்தர் பெருமான் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் தமிழகப் பல்கலைக் கழகங்களின் இணைவேந்தர் அவர்களே!

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அவர்களே!

சான்றோர் பெருமக்களே!

புகழ்வாய்ந்த இப்பல்கலைக்கழகத்தின் பட்டப் பேற்றுக்கு உரியவர்களாகத் திகழும் கல்விச் செல்வங்களே!

தமிழகத்தில் புலவர் பாடும் புகழும், வரலாறு வாழ்த்தும் வண்மையும் வாய்ந்த ஊர்கள் என்ற சிலவற்றை எண்ணினால் காஞ்சி மாநகரும், வேலூரும், வேலூரைச் சார்ந்த ஆம்பூர், ஆர்க்காடு, திருவண்ணாமலை முதலிய ஊர்கள் சங்கப் புலவர்கள் பாடிய பெருமிதச் சிறப்புக்குரியவையாகும். சங்ககாலம் மருவிய இடைக்காலத்தில் அயல்வேந்தர் பலரின் ஆட்சிக் காலத்திலும், விடுதலை வேட்கை மலர்ந்த நாளிலும், புரட்சியும் புத்தெழுச்சியும் மலர்ந்த திருநகரமாக வேலூர் திகழ்ந்தது. கல்வியாலும், மருத்துவ மாட்சியாலும் கட்டுப்பாட்டு ஒழுங்கைக் காக்கும் காவல் துறையின் கடமைத் திறத்தாலும் கலை வளரும் தலைநகரமாக வேலூர் விளங்குவதைப் பலர் பாராட்டியுள்ளனர்.

வாழ்வில் நலிந்த எளிய மக்களுக்கும் அவர்கள் குடும்பத்தைச் சார்ந்த இளம் பயிர்களுக்கும் பல்கலை அறிவுத்திறத்தை ஊட்டி வளர்க்க வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தைக் கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழும் தகுதிக்கு உரியவர்களாக்க வேண்டும் என்பது திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் நோக்கமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் “தக்க சிறு பிறை நுதலில் தரித்த நறுந்திலகமாக நான்காண்டு வளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் காணும் இடமெங்கும் தழைத்து வருவது. அறிவுத்துறையில் நம் ஆர்வத்தையும் இளைஞர்கள் அடைந்து வருகின்ற ஏற்றத்தையும் காட்டுவதாகும்.

இன்னும் இருபது ஆண்டுகளில், வையக நாடுகள் வரவேற்று மகிழும் வல்லரசாக இந்தியத் திருநாடு அமைவதற்கு மண் வளமோ, கனிம வளமோ, துணை நிற்பதைத் தாண்டி மனவளமும் கலைவளமும் ஒருங்கே சேர்ந்த கல்வி வளத்தால் அறிவு வளத்தால் சிகரத் தலைமையை எய்தும் என்பதற்கு இத்தகைய பல்கலைக்கழகங்களே பண்ணைகளாக அமைந்த அறிவுப் பயிர்களைச் செழுங்கதிர்களாக விளைவிக்கும்; வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றோம் என்பது உங்களுக்குப் புகழை அளிப்பதாகும்.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்

என்று அறிவுத் தலைமைக்கும், திறமைக்கும் உலக நிலையில் முதல் முரசு கொட்டியவர் வான்புகழ் கொண்ட திருவள்ளுவர் என்றால் அது மிகையாகாது. மக்களாகப் பிறந்தவர்களில் வாழ்க்கைச் செயல்கள், சிந்தனைகள் நடைமுறைகள் ஆகியவை அனைத்தும் மனத்தின் விளைவாகும். மனத்திற்குத் தலைமை தாங்குவது அறிவு. மனம்தான் அணிகலனாகப் புனைந்து கொள்ளும் பொன்முடிதான் அறிவு என்று சொல்லலாம்.

மக்களின் சொல்லும் எழுத்தும் அறிவின் வெளியீடாகும். “மதிப்புலவோர்க்கு ஆய்தோறும் மாறும் அறிவு” என்று பாடும் திருவள்ளுவமாலை, திருவள்ளுவரையும் திருக்குறளையும் அளப்பரிய அறிவூற்றாகவே காட்டுகின்றது, திருவள்ளுவர் தாம் வழங்கிய திருக்குறளைத் தொடங்கும் பொழுதே கற்றதனால் ஆய பயன் என்கொல்? என்று வினவித் தொடங்குகிறார்.

பிறப்பிலேயே மக்கட்கு அறிவுச்சுடர் அமைந்து கிடப்பது. உயர்ந்த நிலை, உயரும் நிலை, உயர்கின்ற நிலை என்னும் தொடர்கள் இந்த உண்மையை எழிலாறக் காட்டும். கருப்பட்ட கணமே அறிவுத் திருவுடையவராக மக்களினம் உயர்வு பெறத் தொடங்குகிறது. இந்த அறிவறிந்த அறிவுண்மையை எடுத்துரைத்தாருள் திறம் வாய்ந்தவர் திருவள்ளுவர்.

அறிவு கல்வியால் வளர்வது, கல்வியோ, உலகியலோடு தழைப்பது, உலகியலோ மக்கள் வாழ்வில் மேம்பாட்டைக் கருதியது என்று தொடர்ந்து கூறலாம்.

அவனி முழுதையும் அறிவு ஆட்சி செய்கிறது. அறிவு இயல்பறிய அதனைச் சால்பறிவு ஊக்கி விடுகிறது. நற்றிலையறிவு (இலத்தாளாகிய அறிவு) அதனைப் பன்மடங்காகப் பெருக்கி விடுகிறது. ஆகையால் கற்ற கல்வி கொண்டு அவைப் பல படியாகப் பெருக்கில் சென்ற இடத்தால் செலவிடாமல் தீயன விலக்கி நன்றின்பால் உய்க்க வேண்டுமா என்பதே முடிவு.

இத்தகைய கேடில் விழுச் செல்வத்தால் வளம் பெற்று, பட்டப்பேறெய்திய பெருமைக்குரிய செம்மல்கள் தாமின்புறுவது உலகின்புற என்ற வாழ்க்கை நோக்கத்தோடு பணியைத் தொடங்குகிறீர்கள். எதிர் நாளில் அமையும் பணியும் பொறுப்பும் உங்களுக்குப் புகழும் பெருமையும் பெற்றுத்தர வாழ்த்தி மகிழ்கிறேன்.

கல்வி கற்க அதற்குரிய தகுதி பொறித்த ஏட்டைக் கையிலேந்திப் புறஉலகப் புதுமை காண நீங்கள் பெற்ற பட்டப் பரிசில் ஒரு துறையில் நீங்கள் கற்ற பெற்றிமையை மட்டுமே சுட்டுகிறது. இது ஒரு திறவுகோல். திறவு கோலால் உலகப் பேழையைத் திறந்து பயன்கொள்ள வேண்டும். கற்க வேண்டிய தெல்லாம் இனிப் புறத்திலேதான் புதைந்துள்ளது. – என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு என்பது பொய்யா மொழியின் பொருண்மை.

வாழ்வில் திருமண நாள்போல, மனங்கவர்ந்த நங்கையை, நம்பியை அவரவர் தம் வாழ்வில் துணையாகக் கொள்ளும் மங்கல நன்னாளைப் போன்றது பட்டமளிப்புத் திருநாளாகும். பட்டாடை பொன்னாரம் போலப் பட்டமளிப்பு ஆடையும் அங்கியும் உங்களுக்குப் பொலிவூட்டுகின்றன. வெற்றியும் மகிழ்ச்சியும் உங்கள் வாழ்வைப் பயனுடையதாக்க விரும்புகிறேன்.

42. செல்வி. ஹேமா அரங்கேற்ற உரை

Most honoured Jayanthi Subramaniyam and our Darling baby Hema, and it is immense pleasure, I would say Mr.Ramasamy, Secretary is seated before me and its extraordinary pleasure talking with him.

The very memorable thing is, my sister Thilagavathi grand daughter is Hema. And my sister and my sister's husband Narasimhan and most of my relatives are assembled here and it gives enormous pleasure to see Hema's dancing talent today.

ஹேமாவை எனக்குக் குழந்தைப் பருவத்திலிருந்து தெரியும். குழந்தைப் பருவத்திலிருந்து தெரியும் என்று சொன்னால், ஹேமாவுக்கு ஹேமம் என்று சொன்னாலே, கோல்ட் என்பது தான் அர்த்தம். ஹேமாமாலினி என்று பெயர் வைத்தால், பொற்கொடி என்று தமிழில் சொல்லலாம்.

முத்துக்குமரனும், அமுதாவும், தேர்ந்தெடுத்துதான், தங்கம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஹேமாவின் அக்கா ஐஸ்வர்யா என்று இருக்கிறார்கள். எனவே, ஒரு பெற்றோருக்கு ஐஸ்வர்யமும், தங்கமும் கிடைக்குமானால், அதைவிட மகிழ்விற்கு எதுவுமில்லை.

இமஜா அவர்களைப்பற்றிப் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறேன்.... I have seen her participating in some Debates. She was so eloquent. And she was able to express her thoughts. And after I came to know, she is running a Dance school by name "Bharatham" and she has trained many of the students who have shown their brilliance in all the fields, and they have visited all over India and awaiting for occasions to be invited for Abroad.

I congratulate Himaja for training Hema so well. She has performed so well.

டான்ஸ் கற்றுக்கொள்வது என்பது ரொம்பக் கஷ்டமானது. ஏன் கஷ்டமானது என்று சொன்னால், A kind of commitment between Mind, Body, Spirit and Sentiments and all merged together for expression in Dancing. And therefore Dance means a kind of concentration, only they could dance

Dance-ஐ எப்படிக் கற்றுக்கொள்வது என்று அந்தக் காலத்தில் ஒரு பெரிய மகரிஷியைப் போய் கேட்டார்களாம். முதலில் நீ கொஞ்ச நாளைக்குக் செய்யுள் படித்துவிட்டுவா என்று அனுப்பினாராம். மூன்று வருடங்கள் செய்யுளைப் படித்துவிட்டு வந்தாராம். அது போதாது, சிற்பக்கலையை ஒரு மூன்று வருடம் படித்துவிட்டு வா என்றாராம்.

சிற்பம் படித்துவிட்டு வந்த பிறகு, அது போதாது, சங்கீதம் படித்துவிட்டு வா என்றாராம். சங்கீதம் படித்துவிட்டு வந்த பிறகு, அது போதாது, காவியங்களைப் படித்துவிட்டு வா என்று அனுப்பினாராம். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால்,

Just for even for beginning to learn dance, one should be proficient in Epic, Lyric and in painting and so many things to be known for a dancer, then only she could be able to give her expressions with such a talent, with such a mastering skill.

Hema, பத்தாம் வகுப்புப் படிக்கும் பெண். She is a remarkable painter. And she is a brilliant student. And what not? And she has learnt music already for more than 5 years and plus that she has joined Himaja in the period of three years, what she has been trained here, she has sizzled well, so marvellously well and really see, the every scene of the dancing, that she has been well taught.

இதில் ரொம்பப் பாராட்ட வேண்டியது என்னவென்றால், இந்தக் குழந்தைகளையெல்லாம் அன்பாக வளர்த்து, அரங்கேற்றம் பண்ணி அதோடு நிறுத்திவிடுவார்கள். No, No, She has to go for Engineering, She has to go for Medicine, and remember it is very difficult, she can't be dancing என்று என்னிடத்தில் நிறையப் பேர் வந்து சொல்வார்கள்.

டான்ஸ் என்பது எப்போதும் இருக்க வேண்டிய ஒரு கலை. Age is not a bar and your efficacy in the field of dance should continue. உங்களுக்குச் சொன்னால் ஆச்சரியமாக இருக்கும். இரண்டு வருடங்களுக்கு முன்னால், நானும் என்னுடைய துணைவியாரும் இங்கே வந்திருக்கிறோம். She is a very great Paediatrician. Dance என்றால் அப்படி ஒரு விருப்பம். வைஜெயந்திமாலா வந்து ஆடினார்கள். Do you know the age of Vaijayantimala? She is about 80. She is still dancing so well. And remember, last year Mrs.Kamala Lakshmanan came to Chennai and she told I would love to dance. So, age is not a bar.

இப்பவும் டான்சர்களுக்கு பெரிய செல்வாக்கு இருக்கிறது. நான் ஹேமாவை ரொம்பப் பாராட்டுகிறேன். ஹேமாவிற்கு முன்னர் ஐஸ்வர்யாவின் அரங்கேற்றத்துக்கும் நான் சிதம்பரத்திற்கு வந்து இருந்தேன். அதற்குப் பிறகு ஐஸ்வர்யாவைப் பார்த்து, எப்போது டான்ஸ் ஆடுகிறாய் என்று கேட்டதற்கு, எனக்கு நேரமே இல்லை என்றார். Now she is going to complete her Engineering studies.

I like Hema to continue her dance for a long period. அதற்கு ரொம்பப் பாராட்ட வேண்டியது அவர்களின் அம்மா அப்பாவைத்தான். பெற்றோர்கள் அதில் ஊக்கம் கொடுப்பது. என்னுடைய அருமை மகன் முத்துக்குமாரன் அவ்வளவு ஆர்வம் கொண்டவன் என்றாலும்கூட, இந்தக் குழந்தை ஆடி முடிக்கும் வரையிலும் அங்கே உள்ளே அமுதாதான் ஆடிக்கொண்டிருந்தார். அமுதா அவளின் அம்மா. She has trained the children such a way, for everything.

ஹேமா ஆடும்போது திரும்பி, கண்ணா என்று கூப்பிடும்போது கண்ணனைக் கூப்பிடவில்லை. அம்மா இருக்கிறாரா என்று திரும்பிப் பார்க்கிறார். எனவே, அவரின் தாய் அமுதா காட்டிய ஆர்வத்தை நான் ரொம்பவே பாராட்டுகிறேன்.

அவங்க மாமனார் உட்கார்ந்து கொண்டு என்னிடம் சொல் கிறார், ஹேமா ஆடும்போது அமுதா ஆடுவதுபோலவே இருக்கிறது இல்லையா என்கிறார். அமுதா, குழந்தைகளை இப்படி பயிற்றுவிப்பது எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. நாட்டியத்திற்கு வேண்டியது, காலின் அசைவு. கைகளின் நெளிவு. முகத்தின் சுழிப்பு. கண்களின் ஒளி. கண்களின் ஒளியும், முகத்தின் அழகும், கைகளின் அசைவும், கால் ஜதியும் இவையெல்லாம் ஒன்றாகக் கலந்திருக்கும் ஒரு கலை தான் இந்த ஆடற் கலை.

ஹேமாவுக்கு அவ்வளவுக்கும் 100க்கு நூறு. எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. அதுவும் ஆசிரியர் ஹிமஜா அவர்கள் எப்படிக் கற்றுக்கொடுத்திருக்கிறார் என்று பார்த்தால், அவரின் அம்மா உமா இளம்பெண்ணாக இருந்து ஆடும்போதே நான் பார்த்திருக்கிறேன். தண்டாயுதபாணி பிள்ளை எனக்குத் தெரியும். உமாவிடத்தில் மாணவியாக இருந்து, பிறகு கலையுலத்தில் மாபெரும் தேர்ச்சி பெற்றிருக்கும் ஹிமஜா அவர்கள், நாட்டியத்திற்கே பெருமை என்னவென்றால், ஆசிரியர், குரு யார் என்றுதான் கேட்பார்கள். அந்த வகையில், எனக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஒரு தாத்தாவுக்கு இதைவிட என்ன மகிழ்ச்சி இருக்க முடியும். பேத்தியின் பெருமையைப் பிறர் பாராட்டும்போது ஜெயந்தி சுப்பிரமணியம் அவர்கள், She has quoted a beautiful word about Bharatanatyam and she is already beautiful. She has made much beauty by the expression and Dance என்று சொன்னால் அதுமிகையல்ல. ரொம்பக் கடினமானது, இந்த ஜதி ஆடியதில் ஏற்பட்ட வர்ணம் என்பது ஒரு பதினாறு வயதுடைய குழந்தைக்கு இந்த வர்ணத்தை ஆடுவது அவ்வளவு கடினம்.

ஒருமுறை, கொத்தமங்கலம் சுப்பு சொன்னார்கள், அதைப் பின்னர் பார்க்கப்போகிறோம், தில்லானா என்று ஏன் பெயர் வைத்தார்கள் என்று நான் கேட்டேன். உங்களுக்குத் தெரியாதா தில் ஆனாக என்றார். தில் என்றால் மனத்தில் உள்ள ஒரு உறுதிப்பாடு. அதுபோல, இந்த தில்லானா ஆடும்போது, அவளின் பாட்டி பின்னால் உட்கார்ந்து கொண்டு, ரொம்ப நேரம் ஆடுகிறாளே, குழந்தைக்குக் கால் வலிக்குமே என்கிறார்.

நாட்டியத்தில் பிறர் பாராட்டும் விதம், நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து, நாட்டியப் பொற்கொடியாக இலக்கியங்களைச் சுட்டிக்காட்டுகிற குழந்தை ஹேமாவை நான் வாழ்த்துகிறேன். குரு ஹிமஜா அவர்களை வாழ்த்துகிறேன். ஜெயந்தி சுப்பிரமணியத்தைவிடச் சான்றிதழ் கொடுப்பதற்கு தக்கவர் இல்லை. அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள்.

வந்துள்ள உங்களுக்கெல்லாம் நன்றி சொல்லி, இந்த ஆடற்கலை என்பதுதான், தமிழ்நாட்டைப் பற்றி உலகத்திற்குச் சொல்லுகிற அடையாளம் என்ன என்று கேட்டால், பரதநாட்டியம் என்றுதான் சொல்ல வேண்டும், வேறு அடையாளமே தெரியாது.

நீங்கள் உத்தரப் பிரதேசத்திற்குச் சென்றாலும், உகாண்டா விற்குச் சென்றாலும், எங்கே சென்றாலும், பரதநாட்டியத்தின் ஓசையைக் கேட்டு, அதைப் பார்த்தவுடன் சொல்வார்கள், Is it Tamil Nadu's Dance? என்பார்கள்.

ஆகவே, பரதக்கலையைத்தான் நீங்கள் ஆஸ்திரேலியாவில், அமெரிக்காவில் எந்த நாட்டிலும் நீங்கள் குடியேறி வாழ்கிறபோது ஒரு பரதநாட்டிய பள்ளி இருக்கும்.

எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. அநேகமாக இன்னும் இரண்டு வருடத்திற்குள் என்னுடைய மகன் மருத்துவர் கண்ணனின் மகளும் அரங்கேற்றம் செய்யவிருக்கிறார். இப்போதுதான் அவர் ஆஸ்திரேலியாவில் பரதம் பயின்று வருகிறார்.

இந்த பாரதிய வித்யாபவன் ஒரு இராசியான அரங்கமாகும். இங்கு மேலே இன்னும் இரண்டு அரங்கங்கள் இருக்கின்றன. ஒரு வருடத்திற்கு **370**க்கும் மேற்பட்ட ஆடல் காட்சிகள் இங்கு நடைபெறுகின்றன.

All the dancers think, that it is always best to have Arangetram at Bharathiya Vidya Bhavan, Himaja, wherever she goes bring your students for Arangetram to Bharathiya Vidya Bhavan.

ஆகையினாலே, இந்த இடமும் சிறந்த இடம். ஆசிரியரும் சிறந்த ஆசிரியர். மாணவியும் சிறந்த மாணவி என்ற வகையில் அவர்களையெல்லாம் மகிழ்ச்சியோடு வாழ்த்தி அமர்கிறேன்.

நன்றி.

வணக்கம்.

❀❀❀



43. Bharathi The National Bard

I am extremely happy to have the opportunity of addressing this Bharathi Tamil Sangam, which for more than two decades has devoted itself to the popularization of the works of Bharathi the Poet laureate of Tamilnad. This association which can well boast of its unparalleled achievements has established a renowned name both in our Homeland as well as in Bengal.

Amidst its multifarious activities that of, ambassadorial office between my land and bengal is the most cherished and proud one. The Generous Gesture shown by the Bengal Government is vividly revealed by the honoured presence of the Minister of Education.

The Late Lamented Dr. C.P. Ramaswamy Iyer once said the culture is an art of living an enlightened life that I hope becomes the aim of this association. Now when I stand before you I recall to my mind vividly my humble meeting with Dr. S. Krishnan the founder President of this organisation. That happened at Delhi several years ago What a fine Gentleman he was. He was the True Gentleman - a gentleman of the type what cardinal new man had in his mind.

When I remember the fact that this sacred land upon which I now stand, is the same soil upon which the feet of the glorious Chaitannya, Sri Ramakrishna Paramahamsa and Vivekananda the spirctualists, once stood - when I remember that this holy land was once the treasure chest which zealously guarded the literary talent of Tagore, Bankim Chandra Chatterjee - a thrill runs through me.

At this stage I cannot but recall to your minds, the words of a great man who once said of our land has been the home of emotion, immagination and spirit".

In the pleasent month of December, when the earth is luxuriating in the velvet green of newly acquired grass, when the scorching heat of the sun has been subdued, and when the sun itself pays a brief visit each day, muffled in the blankety white mists of Margazhi the name of Bharathi will be on the lips and in the hearts of the people of Tamilnad. In hamlets, and cities, in villages and towns, in the lowly cottages of the humble peasants, and the mansions of the rich there will echo and re-echo the songs and the stories, the ideas and the thoughts of our Revolutionary poet Subramania Bharathi.

He has been called the poet of the Vedanta, the Poet of Patriotism, the Poet of Revolution, the Poet of Inspiration and the Poet of emotion, but in my opinion the tribute of the people when they refer to him as in every day conversation our poet - The Peoples Poet is the most fitting title that Bharathi can ever have. As I stand here to speak to you about this great poet and his works, I cannot for an instant forget the fact that it was--The Grand Bengal which on many an occasion gave him inspiration and encouragement.

"Oh! our sacred mother, wipe off the tears

and smile - - - - Bengal I greet the"

so Sang Bharathi.

On meeting Sister Nivedita, in Bengal, Bharathi found in her a true preceptor. His admiration for Tagore was unlimited. His attachment to Sri Aurabindo was incomparable.

In the annals of our literary history, it has been recorded that the three academies of Madurai were responsible for the growth of Tamil Language and literature. The sovereigns of Madurai had three different academies for the growth and development of language and literature corresponding in character with the Royal academy of sciences founded by Louis

XIV at Paris and made it a rule that every Literary production should be submitted to this Senatus Academicus for the purpose of preserving the punity and integrity of the language.

It is however also equally true that Tamil has been delecately nurtured in Tirunelveli. In the soil with the sweet atmosphere of Tirunelveli, in the little Zamindari of Ettaiapuram, Subramania Bharathi was born on 11th December 1882. Like the brief but making life of a fiery comet, Bharathi lived for a brief span of 39 years. During this short span of his life, he had accomplished many things for which others had spent a life time. Indeed, his brief but successful career, has often been compared to that of Keats, shelly and Byren, Wilfred Owen. Somewhere Shakespeare said:

"The evil that men do lives after them.
The good is oft interred with the bones".
This has not been true of our Bharathi. The crul lands
of Death has only succeded in stealing from us his
body, but his spirit lives on still with us. Even a
few months before his death Bharathi spoke of the life
eternal. so full of hope was he that he scorned
death in the following lines: -

"Death I spurn thee as a piece of wee Come here let me crush you under my feet".

The indomitable spirit of man was present in this great man as it was in the little known English poet. John Donne who write"Death: be not proud" That voice of courage, the message of hope, that verile nature we hear even today in his everlasting songs and his excellent writtings.

"Empires dissolve and peoples dissappear Song passes not away The swords of ceasers they are less than rust The poet doth remain",

Sang William Watson in Lacrymae Musarum.

In the beginning, Tamil literature found inspiration in love and nature, and this in time paved way to the epic elements and religious rhymes.

In the midst of these different literary forms, norms Bharathi rose and with him rose the literature of one Patriotism and the fire of freedom.

Rightly Prof. T.P. Meenakshisundaram calls him as the greatest poet of the 20th century. He actually batir marks the beginning of the awakened, India in general and Tamil land in particular. "The Motherland is not an empty metaphor to the Tamilian of this century. To one who worships the Divine Head as the Mother shining as the various virtues of the world, this conception of a Motherland is not mere abstraction. It is as concrete and real, as sweet and ennobling, and as powerful and inspiring as one's own mother, as one's own mother's milk and as one's own God.

The Vantemataram song describes this living reality; and it was translated into Tamil from Bengali by Bharathi". "Vande Mataram: means literally "Mother, we bow to Thee'. This was the first line of the poem in Bankim Chandra Chatterjee's Bengali novel, Anand Math, but it was only during the Partition of Bengal agitation that the poem acquired a national vogue.

In the words of Sri Aruobindo: "The mantra had been given and in a single day whole people had been converted to the religion of patriotism. The Mother had revealed herself ...... A great nation which has had that vision can never again bend its neck in subjection to the yoke of a conqueror". His worship of Parasakthi may be the result of strong Sakthi movement in Bengal.

He possesses a strong appeal and he brings-forth thousand of lines on Sakthi. In the same veins he is imbued with the spirit of Kali that he feels.

Her holy presence in all manifestations of the nature. It is the desire of Bharathi to harness all these forces of the nature to the services of man He was His opted for the development of industries, and setting up of factories. All these appeared to him the manifestation of Kali.

There is in Bharathi, universality a special feature worth mentioning. Today at a time when loyalty to one's language or State is misunderstood, it is good to review Bharathi's progressive universalism. Today we say "Forget your state and think of your nation; Forget your family and think of the people", but Bharathi in one of his poems says:

Hail o Tamil ! Hail thou Tamilian !
Hail 0 Bharath thou pearl of countries.
His spirit of nationalism beings begins with loyalty does not make him a fanatic but leads him on to love and serve his nation better. What better proof can there be to show that loyalty and nationalism begins at home.

Even the great Giologist J.B.S. Haldane who chose this great State as his place of retirement, and who bequeathed his skeleton to the Calcutta Medical College, has said in talk on the B.B.C. on My Philosophy of life", in 1929 that he was proud to be an Englishman and then an European and therefore a citizen of the world.

Bharathis nationalism did not stop with India. The whole world was his and he was part of it. He sage of Belgium and of Italy and welcomed the Revolution in Russia as the works of the Godess Parasakthi.

His nationalism, was only synonymous with this humanism. The crow, and the sparrow, the hill and the tree were his family. He says "Whereever our eyes are cast We see nothing but ourselves Seeing and seeing them bliss swell". Even the barking dog, the sound of the temple bell, and the beggars cry become equally divine songs to him. Are we not now reminded of Shakespearer who says And this our life, exempt from public haunt finds tongues in trees, books in the running books Sermons in stones and good in everything. I would not change it.

A single life be it ever so lowly - without food or in some misery made the poet say that a world which cannot take care of all its creatures was not worth living in. He sang with the greatest vehemence:

"Right now, let's take the solemn oath,
for observance till the end of Time:
that, if a man has naught to eat,
a be it but once, annihilate the Universe!"

Thus his aim was not merely a political democracy but was a divine democracy. Bharathi to whom the nation represented Sakthi, considered the mother in the house to be another form of Sakthi. It was his constant argument that women should be given be given equality in life and freedom at home.

In his vow of Panchali, he even cursed Dharma for having dared to use Draupadi as a stane in the game of dice. There was no limit to the encouragement that he gave for the uplift of Indian womanhood. In the matter of chastity he made the revolutionary statement that chasity was not women alone but for men also. Bharathi does not agree with Shakespeare in saying!

"Frailty thy name is woman" nor with Bernad shaw who said, "The weaker sex is the stronger sex, because of the weakness of the stronger sex for the weaker sex". But Bharathi says of women.

Let us rejoice in praise of womanhood, Let us dance to the cry of 'Victory to woman!' For womanhood is the sanctified union or the mother's fame and the spouse's name. Woman is the heady wine we shall taste And makethe earth tremble with our might; We shall dance to the chime of flute and drum

And lose our hearts in ecstasy Hail holy mother!' to the beat of the drum, Hail holy mother!' to the flute's golden tune;

We shall sweep the blue sky itself In the service of a bright-eyed girl. we shall willingly swallow coals of fire To serve the divine hand that fed us; How her hands resist us as we kiss, We shall sing in praise of the chosen Spouse ! Bharathi's full Poetic bloom can be enjoyed in his Kannan verses. You would find the various aspects of Love pictured before you so vividly.

"We can very well admire the art of the Poet which makes him superior in some respects to Tennyson in analysing the infinite number of moods that chase one another in the agitated minds of Lovers. All that relations pertain to the man and woman would can be classified as relation with the King and Minister the master, and his servant, the mother and her child, playful boy, Lover, Bride and as House hold god. All these human relations are portrayed with a divine touch and arranged in is its appropriate, but natural surroundings.

According to Indian thought, nature and life are the twin blossoms on the tree of creation. Hence Life would be incomplete if it is not linked with nature and nature would be incomplete if it is not linked with life and both nature and life would be incomplete if they are linked with God ultimately. It looks as though Bharathiar's Kannan completely agrees with this sentiment. Bharathi always breathed the spirit of his age and revolted against anything which was conventional.

Avvai, The sappho of the Tamils has given us A golden Alphabet which is filled with maxims Par execellence Avvai, according to the age her times said "Bridle your anger Indulge not in excessive eating forget not loany tradition".

But Bharathi who wanted men to turn as martyrs for the fight of freedom exhosted them to "Practice wrath, not to be awed by tradition, to war against slavery and subjucation. "Eat to your fill" said he. Adorn the fore-front of battle was his war cry. Thus Bharathi became the poet for the babies of a new age by his "Alphabet, maxims" Poet for youth by his Patriotic songs. Poet of Romance by his kuyil pattu which added another feather to his fanciful cap. Poet of the Hero by his political songs.

He was also the poet of convention by his lyrics on Vedanta. Thus he was the poet of the age, for ages and for all stages. Thus in songs sweeter than honey Bharathi has sung of Nationalism, Divinity, Tamil culture, Emancipation of women Old Tamil literature. In praise of Poets, on great leaders, and on all creatures.

His words flow from the mystic heights of cosmic conciousness to cherish earth and humanity in all the spheres of life Social, Cultural, Political, Economic A easthetic, Moral spiritual and Educational.

Perhaps if Carlyle were to have delivered this lecture today he would not have hesitated to call him a hero. The youth of the Tamilnad today break out into songs in these days. There are countless young poets, who follow the literary forms and tradition of Bharathi.

It was said of Spenser that he was a poet of poets; so be it said of Bharathi too that he was the poet of poets of the modern age. Hail Bharathi the peoples poet. There is the melodious voice of the flute What tounges can value thy worth May thy spirit pervade the Earth and all upon it.

44. Tamil Literary Heritage – From Dawn to Modernity

Mauritius
10.12.2009

'She has three hundred million faces But one soul life, majestic, strong Eighteen are her tongues for utterances And yet her heart is one.'

- Bharatiyar.

Mr. Chairman, Ladies and Gentlemen and distinguished scholars,

INTRODUCTION:

'Paradise on earth' is the expression that is most appropriate to describe Mauritius Islands. The name Mauritius rouses up in one's mind the glittering images of its immaculate beaches, scintillating deep blue sea holding the majestic mountain ranges as its backdrop, exuberant greenery and exotic spots of tourist enticement.

In this midst it is quite heartening to know that Tamil language teaching and research are taking place with fervent zeal and devotion in this noble organisation called The Mahatma Gandhi Institute which is functioning with the support of the Indian Government for many years. Mahatma Gandhi Institute is rendering monumental service equal to that of any University and its efforts in guarding Indian Culture and Heritage is laudable. I deem it as a great opportunity to deliver a talk under the auspices of the Pushparatnam Endowment that has been established in the name of their father by the family of Sri.Pushparatnam, who worked as an eminent Tamil Professor in this Institute.

My sincere gratitude is due to the organisers Prof. Sornam and Tirumalai Chetty and others.

The Seventh World Tamil Conference that took place in this land 20 years ago is of great historical significance. I also fondly recall at this juncture my participation in that conference bringing from my home land a delegation of 25 scholars on behalf of Tamil Nadu Government. Besides the multi cultural ethnicity, Tamils of Mauritius have taken efforts in fostering the Tamil Traditions and Culture by their Tamil religion, rites and rituals of their Temple Worship

THE TAMIL LITERARY HERITAGE - FROM DAWN TO MODERNITY:

From the Sangam Age to the present day, it is an impressive stretch of at least three thousand years, and during these millennia kingdoms have flourished and failed, societies have known periods of organic growth and have also suffered decay and dissolution though only to start again on new foundations or with new stimuli for renewal and development. And all the while generations of poets and bards, God-intoxicated singers and saints, commentators, moralists and thinkers have served man, God and society as observers, recorders, interpreters, critics, prophets and pace-setters.

We have met today as the inheritors of the many-faceted culture and civilization of the Tamils with their long and glorious history, and also as the present trustees and practitioners of an inspiring literary tradition, this asks, on our part, for humility and a high sense of responsibility Literature is not isolable from society, and individual works of literature are not insulable from one another.

'Every hamlet was his, and everybody his kith and kin'- declared a Tamil poet long ago. The glorious achievement of a Tiruvalluvar, an llango, a Kamban was both an individual artistic accomplishment and the fulfilling achievement of a society, of an age.

In poetry – in literature - the meaning and message are inseparable from the beauty of the language, the potency of the rhythm and the impact of significant form. Poetry's power is the power of the Truth or Reality, and such Truth being in an inseparable union with Beauty (as expressed through form, rhythm and harmony) is all the more effective in promoting the Good life.

Of what 'use' is poetry and literature? The question of course is as old as Plato, and perhaps older. As if giving a comprehensive answer Dr U.V.Swaminatha Aiyar formulates a single breathless remarkable sentence as mentioned in his Perungatai Edition, which may be condensed and stated as follows:

